ஓம்

குஹப்ரஹ்மணே நம :

# சேந்தன் செந்தமிழ்

## (மூலமும் – உரையும்)

திருத்தேவையெனுந் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த
அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவசித்தாந்த ஞானபானு

பாம்பன் :
**ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் அவர்களால்**
அருளிச் செய்யப்பட்டது

4-ம் பதிப்பு

**மகாதேஜோமண்டல வெளியீடு**
திருவான்மியூர், சென்னை. 41.
2017

| | | | |
|---|---|---|---|
| முதற்பதிப்பு | 1906 | - | ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்<br>(சுவாமிகளின் முன்னுரையும் செய்யுளும்). |
| 2ஆம் பதிப்பு | 1965 | - | ஸ்ரீமத் சுவாமிகளின் சீடர்<br>திரு.தா.வேங்கடாசல முதலியார்<br>சென்னை. |
| 3ஆம் பதிப்பு | 1996 | - | மதுரை - பாம்பன் மெர்கண்டைல்ஸ்<br>அதிபர் திரு.V.திருஞானம்,<br>மதுரை. |
| 4ஆம் பதிப்பு | 2017 | - | மகாதேஜோ மண்டல சபை,<br>திருவான்மியூர். |

குறிப்பு : இத்திரு நூலின் திருப்பாடல்களின் முக்கியத்துவம் கருதி, உரையுடன் கூடிய பாடல்களை மட்டும் அவ்வப்போது சில அன்பர்கள் பதிப்பித்து இலவசமாக வழங்கியுள்ளனர்.

உ

**ஓம் குமரகுருதாச குருப்யோ நம:**

## சமர்ப்பணம்

தனித்தமிழ்ச் செய்யுள்களால் ஆன சேந்தன் செந்தமிழ் என்ற கவின்மிகு இந்நூலினை -

ஆளும் அரசாய் - வழிபடு கடவுளாய் - முத்திக்கரை சேர்க்கும் குருவாய்த் திகழ்ந்து - நம்பும் அடியவர் இதய சிம்மாசனத்தில் விக்கினந் தவிர்த்தருளும் திருமேனியராய் வீற்றிருக்கும் எம்பிரான் பாம்பன் சுவாமிகளின் பதமலர்களில் சமர்ப்பிக்கின்றோம்.

வெளியீட்டாளர்
மகாதேஜோ மண்டலத்து
அடியார்கள்
திருவான்மியூர்

மகா கந்தசஷ்டி வெளியீடு
2017

## தமிழ்மொழி வாழ்த்து

*ஈன்றாளின் மேலா மிரக்கமுளள நச்செவ்வே*
*ணோன்றா டுதித்தினிய நூனுவலத்- தேன்போற்*
*கிடைத்ததெய் வத்தமிழே கேணினையு நின்னைப்*
*படைத்தவனை யும்பழிச்சு வேன்.*

*- காசியாத்திரை*

உ

முருகா

**ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளிடம்**
பேரன்பு பூண்டுள்ள 'அருள் மொழியரசு'

**திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்**

**இயற்றிய**

சாற்றுக்கவி

நேரிசை வெண்பா

சேந்தன் தமிழென்னும் செந்தமிழ் நூலதனை
மாந்தர் பயின்று மதிபெறவே - ஈந்தனரால்
பாம்பன் பதியுதித்த பரமஞா னாசிரியர்
ஆம்பன் னெறிகளெலாம் ஆய்ந்து.

அன்பன்,

**கிருபானந்தவாரி.**

# முகவுரை

**டாக்டர் மு. வரதராசனார், எம்.ஏ., பி.எச்.டி.,**
**(தமிழ்த்துறை தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்).**

*தவத்திரு. பாம்பன் சுவாமிகள் ஒரு நெறியான மனத்துடன் உண்மை உணர்ந்து வாழ்ந்த அறவோர்; ஆன்ற புலமையினர்; அரிய தவப்பயன் எய்திய மெய்யுணர்வாளர். அவர் இயற்றியருளிய தமிழ்நூல்கள் பற்பல அவற்றுள் "சேந்தன் செந்தமிழ்" ஒன்று,*

*'சேந்தன் செந்தமிழ்' ஐம்பது வெண்பாக்களில் ஆகிய இனிய நூல். பாக்கள் எல்லாம் முருகன் வழிபாடாக அமைந்து அரும்பெருஞ் சமயக் கருத்துக்களையும் ஒழுகலாற்றையும் உணர்த்துவன. இவற்றுக்குச் சுவாமிகளே உரையும் எழுதியருளினமை போற்றத்தக்க சிறப்பாகும். இவ்வுரை, பல அரிய பொருள் நுட்பங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. எடுத்துக்காட்டாக, உடம்புக்கு மெய் என்ற பெயர் அமையக் காரணம் பற்றி (செய்யுள் 20) விளக்குமிடத்து, "பார்வைக்குப் புலப்படா உயிரைப் புலப்படுமாறு காட்டி நிற்பது உடம்பே யாகலின் அதற்கு மெய் என்னும் பெயர் போந்தது" எனக் குறிப்பிடும் பொருள் புதுமையும் நுட்பமுமுடையதாதல் காணலாம். மேலும், இதுவரையில் பலரும் கூறிவந்த கருத்தினை 'பொய்யான உடம்பை மெய் என்று கூறுதல் மங்கல வழக்கு' என்னும் கருத்தினை - மறுத்திருத்தலும் காணலாம். "பொய்யுடம்பினை மெய்யென்பது நல்வழக்கென்பார் கூற்றுத் தள்ளற் பாலதாமன்றிக் கொள்ளற்பால தாகாது" என்னும் தம் கொள்கையை வற்புறுத்தியுள்ளதும் காணலாம். இத்தகைய நுண்மாண் நுழைபுலக் கருத்துக்கள் பல ஆங்காங்கே உரையில் அமைந்துள்ளன.*

*மேற்குறித்த உரைப்பகுதியில், "மங்கல வழக்கு" என்னும்மரபான சொற்றொடரைக் கையாளாமல் 'நல் வழக்கு' என்று குறிப்பிட்டிருத்தல் கருதத் தக்கது. 'மங்கலம்' என்பது வடசொல். வடமொழியின், சொற்கள் கலவாமலே 'சேந்தன் செந்தமிழ்' என்ற நூலும் அதன் உரையும் அமைய வேண்டும் என்று விரும்பியது அடிகளின் திருவுளம். அதற்கு ஏற்பவே, மங்கலம் என்ற வடசொல்லை நீக்கி, 'நல்' என்ற சொல்லை அமைத்து, 'நல் வழக்கு' என்று எழுதியுள்ளார். இந்நோக்கம், அடிகளின் முன்னுரையைக் கற்போருக்குத் தெளிவாகும். இவ்வாறு ஒரு நூலும் உரையும் அமைந்த*

அமைப்பு, **இதுவரையில் தமிழ்மொழி வரலாற்றில் இல்லை** எனலாம்.

நடுநிலைமை இன்றி, தவறானதொரு பற்றுக் கொண்டு, வடமொழியே உயர்ந்தது என்றும், தெய்வத் தன்மை உடையது என்றும், சிலர் மயங்கித் தடுமாறி எழுதியும் பேசியும் வந்த போக்கை உணர்ந்த அடிகள், அவர்களைத் திருத்தவும், அவர்களின் மயக்கத்திற் சிக்காமல் பிறரைக் காக்கவும் விழைந்து முன்வந்து செய்த புலமைத் தொண்டு இது. உண்மையும் உணராமல், தாய்மொழியுணர்வும் இல்லாமல், தமிழ்மொழியைத் தாழ்த்தியும் புறக்கணித்தும் பேசிய அவர்களின் போக்கைத் திருத்த விரும்பினார். 'எல்லாம் மாயை' என்றும், எவ்வகையான வேறுபாடும் கடந்த பரம்பொருளே உண்மை என்றும் வாயளவில் கூறித் திரிந்தும், ஒரு மொழியை உயர்த்தியும் மற்றொரு மொழியைத் தாழ்த்தியும் பேச அவர்களுக்கு எவ்வாறு மனம் வந்ததோ? அந்தக் குறையைத் தீர்க்க முயன்ற அடிகள், "இச்சொற்களுள்ளும் இவையிற்றிற்கு வேறான வட சொற்களுள்ளும் ஒன்றேனும் புகாமலே **சேந்தன் செந்தமிழ்** எனுமிந்நூல் என்னாலமைக்கப் படுவதாயிற்று. இவ்வாறு பல சொற்கள் நீங்குழியுந் தமிழ்ச் செய்யுள் தன் மொழியானே நடைபெறூஉ மெனும் ஆற்றலுமிதனால் வெளிப்பட்டது" என்று முன்னுரையில் எழுதியுள்ளமை காணலாம்.

யானை, திரு, தோள், நீர், தீ, காலம், கருவி, தாய், நிலம், பூ, மாது, வாள், விண், ஓடம், பழம், பிட்டு, மீன், நேயம், ஐயன் முதலான பழைய தமிழ்ச் சொற்களையும் வடசொற்கள் என்று நிறுவுவதிலே சிலர் "மாயை" கொண்டு மயங்கிய காலம் அது. அந்த மயக்கம் எல்லாம் இன்று மொழியியல் அறிஞர்கள் - வெளிநாட்டு அறிஞர்களான பேராசிரியர்கள் **பாரோ, மெனோ** முதலானவர்களின் அரிய ஆராய்ச்சியின் பயனாகத் தீர்ந்து வருகிறது. இந்த ஆராய்ச்சி வளராத காலத்திலேயே அடிகள் அத்தகைய தெளிவு பெற்று இவை முதலானவற்றைத் தமிழ்ச்சொற்களே எனக் காட்ட முயன்றுள்ளார். தமிழ் வடமொழியிடமிருந்து கடன் வாங்கத் தயங்கவில்லை என்ற **கால்டுவெல்** கருத்தையே அடிகளின் முன்னுரையிலும் காணலாம். தம் நெஞ்சில் பட்ட உண்மையை அஞ்சாமல் வெளியிடும் அடிகள், தமிழ் என்ற சொல்லே தமிளம், திரமிடம், திராவிடம் என்று திரிந்து வடமொழியில் புகுந்து வழங்கியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, அடிகளின் குறிப்புக்கள் பல, **மொழியியல் ஆய்வார்க்கும் பயன்படும்** கருத்துக்களாக உள்ளன.

முருகனை வழிபடுதலையே தம் கடமையாகக் கொண்ட ஒரு பெருந்தூய உள்ளத்திலிருந்து எழுந்த இந்நூலைத் தமிழகம் மறவாமல் போற்றும்வண்ணம், இதனை இப்போது தம் செலவில் வெளியிடும் திருவாளர் தா.வேங்கடாசல முதலியாரின் தொண்டு பாராட்டத்தக்கதாகும்.

**மு. வரதராசன்.**

# அணிந்துரை

திரு.ந.ரா.முருகவேள், M.A., M.O.L.,

ஆசிரியர் : "திருக்கோயில்"

*தவத்திரு. பாம்பன் - குமர குருதாச அடிகள், மிக அண்மைக் காலத்தில் விளங்கி யிருந்த அருட்பெருஞ் சான்றோர் ஆவர். முருகனையே முழு முதற் கடவுளாகக் கொண்டு* **உபய அருணகிரிநாதர் எனப் போற்றப்பெறும் நிலையில், தகராலய ரகசியம், பரிபூரணானந்த போதம், ஸ்ரீமத் குமாரசுவாமியம், திருப்பா, திருவலங்கல் திரட்டு, சைவ சமய சரபம்** *முதலிய பற்பல பெரு நூல்களை இயற்றியருளியவர் நம் பாம்பன் அடிகள்! அவர்கள் பாடி யருளிய* **"சண்முக கவசம்"** *என்னும் அருட்பனுவல், முருகன் அடியார்கள் பல்லாயிரவரால் நாடோறும் நயந்தினிது ஓதப் பெற்று வருகின்றது.*

*அத்தகைய அருட்பேறு வாய்ந்த வித்தகர் ஆகிய நம் அடிகள் இயற்றியருளியுள்ள நூல்கள் பலவற்றுள்* **"சேந்தன் செந்தமிழ்"** *என்பதும் ஒன்று. தமிழில் வடமொழிக் கலப்பு தொன்றுதொட்டே நிகழ்ந்து வந்துளதேனும், தமிழ் மொழியானது வடமொழியினின்று தோன்றிய கிளைமொழியன்று என்றும், வடமொழியின் துணையின்றியே தனித்தியங்கவல்ல தன்மையுடைய தெய்வமொழி என்றும் தெளிவுற நிறுவிக் காட்டுதற் பொருட்டு, நம் அடிகளார், 'சேந்தன் செந்தமிழ்' என்னும் இந்நூலை இயற்றியருளினர்.*

*பாம்பன் அடிகள் வடமொழிப் புலமை வரம்பு கண்டுணர்ந்தவர். வடமொழியிலுள்ள வேதாகம உபநிடதங்களையெல்லாம் துறைபோக முறையாக ஆராய்ந்துணர்ந்த மாபெருஞ் சான்றோர்! இந்நூலின் முன்னுரையினால், அடிகளின் அரும்பெறற் புலமை நலம் இனையதென யாவரும் அறியலாம்.*

*எனவே, இஃதொரு சிறந்த ஆராய்ச்சி நூல்! யாவருக்கும் பயன்படத்தக்க இனிய நூல்! சொற்பிறப்பு, ஆராய்ச்சி நெறி முறை* (Etymological Derivation) *பற்றி யறிந்து கொள்ள, இஃது (பக் : 33-37) ஒரு சிறந்த நல்ல* **வழிகாட்டி** *நூல் எனலாம்!*

*"வடசொல்லிது, தமிழ்ச்சொல்லிது எனத்தேர்ந்து தெளிந்து, தாந்தாம் கொள்ளுதற்குரியனவற்றைக் கொள்ளுதலும், தமிழில் உரைநடையில் எழுதப்படும் வடசொற்களை இருதிற நூற்கும் பொருந்த எழுதுதலும், வடசொற்களின் பொருளை யுணர்ந்து கோடலும், அச்சொற்கள் தமிழ் வழக்கில் இனிது இயைந்து பொருந்தும்படி செய்யுள்களை யாத்தலும், தமிழின் மேம்பாடு தகவுற அறிதலும், கடவுள் வழிபாடு பேணி உய்தலும், இந்நூலால் யாவரும் எய்தற்குரிய பெரும்பேறு ஆகும்.*

*இதனை அறிவாராய்ச்சி வேட்கையுள்ள அன்பர்கள் அனைவரும் வாங்கிப் பெற்று, மகிழ்ந்து கற்று, மிக பயன் அடையுமாறு,* **'செந்தமிழ்ச் சேந்தன்'** *திருவருள் துணை புரிவதாக!*

**ந.ரா. முருகவேள்.**

உ

ஓம் குஹேசாயநம :

# 'சேந்தன் செந்தமிழின்'

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

"சேந்தன் செந்தமிழ்" என்னும் இந்நூலை இயற்றியவர், பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளாவர். இவர் ஸ்ரீமத் அருணகிரி நாதரைப்போல் தமது சிறுவயது முதல் ஸ்ரீமுருகப்பெருமான் பேரிலேயே பாடும் நியமம் பூண்டவர், சுவாமிகள் பிரப்பன் வலசை என்னும் ஊரில் 35 நாள் தனி நிட்டை சாதித்து முருகப் பெருமானிடம் நேரில் உபதேசம் பெற்றவர். மேலும் தமது அனுபவங்களைத் தமது நூல்களில் பெரிதும் புலப்படுத்தியுள்ளார். வடமொழி, தென்மொழி என்னும் இருமொழிகளிலும் ஆராய்ச்சித்திறம் படைத்தவர். சுவாமிகள் தோத்திரங்களாகவும் சாத்திரங்களாகவும் பல நூல்களியற்றியுள்ளார். சுவாமிகளின் சாத்திர நூல்கள் சைவ சித்தாந்த நூல்களின் குறைபாடுகளை நிரப்பவுள்ளன. சுவாமிகள் இயற்றியுள்ள செய்யுட்களின் தொகை 6666 ஆகும். இவை ஆறுமண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. "சேந்தன் செந்தமிழ்" என்னும் இந்நூல் நான்காவது மண்டலத்தைச் சார்ந்தது. இவர் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த பாம்பன் என்னும் பதியில் சிலகாலம் இல்லறத்தை நடாத்திப் பின்னர் துறவொழுக்கம் பூண்டு பலகாலம் சென்னையில் வதிந்திருந்து ஸ்ரீமுருகப்பெருமான் திருவடியை எய்தியவர். சுவாமிகளின் சமாதிநிலையம் சென்னையைச்சார்ந்த திருவான்மியூரில் கடற்கரையில் அமைந்துள்ளது.

"சேந்தன் செந்தமிழ்" என்னும் இந்நூல் 1906ல் முதற்பதிப்பாக, ஸ்ரீமத் சுவாமிகளாலேயே பதிப்பிக்கப்பட்டது. அப்பதிப்பில், நூலின் **முன்னுரையும் "அமைதி ஐம்பது"** என்னும் செய்யுட்களின் **மூலமும் மட்டும்** பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் இப்போது இரண்டாம் பதிப்பாக எம்மால் வெளியிடப்படுகிறது. இப்பதிப்பில் முதற் பதிப்பின் முன்னுரையும், "சேந்தன் செந்தமிழ்ப் புலன்வனப்பு" என அகராதி முறையில் சுவாமிகளால் ஏட்டில் வரையப்பட்டிருந்ததும், மூலச் செய்யுட்கள் ஐம்பதுக்கும் பதவுரையும் சேர்ந்துள்ளன. இந்நூலின் உரையாசிரியர் சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர் திருவாளர் மா.துரைசாமி முதலியார் என்னும் அன்பராவர். இவர் இந்நூற் செய்யுள்கட்கு சுவாமிகளிடம் நேரில் உரை கேட்டுத் தெளிந்து,

சுவாமிகளின் உத்திரவின்படி வடசொற் புகாத தனித்தமிழ் சொற்களால் உரை இயற்றியுள்ளார். இவ்வுரை சுவாமிகளால் பார்வையிடப்பட்டதுமாம். இந்நூல் செய்யுட்களின் பதவுரையினடியில் வரையப்பட்டுள்ள விசேட உரைகளும், இலக்கணக் குறிப்புகளும், ஒவ்வொரு செய்யுளின் தலைப்பில் அச்செய்யுளின் கருத்தைக் காட்டும் மகுடமும் ஆசிரியர் சுவாமிகளுடையனவேயாம்.

இந்நூற் செய்யுட்கள், ஐம்பது வெண்பாக்களாலானவை. இவை வடசொற் புகாத தனித்தமிழ் சொற்களால் இயற்றப்பட்டுள்ளன. இவ்வாறு இந்நூல் எழுந்த காரணம் யாதெனின் - தூயதமிழ் மொழியின் மாண்பறியாது, வடமொழிப் பயிற்சி மட்டும் பெற்றுளார் சிலர், வடமொழியிலிருந்து தெலுங்கும், இதினின்று கன்னடமும், தமிழிலிருந்து மலையாளமும், துருக்கர் மொழிகளோடு சில வட சொற்களைக் கலந்து ★இந்தி மொழியெனவும் தோன்றியவாறு, அவ்வடமொழியிலிருந்தே தமிழ் மொழியும் தோன்றியுள்ளதென்று கூறுவாராயினர். இவ்வாறு கூறும் கூற்றை மறுத்தற் பொருட்டே இந்நூல் எழுந்ததாகும்.

அவ்வொரு சிலர் மேற்கூறியவாறு கூறும் காரணம் யாதெனின்:- இத்தென்னாட்டில் தொன்றுதொட்டு இன்றுகாறும் பலகாவியங்களாகவும், உரைநடைகளாகவும் தோன்றியுள்ள நூல்களில் ஆங்காங்கு சில வடசொற்கள் தனித்தும், திரிந்தும், சிதைந்தும் ஆட்சியில் வழங்கியுள்ளமை கருதியே யாம், இவர்கள் கூறும் கூற்றை மறுத்துச் சுவாமிகள் - வடமொழியும், தென்மொழியும் தனித்தனி மொழிகளெனவும் வடசொற்களின் கலப்பின்றியே தனித்து தமிழ் சொற்களாலேயே செய்யுட்களும் உரைநடைகளும் இயங்கப்பெறும் என்றும் அவர்கட்கு அறிவுறுத்தற் பொருட்டே இந்நூல் செய்யுட்களும் அவைகளின் உரைகளும் எழுந்தனவாகும்.

ஆயினும் ஆசிரியர் கருத்து யாதெனின்:- இவ்விரு மொழிகளும் இறைவனாலேயே கற்பிக்கப்பட்டனவென்றும், ஒன்றிலிருந்து

---

* "இந்தி" என்பது நம் இந்திய தேச மொழியன்று. வடமொழி தென்மொழி இவை இரண்டுமே நம்தேச மொழிகளாக வழங்கியிருந்தன. நம் வடநாடு சுமார் 300 வருடங்காறும் துருக்கர் (மொகலாயர்) ஆட்சியிலிருந்த போது வடநாட்டு இந்தியர்கள் மேற்படி துருக்கர்களின் நடை உடை பாவனைகளை மேற்கொண்டபடி அவர்களுடைய மொழிகளையுமே கையாண்டு வந்து, வடமொழிகளைத் தமது பேசா மொழிகளாக்கிக் கொண்டு துருக்கர் மொழிகளோடு சில வடசொற்களையும் சேர்த்து தமது மொழி "இந்தி" எனக் கூறி கொண்டு அதனை வடநாட்டு இந்தி வெறியாளர்கள் இத்தென்னாடு முழுவதும் பரப்ப முன்வந்துள்ளார். இச்செய்கை பெரிதும் சுயநலத்தைச் சார்ந்ததெனவும், அறியாமையும் அடாச் செய்கையுமாமெனவும் கருதவுள்ளது. இம்மொழி துருக்கர் மொழியே என்பதற்குச் சான்றாக துருக்கர் உச்சரிக்கும் ஒன்று, இரண்டு, பத்து, நூறு, ஆயிரம் முதலிய எண்களின் உச்சரிப்பே வடநாட்டாரது இந்தி மொழியின் உச்சரிப்புமாகுமென்பதனால் நனி தெளியலாம்.

மற்றொன்று தோன்றியதன்று வென்றும், இவ்விரு மொழிகளும் தனித்தனியே இயங்கக் கூடியவை என்றும், இம்மொழிகளில் உயர்வு தாழ்வு கூறுதல் கூடாதென்றும், இவ்விருமொழிகளும் நம் சொந்த மொழிகளே என்றும் கூறி, இவ்விரு மொழிகளும் நமது இருகண்கள் போன்றன என்றும், இருமொழிகளின் பயனறிந்தவர்களே இருகண்களின் பார்வை பெற்றுள்ளவர்களென்றும், ஒரு மொழிப்பய னறிந்தவர்கள் ஒரு கண்பார்வை மட்டுமே பெற்றுள்ளவர்களென்றும் இருமொழிகளின் பயனறியாது திரிதருவோர் யாவரும் மந்திகளே என்றும், இக்கருத்து ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான் கருத்தேயாகும் என்பதாக **"மந்தி போற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா வந்தகர்"** என்னும் தேவார மேற்கோளையும், அவ்வாக்கினுக்கு மேற்கூறியவாறு உரை வகுத்தும், சுவாமிகள் தமது **"திருப்பா"** என்னும் நூலின் முன்னுரையில் தெரித்துள்ளார்.

சுவாமிகள் தமிழ் வேதமாகிய தேவார, திருவாசகங்களைப் போலவே வடமொழி வேதோப நிடதங்களிலும் மிக்க பற்றுள்ளவர். இவைகளிலிருந்தே பெரிதும் தமது நூல்களில் மேற்கோள்கள் பல எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்நூலில் "சேந்தன் செந்தமிழ்ப் புலன் வனப்பு" என்னுந் தலைப்பின் கீழ், வடசொற்கள் எவ்வாறு தமிழில் வழங்கி வந்துள்ளன என்பதையும், பின்னர் அவைகளின் மூல வடசொற்களையும், அவைகளின் பின்னர் நேரான தனித் தமிழ்சொற்களையும், எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்நூல் தமிழறிஞர்கட்கும், தமிழைத் தம்உயிரெனப் பேணி அதிற் புலமைபெறும் ஆர்வங் கொண்ட மாணவர்கட்கும் பெரிதும் பயன்படுமென்றும், அவர்களால் பெரிதும் போற்றப்படுமென்றும் கருதுகின்றேன்.

இந்நூலுக்கு சாற்றுகவி யளித்த உயர் திருமுருக **கிருபானந்தவாரியார்** அவர்கட்கும், முன்னுரையளித்த திரு. டாக்டர் **மு.வரதராசனார்** அவர்கட்கும், விதந்துரையளித்த திரு. **ந.ரா.முருகவேள்** அவர்கட்கும் எனதன்பார்ந்த நன்றி உரியதாகுக.

திருவல்லிக்கேணி<br>
சென்னை - 5.<br>
5-4-1965

இங்ஙனம்,<br>
ஸ்ரீமத் சுவாமிகளின் சீடர்களுளொருவன்<br>
**"குமாரச்சிவம்"** எனப்பெயரிய<br>
**தா. வேங்கடாசல முதலியார்.**

# 3-ஆம் பதிப்பின் முன்னுரை

# அணிந்துரைகளின் சுருக்கம்

இத்தகைய தமிழில் வடமொழி கலவா வண்ணம் இயற்றிய இந்நூலிற்கு முன்னுரையும் புதுமுறையில் வரைந்துள்ளார். பாம்பனடிகள் எழுதியுள்ள முன்னுரையைத் தமிழறிஞர்கள் படிக்க வியப்பெய்துவர், முன்னுரையில் காட்டும் வடமொழிச் சொற்களின் எண்ணிக்கையன்றி "புலன் வனப்பு" என்ற தலைப்பில் மட்டும் 2456 வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்து உள்ளன. அவைகள் திரிந்தும், பிறழ்ந்தும், குன்றியும், மிகுந்தும், தமிழே போல் நிற்பதை சுவாமிகள் எடுத்துக் காட்டும் பாங்கு தமிழ்ப்புலவர்கட்குத் தமிழ் விருந்தாகும். முன்னுரை, புலன் வனப்பு இரண்டினும் 5400 வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்துள்ளன. ஸ்ரீமத் பாம்பனடிகளின் தமிழ்ப்பற்றும் தமிழின் ஆராய்ச்சித் திறனும் இதில் தெற்றெ‌ன விளங்கும். பசுத்துவம் நீக்கி பதித்துவம் பயக்கும் குமார பரமேசுவரன் கருணையே துணையெனக் கொண்ட சுவாமிகளின் நிகரில் சைவத்தொண்டு போல் புலமைத் திறத்தாலாற்றிய தமிழ்த் தொண்டும் இணையற்றது எனலாம்.

அன்பன்

6-2-1996 **பழநி சாது தங்கவேல் சுவாமி**

சேந்தன் செந்தமிழ் என்ற இந்நூல் முருகனை வழிபடுவார்க்கு வழிகாட்டும். மொழியியல் ஆய்வார்க்கும் வழிகாட்டும். வடசொல்லுக்கு நேராய தமிழ்ச் சொல்லை அறிய விரும்புநர்க்கும் வழிகாட்டும். தமிழ் மொழியின் முதன்மையை நிறுவ விழைகுநர்க்கும் வழிகாட்டும்.

சிலம்பு, மேகலை, சிந்தாமணி, வளை, குண்டலம், சூளாமணி முதலிய அணிகளையிட்டு அழகுபடுத்தினார் என்று தமிழன்பர் புகழ்வதுண்டு, அஃதுண்மையேயாயினும் தமிழன்னையின் திருமேனியில் தோன்றிய பிறமொழி வடுக்களை அவை களைந்தன அல்ல கூட்டின என்றே சொல்லலாம். **சேந்தன் செந்தமிழ் என்னும் இந்த அரிய நூல் தமிழன்னையின் திருமேனியைத் தூய்மையாக்கி ஒளிவிடச் செய்கிறது.**

இராணிப்பேட்டை அன்பன்

16-2-1996 **பி.மா. சோமசுந்தரனார்**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

நான்காவது மண்டலத்தைச் சேர்ந்த

# சேந்தன் செந்தமிழ்

இதில் அடங்கியவை :


| | | |
|---|---|---|
| ஆசிரியரின் முன்னுரை | ... | பக்கம் 15 முதல் 42 வரை |
| புலன்வனப்பு | ... | பக்கம் 43 முதல் 135 வரை |
| 50 செய்யுள்கள் - உரையுடன் | ... | பக்கம் 137 முதல் 168 வரை |


---

**வடமொழியைத் தேர்ந்தோர் வடமொழிதா யென்னிற்**
**றிடமொழியாந் தென்மொழியைத் தேர்ந்தோர் -- புடவிதனி**
**லத்தென் மொழிதந்தை யாமெனலுங் கூடுமெனல்**
**சுத்தனை யேத்தென் றுணிபு. --40--**

வடமொழி வல்லுநர் வடமொழியே எல்லா மொழிகளுக்கும் தாய் என்று கூறுவாராயின் அழிவில்லாத இனிய மொழியாகிய தமிழ்மொழி வல்லுநர் இவ்வுலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தமிழே தந்தையாகும் என்று கூறுதலும் ஒவ்வும் என்பது இறைவனையே புகழும் எனது முடிவு ஆகும்.

**எப்பொழுது தென்னா டெனுமொன்றுண் டாயினதோ**
**வப்பொழுதே யம்மொழியு மாயதென்றன் -- முப்பொழுது**
**மோர்ந்தார்க்கு மொப்பா மொருமுருகை யேத்துமெனைச்**
**சேர்ந்தார்க்கு மொப்பாந் தெளி. --41--**

தென்னாடு எனப் பெயரிய ஒன்று எப்போது தோன்றியதோ அப்போதே தென்மொழி என்னும் தமிழும் தோன்றியது என்னும் முடிபு முக்காலமும் உணர்ந்த ஞானிகளுக்கும் ஒப்பாகும். ஒப்பற்ற முருகப் பரமனைப் போற்றும் (எனக்கும்) என்னைப் பின்பற்றுவோர்களுக்கும் ஒப்பாகும். இந்த உண்மையைத் தெளிந்து கொள்வாயாக.

– காசி யாத்திரை

உ

சேந்தன் துணை

**அமைதி ஐம்பது என்னும்**

# சேந்தன் செந்தமிழ்

இதன் முதற்பதிப்பிற்கு ஆசிரியர் இயற்றிய

# முன்னுரை

*(1) அம்ருதம் - அமிர்தம், அமுதம், அமுது, அமிழ்து. அஹங்காரம் - அகங்காரம், ஆங்காரம், அகந்தை. அகுரு - அகரு, அகில். அக்ஷரம் - அக்கரம். அத்திகா - அக்காள். அநுக்ரஹம் - அனுக்கிரகம். அந்தர்யாமி - அந்தரியாமி. அபிப்ராயம் - அபிப்பிராயம். அபூபம் - அப்பம். அப்யாசம் - அப்பியாசம். அமாவாஸ்யா - அமாவாசியை, அமாவாசை. அம்பா - அம்பாள், அம்மை. ரங்கம் - அரங்கம், அரங்கு. அரூபம் - அருவம், அரு. அவச்யம் - அவசியம். அவதாரிகா - அவதாரிகை. அவஸ்தா - அவத்தை. அல்பம் - அற்பம். அத்புதம் - அற்புதம். ஹநுமான் - அனுமான். அந்யம் - அன்னியம். ஆசார்யன் - ஆசாரியன், ஆசிரியன், ஆசான். ஆசா - ஆசை. ஆஜ்ஞா - ஆஞை, ஆணை. ஆத்மா, ஆத்மந் - ஆத்துமா, ஆன்மா, ஆத்துமம். ஆயுஸ் - ஆயு, ஆயுள். இச்சா - இச்சை. டம்பம் - இடம்பம். இடா - இடை (இடைநாடி). இஷ்டம் - இட்டம். ஹிதம்-இதம். யக்ஷன்-இயக்கன். யமன் - இயமன், எமன். ரஹஸ்யம்-இரகசியம், இராசியம். ரதம் - இரதம். ரதி - இரதி. ரத்னம் - இரத்தினம். ராஜந்,ராஜா-இராசன், இராசா, அரசன், அரசு, அரையன். ருஷி-இருடி. ருணம் - இருணம். ஹ்ருத் - ஹ்ருதயம் - இருதயம், இதயம். லக்ஷணம்-இலக்கணம். லக்ஷ்யம்-இலக்கியம். லக்ஷ்மீ-இலக்குமி. லவணம் - இலவணம். லாபம்-இலாபம். லிகிதம் - இலிகிதம். லிபி-இலிபி. லீலா-இலீலை.*

*ஈச்வரன் - ஈசுவரன். ஹீனம்-ஈனம். யுகம்-உகம். உஷ்ணம்-உட்டணம், உட்டிணம். உபாஸநா-உபாசனை. ருத்திராக்ஷம்-உருத்திராக்கம். ரூபம்-உருவம், உரு. லோகம்-உலோகம். உலகம், உலகு, உகம்.லோபம்-உலோபம். உத்ஸவம்-உற்சவம். உத்ஸாஹம்-உற்சாகம், உச்சாகம். உத்பத்தி-உற்பத்தி. உன்மத்தம்-ஊமத்தம், ஊமத்தை. ஊர்த்வம்-ஊர்த்துவம், ஊர்த்தம். ச்ரேணி-ஏணி. ஐக்யம்-ஐக்கியம், ஐக்கம். உஷ்ட்ரம்-ஒட்டகம், ஒட்டை.*

கங்கா-கங்கை. கதம்பம்-கடம்பு. கஷாயம்-கடாயம். கடிநம், கடோரம்-கடுமை, கடிது. கஷ்டம்-கட்டம். கட்வா-கட்டில். காஷ்டம்-கட்டை. கணிகா-கணிகை. கதா-கதை. கந்தா-கந்தை. கர்த்தா, கர்த்ரு-கருத்தா. கத்தா, கருத்தன், கத்தன். கர்மம்-கருமம், கன்மம். கர்வம்-கருவம். கலஹம்-கலகம், கலாம். கலா-கலை. கல்பநா-கற்பனை. காகம்-காக்கை. காஷாயம்-காடாயம். காவ்யம்-காவியம், காப்பியம். க்ரியா-கிரியை. குடிலம்-குடில். குடீ-குடி, குடிசை. குல்மம் - குன்மம் (குன்மரோகம்). க்ஷேத்ரம்-கேத்திரம். கைலாஸம் - கைலாசம், கைலாயம், கயிலை. கிஞ்சித்-கொஞ்சம், கிஞ்சில். கோட்யா-கொடி (த்வஜம்). கோதூமம்-கோதுமை.

சக்ரம்-சக்கரம், சக்கிரம். ஸம்ஹிதா-சங்கிதை. சங்கம்-சங்கு. ஸஞ்சிதம்-சஞ்சிதம். ஸடா, ஜடா-சடை, சாட்டை. சம்பகம்-சண்பகம், செண்பகம். சக்தி-சத்தி. சத்ரு-சத்துரு. ஸந்ததி-சந்ததி. ஸமயம்-சமயம். சரித்ரம்-சரித்திரம். சர்க்கரா-சருக்கரை, சர்க்கரை. சாஸ்த்ரம்-சாத்திரம். ச்யாமம் (யாமம்) சாமம். சாலா-சாலை. ஸிம்ஹம்-சிங்கம், சிம்மம். ச்ருங்காரம்-சிங்காரம். ஸ்ருஷ்டி-சிருட்டி, சிட்டி. சித்ரம்-சித்திரம். ஸ்ம்ருதி-சிமிருதி, மிருதி. ஸ்நேஹம் - (நேசம்) சினேகம். ஸ்ரீ-சீ, சீர், திரு.சிஷ்யன்-சீடன். ஜீரகம்-சீரகம். ஜீவன்-சீவன். ச்ருதி-சுருதி. ஸ்வல்பம்-சுவற்பம், சொற்பம். ஸ்வாமி-சுவாமி, சாமி. ஸுஷும்நா-சுழுமுனை, சுழிமுனை, சுழுனை. ஸூக்ஷ்மம்-சூக்குமம், சூக்கம். சூர்ணம் - சூரணம். சேலம்-சேலை, சீலை. ஸேவகன்-சேவகன். ஸேநா-சேனை. ஸைந்யம்-சைனியம், சயினியம். ஜ்யோதிஸ்-சோதி, ஜ்யோதிஷம்-சோதிடம்.

ஜ்ஞானம் - ஞானம்.

ஸ்தம்பம்-தம்பம். தயா-தயை, தயவு. தரித்ரம்-தரித்திரம். தர்க்கம்-தருக்கம். தர்ப்பம்-தருப்பை. தர்மம்-தருமம், தன்மம்.ஸ்தலம்-தலம். தபம், தபஸ்-தவம், தவசு. தாஸன்-தாசன். தாரா-தாரை. ஸ்தாநம்-தானம். தாந்யம் - தானியம். த்ருடம்-திடம். திரோதானம்-திரை. தீக்ஷா-தீக்கை. துவரம்-துவர், துவர்ப்பு. தூஷணம்-தூடணம். ஸ்தூணம்-தூண். ஸ்தூலம்-தூலம். ஸ்தூளி-தூள், துகள். தேசம்-தேயம். தேவ:-தே. தைர்யம் - தைரியம், தயிரியம். தோஷம்-தோடம், தோம்.

நகரம்-நகர், நகரீ-நகரி. நஷ்டம்-நட்டம். நபும்ஸகன்-நபுஞ்சகன். நிஷ்களம்-நிட்களம். நித்ரா-நித்திரை. நிந்தா-நிந்தை. ந்ருபன்-நிருபன். நிர்வாணம்-நிருவாணம்.

பக்ஷம்-பக்கம். பராங்முகம் - பராமுகம். பர்வம்-பருவம். பலம், பலகம்-பலகை. ப்ரவாளம்-பவளம், பளகம். பலம்-பழம். பாத்ரம்-பாத்திரம். பாபம்-பாவம். பிங்கலா-பிங்கலை (பிங்கலைநாடி). பிக்ஷா-பிச்சை. பிஷ்டம்-பிட்டு, பிண்யாகம்-பிண்ணாக்கு. ப்ரகாரம்-பிரகாரம். ப்ரக்ருதி-பிரகிருதி - பகுதி. ப்ரதாபம்-பிரதாபம். ப்ரதாநம்-பிரதானம். ப்ரதி-பிரதி. பிரத்யக்ஷம்-பிரத்தியக்கம். ப்ரபாவம்-பிரபாவம். ப்ரயோஜனம்-பிரயோசனம். ப்ராணன்-பிராணன். ப்ராப்தம்-பிராத்தம். ப்ராப்தம்-பிராரத்தம், பிராரத்துவம். ப்ரியம்-பிரியம். பீடா-பீடை. புஷ்டி-புட்டி. புண்ட்ரம்-புண்டரம். புஸ்தகம்-புத்தகம். புருஷன்-புருடன். ப்ரூ-புருவம். புந்நாகம்-புன்னை. பூஜா-பூசை. பூஷணம்-பூடணம். பூர்ணம்-பூரணம். பேடகம்-பெட்டகம், பெட்டி.

மநுஷ்யர் - மனுடர், மனிதர், மாந்தர். ச்மச்ரு-மயிர். மயூரம்-மயில். மர்யாதா-மரியாதை. மாஸம்-மாசம், மாதம். மாணவகன்-மாணாக்கன். மாத்ரம்-மாத்திரம். மாத்ரா-மாத்திரை. மாத்ஸர்யம்-மாற்சரியம், மாச்சரியம். மாயா-மாயை. மாலா-மாலை (பூமாலை). மித்ரம்-மித்திரம். மீநம்-மீன். முக்யம்-முக்கியம். முக்தி-முத்தி. மௌத்திகம்-முத்தம். முக்தா-முத்து. முத்ரா-முத்திரை. மோக்ஷம்-மோக்கம்.

வஸந்தம்-வசந்தம் (வஸந்தகாலம்). வயஸ்-வயசு, வயது. வலம்-வலை. வலயம்-வளையம், வளைவு, வளை. வாக்-வாக்கு. வாத்யம்-வாச்சியம். விக்ருதி-விகுதி. விக்நம்-விக்கினம். விச்வாஸம்-விசுவாசம். விஷம்-விடம். விஷ்ணு-விட்டுணு, விண்டு. பிம்பம்-விம்பம். வ்யசனம்-விசனம். வ்யபிசாரி-வியபிசாரி, விபசாரி. வ்யாகுலம்-வியாகுலம். வ்யாக்யாநம்-வியாக்கியானம். வ்யாதி-வியாதி. வ்யாபாரம்-வியாபாரம். வ்ரதம்-விரதம். பில்வம்-வில்வம், வில்லுவம், வில்லம். வீணா-வீணை. வேஷம்-வேடம். வேஷ்டி-வேட்டி. வைஷ்ணவம்-வைட்டுணுவம், வைணவம்,வயிணவம்.

**இவை-வடமொழித் திரிவும், அழிவும், தென்மொழி வழக்குமாமெனவும்;**

(2) அக்ரம்-அக்கிரம்=நுனி. அங்க்ரி-அங்கிரி=(நடக்குங்)கால். அச்யுதன்-அச்சுதன்=சாவில்லாதவன். அஜன்-அயன்=படைப்புத் தொழிற்கடவுள், பிறப்பில்லாதவன். அஜ்ஞன்-அஞ்ஞன்-அறிவிலான். அதிஷ்டாநம்-அதிட்டானம்=இடம். அதிஷ்டேயம்-அதிட்டேயம் =

இடத்திலிருக்கும்பொருள் (அதிஷ்டானவஸ்து). அத்தா-அத்தை= அன்னை. அத்வைதம்-அத்துவிதம்=இரண்டற்றது. அபஹாரம்-அபகாரம்=இடையூறு. அம்சம் - அமிசம் = கூறுபாடு. அஞ்ஜநம்-அஞ்சனம்=கறுப்பு, மை. அம்பஷ்டன் - அம்பட்டன் = முதலா மரபினனுக்கும், மூன்றாமரபினளுக்கும் பிறந்தவன். அம்பு, அப்தஸ் - அப்பு = புனல் (நீர்). அம்லம் - ஆமிலம் = புளி. அரி-அரில்=பகை, குற்றம். அர்காஹ்வம் - அருக்கம் = எருக்கு. அர்த்தம்-அருத்தம்=பாதி. அர்த்தம்-அருத்தம், அத்தம்=பொருள். அளீ-அளி=வண்டு. அஸூயா-அசூயை= பொறாமை. அஸ்தி-அத்தி=எலும்பு. அஹோ=அகோ=வியப்பில் நிகழ் சொல். அக்ஷி-அக்கி=விழி. ஆகஸ்-ஆசு=குற்றம். ஆநு (ஆநுபூர்வீ) - ஆனு = மறையோதலின் தொடர்பு (அத்யயநத்தின் அநுச்சாரணம்). ஆபணம்- ஆவணம் = கடை. ஆப்தர் - ஆத்தர் = உண்மையுரைப்போர். ஆரோஹணம் - ஆரோகணம் = ஏறுபடி. ஆர்யன் - ஆரியன் = மேலானோன். ஆலஸ்யம் - ஆலசியம்= சோம்பல். ஆஹாரம் - ஆகாரம் = உணவு. ஆட்யன் = ஆட்டியன். இப்யன் - இப்பன் = பொரு ளுடையோன். இஹம் -இகம் = இவ்விடம். இக்ஷு - இக்கு = கரும்பு. உச்சம் - உச்சி. உச்ரயம் = உயரம், உயர்வு = மேடு, சேண். உடபம் - ஓடம் = தெப்பம் உதாஹரணம் - உதாரணம் = காட்டு. உத்கம் - உத்தம், உக்கம் = தழல், எழில். உத்தரம் - உத்தரவு = விடை. உத்யாநம் - உத்தியானம் = தோட்டம். உபக்ரமம் - உபக்கிரமம் = தொடக்கம். உபமாநம் - உவமானம், உவமை = இணையளவை = ஒப்பு. உபஸ்தம் - உபத்தம் = ஆண்குறி, பெண்குறி. உஷஸ்காலம் - உசற்காலம் = விடியற்பொழுது. ஓஷ்டம் - ஓட்டம் = உதடு.

கசா - கசை = அடிவார் (சாட்டை). கணயம் - கணை = படைக்கலம். கதளீ - கதலி = வாழை. கநிஷ்டம் - கனிட்டம் = இளமை, கடைவிரல். கந்யா, கந்யகா - கன்னி, கன்னிகை = (*குமாரியெனப்படும்) எட்டாண்டிற்குட்பட்ட பெண்.

கபந்தம் - கவந்தம் = தலையிலாவுடல். கருணா - கருணை = அருள். கர்ணம் - கன்னம் = காது. கர்த்ரீ - கத்தரிகை = கத்தரிக்கும் கருவி. கர்ப்பம் - கருப்பம். கரு = சினை. கர்ப்பூரம் - கருப்பூரம் = சூடன். கல்பம் - கற்பம் = ஊழிப்போழ்து. கல்ஹாரம் - கல்லாரம் = செங்கழுநீர். கலுஷம் - கலுடம். கல்மஷம் - கன்மடம் = மறம் (தீவினை). கஹநம் - ககனம் = செல்லவொண்ணா இடம். கஹ்வம் - கொக்கு = வெண்புள். காநநம் - கானம், கான் = காடு. காரணா -

* "பதினாறாட்டைக் குமரனும் பன்னீராட்டைக் குமரியும்" என்பது பிங்கலந்தை.

காரணை = மிகுதுன்பம். காரிகா - காரிகை = தொழில். கார்ஷ்ணம் - கார் = கறுப்பு. குக்குரன் - குக்கன் = நாய். குத்ஸிதம் - குற்சிதம் = அருவருப்பு. குப்தம் - குத்தம் = மறைவு. குவலயம் - குவளை = ஒருமலர். குஹ்யம் - குய்யம் = மறைவு, மறைவிடம். குக்ஷி - குக்கி = வயிறு. கைங்கர்யம் - கைங்கரியம் = தொண்டு. கோட்டம் - கோட்டை = சூழ்சுவர். கோலாஹலம் - கோலாகலம் = கூட்டத்திலுண்டாகு மொலி.

க்யாதம் - கியாதம் = விளக்கமான இகழ்வு. க்யாதி - கியாதி = புகழ், மேன்மை. க்ரந்தி - கிரந்தி = கணு, முடிச்சு. க்ரமுகம் - கமுகம், கமுகு = பாக்கு மரம். க்ரய்யம் - கிரயம் = விலை. க்ரஹணம் - கிரகணம் = பற்றுதல். க்ரஹம் - கிரகம் = கோள். க்ராமம் - கிராமம் = சிற்றூர். க்ரிமி - கிரிமி, கிருமி = புழு. க்ரீடா - கிரீடை = விளையாட்டு. க்ருதம் - கிருதம்=நெய். க்ருபா - கிருபை = அருள். க்ரூரம் - குரூரம் = கொடுமை (கடினம்). க்ரோதம் = குரோதம் = சீற்றம். க்லிஷ்டம் - கிலிட்டம் = ஒவ்வா மொழி.

சத்ரம் - சத்திரம் (கவிக்குங்) கவிகை. சப்தம் - சத்தம் = ஒலி. சர்மம் - சருமம் = தோல். சஷ்பம் - சட்பம் = இளம்புல், இளம்புற் போன்ற கதுப்பு (மயிர்). சக்ஷு - சக்கு=விழி. சாணம் - சாணை = கல்வட்டம். சிகா-சிகை=குடுமி. சிக்யம்-சிக்கம்=உறி. சின்ஹம்-சின்னம் = அடையாளம். சிபிகா-சிவிகை=பல்லக்கு. சிரஞ்ஜீவி-சிரஞ்சீவி = கரும்புள் (காக்கை), சாவில்லாதவன். சிலா-சிலை=கல். சிவா-சிவை = மலைமகள், நரி. சுரிகா-சுரிகை, சூரி=நாட்டம் (வாள்). சூத்ரன் - சூத்திரன் = நான் காமரபினன். சேஷன் - சேடன் = ஞாலந்தாங்கு பாம்பு. சைத்யம் - சைத்தியம், சயித்தியம் = குளிர்ச்சி.

ச்மசாநம் - மயானம் = சுடுகாடு. ச்யேநம் - சேனம் = பருந்து. ச்ரத்தா - சிரத்தை = பேரன்பு, விருப்பம். ஸ்ரீமான் - சீமான் : ஸ்ரீலன் - சீலன் = பெருக்கமுடையோன். ச்ரேஷ்டம் - சிரேட்டம் = முதன்மை. ச்லேஷ்மம் - சிலேட்டுமம் = முப்பிணியிலொன்று. ச்வஸநம் - சுசனம் = காற்று.

ஜங்கமம் - சங்கமம் = அசையும் பொருள், நடக்குமுயிர். ஜநகன் - சனகன் = தந்தை. ஜநநீ - சனனீ = அன்னை. ஜநம் - சனம் = மக்கட்பரப்பு. ஜந்து - சந்து, செந்து = உயிருளது. ஜம்பு - சம்பு = நாவன்மரம். ஜம்புகம் - சம்பு = நரி. ஜயம் - சயம், செயம் = வெற்றி. ஜரா - சரை = மூப்பு, நரை. ஜாக்ரம் (ஜாகரிதம்) - சாக்கிரம் = நனா = விழிப்பு. ஜாரன் - சாரன் = கள்ளக்கணவன். ஜிக்வா - சிக்குவை = நா. ஜீர்ணி - சீரணி = நலனழிந்தது.

ஜ்ஞாதா - ஞாதா = அறியத்தக்கவன். ஜ்வரம் - சுரம் = காய்தல் = வெப்புநோய். ஜ்வாலா - சுவாலை = தழற் கொழுந்து.

ஸகஜம் - சகசம் = உடன்பிறப்பு, உள்ளது. ஸங்கடம் - சங்கடம் = நெருக்கம். ஸங்க்ரஹம் - சங்கிரகம் = சுருங்கச் சொல்லல். ஸதா - சதா= - எஞ்ஞான்றும். ஸத்ரம் - சத்திரம் = அறவாய். ஸநாதநம் - சனாதனம் = அழிவற்றது. ஸந்தி - சந்தி = இயைபு, பொருத்தம். ஸந்நிதி - சன்னிதி = அன்மை (சமீபம்). ஸபா-சபை, சவை-அவை=கூட்டம். ஸப்தம் - சத்தம் = ஏழு. ஸமரம் - சமரம் = போர். ஸம்ஸாரி - சமுசாரி = இல்வாழ்வோன். ஸம்ஹாரம் - சங்காரம், சம்மாரம் = அழிப்பு. ஸரளன் - சரளன் = நன்னெஞ்சன். ஸர்க்கம் - சருக்கம் = நூற்கூறுபாடு. ஸவ்யம் - சவ்வியம் = இடமருங்கு. ஸாது - சாது = நன்மரபிற் பிறந்தோன், நன்று. ஸாதாரணம் - சாதாரணம், ஸாமாந்யம், சாமானியம் = பொது. ஸாத்யம் - சாத்தியம் = நிறைவேற்றத்தக்கது. ஸாத்ருச்யம் - சாதிர்சியம் = ஒப்பு (ஸமம்). ஸாரதி - சாரதி = தேர் நடத்துவோன். ஸாவகாசம் - சாவகாசம் = நெடும்பொழுது. ஸுக்ருதம் - சுகுர்தம், சுகிர்தம் = அறம். ஸுஷுப்தி - சுழுத்தி = ஆழ்ந்த தூக்கம். ஸூசி - ஊசி = இருப்பு முள், கூர்த்தது. ஸூதகம் - சூதகம் = தீட்டு. ஸூத்ரம் - சூத்திரம் = நூல். ஸோபாநம் - சோபானம் = ஏறுபடி.

ஸ்தநம் - தனம் = முலை. ஸ்தாணு - தாணு = அழிப்புத்தொழிற் கடவுள், அடிமரம், அசைக்கப்படாதது. ஸ்திதி - திதி = காப்பு, இருப்பு. ஸ்நஸா - எசா, எசம் = சிறு நரம்பு. ஸ்நாநம் - நானம் = முழுகல். ஸ்படா - படம் = பாம்பின் பை. ஸ்படிகம் - படிகம் = பளிங்கு. ஸ்பர்சம் - பரிசம் = ஊறு = தொடுதல். ஸ்புடம் - புடம் = தெளிவு (ஸ்பஷ்டம்). ஸ்ருகாலன் - சிருகாலன் = நரி. ஸ்வபாவம் - சுவபாவம், சுபாவம் = இயற்கை. ஸ்வதந்த்ரம் - சுவதந்திரம், சுதந்திரம், சொந்தம் = உரிமை. ஸ்வப்நம் - சொப்பனம் = கனா. ஸ்வயம்பூ - சுயம்பு, சயம்பு = ஒருவராலுண்டாக்கப்படாதது, கடவுள். ஸ்வர்க்கம் - சுவர்க்கம், சொர்க்கம், சொக்கம் = பொன்னாடு, பால். ஸ்வாது - சுவாது = இனிமை.

டமருகம் - தமருகம், தமரகம் = துடி = இடைசுருங்கு பறை. தக்தம் - தத்தம் = எரிக்கப்பட்டது. தண்டகம் - தண்டை = காலிலிடுமோரணி. தத்காலம் - தற்காலம் = நிகழ்பொழுது. *ஸத்யம் - தத்தியம், தத்வம், தத்துவம் = உண்மை. தர்சநம் - தரிசனம் = காட்சி. தக்ஷிணம் - தக்கிணம் = வலமருங்கு, தெற்கு. தாஹம் - தாகம் = எரிவு. தாதன், தாதா - தாதை

* ஸத்யம் என்பதற்கு இது வேறு.

= ஈன்றோன். தாமநீ - தாமனி = மாடு கட்டுங் கயிறு. தாமரஸம் - தாமரை, மரை = முளரி. தாம்ரகம் - தாமிரம், தாம்பிரம் = செம்பு. திசம், திசா - திசை, திகை - விசும்பு. திஷ்டம் - திட்டம் = பொழுது. துக்தம் - துத்தம் = பால். துந்திந் - தொந்தி = பெருவயிறன். துல்யம் - துல்லியம் = ஒப்பு (ஸமம்). துளஸீ - துளசி, துளவம், துளவு, துழாய் = குல்லை. தூணீ - தூணி = அம்புக்கூடு. தூர்வா - தூர்வை = அறுகு. தோஸ் - தோள் = மொய்ம்பு (புஜம்).

த்யூதம் - சூதம், சூது - வட்டாட்டம். த்ரவ்யம் - திரவியம் = பொருள். த்ருக் - திருக்கு; த்ருஷ்டி - திருட்டி, திட்டி = கண், பார்வை. த்ருப்தி - திருத்தி = தெவிட்டல். த்ரோணி - தோணி = மரக்கலம். த்ரோஹம் - துரோகம் = கெடுதி. த்வசி - தூசி = புழுதி. த்வஜம் - துவசம், துசம் = தோகை (கொடி). த்வம்ஸம் - துவமிசம், துமிசம், தொமிசம் = அழிப்பு. த்வரிதன் - துரிதன் = விரைந்து செல்வோன். த்வாரம் - துவாரம் = தொளை. த்வீபம் - துவீபம், தீவம், தீவு = கடலிடைக்குறை.

நக்தம் - நத்தம் = கங்குல் (இரா). நக்நன் - நக்கினன், நக்கன் = உரிந்தவன் (நிர்வாணி). நாடீ - நாடி = நரம்பு. நாநா - நானா = இரண்டு முதற்பல. நாந்தீ - நாந்தி = முதல், புகழ்ச்சி. நாபிதன் - நாவிதன் = கதுப்பு வினைஞன். நாம - நாம் = முனிவு. நாவம் - நாவாய் = மரக்கலம். நாஸிகா - நாசிகை, நாசி = மூக்கு. நிஜம் - நிசம் = உண்மை. நிர்மால்யம் - நிருமாலியம், நின்மாலியம் = கடவுட்கிட்ட பொருள். நிர்யாதனம் - நிரியாதனம் = கடன்றீர்த்தல். நிஷேதம் - நிடேதம் = விலக்கு. நிஷ்டுரம் - நிட்டுரம் = கொடுஞ்சொற் கூறல். நீரம் - நீர் = புனல்.

ந்யாயம் - நியாயம், ஞாயம் = நெறி = நடு. ந்யூநம் - நூனம் = குறைவு. ந்ருத்தம் - நிருத்தம் = கூத்து.

பக்தி - பத்தி = அன்பு. பக்வம் - பக்குவம் = அமைதி (பரிபாகம்). பங்தி - பந்தி = வரிசை. பதரீ - பதரி, வதரி = இலந்தை. பத்ரம் - பத்திரம்: பர்ணம் - பன்னம் = இலை. பரதந்த்ரம் = பரதந்திரம் = உரிமையின்மை. பரிக்ரஹம் - பரிக்கிரகம் = மனைவி, படை (பரீவாரம்). பரீஹாஸம் - பரிகாசம் = விளையாட்டுரை, நகைச்சுவை. பரீக்ஷா - பரீக்கை, பரிக்கை = ஆராய்ச்சி. பர்த்தா, பர்த்ரு - பத்தா, பத்துரு = கொழுநன். பர்யாயம் - பரியாயம் = ஒழுங்கு = வரிசை. பஸ்பம் - பற்பம் = நீறு. பஹு‍ளம் = பகுளம் =மிகுதி. பாதா - வாதை = வருத்தம். பாதுகா - பாதுகை = காலிலிடு குறடு. பார்ச்வம் - பாரிசம் = மருங்கு. பார்யா - பாரியை,

பாரி = மனைவி (பத்நீ). பாஷண்டி - பாடண்டி = மறைநெறி நீத்தோன் (வேத பாஹ்யன்). பாஷா - பாடை = மொழி. பாஷ்பம் - பாட்பம் = கட்புனல் (கண்ணீர்). பாஹு -பாகு, வாகு, புஜம் - புயம் = மொய்ம்பு. பிதாமஹன். பிதாமகன் = பாட்டன். பித்ரு - பிதிர், பிதிரர் = தென்புலத்தார். புடம் - புடை = இடம். புபுக்ஷிதன் - புபுக்கிதன் = உண்டிவிருப்போன் (போஜனப்ரியன்). பூர்வம் - பூருவம் = தொடக்கம், கிழக்கு. பைக்ஷம் - பைக்கம் - பயிக்கம் = ஐயம் (பிச்சை). போதநா - போதனை = உணர்த்தல்.

ப்ரஹ்மம் - பிரமம் = பெரிய பொருள். ப்ரமம் - பிரமம் (ப்ராந்தி) = கலக்கம் (மயக்கம்). ப்ரதமம் - பிரதமம் = தொடக்கம். ப்ரதிபாதிதம் - பிரதிபாதிதம் = விளக்குதல். முடிவுரைத்தல். ப்ரதிமா - ப்ரதிமை, பொம்மை = செய்செண்ணம். ப்ரபஞ்சம் - பிரபஞ்சம், பவஞ்சம் = விரிவு (விஸ்தாரம்). ப்ரபு - பிரபு = ஆள்வோன். ப்ரஸந்நம் - பிரசன்னம் = தெளிவு. ப்ரஸவம் - பிரசவம் = மலர்தல் (விஹஸிதம்). ப்ரலாபம் - பிரலாபம் = பொருளில்சொல். ப்ரவாஹம் - பிரவாகம் = இடைவிடாதோடு புனல். ப்ராக் - பிராக்கு = கிழக்கு, முற்பொழுது. ப்ராதக் காலம் - பிராதக்காலம் = விடியற்பொழுது. ப்ரார்த்தநா - பிரார்த்தனை = வேண்டுகோள். ப்ரியகம் - பிரியகம் = இந்துளம் (கடம்பு) = வேங்கைமரம். ப்ருது - பிருது, விருது = அகலம். ப்ரோக்தம் - பிரோத்தம் - புரோத்தம் = மேன்மொழி.

மத்ஸ்யம் - மற்சம், மச்சம் = மயிலை (மீன்). மத்யம் - மத்தியம். மதிரா - மதிரை = கள். மநு - மனு = மறை (மந்த்ரம்). மந்த்ரிந் - மந்திரி = அமைச்சன். மஞ்ஜரீ - மஞ்சரி = மலர்க் கொத்து. மலயஜம் - மலயசம் = மலயமெனும் பொதிய மலையிலுண்டான ஆரம் (சந்தநம்). மல்லிகா - மல்லிகை = ஒரு மலர் மரம். மஸ்த்தகம் - மத்தகம் = தலை. மஹா - மகா, மா = பெருமை. மாதுலங்கம் - மாதுளம், மாதுளை = கழுமுள். மாம்ஸம் - மாமிசம் = இறைச்சி. மாஹாத்ம்யம் - மான்மியம் = பெருமை. மித்யா - மித்தை = பொய். முரஜம் - முரசம், முரசு = தோற்பறை. முஹூர்த்தம் - முகூர்த்தம் = ஒரு பொழுதளவை. மேகலா - மேகலை = அரையிலணியணி. மேத்யம் - மேத்தியம் (பவித்ரம்) = தூய்மை. மோஹம் - மோகம் = வேட்கை, மயர்வு. மௌட்யம் - மௌட்டியம், மவுட்டியம் = அறியாமை (மூடஸம்பந்தம்). மௌலி - மவுலி, மோலி = முடி. ம்ருகம் - மிருகம், விருகம் = விலங்கு. ம்ருது - மிருது = மென்மை. ம்ருத்திகா - மிருத்திகை = மண்.

யஜமானன் - இயமானன், யசமானன் = தொழிற்றலைவன், உயிர். யாதநா - யாதனை = பெருந்துன்பம். யுகளம் - உகளம் = இரட்டை. யுக்தம் - யுத்தம் = தகுதி. யுவா - உவா = இளைஞன்.

ரஜதம் - இரசதம் = வெள்ளி. ரஜஸ் - இரசசு = பெண்கள் தீட்டு. ரவணன் - இரவணன் = கதறுகின்றவன். ரஹிதம் - இரகிதம் = நீக்கம், இன்மை. ராத்ரி - இராத்திரி, இரா, இரவு = கங்குல். ருதிரம் - உதிரம் = செம்புனல் (ரக்தம்). ருஷபம் - இடபம் = எருது. ரோதநம் - உரோதனம் = அழுதல். ரோமம் - உரோமம். லோமம் - உலோமம் = உடற்கதுப்பு (உடம்பு மயிர்).

லஜ்ஜா - இலச்சை = வெட்கம். லாமஜ்ஜகம் - இலாமச்சம் = வெட்டிவேர். லுப்தன் - உலுத்தன் = கவர்தலுடையோன். லோஹம் - உலோகம் = பொன் முதலிய பொருள்.

வக்தா, வக்த்ரு - வத்தா, வத்துரு = (ச்ரோதாவுக்குச்) சொல்வோன். வக்ரம் - வக்கிரம் = வளைவு (கோணல்). வஜ்ரம் - வச்சிரம், வயிரம் = வெண் மனவு. வடாரகம் - வடம் = கயிறு. வத்ஸநாபி - வற்சநாபி, வசநாவி = நச்சுப்பொருள். வத்ஸலன் - வற்சலன் = நண்புளோன். வத்ஸம் - வற்சம், வக்ஷம் - வக்கம் = மார்பு. வந்த்ய: - வந்தியை, வந்தி = மலடி. வம்சம் - வமிசம் = மரபு, வேறுபாடு. வரணம் - அரணம், அரண் = சூழ்சுவர் (கோட்டை). வர்க்கம் - வருக்கம் = கூட்டம், வகுப்பு. வர்ஜிதம் - வர்ச்சிதம் = விடுகை = நீக்கம். வர்ணம் - வண்ணம், வன்னம் = நிறம், எழுத்து. வர்ணம் - வருணம் = மரபு (ஜாதி), வேறுபாடு. வாஞ்சா - வாஞ்சை = விருப்பம். வாஜிந் - வாசி = குதிரை. வாதம் - வாது = சொற்போர். வாபி - வாவி = குளம், வாருணீ - வாருணி = கள். வார்த்தா - வார்த்தை = சொல் (வ்ருத்தாந்த வசனம்). வாலதி - வால் = (உயிர்களின் பின்புறத்) தோகை. வாஸநம் - வாசனை, வாசம் = மணம். வாஸரம், வாசரம், வாரம் = பகற்பொழுது, நாள். வாஸுகி - வாசுகி = எண்வகைப் பாம்பிலொன்று. வாஹிநீ - வாகினி = யாறு = ஆறு. விசேஷம் - விசேடம் = சிறப்பு. விதவா - விதவை = கைம்பெண். வித்யா - வித்தை = அறிவு, கல்வி. வித்ருமம் - வித்துருமம் = துகிர் (பவளம்). விப்ரன் - விப்பிரன் = பார்ப்பான். விஷாணம் - விடாணம் = கொம்பு. விஸ்மயம் - விம்மிதம் = வியப்பு. வீதீ - வீதி - வழி, வரிசை. வேச்யா - வேசி, வேசை = விலைமகள். வேணீ - வேணி = பின்னல். வேதநா - வேதனை = பெருந்துன்பம். வேலா - வேலை = கடற்கரை, அலை. வேளை = பொழுது. வைச்யன் - வைசியன் = மூன்றாமரபினன்.

வ்யஞ்ஜநம் - வியஞ்சனம், வெஞ்சனம் = அடையாளம், உண்ணுங்கறி முதலிய பொருள். வ்யளீகம் - வெகுளி = வெறுப்பு.

வ்யவஹாரம் - வியவகாரம், விவகாரம் = சொற்போர் (விவாதம்). வ்யர்த்தம் - வியர்த்தம். வ்ருதா - விருதா = வீண். வ்ரணம் - விரணம் = புண். வ்ருச்சிகம் - விருச்சிகம் = தேள். வ்ருத்தம் - விருத்தம் = பழமை, முதிர்ச்சி. வ்ருத்தி - விருத்தி = வளர்ச்சி. வ்ருஷபம் = விடபம், விடை = எருது. வ்யாஜம் - வியாசம் = புள்ளுவம் (கபடம்). வ்யாஸம் - வியாசம் = விரிவு = அகலம்.

ஷட் + அக்ஷரம் - ஷடக்ஷரம் - சடக்கரம் = ஆறெழுத்து. ஷட் + முகம் - ஷண்முகம் - சண்முகம் = ஆறுமுகம்.

ஹடம் - அடம் = வலிந்து பற்றல் (பலாத்காரம்). ஹத்யா - அத்தியை, அத்தி = கொலை. ஹம்ஸம் - அஞ்சம் = ஓதிமம் (அன்னம்). ஹரன் - அரன் = அழிப்புத் தொழிற்கடவுள், எப்பொருட்குமிறைவன். ஹரி - அரி = காப்புத்தொழிற்கடவுள், ஆயிரங்கண்ணன், தண்சுடர், செஞ்சுடர், காற்று, சுடர், வட்புலி, குதிரை, பாம்பு, குரங்கு, தவளை, கிளி, மழை. ஹலாஹலம் - ஆலகாலம் - ஆலாலம் - ஆலம் = பாம்பினஞ்சு. ஹவிஸ் - அவி = நெய். ஹஸ்தம் - அத்தம் = கை. ஹஸ்திந் - அத்தி = ஹஸ்தமாகிய துதிக்கையை யுடையது = வேழம். ஹாநி - ஆனி = அழிவு. ஹாரம் - ஆரம் = தொடையல் (மாலை). ஹாசம் - ஆசம் = சிரிப்பு. ஹாஹா - ஆ ஆ = துன்பத்தில் நிகழ்சொல். ஹிங்கு - இங்கு = பெருங்காயம். ஹிமம் - இமம் = பனி. ஹிம்ஸா - இமிசை = துன்பம். ஹே - ஏ = அழைப்பில் நிகழ்சொல். ஹேது - ஏது = பொருட்டு. ஹேயம் = ஏயம் = இகழ்ச்சி. ஹையங்கவீநம் - ஐயங்கவீனம் = வெண்ணெய் (நவநீதம்). ஹோ - ஓ = அழைப்பில் நிகழ்சொல். ஹோமம் - ஓமம் = வேள்வி.

க்ஷணம் - கணம் = பொழுதினுட்பம், விழா. க்ஷத்ரியன் - சத்திரியன் = இரண்டா மரபினன். க்ஷீரம் - கீரம் = பால்.

**இவ்வாறு பொருளாகத் தக்க இம்மொழிகளும் வடமொழித் திரிவும் அழிவுந் தென்மொழி வழக்குமா மெனவும்;**

(3) அகம் = மறம் (தீவினை). அகாதம் = மிக்க ஆழம். அங்கம் = அடையாளம். அங்கம் = கைகால் முதலிய வுறுப்பு. அங்குரம் = முளை. அங்கோலம் = அழிஞ்சின்மரம். அதவா = இல்லாவிடில். அந்தன் = குருடன். அபசயம் = இடையூறு. அமரன் = சாவில்லான் (தேவன்). அயம் = இரும்பு. அர்ப்பணம் = கொடுத்தல். அனந்தரம் = பின்பு. ஆகந்துகம் = வந்து கூடினது. ஆகாரம் = வடிவு. ஆகுலம் = சிதறினது. ஆபீனம் =

செருத்தல் = பெற்றத்தின் மடி. ஆமயம் = நோய். ஆமலகம் = நெல்லி. ஆம், ஓம் = ஒப்புக்கோடன் மொழி. ஆராதனம் = மகிழ்வித்தல். ஆவி = விளக்கம் (ப்ரகாசம்). இதரன், பாமரன் = கீழ்மகன், அறிவிலான். இனன் = செஞ்சுடரோன், ஆள்வோன் (ப்ரபு). ஈரிதம் = தள்ளப்பட்டது. உதரம், துந்தம், (ஜடரம்) = வயிறு. உத்தரம் = வடக்கு, மேல், விடை. உந்துரு, (மூஷிகம்) = எலி, பெருச்சாளி. உபரி = மேலிடம். உரம் = மார்பு. உரு = அகலம். ஊரு = தொடை. ஊனம் = குறைவு. ஏணம் = மான்தோல். ஏதம் = பலநிறம்.

கடு = கார்த்தற் சுவை. கம் = காற்று, படைப்புத் தொழிற் கடவுள், தலை, புனல். கம் = வான். கண்டம் = கழுத்து. கண்டம் = கடிகை (துண்டு). கபம் = கோழை. கபாடம் - கவாடம் = கதவு. கபாலம் = மண்டையோடு. கபோதம் = புறா. கம்பி = அகப்பை. கரணன் = மூன்றாமரபினனுக்கும் நான்காம் மரபினளுக்கும் பிறந்தவன் (கணக்கன்). கலன் = பொல்லாதவன் (துஷ்டன்). கவசம் = மெய்ப்பை. களங்கம் = உடலடையாளம், குற்றம், பழிமொழி (அபவாதம்). களிதம் = நழுவுதல். கனம் = மிக்க சூடு, கனம் = நெருங்கினது. கனாகனம் = அடங்காக் களிறு, பொழியெழிலி (மேகம்). கார்முகம் = வில். கானீனன் = முதுக்குறைவில்லாள் பெற்ற பிள்ளை. கிங்கரன், பரிசாரகன் = ஏவல் செய்வோன். கிட்டம் = கழிவு, கசடு. கிலம் = பாழ்பட்டது, அழிவு. கீர் = நாமகள் (ஸரஸ்வதி), சொல். குக்குடம் = கோழி. குசம் = முலை. குசம் = தூப்புல். குஞ்சம் = மலர்க்கொத்து. குண்டன் = புல்லறிவாளன். குந்தளம் = தலைக்கோலி (தலைமயிர்). குமுதம் = ஆம்பல் (வெள்ளாம்பல், செவ்வாம்பல்) = அல்லி. குளீரம் = கர்க்கடகம் = ஞெண்டு. கூகம் = பெரும்புள் (கூகை). கேசவன் = தலைநிறைகோலியுள்ளோன், மால். கேதனம் = தோகை (த்வஜம்). கேலி = விளையாட்டு. கைதவம் = புள்ளுவம் (வஞ்சகம்). கோ, கௌ - பொன்னாடு, அம்பு, ஆன், நூற்றுமுனை (வஜ்ராயுதம்), விசும்பு (திக்), விழி, ஞாலம், புனல். கோகநதம் = செம்முளரி. கோகிலம், பிகம் = குயில். கோசம் = நூல் (புஸ்தகம்), அரும்பு. கோடரம் = மரப்பொந்து. கோமளம் = மென்மை. கோளம் = திரள் வடிவு.

சசம் = முயல். சண்டாளன் = நான்கா மரபினனுக்கும் முதலா மரபினளுக்கும் பிறந்தவன் = தொடத் தகாக் கொலைஞன். சம்பு = நலனுண்டு செய்வோன் (சிவன்). சயம் = கை. சரமம் = இறுதி. சரிதம் = நடை. சவம், குணபம் = பிணம். சன்னம் = மறைபொருள். சாகம் = கீரை. யாடு = ஆடு. சாரணன் = ஊருக்கு வெளியிலுலாவுவோன். சிந்தனம் = நினைப்பு. சில்லி = மரத்தின் பட்டை. சுகம் = கிளி. சுசி = அழகு,

வெள்ளை. சுல்லி = அடுப்பு. சுனகன் = நாய். சூரன் = வன்மையோன். சேதம் = வெட்டுதல். சேதனம் = அறிவு. சைவம் = நல்லான்றொடர்பு, (சிவசம்பந்தம்). சைவலம் = பாசி. சோணிதம் = செந்நீர் (ரக்தம்). சோபம் = வீக்கம்.

தடம் = புனற்கரை. தண்டுலம் = அரிசி. தந்து = நூல். தர்ப்பணம் = மகிழ்வித்தல் (த்ருப்தி செய்தல்). தர்ப்பணம் = கண்ணாடி. தலம் = அங்கை, கீழிடம். தவன் = கணவன். தளம் = இலை, மலரிதழ். தன்யன் = அறனுடையோன். தாசன் = செம்படவன். தாரு, இந்தனம் = விறகு. தாலம் = கிட்டி (கைத்தாளம்). திமிதம் = நனைந்தது. திலகம் = நெற்றிப் பொட்டு. தீ = அறிவு. தீர்த்தம் = அறவோர் மூழ்குபுனல், நூல் (ஆகமம்). தீர்த்தன் = அடிகள் (குரு). தீனன் = ஏழை. துச்சம் = நலனற்றது. துரிதம், ஏனம் = மறம் (தீவினை). துரீயம் = நான்காவது. துரீயாதீதம் = நான்காவதன் மேற்பட்டது. தூதன் = அனுப்பப்பட்டவன். தூலம் = பஞ்சு. தேசிகன் =அடிகள் (குரு). தேவலன் = தொழுவோன். தேனு = தலையீற்றுப் பெற்றம். தோமரம் = எறிபடை.

நவம், நவீனம் = புதிது. நாதன் = தலைவன். நாதம் = ஒலி. *நாயம் = (நயமானது) நலனுளது. நிகமம் = மறை. நிசிதம் = கூர்மை. நிதனம் = அழிவு. நிபிடம் = நெருக்கம். நிபுணன், சதுரன் = மிகுவல்லோன். நிமித்தம் = பொருட்டு. நிம்பம் = வேம்பு. நீசம், வாமனம் = குறில். நீபம் = இந்துளம். (கடம்பு). நுதி (ஸ்துதி) = புகழ். நேமி = வட்டம்.

பகினீ = உடன் பிறந்தாள். பங்கம் = சேறு, மறம். பங்கு = முடவன். பசனம் = அவித்தல். பச்சிமம் = மேற்கு. பஞ்ச பாத்ரம் = வாயகன்ற கலம். பஞ்சானனம் = அகன்ற முகம், அகன்றமுக வட்புலி (சிங்கம்). பணம் = காசு. பணா = பாம்பின் பை. பதவீ, பத்ததி = வழி. பத்தனம், பட்டணம் = ஊர். பத்தி = காலாள், நடந்து போதல். பம்பரம் = வண்டு. பயம், பயஸ் = பால். பயம் = அச்சம். பரம் = நீளிடை (தூரம்), உயிரற்றது, அயல், மேலானது. பராதீனம் = உரிமையின்மை. பரிபவம் = இழிவு. பரிமாணம் = அளவு, வேறுபாடு. பரு, பருஸ் = மூங்கின் முளி = கணு, முளிபோன்ற கட்டி. பலம் = ஒரு நிறையளவு. பலம் = பேறு = பயன். பலம் = வன்மை, படை (ஸேனை). பாடம் = படித்தல். பாடலி = பருத்தி, பாதிரி. பாண்டம் = பல்பொருளிடுகலம், முதலாக வைக்கும் பொருள் (மூலதனம்). பாரம் = சுமை. பார்த்திவன் = ஏந்தல் (வேந்தன்).

* இது "நயொநாயெ" எனும் அமர நிகண்டு ஸங்கீர்ண வாக்கியமாகும். இதுவே தமிழ் வழக்கில் "நாயன்" எனவுயர் திணை யாண்பாலுக்காகி" இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி எனுந் தொல்காப்பியக் கூற்றுப்படி "நாயனார்" என நூல்களில் வருகின்ற தென்றல் நன்முடிபாம். தமிழில் நாய் + அன் எனப் பிரித்தல் கூடாது.

பாலம், அளிகம் = நெற்றி. பாவம் = உள்ளது. பித்தி = சுவர். பிப்பலம், போதி = அரசமரம். பின்னம் = வேறுபடுதல். பீதி = அச்சம். புண்டரீகம் = வெண்முளரி. புத்தன் = அறிஞன், புத்தக்கடவுள். புலம் = அகலம். புலாகம் = சோறு. பூகம் = பாக்கு மரம். பூரி = பெரிது, பொன். பேனம் = நுரை. பைரவம் = அச்சம்.

மஞ்சம் = பாண்டில் - கட்டில். மண்டிதன் (பூஷிதன்) = அழகு செய்து கொண்டவன். மதுரம் = இன்சுவை. மரகதம் = பச்சை. மரு = புனலற்றதிணை. மர்த்தனம் = அடித்தல், துவைத்தல், பிடித்தல். மலினம் = அழுக்கு. மா = கருத்து, சாவு, தாய், இடை, மலர்மகள் (லக்ஷ்மீ). மாதவி = குருக்கத்தி மரம். மூகம் = ஊமை. மூர்த்தம் = வன்மையானது. மோகம் = பயனின்மை, வறுமை. மோசம் = முருங்கை. இலவு, வாழை.

வங்கம் = ஈயம். வடு = இளைஞன், மணமிலான் (ப்ரஹ்மசாரி). வணிகன் = செட்டி. வல்லபம் = எண்ணத்திற்கினிய பொருள். வள்ளூரம் = உலர்ந்தவூன். வாசாலன் = மிகவும் பேசுவோன். வாணி = சொல். வானம் = வனமெனுங் காட்டைச் சார்ந்த பொருள், உலர்ந்த கனி, விறகு. விசதம் (ஸிதம்) = வெள்ளை. விசாரதன் = கற்றோன். விடன் = பெண்ணசை விழைவோன். விதானம் = வேள்வி, அகலம், மேற்கட்டி. விதுரன் = அறியத்தக்கவன். விதேயன் = வணக்கமுள்ளோன் (விநயமுள்ளோன்). வித்தன் = பொன்னுடையோன். விந்து = அறிவோன். விபு = நிறைவு, நல்லான் (சிவன்). வியாதன் = துணிவுடையோன். வைதேயன் (பாலிசன்) = அறியாதவன். வைரம் = பகை.

**இவ்வாறு பொருளாகத்தக்க இவைகளும் வடமொழிகளே; இவற்றுட் சில வடமொழித்திரிவும், சில ஒலியளவில் வடமொழிக்குந் தென்மொழிக்கும் பொதுவுமா மெனவும்;**

**(4) செஞ்சுடரின்** பெயராக - ஸூரன், ஸூர்யன், ஆதித்யன், திவாகரன், பாஸ்கரன், அர்க்கன், மார்த்தாண்டன், அருணன், பாநு, தபநன், ஸவித்ரு, ரவி, பரிதி, விரோசநசன், ப்ரபாகரன், ஹம்ஸன், க்ருகபதி, பத்மநீவல்லபன் என்றும், -

**திங்களின்** பெயராக - சந்த்ரன், சந்த்ரமாஸ், இந்து, விது, நிசாபதி, ஓஷதீசன், ஸோமன், சசி, குமுதபாந்தவன், விரோசநன், ஈரன் என்றும்,-

**மண்ணவன்** பெயராக -மநுஷ்யன், மாநுஷ்யன், மாநவன், நரன் என்றும்,-

**பெண்மகள்** பெயராக - ஸ்த்ரீ, ஸீமந்திநீ, அபலா, நாரீ, வாமா, வநிதா, மாநிநீ, வஞ்சநீ, மஹிளா என்றும்,-

**அறிஞன்** பெயராக - வித்வாந், விபச்சித், விசக்ஷணன், ஸுதீ, கோவிதன், புதன், தீரன், மநீஷிந், ப்ராஜ்ஞன், பண்டிதன், கவி, தீமத், ஸூரி, ஸூரிந், க்ருஷ்டி என்றும்,-

**இடையன்** பெயராக - கோபாலன், ஆபீரன், வல்லவன் என்றும்,-

**வட்புலியின்** பெயராக - கேஸரிந், கண்டீரவம், கஜரிபு, ம்ருகேந்த்ரன் என்றும்,-

**புலியின்** பெயராக = சார்த்தூலம், வ்யாக்ரம், தரக்ஷு என்றும்,-

**வேழத்தின்** பெயராக - தந்திந், பத்மீ, கரிந், கஜம், நாகம், குஞ்ஜரம், வாரணம், மாதங்கம், இபம், த்விபம் என்றும், -

**குதிரையின்** பெயராக - அச்வம், துரகம், ஹயம், கோடகம், கந்தர்வம், வாஹம், வீதி, ஸப்தி என்றும்,-

**மானின்** பெயராக - குரங்கம், வாதாயு, ம்ருகம், ஹரிணம், ஸாரங்கம் என்றும்,-

**குரங்கின்** பெயராக - கபி, ப்லவங்கம், வலீமுகம், மர்க்கடம், வாநரம், கீசம் என்றும்,-

**பூனையின்** பெயராக - ஓது, பிடாலம், மார்ஜாலம், ஆகுபுக், வ்ருஷதம்சகம் என்றும்,-

**கரடியின்** பெயராக - பல்லுகம், பாலூகம், என்றும்,-

**கழுதையின்** பெயராக - பாலேயம், ராஸபம், கர்த்தபம், கரம் என்றும்,-

**பன்றியின்** பெயராக - வராஹம், கோலம், கிடி, கிரி, ஸூகரம், போத்ரிந், கோணிந், க்ரோடம், பூதாரம் என்றும்,-

**பாம்பின்** பெயராக - ஸர்ப்பம், புஜங்கம், அஹி, வ்யாளம், சக்ரிந், குண்டலிந், கூடபாதம், காகோதரம், உரகம், தந்த சூகம், நாகம், பணிந், பந்நகம், பிலேசயம், போகிந் என்றும்,-

**ஆமையின்** பெயராக - கூர்மம், கமலம், கச்சபம், கமடம் என்றும்,-

**தவளையின்** பெயராக - பேகம், மண்டூகம், சாலூரம், வர்ஷாபூ, தர்த்துரம் என்றும்,-

**பறவையின்** பெயராக - ககம், விஹங்கம், பக்ஷிந், சகுநம், அண்டஜம், விகிரம், வி, சகுந்தம் என்றும்,-

**மஞ்ஞையின்** பெயராக - பர்ஹிணம், நீலகண்டம், புஜங்கபுக், சிகாவளம், சிகிந், சிகண்டி, கேகிந், மேகநாதாநுலாஸிந் என்றும்,-

**வையகத்தின்** பெயராக - பூ, பூமி, புவி, தரா, தரணி, கு, குவலயம், அவநி, மேதிநீ, அநந்தா, அசலா, அப்திமேகலா, கஹ்வரி, மஹீ, வஸுமதி, ப்ருதிவீ, விபுலா, விச்வம், தாத்ரீ, க்ஷோணி, இளா, காச்யபீ (காசினி) என்றும்,-

**புனலின்** பெயராக - வார், வாரி, ஸலிலம், ஜலம், கமலம், காண்டம், பயஸ், ஜீவநம், வநம், உதகம், ஸர்வதோமுகம், தோயம், பாநீயம், குசம், விஷம் என்றும்.-

**கடலின்** பெயராக - ஸமுத்ரம், அப்தி, பாராவாரம், உததி, ஸிந்து, ஜலநிதி, ஸாகரம், ரத்நாகரம் என்றும்,-

**யாற்றின்** பெயராக நதீ, தரங்கிணீ, சைவலிநீ, தடிநீ, ஆபகா, கூலம், ஸரஸ்வதீ என்றும்,-

**அலையின்** பெயராக - தரங்கம், பங்கம், ஊர்மி, வீசி, உல்லோலம், கல்லோலம் என்றும்,-

**நெருப்பின்** பெயராக - அக்நி, வந்ஹி, வஹ்நி, சுசி, தநஞ்ஜயன், பர்ஹி, பாவகன், ரோஹிதாச்வன், தஹநன், தமுநா, சித்ரபாநு, வைச்வாநரன், விபாவஸு, அநலம், அங்காரகன் என்றும்,-

**காற்றின்** பெயராக - வாயு, கந்தவஹன், கந்தவாஹன், அநிலம், ஸமீரன், ஸமீரணன், மருத், மாருதம், வாதம், ஆசுகம், ஸதாகதி, பவநம் என்றும்,-

**வானின்** பெயராக - அப்ரம், அம்பரம், நபம், ககநம், புஷ்கரம், அந்தரிக்ஷம், அநந்தம், ஆகாசம், தாராபதம், விஷ்ணுபதம், விஹாயம், வ்யோமம், நாகம் என்றும்,-

**ஒலியின்** பெயராக - நிநாதம், நிநதம், த்வநி, த்வாநம், ரவம், ஸ்வநம், நிஸ்வாநம், ஆரவம், ஆராவம், ஸம்ராவம், விராவம் என்றும்,-

**யாண்டின்** பெயராக - வத்ஸரம், ஸம்வத்ஸரம், வர்ஷம், அப்தம், ஹாயநம், ஸமா என்றும்,-

**பகற்பொழுதின்** பெயராக - திவஸம், திவா, திநம், வாஸரம், அஹஸ் என்றும்,-

***ஒளியின்*** பெயராக - காந்தி, சோபா, ப்ரபா, சவி, த்யுதி, தீப்தி, ருக், ருசி, ரோசிஸ், சோசிஸ், ஆதபம், ப்ரகாசம், தேஜஸ், விவஸ், பர்க்கஸ் என்றும்,-

***இருளின்*** பெயராக - அந்தகாரம், த்வாந்தம், தமிஸ்ரம், திமிரம், தமம், தமஸ் என்றும்,-

***மலையின்*** பெயராக - சிகரிந், பர்வதம், அத்ரி, கிரி, அகம், அசலம், சைலம், நகம், ஸ்தாவரம், பூதரம், ஜீமூதம், கோத்ரம், தரம், மரு என்றும்,-

***பொன்னின்*** பெயராக - கநகம், ஸ்வர்ணம், ஸுவர்ணம், ஹிரண்யம், ஹேமம், ஹாடகம், தபநீயம், காங்கேயம், சாமீகரம், ஜாதரூபம், காஞ்சநம், ருக்மம், ஜாம்பூநதம், அஷ்டாபதம், அர்ஜுநம், கல்யாணம், கைரிகம், கர்ப்புரம், வஸு என்றும்,-

***முளரியின்*** பெயராக - பத்மம், நளிநம், அரவிந்தம், மஹோத்பலம், சதபத்ரம், ஸஹஸ்ரபத்ரம், குசேசயம், பங்கஜம், பங்கேருஹம், அம்போருஹம், ஸாரஸம், ராஜீவம், புஷ்கரம், கமலம், கஞ்ஜம் என்றும்,-

***அழகியதின்*** பெயராக - ஸுந்தரம், ருசிரம், சாரு, ஸுஷமம், சோபநம், காந்தம், மநோஹரம், மநோஜ்ஞும், மஞ்ஜு, மஞ்ஜுலம் என்றும்,-

***வீட்டின்*** பெயராக - நிகேதநம், நிவேசம், க்ருஹம், கேஹம், அகாரம், மந்திரம், நிகாயம், வாஸ்து, உடஜம், வாஸம், வஸதி, கூடம், சரணம் என்றும்,-

***காட்டின்*** பெயராக - அடவீ, அரண்யம், ஆரண்யம், விபிநம், கஹநம், வநம் என்றும்,-

***மரத்தின்*** பெயராக - விடபிந், வ்ருக்ஷம், சாகிந், பாதபம், பலாசிந், குடம், தரு, ஸாலம், த்ருமம், அகமம், ஸ்தாவரம் என்றும்,-

***மலரின்*** பெயராக - ஸுமம், ஸுமநஸம், குஸுமம், ப்ரஸூநம், புஷ்பம் என்றும்,-

***ஒழுங்கின்*** பெயராக - வீதி, ஆளி, ஆவளி, ச்ரேணி என்றும்,-

***எல்லாமென்பதன்*** பெயராக - ஸமம், ஸர்வம், விச்வம், அசேஷம், ஸமஸ்தம், ஸகலம், நிகிலம், அகிலம், அகண்டம், அவிகலம், புஷ்கரம், பூர்ணம் என்றும்,-

***கூட்டத்தின்*** பெயராக - ஸமூஹம், ஸந்தோஹம், வ்யூஹம், விஸரம், வ்ரஜம், வாரம், ஸங்காதம், ஸஞ்சயம், ஸமுதாயம், ஸமவாயம், ஸம்ஹதி, ப்ருந்தம், கதம்பம், கணம் என்றும்,-

**வழிச்செல்கை**யின் பெயராக - யாத்ரா, ப்ரயாணம், ப்ரஸ்தாநம், கமநம், அபிநிர்யாணம் என்றும்,-

**கூடுதலின்** பெயராக - மேளகம், ஸங்கம், ஸங்கமம் என்றும்,-

**களிப்பின்** பெயராக - முத், ப்ரீதி, ப்ரமதம், ப்ரமோதம், ஆமோதம், ஸம்மதம், சாதம், ஸந்தோஷம் என்றும்,-

**போரின்** பெயராக - ஜந்யம், ஸமீகம், ஸங்க்ராமம், ஸாம்பராயிகம், ஸமிதி, ஆயோதநம், ஆஹ்வம், ரணம், யுத்தம் என்றும்,-

**பெயரின்** பெயராக - ஆஹ்வயம், ஆக்யா, அபிதாநம், நாமம், நாமதேயம் என்றும்,-

**வருபவைகளும் வடமொழிகளே யெனவும்;**

**(5)** அண்டம், பிண்டம், தண்டம், சந்தம், மந்தம், பந்தம், கந்தம், படம், மடம், கடம், குடம், பதி, விதி, யதி, கதி, நிதி, ததி, திதி, கலி, பலி, நயம், மயம், வரம், தரம், சரம், பத்யம், கத்யம், மத்தம், பித்தம், அபத்தம், அமலம், விமலம், நிர்மலம், சரணம், கிரணம், கணிதம், குணிதம், நதம், மதம், வதம், அதம், விதம், காலம், கீலம், ஜாலம், சீலம், சூலம், நீலம், மூலம், கோரம், வீரம், தாரம், ஸாரம், சோகம், யோகம், போகம், வேகம், மானம், பானம், கானம், தானம், மாடம், பீடம், காமம், தூமம், பீமம், வாமம், கீதம், வேதம், பேதம், கேதம், பூதம்;

உதயம், அஸ்தமயம்; ஜனனம், மரணம்; ஸமீபம், தூரம்; ஸங்கல்பம், விகல்பம்; ஸுகம், துக்கம்; சுத்தம், அசுத்தம்; அஸ்தி, நாஸ்தி; ஆபத், ஸம்பத்; உக்ரம், சாந்தம்;

ஆதி, மத்யம், அந்தம்; உத்தமம், மத்யமம், அதமம்; ரேசகம், பூரகம், கும்பகம்; ஸத், சித், ஆனந்தம்; காரணம், கார்யம்; நாதம், பிந்து; மாதா, பிதா; ஆக்ஷேபம், ஸமாதானம்;

மனம், மனஸ், மனீஷா, மானஸம், மதி, சித்தம், புத்தி, குணம், விவேகம், அதிசயம், ஆச்சர்யம், தீவ்ரம், உத்கர்ஷம், வினோதம், கரகம், கலசம், கமண்டலம், குண்டீ, அன்னம், ஓதனம், யாகம், மகம், ஸவம், யஜ்ஞம், ஸந்தேகம், ஸம்சயம், நிச்சயம், நிர்ணயம், ஸத்யம், சடிதி, சீக்ரம்;

குடும்பம், குலம், கோத்ரம், ஜாதி, மலம், மூத்ரம், மஜ்ஜா, மேதஸ், ரேதஸ், வீர்யம், பிசிதம், ஆமிஷம், அவயவம், சரீரம், களேபரம், காத்ரம், விக்ரஹம், தனு, காயம், மூர்த்தம், தேஹம், பாதம், ஜானு, குதம், கடி,

நிதம்பம், பகம், யோனி, மேட்ரம், சிச்னம், பீஜம், நாபி, பயோதரம், பாணி, கரம், சிரம், முகம், வக்த்ரம், வதனம், ஆனனம், துண்டம், கந்தரம், களம், கோணா, அதரம், கபோலம், தந்தம், தசனம், தாலு, நயனம், ஈக்ஷணம், லோசனம், நேத்ரம், லலாடம், அங்குலி, நகம்;

மண்டனம், ஆபரணம், மகுடம், கிரீடம், குண்டலம், காஞ்சீ, அங்கதம், கங்கணம், கிங்கிணீ, மஜ்ஜீரம், நூபுரம், கேயூரம், கடகம், உத்தரீயம், சந்தனம், பரிமளம், களபம், கஸ்தூரி, தாம்பூலம், கம்பளம், சாமரம், சகடம், தோரணம், வாஹனம், துந்துபி, டக்கா, மட்டு, ஆனகம், படஹம், பணவம், சர்ச்சரம், மர்த்தளம், கோணம், டிண்டிமம், பேரீ, வேணு, அஸ்த்ரம், சஸ்த்ரம், தனுஸ், பாணம், குடாரம், பரசு, நாராசம், அஸி, முஸலம்;

ஸேது, மார்க்கம், அயனம், பந்தா, புரம், புரீ, புவனம், ஜகத், ஆலயம், மண்டபம், மண்டலம், அபிஷேகம், பட்டம், கீர்த்தி, யசஸ், செல்வம், பாக்யம், தனம், மங்கலம், பூதி, நீதி, கம்பீரம், தாஷ்டீகம், தார்ட்யம், அங்கீகாரம், உதாரம், தயாளம், பச்சாத்தாபம், ஸஹாயம், கடாக்ஷம், விவாஹம், வதூ, வரன், ஆலிங்கனம், தாடனம், சும்பனம், மைதுனம், ஸுரதம், தாது, சுக்லம், இந்த்ரியம், அணு, பசு, சிசு, ஸுதன், ஸூனு, புத்ரன், தனயன், நந்தனன், சாபம், சபதம், விரோதம், விகாதம், விபரீதம், விகாரம், விவிதம், பரிணாமம், கபடம், கோபம், அபராதம், பாதகம், பிலம், பாதாளம், நரகம், நிரயம், சஞ்சலம், தரளம், ஆயாஸம், தாபம், அபாயம், நாசம், தசம், சதம், ஸஹஸ்ரம், லக்ஷம், கோடி, பதம், வசனம், வாக்யம், ஆரணம், புராணம், இதிஹாஸம், உபன்யாஸம், ஆரம்பம், நூதனம், அவஸரம், தருணம், அனவரதம், அனாரதம், ஸததம், ஸந்ததம், அனுகூலம், புண்யம், உபவீதம், உபவாஸம், உபதேசம், ஆஸனம், தாரகம், மந்த்ரம், அனுஷ்டானம், சிராத்தம், அர்க்யம், பாத்யம், ஆசமனம், தூபம், தீபம், நைவேத்யம், அக்ஷதா, அர்ச்சனம், ஜபம், நியமம், வந்தனம், நமஸ்காரம், அஞ்ஜலி, க்ஷௌரம், வபனம், முண்டனம், சௌசம், கௌபீனம், பரித்யாகம், ஸந்ந்யாஸம், திகம்பரம், மௌனம், அனுபவம், சுபம்;

நடனம், நாட்யம், நர்த்தனம், தாண்டவம், மாயம், கபிலம், பிங்கலம், கோமயம், கலாபம், மது, மாணிக்கம், மணி, திலம், குங்குமம், சிந்தூரம், கந்தகம், தாலகம், ஆணி, தடா, துலா, அதிகம், உபாயம், கேவலம், சூன்யம், நிகண்டு, நிமித்தம், சனி, யாசகம், நிசி, ஸம்பந்தம், சயனம், ஆதாரம், மேரு, விசாலம், தீர்க்கம், உன்னதம்,

துங்கம், உத்துங்கம், படலம், மேகம், வர்ஷம் (வ்ருஷ்டி), சீதம், சீதளம், சராசரம்;

கருடன், வைனதேயன், ஸுரன், விபுதன், லேகன், அஸுரன், தனுஜன், தானவன், தைத்யன், நைருதன், வஞ்சன், வஞ்சகன், மூர்க்கன், மோஷகன், (கள்வன்), சோரன், கிராதன், புளிந்தன், காமுகன், கர்மசூரன், ஸமர்த்தன், விக்ரமன், பராக்ரமன், உபாத்யாயன், அத்யாபகன், புரோஹிதன், குரு, குரவன், புங்கவன், வைத்யன், வேதியன், முனி, தீர்க்கதரிசி, அதிபன், நாயகன், தேவன், தேவீ, ஈசன், ஏகன்;

**என வருபவைகளும் வடமொழிகளே யெனவும்;**

**(6)** ராக்ஷஸர் - இராக்கதரெனவாம்; இதுவே அரக்கர் எனவாயிற் றெனவும்; ரக்ஷகம் - இரக்கம் எனவாயிற் றெனவும்; லேசம் - இலேசெனவாம்; இதினின்றும் எளிது என்பதுண்டாயிற் றெனவும்; கரிய நிறத்தானெனும் பொருடரத்தக்க க்ருஷ்ணனென்பதே கண்ணன் எனவாயிற் றெனவும்; தொழிலெனும் பொருடரத்தக்க கர்மம் - கருமமென்றாய வழிக்கருவி எனுஞ் சொல்லுண்டாயிற் றெனவும்; காலம் - காலையென முற்பகலின் பெயராயிற்றெனவும்; வளைவெனும் பொருளைத் தரும் குடிலம் - குடிலென்றாய வழிக்குடை யெனுஞ் சொல் லுண்டாயிற் றெனவும்; பெருஞ் சீற்றமெனும் பொருளைத் தருஞ் சண்டம் - சண்டை யெனவாயிற் றெனவும்; சுமத்தலெனப் பொருளாந் தாரண மென்பதினின்றுந் தரித்தல் என்பதும், அருளெனப் பொருளாந் தயாவென்பதினின்றுந் தாய் என்பதும், ஒளியெனப் பொருளாம் த்யுதி, தீதி, தீப்தி யென்பவற்றினின்றே நெருப்பின் பெயர்க்கண் தீயென்பதும், இத்தீயினின்றும் தீது, தீமை, தீங்கு என்பனவு முண்டாயினவெனவும்; மரமெனப் பொருளாம் த்ருமம் - துருமமெனவாயிற்று; புல்லெனப் பொருளாம் த்ருணம் - திரணமெனவாயிற்று; இவற்றிலொன்றே புல்லொத்த பொருட்குத் துரும்பு எனும் பெயராய் நிற்பதாயிற் றெனவும்; சிறிது, மென்மைத்தெனும் பொருளைத் தரும் ஸ்தோகம் - தோகம் எனவாயிற்று; இதினின்றுந் தொகுத்தல், தொகல், தொகை யென்பனவும், முனிவெனும் பொருள் தரும் நாம வென்பதினின்று நமன் என்பதும், வீடெனும் பொருடரும் நிலயமென்பதினின்று நிலம் என்பதும், இந்நிலத்தினின்று நிலை யென்பது முண்டாயினவெனவும்; இடையரூர் பல்லீ. இஃதிடச் சார்வுபற்றி மருதம், சிற்றூர், மக்கள்

படுக்கை, முனிவரிருக்கை, கோயிலெனும் பொருடரத்தக்க பள்ளி யெனவாயிற் றெனவும்; பாகமென்பதினின்றும் பாகித்தல், பகுத்தல், பாகுபாடு, பங்கு என்பன வுண்டாயினவெனவும்; இடமெனப் பொருளாம் பூவெனுஞ் சொல் பல தோற்றங்கட்கு மிடனாய் மலர்ந்து கிடக்கும் வையகத்திற்குப் பெயரானபடி, மலரு மலர்கட்கு மாயிற் றெனவும்; ஆண்டன்மையும், பெண்டன்மையு முடையாளெனப் பொருளாம் போடா வென்பதே பேடியென வாயிற்றெனவும்; இலஞ்சியின் பெயரான வகுளம் - மகிழ் எனவாயிற்றெனவும்; ஈன்றாளெனப் பொருளாம் மாத்ரு என்பதினின்றும் பெண்ணின் பெயரில் மாது எனுஞ் சொல் மரபு பற்றி யுண்டாயிற்றெனவும்; மலராவரும்பெனப் பொருளாம் முகுளம் - முகிழ் எனவாயிற்று. இச்சொல் குவிதலைக் காட்டும் வழி முகிழ்த்தல் எனவாயிற்றெனவும்; எல்லாமெனும் பொருளைத் தரூஉம் யாவத் என்பதே யாவும் எனவாயிற்றெனவும்; யாநம் = சுமை சுமக்கும் ஊர்தி; அதனால் ஊர்தியாம் விலங்குகளிலொன்று யானை யெனவாயிற்றெனவும்; கைவாளெனப் பொருளாகும் கரவாளிகா, கரவாளமெனுஞ் சொற்களிலுள்ள வாளிகா, வாளமென்பவைகளே வாள் எனவாயின வெனவும்; பரவுதற் பொருளைத் தரூஉம் விஷ்ணு-விண் எனவாகி வெளியின் பெயராயிற்றெனவும்; கோவை யாளுகின்ற வனை கோவிந்த னெனு மாற்றால், ஊரை யாளுகின்றவனை விந்தனெனல் கூடும்; இது வேந்தன் எனவாயிற்றெனவும்; வளைந்துளதெனும் பொருடரும் வேல்லிதம் - வேலி யெனவாயிற்றெனவும்; கோ என்பதே ஊராள்வோன் பெயரில் கோ, கோன் என நிற்கின்றது; இதற்கு "கோபுரம்" என்பது காட்டாகுமென வும்; பெண் பெயராகு மங்கை, நன்மை யெனப் பொருளாம் மங்கமென்பதன் வழிவந்த மங்கா வெனுஞ் சொல்லாக வேண்டும்; இதற்கு "உருத்திரகோச மங்கை" என்பது காட்டாகு மெனவும்; இவ்வளவில் வந்த மொழிகளி லெம் மொழியேனும் புகாமல், தென்மொழி நூலொன்று மின்றெனவும்; இன்னும் வேண்டிய வாறாகவும் வடமொழி கற்றாருட் சிலர் கூறுதல் கூடுங்கொல்.

இதுகாறும் காட்டப்பட்ட சொற்களெல்லாம் வடமொழியே யாயினும், தென் மொழியேயாயினும், சிலச்சில பலப்பல அவ்வாறாயினும் அவர் கூற்றுப்படி யிவற்றுட் பல சில புகாமல், தென்மொழி நூலொன்று மின்றென்றல் உறுதியேயாம். ஆகலின், இச்சொற்களுள்ளும் இவையிற்றிற்கு வேறான வடசொற்களுள்ளும்

ஒன்றேனும் புகாமலே "சேந்தன் செந்தமிழ்" எனுமிந்நூ லென்னாலமைக்கப்படுவதாயிற்று. இவ்வாறு பல சொற்கள் நீங்குழியுந்தமிழ்ச் செய்யுள் தன்மொழியானே நடைபெறூஉ மெனும் ஆற்றலுமிதனால் வெளிப்பட்டது. ஊரும் பெயரும் (மந்த்ரம்) மறையும், ஓரொலிக் குறிப்பும், ஈரொலிக் குறிப்பும், ஒளிக்குறிப்பும், எம்மொழியினும் ஏற்பட்டபடி கோடல் கூடுமாயினும், முருகப்பிரா னெனுஞ் சேந்தன் மீது பாடுந் தூயதமிழாம் இச்செந்தமிழில், அந்தப் பிரான் பெயராக வடநூலுழை வரூஉம் கார்த்திகேயன், மஹாஸேநன், சரஜன்மன், ஷடாநநன், பார்வதீ நந்தனன், ஸ்கந்தன், ஸேநாநி, அக்நிபூ, குஹன், பாஹுலேயன், தாரகஜித், விசாகன், சிகிவாகநன், ஷாண்மாதுரன், சக்திதரன், குமாரன், க்ரௌஞ்சதாரணன், வல்லீசன், குக்குடதரன், ஸுப்ரஹ்மண்யன், த்விஷட்புஜன், சூரன், ஸ்வாமி, கஜமுகாநுஜன், சரவணபவனென வருவனவும்; இவையிற்றிற்கு வேறாக வடமொழி ஆயிரம் பெயரில் வருபெயர்களும் புகவில்லை. பிராட்டிகளின் பெயராகிய தேவஸேநா, வல்லீயெனுஞ் சொற்களும் புகவில்லை. தெய்வயானை யென்பதில் "தெய்வம்" என்பது வடசொல்லென்ப. அதனோடு சிவனிய "யானை" என்பதையும் சிலர் வடசொல்லெனக் கூறுதல் மேலே விளக்கப்பட்டது. தெய்வயானை யென்பது "கடவுட் பிடி" எனவும், வல்லீ (வள்ளி) என்பது "கொடிச்சி" எனவுஞ் செந்தமிழ் வழக்காக இந்நூற்கண் நிற்றல் காண்க. அங்ஙனம் குஹனென்பது உள்ளிடத்தான், கடவுள் என நிற்குமாறு நிற்பன பலவென்க.

ராக்ஷஸ ரென்பது அரக்கர் எனவாயதன்று. அரக்கெனச் சிவக்கும் சீற்றமுடையார் அரக்கரெனப்பட்டார். "அரக்கென்ப மெழுகு கள்ளின் விகற்பமுஞ் சிவப்புமாகும்" என்றபடி அரக்கு ஒருவகைக் கள்ளாதலின் அதனை யுண்பவர் அரக்கராவ ரெனலுமாம். ராக்ஷஸர் = (வேள்வியைத் தடுப்பவரென்று பொருளாதற்கு இச்சொல் வேறாம்.

ரக்ஷகம் - இரக்கம் எனவாயதன்று. உறங்கல் உறக்கமெனவாய வாறு இரங்கல் இரக்கமெனவாயிற்று.

லேசமென்பதின்றும் எளிது வந்ததன்று. எள்ளெனும் நுண் பொருள்வழி வந்தது. அதன் றன்மை எள் + மை = எண்மை யெனவும், எளிமை யெனவுமாம்.

க்ருஷ்ணனென்பது கண்ணன் எனவாயதன்று. உருத்திராக்க மணியென்பது முதற்குறைவுற்று அக்கமணியென வாயவாறு

கமலக்கண்ணனென்பது கண்ணனெனவாயிற்று. காளத்தியப்பரது மேனியில் அன்புமேலீட்டாற் றமது கண்ணைப் பிடுங்கியப்பி மேல்வீடு பெற்ற திண்ணனாருக்கு "கண்ணப்பன்" எனும் பெயர் வாய்த்தவாறு **யோவாம பாதார்சித விஷ்ணுநேத்ரஸ்தஸ்மை ததௌ சக்ரமதீ வஹ்ருஷ்ட : ருத்ராய நமோ அஸ்து"** எனும் (சுருதி) மறைமொழிப்படி சிவனாரது இடத்தாளில் தமது கண்மலரைச் சாத்தி (சக்ராயுதம்) ஆழி பெற்ற மாலுக்கும் அந்தக் கமலக் கண்ணனெனும் பெயர் வாய்த்தது. வடநூல்களில் "பத்மாக்ஷன்" "புண்டரீகாக்ஷன்" எனப்படுவனவு மது.

கர்மமென்பதினின்றுங் கருவி யென்பதுண்டாயதன்று. வலிமை யெனும் பொருடரத்தக்க "கருமை"யினின்று வந்ததாகும். மை-அழிய, இ-இறுதிநிலை புணர்ந்து நின்றது.

காலம் - காலையென முற்பகலின் பெயராயதன்று. கால் என்பதினின்று வந்தது. கால் = அடி = முன்.

குடிலம் - குடையாயதன்று. குடம் போற் கவியுங்கவிகை அப்பெயர் பெற்றது. "குடம்" என்பது அமரஸிம்ஹத்திலுளதேனும் பண்டை வடநூல்களிற் பயின்றுவாராத அது தென்மொழியே யாமெனல், சிவஞான போத வுரை யானு முணரற்பாற்று. இதனால், அமரஸிம்ஹம், விச்வப்ரகாசம், விஷாம்ருதம், சப்தலிங்கார்த்த சந்த்ரிகா, பர்யாயசப்தரத்நம், ஸரஸ்வதி விலாஸம், யாதவம், நாநார்த்த ரத்நமாலா, விச்வமேதிநீ, சப்தசப்தார்த்த மஞ்ஜூஷா, சப்தார்ணவம், பர்யாயார்ணவம், ஹலாயுதம் முதலிய வடமொழி நிகண்டுகளை மேலுமேலுஞ் செய்தோரானே, அவையிற்றிற் பற்பல தென்மொழிக ளியைந்தபடி சேர்க்கப்பட்டன வென்ப தூஉம் ஏற்படுகின்றது.

தயா - தாய் எனவாயதன்று. தன் ஆய் என்பன தாயெனவாயின. ஆய் = ஈன்றாள். "அன்னை ஆய் அவ்வை" என்பது காண்க.

நிலயமென்பதினின்று நிலம், நிலையென்பன வந்தனவல்ல. நில் எனு முதனிலையினின்று வந்தன. அம், ஐ இறுதி நிலைகள்.

பூ வென்பது அமரஸிம்ஹத்திற் பூமிப் பெயரிற் படிக்கப்பட்டது போலப் புஷ்பப் பெயரிற் படிக்கப்படாமையால், அது தென் மொழியேயாம், "சந்தங் காரிகை கவின் 'பூ'த்தளிமமே வாமங் காமர்' எனுமாற்றாற் பூ அழகாகலின் அழகிய மலர் பூ வெனப்பட்டது.

மாத்ரு - மாது எனவாய தன்று. மாது, மாதர் விருப்பமாகலின், விருப்பத்திற்குரியாள் மாதெனப்பட்டாள். மாதர் - அழகுமாம். அர் - இடைச்சொல்.

வகுளம் - மகிழ் எனவாயதன்று. மகிழ்ச்சியைத் தருமலர் மகிழெனப்பட்டது.

கரவாளிகா, கரவாள மென்பவற்றிலுள்ள வாளிகா, வாள மென்பவைகள் வாள் என வாயினவல்ல. "வள்ளென்ப காது கூர்மை வலிவளம் வாளே வாரம்" என்றபடி வள் =கூர்மையாகலின், கூரிய படைக்கலம் வாளெனப்பட்டது. வள் - வாளென நீண்டது.

விஷ்ணு - விண்ணென வாயதன்று. விண்ணெனுமொலிக் குறிப்புக் கிடமான வான் விண்ணெனப் பட்டது.

உடபம் - ஓடம் என வாயதன்று. ஓடும் புணை ஓடமெனப்பட்டது.

பலம் - பழம் என வாயதன்று. பழுத்த பொருள் பழமெனப்பட்டது.

பிஷ்டம் - பிட்டு என வாயதன்று. பிளக்குந் தன்மையது பிட்டு. பிளவு - பிள் என நின்று துவ்விறுதி நிலையோடு புணரும்போது பிட்டெனவாம்.

மீநம் - மீன் என வாயதன்று. மின்னுந் தன்மையுள்ள புனல் வாழுயிரே மீனெனப்பட்டது. அற்றாகலினன்றே வானிடை மின்னும் (நக்ஷத்ரம்) ஒளிகளும் வான்மீனெனும் பெயர் பெற்றுள்ளன. நிலத்தின் பெயராகிய கு - கூவென நீண்டபடி, மின் - மீனென நீண்டது.

என்று கூறுதல் செந்தமிழ் வழக்கிற் பொருந்தும், இவ்வாறே வடமொழி யெனப்படுபவற்றுட் பல மொழிக்கும் முதனிலை, இறுதிநிலை, இடைநிலை முதலியன காட்டி அவை தென்மொழி யென நிறுவல் கற்று வல்லார் மாட்டாகலின், இம்முன்னுரை விரியாமல் ஈண்டுச் சில மொழிகளே யெடுத்துக் கொள்ளப்பட்டன.

இத்திறமுணராராய், வடமொழி யொன்றையே கற்று அதனையே விதந்து கூறுநரா யுள்ளாருட் சிலர் - (ஸம்ஸ்க்ருதம்) சமற்கிருதமெனும் வடமொழியிலிருந்தே (த்ராவிடம்) திராவிடமெனுந் தென்மொழி யுண்டாயிற் றென்றும், அதனால் வடமொழியே தாய்மொழியென்றும் (தேவபாஷை) கடவுண் மொழி யென்றுங் கூறுதல் இவ்வையகத்தி லுண்டு. அவரெல்லாம் - தமிழொன்றையே

விதந்து கூறுநருட்சிலர், எவ்வெத் தென்மொழி யெவ்வெவ் வடமொழியிலிருந்துண்டாயின வென்று கூற இயைகின்றனவோ அவ்வத் தென்மொழியிலிருந்தே அவ்வவ் வடமொழியுண்டாயின: அவை - பெயர், வினை, இடை, உரியெனு நாற்றிறப் (பகாப்பதம்) பிரியா மொழியும், பொருள், இடம், பொழுது, சினை, பண்பு, தொழிலெனு மாறுங் கொண்டு வரு (பகுபதம்) பிரிமொழியுமாம்; வடமொழி முதனிலை (தாது) நூல் பின்னியற்றப்பட்டது; அந்த (தாது) முதனிலைகளின் பொருள்கள் எப்படி யிடுகுறியா யமைந்துளவோ அப்படித்தான் தமிழ்ப் பிரிமொழி முதனிலைகளுக்கும், பிரியா மொழியாகும் இடுகுறிப் பெயர்களுக்கும் பொருள்களமைந்துள வெனும் ஆற்றானும், தேவியாகிய தாய்க்கு உவப்பாயுள்ள வடமொழிபோல, அத்தேவியை நீங்காத் தேவனாகிய தந்தைக்கும் உவப்பாய் புதுமை காட்டி நிற்பது தென்மொழியெனும் ஆற்றானும் தென்மொழி தாய் மொழியுந்தந்தை மொழியுமா மென்றும்; குறைவில் (அகஸ்த்யர்) குறுமுனிவர்க்கு முக்கட் கடவுளும் முருகப் பெருமானும் அழகெலா மமைய வுணர்த்த நின்ற வொன்றாய், எஞ்ஞான்று தென்னாடுண்டாயதோ வஞ்ஞான்றே ஆண்டுப் பயிலவமைந்து பரந்துளதாய்த் திகழுந் தென்மொழியான தொன்மொழி கடவுண் மொழியே யாமென்றுங் கூறுதல் கூடுமென்பதை யுணராதவராவர். மேலும் இவர் - எழுதுங் கிளவியான தென்மொழிக் கெழுத்துக்கள் முன்னேற்பட்டன வென்பதையும், எழுதாக் கிளவி யெனப்படு மறைமொழியான வடமொழிக் கெழுத்துக்கள் பின்னேற்பட்டன வென்பதையும், பெரியார் பற்றும் மறைமுதலாகிய 'ஓ' அண்டத்தும் பிண்டத்து மெவ்வா றமைந்துளதோ அவ்வாறே வரிவடிவி லமையப் பெற்ற சிறப்புடையது தென்மொழி யென்பதையும், இந்த ஓ - தமிழெழுத்து வழியாகப் பின்னுண்டாகிய (க்ரந்த) கிரந்த வெழுத்திலும் அப்படியேயமைந்துளது. மற்றை நாகர முதலிய வெழுத்துக்களிலப்படி யமைந்தில தென்பதையும் ஓராதவராவர். பெரிதுந் தமிழே பேசுநரு மெழுதுநருமாகி, தாமுண்ணு முணவைத் தாமேயிகழ்வார் போலத் "தமிழுமொரு பாஷையா!" எனத் தமிழை யிகழும் இரு பிறப்பாளர் கண்ணுமிச் செய்தியேயும். இப்போராட்டத்தில் எனது கருத்தியாதென்னின், வடமொழி வேறு, தென்மொழி வேறென்பதேயாம். வடநாடர் தென்னாட்டிலும், தென்னாடர் வடநாட்டிலுஞ் செல்லுமிடத்து வடமொழிகள் தென்மொழிகளிலுந் தென்மொழிகள் வடமொழிகளிலுமாக விரவுதலும், ஒரு நாட்டு மொழி

மற்றொருநாட்டு மொழிபோல ஒலியளவா யமைந்து ஒரு பொருள் பயத்தலும், வேறு பொருள் பயத்தலுங் கூடுமென்பது எந்நாட்டு மொழியினரு மொப்ப முடிவ தொன்றாம். இத்திறம் அடியிற் காட்டுங் காட்டுகளானு மறியப்படும்.

வடமொழி ஸ்காந்த புராணத்தில் (வெண்ணாநல்லூர்) "வேண்ணாநல்லூர்" "கருவூர்" எனுந் தென்மொழிகளும், வடமொழிப் பாரதத்தில் "மணலூர்" எனுந் தென்மொழியும் விரவியுள்ளன. வானவர் துயர்தீர்த்தருள்வான் முருகப் பெருமான் தங்கிய இடங்களிலொன்றன் பெயராகிய "சேய்ஞலூர்" எனுந் தென்மொழியும் வடநூலுழைப் புக்கது. இவ்வாறு பலவென்னலாமே.

மூலமெனுஞ் சொல், இருமொழியிடத்தும் ஒலியளவி லொன்றாய் நிற்கின்றது. இதனை தற்சம மென்ப.

பாபமெனும் வடசொல், தென் சொல்லிற் பாவமெனத் திரிந்து மறம், தீவினையெனும் பெயர்க்கூட்டத்து ளொன்றாய் நிற்கின்றது. இதனைத் தற்பவ மென்ப.

பஞ்செனுந் தென் சொல்லே வடசொல்லில் பிசுவெனவும், கட்டப்பட்டதெனப் பொருளாங் கட்டி லெனுந் தென் சொல்லே வடசொல்லில் கட்வாவெனவும், குருந்த மரமெனுந் தென் சொல்லே வடசொல்லில் குந்த மெனவும், கெடுதலெனுஞ் சொல்வழி முதனீண்டு வந்த கேடுடைக் கேடனென்பதே வடசொல்லில் ஒழுக்கங் கெட்டவனென்று பொருளாமாறு கேடனெனவும், கோட்டை யெனுந் தென்சொல்லே வடசொல்லில் கோட்டமெனவு நிற்கின்றன: கோடல் = வளைதல். இதன்வழிக் கோடென்பதுங் கோட்டை யென்பது முண்டாயின. இத்தென்மொழிகளும் வடமொழியே யாமெனக் கூறல் அமைவுடைமை யாகாதென்பர் நடுநிலை நிற்பார்.

தமிழொன்றற்கே சிறப்பெழுத்தாகவுள்ள ழவ்வீற்று மொழியாகிய "தமிழ்" எனுந் தென்மொழியே தமிழம், த்ரமிளம், த்ரமிடம், த்ரவிடம், த்ராவிடம் என்றாய வொழுங் குணர்ந்தோர் "த்ராவிடம்" எனுஞ் சொல் வடமொழியென் றுரைப்பரோ? உரையார். ஈண்டுத் தமிழ் - த்ராவிட மென்றாயதும், த்ராவிடம் - தமிழென்றாயது மில்லையென்றலுமாம்.

முகம் எனுமொழி முன்னெனும் பொருளுடைத்து. வீட்டு வாயிலுக்கு முன்னிருக்கு மிடப்பெயர் "முகம் நிஸ்ஸரணம்" என்று

அமரஸிம்ஹங் கூறுமாற்றானும் இஃதுறுதிப்படும். இச்சொல் - உயிர்களின் முகத்திற்கு மாமாறு வடநூலார் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னர்க் கொள்ளக் கிடந்த தென்மொழியென்பது சிலர் துணிபு. இருதிற மொழிக்கும் அது பொதுவெனக் கோடலுமொன்று.

முனி, முநியெனுஞ் சொற்கள் தென்மொழியிலும் வடமொழியிலும் வரிவடிவில் வேறுபட்டு விஸர்க்கம் நீங்க ஒலியளவிலொன்று பட்டு முதனிலைப்பொருள் வேறுபட நின்றும் ஒரு பொருளையே பயக்கின்றன. என்னை? வையகத்தை முனிவோனும், கடவுளையே முன்னு முன்ன முளனும் முனியெனப் படுவாரென்பது தென்மொழிப் பொருள். வையகத்தை விரும்பா மனமெனும் அறிவுடையோனும், மௌனமுடையோனும் முனியெனப் படுவாரென்பது வடமொழிப் பொருள்.

கரத்தையுடைய வேழங் (கரி) கரியெனப்படுவது வடமொழிப் பொருள். கரிநிறத்தவ் வேழங் கரியெனப்படுமெனல் தென்மொழிப்பொருள். இஃது ஆகுபெயராகும்.

மாலைப்பொழுது ஸாயங்காலமெனப்படுமென்பது வடநூல் வழக்காயினும், தென்மொழியிற் சாயங்காலம் எனப்படுவது, வினைத்தொகையாமாறு சாய் எனப் பிரிக்கப்படுமாற்றாற், பகலவன் சாயுங் காலம், சாய்கின்ற காலம், சாய்ந்த காலமென்று பொருளாகத் தட்டில்லை. கால் = இடம். அது பொழுதிற்காயிற்று. அம் = சாரியை.

பாலனெனும் வடமொழியும், பாலனெனுந் தென்மொழியும் ஒன்றாய் நின்று வடநூற்படி பதினாறாண்டிட்குட்பட்டவனென்றும், மூர்க்கனென்றும், தென்னூற்படி பாலுண் குழவியென்றும், இடையனென்றும் வேறுவேறு பொருள் பயப்பனவாயின.

நேயம் வடசொல்லன்று. நே + அம் = நேயம். அம்= சாரியை, நே-அன்பு.

பிரான் என்னும் ஆண்பாற் கடவுட் பெயர் வடசொல்லன்று. பிரியானெனுந் தென் சொல்லே பிரானென வாயிற்றெனல் பொருந்தும். பிரியான் = எப்பொருட் கண்ணும் நீங்காதிருப்போன். பிராட்டி யெனல் பெண்பால்.

நூலகத்துள்ள 6-ஆம் வெண்பாவில் "மைந்தன்" எனப்பட்டது மநுஷ்யனெனும் வடசொற்கண் ணுண்டாய தென்று கருதற்க. மைந்து + அன் = மைந்தன். "மிடல் வயந்திண்மை மைந்து" என்றபடி மைந்து = வலி. இதனோடு ஆண்பா லிறுதி நிலையாகிய அன் புணர்ந்துளது. அவ் வலி, தந்தை தளர்வுற்ற ஞான்று தாங்கத்தக்க மிடலாம்.

நூலகத்துள்ள 7, 8-ஆம் வெண்பாக்களில் "ஐயன்" எனுஞ் சொல்லுளது நோக்கி, (குரு) அடிகளெனப் பொருளாம் அர்யனெனும் வடமொழியே தமிழில் ஐயனென வாயிற்றென்று சிலர் மொழிப. ஈண்டது கோடற்பால தன்று. என்னை? "சுந்தரமுந் தோட்டியு மையுமொப்பும் ***அழகின் பெயரலங்காரமாகும்" எனப் பிங்கல நிகண்டு கூறுங் கூற்றானே 'ஐ' அழகுப் பொருட்டாம். அவ்வையொடு ஆண்பாலிறுதி நிலையாம் அன் புணரும்போது, யகரவுடம்படுமெய் தோன்றி ஐயன் என வாகுமாகலின். ஆகவே ஐயனென்பது அழகுடையா னெனப் பொருளாம். அவ்வழகு - ஈண்டு அடிகளது அறிவு முதிர்ச்சிமே னின்றது.

திங்களனின் விளக்கத்தைப் (ப்ரதமை) பிரதமை முதற் சதுர்த்தசி வரை வடநூலார் கொண்டபடி முதல் விளக்கம், இரண்டாம் விளக்கமென எண்ணிரலாகக் கொண்டு மேல், பூர்ணிமை, குஹூ என அவர்கொண்ட வழியே முழு விளக்கம், முழு விருளென முடிவு மொழிதலும்; கிழமையேழு, திங்கட் பன்னிரண்டு, ஆண்டறுபது, உகம் நான்கு, நாளிருபத்தேழு, இல் பன்னிரண்டெனு மிவற்றையும் முதற் கிழமை, முதற்றிங்கள், முதலாண்டு, முதலுகம், முதனாள், முதலில் என எண்ணிரலாக விசைத்தலும்; யாட்டுத் திங்கள், மாட்டுத் திங்கள், யாழ்த் திங்கள்; யாட்டில், மாட்டில், யாழில்லென அவ்வம் மேனியுறக் கூறலும்; ஞாயிறு, திங்கள், செவ்வாய், பச்சை, பொன், வெள்ளி, கரியவனெனக் கிழமைப் பெயர் கிளத்தலுஞ் செந்தமிழ் மக்கள் கடமையாம். பிறவு மன்ன.

மேற்போந்த **(1)** முதல் **(6)** வரையுள்ள பிரிவுகள் தென்மொழி யெழுத்தி லெழுதப்பட்ட சொற்களில் வடமொழியெழுத்தான **'க'** வர்க்கத்தில் வரும் எழுத்துக்கள் நான்கனுக்கும் **க** - ஒன்றையும், **'ச'** வர்க்கத்தில் வரும் எழுத்துக்கள் நான்கனுக்கும் **ச** -ஒன்றையும், **'ட'** வர்க்கத்தில் வரும் எழுத்துக்கள் நான்கனுக்கும் **ட** -ஒன்றையும், **'த'** வர்க்கத்தில் வரும் எழுத்துக்கள் நான்கனுக்கும் **த** - ஒன்றையும், **'ப'** வர்க்கத்தில் வரும் எழுத்துக்கள் நான்கனுக்கும் **ப** - ஒன்றையும், **'ர்ரு'** என்பதற்கு **ரு**வ்வையுங் கொள்ள நேரிட்டது தமிழ் முடிபாம். மற்றைய வெழுத்துக்கள் நிகழுந் தமிழ் வழக்காகவே கொள்ளப்பட்டன. **(3)**-ம் **(5)**-ம் - பிரிவுகளிலெழுதப்பட்ட சில மொழிகளி னிடையிலுங் கடையிலும் வரும் வடமொழி நகரம், தமிழ் வழக்கிற்கியைய னகரமாக வரையப்பட்டது.

இம்முன்னுரையில் - பெரும்பாலுஞ் செய்யுணடைக் கண்ணும் உரைநடைக் கண்ணும் வடசொற்கள் போல வழங்கப்படு சொற்களும், பிற வடசொற்களும், வடசொற்களுட் சில அருஞ்சொற்களுமே (அகராதி) அகர நிரலாகக் காட்டப்பட்டன. பொருளெழுதப்பட்ட இடங்கள் விளங்கற் பொருட்டுப் பொறித்த (  ) இத்திற வுகிர்வளைவினுட்பட்டவை நீங்கலாக ஏனைய வனைத்துந் தூய தமிழேயாகலின், இது வடமொழி, இது தென்மொழி யெனத்தேர்ந்து கொள்பவற்றைக் கோடலும், தமிழில் உரைநடையிலெழுதப்படு வடமொழிகளை யிருதிற நூற்கும் பொருந்தவெழுதுதலும், பொருளறிதலும், அச்சொற்கள் தமிழ் வழக்கிலினிது பொருந்தச் செய்யுள்களைச் செய்தலும், தமிழின் மேம்பாடுணர்தலும், கடவுள் வழிபாடு பேணியுய்தலும் இந்நூலாற் பெறும்பேறாம்.

சேந்தன் செந்தமிழ் முன்னுரை முற்றிற்று.

இங்ஙனம் :

**நூலாக்கியோன்.**

உ

# சேந்தன் செந்தமிழ்ப்
## புலன் வனப்பு.*
### அகர முதல்.

| | | |
|---|---|---|
| அ-அ | - | (நகரத்தின் வழிவருமிதன் பொருள்) அன்மை, இன்மை, வேற்றுமை, குறை, பொறையின்மை, பகையென *அறுவகைப் படும். |
| அகங்கரம்<br>அகந்தை<br>ஆங்காரம் | - | அஹங்காரம் = நானெனுஞ் செருக்கு. |
| அகசு | - | அஹஸ் = பகற்பொழுது. |
| அகண்டம் | - | அகண்டம் = எல்லாம். |
| அகத்தியன் | - | அகஸ்தியன் = குறுவுருவன் (முத்தமிழ் முனிவன்). |
| அகமம் | - | அகமம் = மரம். |
| அகம் | - | அகம்=மலை, மரம்.<br>அகம்=மறம் (தீவினை). |
| அகரு<br>அகில் | - | அகுரு = பூழில். |
| அகாதம் | - | அகாதம் = மிக்க ஆழம். |
| அகாரம் | - | அகாரம் = வீடு. 10 |

---

* புலன்வனப்பு = இயற்சொல்லானியன்ற பொருடோன்றக் கூறல். "தெளிவு புலனே தெருட்சி போதம்" எனும் பிங்கலந்தைக் கூற்றின்படி புலன் - அறிவாலியற் சொல்லெனவே கொளக்கிடப்பதாம்.

* இவ்வறுவகைக்குரிய காட்டுக்களும் விரிவுரையும் இந்நூலாசிரியரது பரிபூரணானந்த போதத்தின் முற்படலத்துத் 99-ஆஞ் செய்யுள் விருத்தியிற் கண்ணுறலாம்.

அஹி - அஹி = பாம்பு, நூறுமுனை (வஜ்ராயுதம்), பகைஞன், ஞாயிறு.
அகிலம் - அகிலம் = எல்லாம்.
அகோ - அஹோ = வியப்புச் சொல்.
அக்கரம் - அக்ஷரம் = எழுத்து, அழிவிலது.
அக்காள் - அத்திகா = மூத்தாள்.
அக்கி - அக்ஷி = விழி
அக்கிரமம் - அக்ரம் = ஒழுங்கின்மை.
அக்கிரம் - அக்ரம் = நுனி.
அக்கினி - அக்நி = தழல்.
அங்கம் - அங்கம் = அடையாளம்.
அங்கம் = கை, கால் முதலியவுறுப்பு. 20
அங்கதம் - அங்கதம் = மொய்ம்பணி (தோளணி).
அங்காரன் - அங்காரன் = நெருப்பு.
அங்கிகாரம் - அங்கீகாரம் = ஏன்றுகோடல்.
அங்கிரி - அங்க்ரீ = (நடக்குங்) கால்.
அங்குசம் - அங்குசம் = தோட்டி.
அங்குட்டம் - அங்குஷ்டம் = பெருவிரல்.
அங்குரம் - அங்குரம் = முளை.
அங்குலி - அங்குலீ = விரல்.
அங்கோலம் - அங்கோலம் = அழிஞ்சில் மரம்.
அசதி - அஸதீ = விலைமகள். 30
அசமோதம் - அஜமோதா = ஓமம்.
அசம் - அஜம் = வெள்ளாடு.
அஜா = ஆடு.
அசம்பவம் - அஸம்பவம் = குதிரை முதலியவற்றிற்குள்ள ஒற்றைக் குளம்பினை ஆனுக்குண்டெனக் கொள்காட்டேபோலு மொரு குற்றம்.
அசலம் - அசலம் = மலை, அசைவிலது.
அசலை - அசலா = வையம்.
அசனம் - அசிதம் = சோறு.
அசி - அஸி = கத்தி, ஆகின்றனை.
அசுத்தம் - அசுத்தம் = தூய்மையின்மை.
அசுரர் - அஸுரர் = வானோர் மாற்றலர்.
அசுவம் - அச்வ : = குதிரை.
அச்வம் = சோறு. 40
அசூயை - அஸூயா = பொறாமை.
அசேடம் - அசேஷம் = எல்லாம்.

| | | |
|---|---|---|
| அசோகம் | - அசோகம் = செயலையெனும் மரம். | |
| அச்சுதன் | - அச்யுதன் = சாவில்லாதவன். | |
| அச்சுவத்தம் | - அச்வத்தம் = பணை (அரசமரம்). | |
| அஞ்சம் | - ஹம்ஸம் = ஓதிமம். | |
| அஞ்சலி | - அஞ்ஜலி - கும்பிடல். | |
| அஞ்சனம் | - அஞ்ஜநம் = கறுப்பு, மை. | |
| அஞ்சி | - ஹம்ஸீ = பெண்ணன்னம் | |
| அஞ்ஞன் | - அஜ்ஞன் = அறிவிலான் | 50 |
| அடம் | - ஹடம் = வலிந்து பற்றல் (பலாத்காரம்). | |
| அடவி | - அடவீ = காடு. | |
| அட்சதை | - அக்ஷதா = நல்லரிசி. | |
| அட்டம் | - அஷ்டம் = எட்டு. | |
| அணு | - அணு = சிறிது. | |
| அண்டசம் | - அண்டஜம் = பறவை, முட்டைப் பிறப்பு. | |
| அண்டம் | - அண்டம் = முட்டை, முட்டை வடிவிற்று. | |
| அதமம் | - அதமம் = கடைப்பட்டது, அறத்தவறு. | |
| அதம் | - அதம் = கீழிடம், கிழக்கு.<br>அத = நன்மை, இனி. | |
| அதரம் | - அதரம் = உதடு. | 60 |
| அதவா | - அதவா = இல்லையெனின். | |
| அதிகம் | - அதிகம் = மிகுதி. | |
| அதிகாரம் | - அதிகாரம் = மேன்மை (அதிகரிப்பு), உரித்து, நூற்கூறு. | |
| அதிசயம் | - அதிசயம் = இறும்பூது. | |
| அதிட்டானம் | - அதிஷ்டாநம் = இடம். | |
| அதிட்டேயம் | - அதிஷ்டேயம் = இடத்திலிருக்கும் பொருள் (அதிஷ்டாநவஸ்து). | |
| அதிபதி-அதிபதி<br>அதிபன்-அதிபன் | - இறைவன், தலைவன். | |
| அதிவியாத்தி | - அதிவ்யாப்தி : = கோடுடையது ஆனென்னுங் காட்டு ஆடு எருமை முதலியவற்றிலுஞ் செல்லல் போலுமொரு குற்றம். | |
| அதீதம் | - அதீதம் = கடந்தது. | |
| அத்தமயம் | - அஸ்தமயம் = ஞாயிறுபடுதல். | 70 |
| அத்தம் | - ஹஸ்தம் - கை. | |
| அத்தி | - அஸ்தி = உளதெனல்.<br>அஸ்தி= எலும்பு,<br>அப்தி; = கடல், யாறு,<br>ஹஸ்தி = வேழம் (யானை). | |

அத்தியாச்சிரமம் - அத்யாச்ரமம் = மேலான நிலை, துறவறம்
அத்தியாயம் - அத்யாயம் = நூற்பகுதி.
அத்தியை - ஹத்யா = கொலை.
அத்திரம் - அஸ்த்ரம் = படைக்கலம், ஒருவகைமறை (மந்த்ரம்)
அத்திரி - அத்ரி = மலை.
அத்துவா - அத்வா = வழி.
அத்துவிதம், அத்துவைதம் - அத்வைதம் = இரண்டல்லாதது.
அத்தை - அத்தா = அன்னை. 80
அந்தகாரம் - அந்தகாரம் = இருள்.
அந்தம் - அந்தம் = நுனி, கேடு, அண்மை, ஆழம், நடு, அழகு, முடிவு.
அந்தரம் - அந்தரிக்ஷம் = வான்.
அந்தராயம் - அந்தராயம் = இடையூறு.
அந்தரியாமி - அந்தர்யாமி = உள்ளிருப்போன், கடவுள்.
அந்தர்க்கதம் - அந்தர்க்கதம் = உள்ளிடம், மறைவு.
அந்தன் - அந்தன் = குருடன்.
அபகாரம் - அபஹாரம்.
அபசயம் - அபசயம் = இடையூறு.
அபத்தம் - அபத்தம் = பொய்.
அபரம் - அபரம் = மேன்மையின்மை. 90
அபலை - அபலா = பெண்.
அபராதம் - அபராதம் = குற்றம்
அபாயம் - அபாயம் = கேடு.
அபாவம் - அபாவம் = இன்மை.
அபிசாரம் - அபிசாரம் = கொலைபுரி வேள்வி.
அபிடேகம் - அபிஷேகம் = முழுக்கு.
அபிதானம் - அபிதாநம் = பெயர்.
அபிநிர்யாணம் - அபிநிர்யாணம் = வழிச்செல்கை.
அபிப்பிராயம் - அபிப்ராயம் = உட்குறிப்பு, எண்ணம்.
அபிலாசுகன் - அபிலாஷுகன் = விருப்புடையோன். 100
அபூருவம் - அபூர்வம் = புதுவது.
அபேதம் - அபேதம் = வேற்றுமையின்மை.
அப்பம் - அபூபம் = அடை.
அப்பியாசம் - அப்யாஸம் = பழக்கம்.
அப்பிரம் - அப்ரம் = வான்.
அப்பு - ஆப:, ஆப்யம் = புனல் (நீர்)

அமரன் - அமரன் = சாவில்லான் (தேவன்).
அமலம் - அமலம் = தூய்மை.
அமனற்கம் - அமநஸ்கம் = நினைப்பொடுக்கம் (மநோலயம்).
அமாவாசியை
அமாவாசை - அமாவாஸ்யா = திங்கள் ஞாயிறு கூடுநாள். 110
அமிசம் - அம்ச: = கூறுபாடு.
அம்ஸ : = மொய்ம்பு (தோள்).
அமிசன் - ஹம்ஸ : = துறவி.
அமிருதை - அம்ருதா = சீந்தில்.
அமிர்தம்
அமிழ்து
அமுதம்
அமுது - அம்ருதம்=வானோருணவு, வீடுபேறு, புனல் (நீர்).
அம்பட்டன் - அம்பஷ்டன் = முதலாம் மரபினனுக்கும் மூன்றாம் மரபினளுக்கும் பிறந்தவன் என்ப.
அம்பரம் - அம்பரம் = வான்.
அம்பு - அம்பு
அம்ப: = அறல் (நீர்).
அம்புயம் - அம்புஜம் = முளரி (தாமரை).
அம்பை
அம்மை
அம்மாள் - அம்பா = யாய், தாய், மலைமகள் (பார்வதி)
அம்போருகம் - அம்போருஹம் = முளரி. 120
அயம் - ஹயம் குதிரை.
அயம் = இரும்பு.
அயனம் - அயநம் = ஆண்டிலரைக் கூறு. வழி.
அயன் - அஜன் = பிறப்பிலி, படைப்புத் தொழிற்கடவுள்.
அரங்கம்
அரங்கு - ரங்கம் = கூத்துப் பயிலிடம், அவை, போர், நிலை, ஒலி.
அரணம்
அரண் - வரணம் = சூழ்சுவர் (கோட்டை).
அரணியம் - அரணி = ஞெலிகோல், (தீக்கடைகோல்).
அரணி - அரண்யம் = காடு.
அரம்பை - ரம்பா = வாழை, துறக்க மகடூஉ.
அரவம் - ரவம்
ஆரவம்
ஆராவம் = ஒலி.
அரவிந்தம் - அரவிந்தம் = முளரி. 130

| | | |
|---|---|---|
| அரன் | - | ஹரன் = அழிப்புத்தொழிற் கடவுள், எப்பொருட்கு மிறைவன். |
| அரி | - | ஹரி = காப்புத் தொழிற் கடவுள், ஆயிரங் கண்ணன், வெஞ்சுடர், தண்சுடர், காற்று, சுடர், வட்புலி (சிங்கம்), குதிரை, பாம்பு, குரங்கு, தவளை, கிளி, மழை. |
| அரிணம் | - | ஹரிணம் = மான். |
| அரில் | - | அரி = பகை, குற்றம். |
| அருக்கம் | - | அர்காஹவம் = எருக்கு. |
| அருக்கன் | - | அர்க்கன் = செஞ்சுடர். |
| அருக்கியம் | - | அர்க்யம் = பதினாறு வழிபாட்டிலொன்று, கை கழுவு புனல். |
| அருச்சனம் | - | அர்ச்சநம் = வழிபாடு. |
| அருச்சுனம் | - | அர்ஜுனம் = பொன், மருது, புற்பொது, வெள்ளை. |
| அருணன் | - | அருணன் = செஞ்சுடர் வலவன் (வலவன் = ஸாரதி). 140 |
| அருத்தம் | - | அர்த்தம் = பாதி. |
| அத்தம் | - | அர்த்தம் = பொருள். |
| அருப்பணம் | - | அர்ப்பணம் = கொடுத்தல். |
| அருவம், அரு | - | அரூபம் = காணொணாதது, அரிது. |
| அலங்காரம் | - | அலங்காரம் = அழகு, அணி. |
| அவசரம் | - | அவஸரம் = சுருக்கம், அமையம். |
| அவசியம் | - | அவச்யம் = மிகுதேவை. |
| அவதாரிகை | - | அவதாரிகா = தோற்றுவாய். |
| அவத்தை | - | அவஸ்தா = நொசிவு (உபாதி). |
| அவநுதி | - | அபநுதி = பிறிது நுவற்சி = பொருளுண்மை, மறுத்துப் பிறிதுரைக்கு மோரணி, அஃது இறைவனை "வானாகி, மண்ணாகி" என்பது போல்வது. |
| அவம் | - | அவ = கெடுதி, கீழ்மை. அப = புறம், அருகு, குறுமை. 150 |
| அவயவம் | - | அவயவம் = உறுப்பு. |
| அவனி | - | அவநி: = வையம். |
| அவி | - | ஹவிஸ் = நெய். |
| அவிகலம் | - | அவிகலம் = எல்லாம். |

அவ்வியாத்தி - அவ்யாப்தி := ஆனெல்லாஞ் செந்நிறமுடையன வென்னுங் காட்டானது சில ஆன்களில் இன்மையுறல் போலுமொரு குற்றம்.
அளி - அளீ = வண்டு, செந்தேள்.
அற்பம் - அல்பம் = சிற்றளவை.
அற்புதம் - அத்புதம் = வியப்பு.
அனந்தம் - அநந்தம் = வான், முடிவிலது.
அனந்தரம் - அநந்தரம் = பின்பு. 160
அனந்தை - அநந்தா = வையகம் (பூமி).
அனலம் - அநலம் = நெருப்பு.
அனவரதம், அனாரதம் - அநவரதம், அநாரதம் = எஞ்ஞான்றும்.
அனாமிகை - அநாமிகா = ஆழிவிரல்.
அனிலம் - அநிலம் = காற்று.
அனு - ஹநு: = கதுப்பின் கீழிடம். (கதுப்பு - கன்னம்). கழுத்து, ஊர்தி, சேங்கொட்டை மரம்.
அனுகூலம் - அநுகூலம் = வாய்ப்புடைமை.
அனுக்கிரகம் - அநுக்ரஹம் - அருளல்.
அனுசந்தானம் - அநுஸந்தாநம் = கருதல்.
அனுசிதம் - அநுசிதம் = தகுதியின்மை (உசிதமற்றது). 170
அனுட்டானம் - அநுஷ்டானம் = வழிபாடு (ஆசரிப்பு).
அனுபவம் - அநுபவம் - அறிந்தவாறு.
அனுமான் - ஹநுமான்= ஊதைமகன்.
அனுராகம் - அநுராகம் = தொடர் விருப்பு.
அனுவாதம் - அநுவாதம் = பொருட்டொடர்பு = முன் சொன்னதைப் பின்னும் விளக்கும் பொருளது.
அனேகம் - அநேகம் = ஒன்றல்லாதது, பல.
அன்னம் - அந்நம் = சோறு.
அன்னியம் - அந்யம் = வேறு.
அன்னியோன்னியம்- அந்யோந்யம் = ஒன்றற்கொன்றுதவி, ஒருமிப்பு.

# ஆ

ஆ ஆ - ஹாஹா = துன்பில் நிகழ் சொல். 180
ஆகந்துகம் - ஆகந்துகம் = வந்து கூடினது.
ஆகமம் - ஆகமம் = பெரியோன் மொழி (ஆப்தவாக்யம்).
ஆகவம் - ஆஹவம் = போர்.

ஆகாயம் - ஆகாசம் = வெளி.

ஆகாரம் - ஆகாரம் = வடிவு.
ஆஹாரம் = உணவு.

ஆகு - ஆகு = எலி.

ஆகுலம் - ஆகுலம் = சிதறினது.

ஆக்கியம் - ஆக்யா
ஆக்குவயம் - ஆஹ்வயம் = பெயர்.

ஆக்குவானம் - ஆஹ்வாநம் = அழைப்பு.

ஆசமனம் - ஆசமநம் = புனலுட்கொளல். 190

ஆசம் - ஹாசம் = சிரிப்பு.

ஆசனம் - ஆஸநம் = அமர்தவிசு, வேழப்பிடர்.

ஆசான்
ஆசாரியன்
ஆசிரியன் - ஆசார்யன் = பொருளுரைப்போன்.

ஆசி - ஆசிஸ் = வாழ்த்து.

ஆசியம் - ஆஸ்யம் = முகம்.

ஆசு - ஆகஸ் = குற்றம்.

ஆசுகம் - ஆசுகம் = காற்று, அம்பு.

ஆசை - ஆசா = வேட்கை.

ஆச்சரியம் - ஆச்சர்யம் = இறும்பூது.

ஆச்சியம் - ஆஜ்யம் = நெய். 200

ஆச்சிரயம் - ஆச்ரயம் = ஒழியா இடம்.

ஆச்சிரமம் - ஆச்ரமம் = நிலை.

ஆஞ்ஞை
ஆணை - ஆஜ்ஞா = கட்டளை.

ஆடகம் - ஹாடகம் = பொன்.

ஆடம்பரம் - ஆடம்பரம் = தோற்கருவி முதலியவற்றின் முழக்கம்

ஆட்சேபம் - ஆக்ஷேபம் = தடை, இகழ்ச்சி.

ஆட்டியன் - ஆட்யன் = பொருளன் (செல்வன்).

ஆணி - ஆணி = முதன்மை, கூர்த்த பொருள், நித்தில வியல்பு, எல்லை.

ஆதன் - ஆதன் = ஓடுநன்.

ஆதவம் - ஆதபம் = ஒளி. 210

ஆதாரம் - ஆதாரம் = அடி, உடம்பு.

ஆதி - ஆதி = முதல்.
ஆதி = உளத்துன்பம், இருத்தல், அடுத்திருத்தல்.

ஆதித்தன்<br>ஆதித்தியன் - ஆதித்யன் = செஞ்சுடரோன்.

ஆதுரன் - ஆதுர : = நோயன்.

ஆத்தர் - ஆப்தர் = உண்மையுரைப்போர்.

ஆத்திகம் - ஆஸ்திகம் = உளதெனல்.

ஆத்துமம்<br>ஆத்துமா<br>ஆன்மா - ஆத்மா.<br>- ஆத்மந் = உயிர், உயிர்க்குயிர், இயற்கை, உணர்வு.

ஆபத்து<br>ஆவத்து - ஆபத் = மிகுதுன்பம்.

ஆபரணம் - ஆபரணம் = அணி.

ஆபாசம் - ஆபாஸம் = போலி. 220

ஆபீரம் - ஆபீரம் = இடைச்சேரி.

ஆபீரன் - ஆபீரன் = இடையன்.

ஆபீனம் - ஆபீநம் = செருத்தல் - பெற்றத்தின்மடி.

ஆமம் - ஆமம் = நோய், ஊன்.

ஆமயம் - ஆமயம் = நோய்.

ஆமலகம் - ஆமலகம் = நெல்லி.

ஆமிடம் - ஆமிஷம்: = ஊன்.

ஆமிரம் - ஆம்ரம் = மாமரம்.

ஆமிலம் - ஆம்லம்<br>அம்லம் = புளி.

ஆமோதம் - ஆமோதம் = களிப்பு. 230

ஆம் - ஆம் = ஒப்புக்கோடன் மொழி.

ஆயதம் - ஆயதம் = நீளம்.

ஆயம் - ஆஜம் = நெய்.<br>ஆயம் = மலிவு (இலாபம்).

ஆயனம் - ஹாயநம் = ஆண்டு.

ஆயாசம் - ஆயாஸம் = இளைப்பு.

ஆயு<br>ஆயுள் - ஆயுஸ் = ஆண்டு (வயது).

ஆயுதம் - ஆயுதம் = படைக்கலம்.

ஆயோதனம் - ஆயோதநம் = போர்.

ஆரணம் - ஆரணம் = மறை (வேதம்).

ஆரணியம் - ஆரண்யம் - காடு. 240

ஆரம் - ஹாரம் = தொடையல் (மாலை).

ஆரம்பம் - ஆரம்பம் = தொடக்கம்.

ஆரம்போபா தான காரணம் - ஆரம்போபாதாநகாரணம் = நூல் ஆடையாதல் போல்வது.
ஆராதனம் - ஆராதநம் = மகிழ்வித்தல்.
ஆராமம் - ஆராமம் = தோட்டம்.
ஆரியன் - ஆர்யன் = மேலானோன்.
ஆரோகணம் - ஆரோஹணம் = ஏறுபடி, ஏறுதல்.
ஆர்த்தி - ஆர்த்தி = நோய், வின்னுனி.
ஆலகாலம் / ஆலம் / ஆலாலம் - ஹலாஹலம் = பாம்பின்நஞ்சு.
ஆலசியம் - ஆலஸ்யம் = சோம்பல். 250
ஆலயம் - ஆலயம் = புத்தேளில், அடங்குமிடம்.
ஆலிங்கனம் - ஆலிங்கநம் = தழுவல்.
ஆலோகனம் - ஆலோகநம் = காண்டல்.
ஆவகை - ஆபகா = யாறு.
ஆவணம் - ஆபணம் = கடை.
ஆவரணம் - ஆவரணம் = சூழ்சுவர், மறைவு.
ஆவளி - ஆவளி = ஒழுங்கு, வரிசை.
ஆவி - ஆவி = விளக்கம், மகப்பெறுநோய்.
ஆவேசம் - ஆவேசம் = அணங்காட்டம், வெறியாட்டு.
ஆளி - ஆளி : ஒழுங்கு = வரிசை, அணை, தோழி, தேள். 260
ஆனகம் - ஆநகம் = ஒலிக்கருவி (பணயம்).
ஆனந்தம் - ஆநந்தம் = பேரின்பம் (சிவானுபவத்தில் மிளிர் பரம்பொருள்).
ஆனனம் - ஆநநம் = முகம்.
ஆனி - ஹானி: = அழிவு.

## இ

இகம் - இஹம் = இவ்விடம்.
இக்கு - இக்ஷு = கரும்பு.
இங்கிதம் - இங்கிதம் = எண்ணமுணர்த்து செய்கை.
இங்கு - ஹிங்கு = இந்துளி = பெருங்காயம்.
இச்சை - இச்சா = நசை.
இடபம் - ருஷபம் = எருது. 270
இடம்பம் - டம்பம் = பெருமை.
இடை - இடா (இடைநாடி) - இடமூக்கு மூச்சு, இடப்புற நரம்பு.

| | | |
|---|---|---|
| இட்டம் | - | இஷ்டம் = அன்பு. |
| இட்டி | - | இஷ்டி = வேள்வி, விருப்பு. |
| இதம் | - | ஹிதம் = நன்மை, உரிமை. |
| இதரன் | - | இதரன் = கீழ்மகன். |
| இதிகாசம் | - | இதிஹாசம் = இதிஹாஸமெனும் நூல்கள், பண்டை வரலாறு. |
| இந்தனம் | - | இந்தநம் = விறகு. |
| இந்தி | - | உந்துருத்வீபீ = எலிப்புலி = பூனை. (உந்துரு = எலி, த்வீபி=புலி). |
| இந்திரன் | - | இந்த்ரன் = தலைவன், பொன்னாடர்கோ 280 |
| இந்திரியம் | - | இந்திரியம் = பீள், அறிகருவி, செய்கருவி, இவற்றுள் காது, உடல், கண், நாக்கு, மூக்கெனும் பொறிகளைந்தும் அறிகருவியாம். இவற்றின் உரிமை - ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனும் புலனைந்தாம். வாய், கால், கை, பவ்வீகழி தொளை, குறியெனுமைந்துஞ் செய் கருவியாம். |
| இந்து | - | இந்து : = வெண்சுடர் சூடன் (கர்ப்பூரம்). |
| இபம் | - | இபம் = வேழம் (யானை). |
| இப்பன், இப்பியன் | - | இப்யன் = பொருளுடையோன் |
| இமம் | - | ஹிமம் = பனி. |
| இமிசை | - | ஹிம்ஸா = துன்பம். |
| இயக்கன் | - | யக்ஷன் = குபேரன், வானோர் வகையினன். |
| இயந்திரம் | - | யந்த்ரம் = கருவி. |
| இயமன், எமன் | - | யமன் = மறலி, ஒழிப்பவன். |
| இயமானன் | - | யஜமாநன் = தொழிற்றலைவன், உயிர். 290 |
| இரகசியம், இராசியம் | - | ரஹஸ்யம் = மறைவு. |
| இரகிதம் | - | ரஹிதம் = நீக்கம், இன்மை. |
| இரசகன் | - | ரஜகன் = வண்ணான். |
| இரசசு | - | ரஜஸ் = பெண்கள் தீட்டு, பொடி, ஆண்மை (ரஜோ குணம்). |
| இரசதம் | - | ரஜதம் = வெள்ளி. |
| இரச்சு | - | ரஜ்ஜு = கயிறு. |
| இரட்சணம் | - | ரக்ஷணம் = காத்தல். |
| இரணம் | - | ரணம் = போர். புண். |

இரணியம் - ஹிரண்யம் = பொன்.

இரதம் - ரதம் = புணர்ச்சி, மறைவுறுப்பு.
ரதம் = தேர், ஊர்தி, உடம்பு.
(ரஸ:) ரஸம் = ஒசி வெள்ளை (பாதரஸம்), சுவை. இன்சுவை, சாறு, வலி. 300

இரதி - ரதி = கருப்பு வில்லி மனைவி, புணர்க்கை.

இரதிகன் - ரதிகன் = தேரிலிருப்போன்.

இரத்தகம் - ரத்தகம் = செவ்வட்டம், (உச்சித்திலகமெனு மரம்).

இரத்தம் - ரக்தம் = செம்புனல்.

இரத்தினம் - ரத்நம் = மனவு.

இரத்தினாகரம் - ரத்நாகரம் = கடல்.

இரந்திரம் - ரந்த்ரம் = தொளை, கீழறை.

இரமை - ரமா = மலர்மகள்.

இரம்மியம் - ரம்யம் = அழகு, இன்பம்.

இரவணன் - ரவணன் = கதறுகிறவன். 310

இரவி - ரவி = செஞ்சுடர்.

இராகம் - ராகம் = வேட்கை, அன்பு, சிவப்பு, இனிப்பு, செருக்கு, ஒளி.
ராகம் = சாம்பர்.

இராகு - ராஹு = கரும்பாம்பு (ஒன்பது கோள்களு ளொன்று).

இராசன்னியகம் - ராஜந்யகம் = ஊராள்வோர் குழு.

இராசா, அரசன், அரசு, அரையன் - ராஜா, ராஜந் = ஊராள்வோன்.

இராசீவம் - ராஜீவம் = முளரி (தாமரை).

இராத்திரி, இரா, இரவு - ராத்ரி = கங்குல்.

இராமம் - ராம : = அழகு, பெரியமான்.

இராமன் - ராமன் = அழகன். படைப்புத் தொழிற் கடவுள், காப்புத் தொழிற் கடவுள், அழிப்புத் தொழிற் கடவுள். (ரகுராமன், பரசுராமன், பலராமன்).

இருடி - ருஷி = மறைவல்லோன், அறிந்தவன். 320

இருணம் - ருணம் = கடன்.

இருதயம், இதயம் - ஹ்ருதயம், ஹ்ருத் = நெஞ்சம், உள்ளிடம்.

இரேசகம் - ரேசகம் = விடுகை, மூச்சுவிடுதல்.

இரேணு - ரேணு = பொடி

இரேதசு - ரேதஸ் = புனல், பீள், முட்டை, வன்மை.

இரௌத்திரம் - ரௌத்ரம் = சினம், ருத்ரஸம்பந்தம்.

இலகரி - லஹரீ = இடையறாதோடு பெரும்புனல்.

இலகு - லகு = சிறுமை, அழகு.

இலக்கனம் - லக்ஷணம் = அழகு, ஒழுங்கு.

இலக்கம் - லக்ஷம் = நூறாயிரம். 330

இலக்கியம் - லக்ஷ்யம் = எடுத்துக்காட்டு.

இலக்குமணன் - லக்ஷ்மணன் = செல்வமுடையோன்.

இலக்குமி - லக்ஷ்மீ = செல்வி.

இலங்கை - லங்கா = கடலிடைக் குறை, கிளை, கற்பழி பெண்.

இலச்சை - லஜ்ஜா = வெட்கம்.

இலஞ்சம் - லஞ்சம் = கைக்கூலி.

இலஞ்சை - லஞ்ஜா = கற்பழிந்தவள்.

இலபிதம் - லப்தம் = பேறு.

இலலாடம், இலாடம் - லலாடம் = நெற்றி.

இலவணம் - லவணம் = உப்பு. 340

இலவம் - லவம் = சிறுமை.

இலாபம் - லாபம் = மலிவு (ஆதாயம்).

இலாமச்சம் - லாமஜ்ஜம் = வெட்டிவேர்.

இலிகிதம் - லிகிதம், இலிபி - லிபி = எழுத்து.

இலீடம் - லீடம் = புசித்தல், பற்றுதல்.

இலீலை - லீலா = விளையாட்டு, ஆடூஉ மகடூஉ தழுவுதல்.

இலேகர் - லேகர் = வானவர்.

இலேசு - லேசம் = சிற்றளவை.

இளை - இளா, இலா = வையம், பச்சை மனைவி (பச்சை = புதன்).

இனன் - இநன் = செஞ்சுடரோன். ஆள்வோன் (பிரபு). 350

## ஈ

| | | |
|---|---|---|
| ஈசன் | - | (ஈஸ:) - ஈசன் = கடவுள். |
| ஈசி | - | ஈசீ = மலைமகள் (பார்வதீ). |
| ஈசுவரன் / ஈச்சுவரன் | - | ஈச்வரன் = கடவுள். |
| ஈட்சணம் | - | ஈக்ஷணம் = விழி. |
| ஈரன் | - | ஈரன் = வெண்சுடர். |
| ஈரிடை | - | ஈர்ஷா = பொறாமை. |
| ஈரிதம் | - | ஈரிதம் = தள்ளப்படுவது. |
| ஈனம் | - | ஹீநம் = குறைவு, இகழப்படுவது. |

## உ

| | | |
|---|---|---|
| உகம் | - | யுகம் = ஊழி (பல்லாண்டு கொள்ளோரளவை) நான்கு. இரட்டை, உறை (மருந்து). |
| உகளம் | - | யுகளம் = இரட்டை. 360 |
| உக்கிரம் | - | உக்ரம் = சீற்றம். |
| உக்கிரன் | - | உக்ரன் = நல்லான் (சிவன்). |
| உசற்காலம் | - | உஷஸ்காலம் = விடிபொழுது. |
| உசிதம் | - | உசிதம் = தகுதி. |
| உச்சம் / உச்சி | - | உச்சம் = சேண். |
| உச்சுவாசம் | - | உச்வாசம் = மூச்சுவிடுதல். |
| உடசம் | - | உடஜம் = வீடு. |
| உடு | - | உடு = வானொளி (விண்மீன்). |
| உட்டணம் / உட்டிணம் | - | உஷ்ணம் = வெப்பம். |
| உதகம் | - | உதகம் = புனல் (நீர்). 370 |
| உதக்கு | - | உதக் = வடக்கு. |
| உததி | - | உததி = கடல். |
| உதயம் | - | உதயம் = தோற்றம். |
| உதரம் | - | உதரம் = வயிறு. |
| உதாரம் | - | உதாரம் = கொடை. |
| உதாரணம் | - | உதாஹரணம் = காட்டு. |
| உதாரம் | - | உதாரம் = கொடை. |
| உதிரம் | - | ருதிரம் = செம்புனல் (இரத்தம்). |

உதும்பரம் - உதும்பரம் = அத்திமரம்.
உத்தமம் - உத்தமம் = முதன்மை. 380
உத்தம் - உத்கம் = தழல், எழில்.
உக்தம் - உக்தம் = சொல்.
உத்தரம் - உத்தரம் = வடக்கு, மேல், விடை.
உத்தரவு - உத்தரம் = விடை.
உத்தரீயம் - உத்தரீயம் = மேலிடும் ஆடை.
உத்தி - உத்தி = சொல்.
உத்தியானம் - உத்யாநம் = ஆள்வோன் தோட்டம், புறப்படல், பயன்.
உத்தியோகம் - உத்யோகம் = கட்டளைத் தொழில். உள்ள மிகுதி.
உத்துங்கம் - உத்துங்கம் = உம்பர், மேன்மை.
உத்தூளனம் - உத்தூளநம் = முழுநீறு பூசல்.
உந்துரு - உந்துரு = எலி. 390
உப - உப = அண்மை, குறை, மிகை, தொடக்கம், வடமொழியின் ஓரடைமொழி.
உபக்கிரமம் - உபக்ரமம் = தொடக்கம்.
உபதேசம் - உபதேசம் = செவியறிவுறூஉ.
உபத்தம் - உபஸ்தம் = ஆண்குறி, பெண்குறி.
உபத்திரவம் - உபத்ரவம் = துன்பம்.
உபயோகம் - உபயோகம் = ஏற்புடைமை.
உபரி - உபரி = மேலிடம்.
உபலத்தி - உபலப்தி = நினைவு.
உபவாசம் - உபவாஸம் = நோன்பு.
உபவீதம் - உபவீதம் = பூணூல். 400
உபன்னியாசம் - உபந்யாஸம் = கட்டளை.
உபாசனை - உபாஸநா = வழிபாடு.
உபாஞ்சு - உபாம்சு = பிறர் செவிப்படா மறை.
உபாதானம் - உபாதாநம் = (காரிய) முதற்பொருள் = குழிசிக்கு மண்போல்வது.
உபாதி - உபாதி = துன்பம்.
உபாத்தியாயன் - உபாத்யாயன் = கற்பிப்போன்.
உபாயம் - உபாயம் = சிற்றளவை. சூழ்ச்சி (தந்த்ரம்).
உபேட்சை - உபேக்ஷா = வெறுப்பு.
உபௌ - உபௌ = இரண்டு.
உமை - உமா = மலைமகள். 410
உயரம்
உயர்வு - உச்ரயம் = மேடு, சேண்.

உரம் - உரஸ் = மார்பு, தலைவன்.
உரகம் - உரகம் = பாம்பு.
உரு - உரு = அகலம்.
உருகம் - ருஹம் = முளைப்பு. தோற்றம்.
உருக்கு - ருக் = ஒளி.
உருக்குமம் - ருக்மம் = பொன், வெளி.
உருசி - ருசி = ஒளி, விருப்பம், சுவை.
உருதம் - ருதம் = உண்மை, உண்மைச் சொல், ஒளி. புனல்.
உருத்திரம் - ருத்ரம் = அழைப்புக் கடவுளிருக்கை, மாட்சிமை, உருத்திர மறை (வேதருக்). 420
உருத்திரன் - ருத்ரன் = அழிப்புக் கடவுள். மாண்பினன், நெருப்பு.
உருத்திராக்கம் - ருத்ராக்ஷம் = மாண்பினன் கண் (ருத்ராக்ஷமணி).
உருத்துவிக்கு - ருத்விக் = வேள்வியிலிருப்போன், வேள்வி வினைஞன்.
உருவம், உரு - ரூபம் = கட்கெட்டுவது, உடம்பு.
உரூடநாமம் - ரூடநாமம். = இடுகுறிப் பெயர்.
உரூடிநாமம் - ரூடிநாமம் = இடுகுறிப் பெயர்.
உரோகிதாசுவன் - ரோஹிதாச்வன் = நெருப்பு.
உரோசம் - ரோஷ : = தகுசினம்.
உரோசிசு - ரோசிஸ் = ஒளி.
உரோதனம் - ரோதநம் = அழுதல்.
உரோமம் - ரோமந் = உடற்கதுப்பு (உடம்பு மயிர்). 430
உலுத்தன் - லுப்தன் = கவர்தலுடையோன்.
உலூகம் - உலூகம் = கோட்டான் (கூகை).
உலோகம், உலகம், உலகு - லோகம் = அகலிடம், மக்கட்பரப்பு.
- லோஹம் = பொன் முதலியன படைக்கலம்.
உலோசனம் - லோசநம் = விழி.
உலோபம் - லோபம் = அவா, ஈயாமை.
உலோமம் - லூமம் = தோகை (வால்).
லோமந் = உடற்கதுப்பு (உடம்பு மயிர்).
உலோலம் - லோலம் = அசைவு.
உலோலுபன் - லோலுபன் = வைய நசையினன் (விஷயப்ரியன்).

| | | | |
|---|---|---|---|
| உல்லாசம் | - | உல்லாஸம் = உண்மலர்ச்சி. | |
| உல்லோலம் | - | உல்லோலம் = அலை. | 440 |
| உவமானம்<br>உவமம்<br>உவமை | - | உபமாநம் = இணையளவை = ஒப்பு. | |
| உவா | - | யுவா = இளைஞன். | |
| உற்கருடம் | - | உத்கர்ஷம் = வியப்பு. | |
| உற்கை | - | உல்கா - கொள்ளி, நெருப்பு, நெருப்புக் கொழுந்து, கரி, வானொளி (விண்மீன்). | |
| உற்சவம் | - | உத்ஸவம் = விழா. | |
| உற்சாகம்<br>உச்சாகம் | - | உத்ஸாஹம் = முயற்சி. | |
| உற்பத்தி | - | உத்பத்தி = பிறப்பு. | |
| உற்பிதம் | - | உத்பிதம் = நிலத்துப் பிறப்பு. | |
| உன்மனிபாவம் | - | உந்மநீபாவம் = உள்ளொடுக்கத்தின் முற்படுமொரு நோக்கம். (உள்ளொடுக்கம் - மனோலயம்). | |
| உன்னதம் | - | உந்நதம் = உம்பர் (உயரம்). | 450 |
| உன்னம் | - | உந்ந : = நினைப்பு. | |

## ஊ

| | | | |
|---|---|---|---|
| ஊகம் | - | ஊஹ: = ஆய்வு. | |
| ஊசி | - | ஸூசி = இருப்புமுள், கூர்த்தது. | |
| ஊமத்தம்<br>ஊமத்தை | - | உன்மத்தம் = பூவெறி (ஒரு செடி). | |
| ஊரு | - | ஊரு = தொடை. | |
| ஊருணநாபி | - | ஊர்ணநாபி - சிலந்திப்பூச்சி. | |
| ஊர்த்துவம்<br>ஊர்த்தம் | - | ஊர்த்வம் = மேல், வான். | |
| ஊர்மி | - | ஊர்மி = அலை, மடிப்பு, நோய், விருப்பு. | |
| ஊனம் | - | ஊநம் = குறைவு. | |

## எ

| | | | |
|---|---|---|---|
| எசா<br>எசம் | - | ஸ்நஸா = சிறு நரம்பு. | 460 |
| எசு | - | யஜுஸ் = இரண்டாவது மறை. | |

## ஏ

| | | |
|---|---|---|
| ஏ | - | ஹே = அழைப்பில் நிகழ் சொல். |
| ஏகம் | - | ஏகம் = ஒன்று. |
| ஏகன் | - | ஏகன் = தனியிருப்பவன், ஒப்பற்றவன். |
| ஏகாக்கிரம் | - | ஏகாக்ரம் = ஒருப்பட்ட நினைவு = ஒரு நோக்கம். |
| ஏடணை | - | ஏஷணா / ஈஷணா = விருப்பம். |
| ஏணம் | - | ஏண: = மான்தோல், கரியமான். |
| ஏணி | - | ச்ரேணி = கடவை. |
| ஏதம் | - | ஏதம் =பல நிறம். ஏதம் = விறகு. |
| ஏது | - | ஹேது = பொருட்டு. 470 |
| ஏமம் | - | ஹேமம் = பொன். |
| ஏயம் | - | ஹேயம் = இகழ்ச்சி, தள்ளத்தக்கது. |
| ஏரண்டம் | - | ஏரண்டம் = ஆமணக்கு. |
| ஏலம் | - | ஏலா = துடி (ஏலச்செடி). |
| ஏனம் | - | ஏநஸ் = மறம் (தீவினை). பழிப்பு. |

## ஐ

| | | |
|---|---|---|
| ஐக்கம் / ஐக்கியம் | - | ஐக்யம் = ஒன்றிப்பு. |
| ஐதிகம் | - | ஐதிஹம் = (தொன்றுதொட்டுவரு) கேள்வி நம்பல். |
| ஐந்திரி | - | ஐந்த்ரி = பொன்னாட்டிறை மகன் (ஜயந்தன்). பொன்னாட்டிறை மகள் (தேவஸேநா), கரும்புள்ளவுணன் (காகாசுரன்). |
| ஐயங்கவீனம் | - | ஹையங்கவீநம் = வெண்ணெய் (நவநீதம்). |

## ஒ

| | | |
|---|---|---|
| ஒட்டகம் / ஒட்டை | - | உஷ்ட்ரம் = நெடுங்கழுத்து 480 |

## ஓ

| | | |
|---|---|---|
| ஓ | - | ஹோ = அழைப்பில் நிகழ் சொல். |
| ஓகம் | - | ஓகம் - கூட்டம், பெருக்கு, வரிசை, செவியறிவுறூஉ. |

ஓங்காரம் - ஓங்காரம் = (ஓமெனப்படு) மறை முதல் - இதனையே பிரமப்பிரணவமென்ப.
ஓடம் - உடுபம் = தெப்பம்.
ஓடதிபதி - ஓஷதிபதி : = வெண்சுடரோன்.
ஓட்டம் - ஓஷ்டம் = உதடு.
ஓதனம் - ஓதநம் = சோறு.
ஓது - ஓது = பூனை.
ஓமம் - ஹோமம் = வேள்வி.
ஓம் - ஓம் = ஒப்புக்கோடன் மொழி. தொடக்கம், அ உ ம ஒன்றுபட்ட ஓமெனு மறைமுதல். நன்மை, கடவுள். 490
ஓலம் - ஓல = கருணைக்கிழங்கு

## ஔ

ஔ - ஔ = ஞாலந்தாங்கு பாம்பு, ஞாலம்.
ஔடதம் - ஔஷதம் = உறை.

## க

ககம் - ககம் = பறவை.
ககனம் - கஹநம் = செல்லொண்ணா இடம்.
ககநம் = வான்.
ககநம் = காடு.
ககுபம் - ககுபம் = விசும்பு (திசை).
கங்கணம் - கங்கணம் = தொடி.
கங்கு - கங்கு = தினை.
கங்கை - கங்கா = வான் யாறு.
கசை - கசா = அடிவார் (சாட்டை), கதுப்பு (மயிர்) 500
கச்சபம் - கச்சபம் = ஆமை.
கஞ்சம் - கஞ்ஜம் = முளரி
கஞ்சா - கஞ்ஜா = அரக்குச் செய்வீடு (சாராயமுண்டுபண்ணுங்கூடம்), பானை, சிற்றில், குல்லை (கஞ்சாச் செடி).
கடகம் - கடகம் = தொடி
கடம் - கடம் = நுசுப்பு, வியப்பு, வேழக்கவுள், சுடலை, பாய்.
கடம் = முதன்மறை (ருக்), துறக்கம்.
கடம் = பாழ்த்த கிணறு, உழுபடை, உளி.
கடம் = தடை, மறைவு.
கடம் = தாழி, துறை, வேழநெற்றி.
கடம்பு - கதம்பம் = இந்துளம்.

கடன் - கடன் = அறிவில்லான்.
கடாட்சம் - கடாக்ஷம் = கடைக்கணிப்பு = கடைக்கணோக்கம்.
கடி - கடி = பின்புறம், வேழக்கவுள்.
கடினம் - கடிநம்
கடிது - கடோரம் = மிகுதி, மேன்மையில்லது,
கடுமை கொடுமை 510
கடு - கடு = பாடை (ஆசந்தி).
கடு = வீக்கம் தொளையுடைத்து, கூனன், கதிர்மகன் (சனி).
கடுகு - கடு = ஐயவி, கார்த்தற்சுவை (காரம்), பகை, இழிவு.
கடுகுரோகிணி
கடுகுரோகணி - கடுரோஹிணீ = ஐயவிஉருளி.
கட்கம் - கட்கம் = பெரிய கத்தி.
கட்சி - கக்ஷீ = மறுமொழிப் பூசல் (பிரத்தியுத்தரவாதம்).
கட்டம் - கஷ்டம் = இயலாநிலை, துன்பம், காடு.
கட்டம் = துறை, முழுகு துறை.
கட்டில் - கட்வா = பாண்டில்.
கட்டை - காஷ்டம் = உலர்ந்த மரம், விறகு.
கணம் - க்ஷணம் = பொழுதினுட்பம், விழா.
கணம் = கூட்டம்.
கணிகை - கணிகா = புத்தேளடியாள். 520
கணிதம் - கணிதம் = எண்.
கண்டகம் - கண்டகம் = கத்திவிலங்கு (காண்டாம்ருகம்).
கண்டகம் = முள்.
கண்டம் - கண்டம் = கழுத்து.
கண்டம் = கடிகை (துண்டு), ஒருவகைக் கரும்பு.
கண்டீரவம் - கண்டீரவம் = பெருஞ்சீயம், (சீயம், சிங்கம்).
கதம்பம் - கதம்பம் = கூட்டம்.
கதலி - கதளீ = வாழை.
கதி - கதி = செல்கை, வழி, அறிவு.
கதை - கதா = வரலாறு, மலைமகள்.
கதா = தடி (தண்டாயுதம்).
கத்தரிகை - கர்த்தரீ = (கத்தரிக்கும்) ஓர் கருவி.
கத்தியம் - கத்யம் = பேச்சு (வசநம்).
கத்தூரி - கஸ்தூரி = மான் மணம். 530

கந்தம் - கந்தம் = களிப்பு.
கந்தம் = மரவேர், கிழங்கு, முகில்.
கந்தம் = மணம், கரியபூழில் (காரகில்), செருக்கு, சிறுமை.

கந்தரம் - கந்தரம் = கழுத்து.

கந்தருவம் - கந்தர்வம் = குதிரை.

கந்தவகன் - கந்தவஹன்
கந்தவாகன் - கந்தவாஹன் = காற்று

கந்தன் - ஸ்கந்தன் = சேந்தன்.

கந்தை - கந்தா = கிழிகூறை.

கபடம் - கபடம் = பட்டிமை (வஞ்சகம்).

கபம் - கபம் = கோழை.

கபாடம் - கபாடம் = கதவு. 540

கபாலம் - கபாலம் = மண்டையோடு.

கபி
கவி - கபி = குரங்கு.

கபிலம் - கபிலம்= கருமை கலந்த பொன்மை.

கபோதம் - கபோதம் = புறா.

கபோலம் - கபோலம் = கவுள்.

கமடம் - கமடம் = ஆமை.

கமலம் - கமலம் = முளரி, புனல், மான்

கமலை - கமலா = மலர்மகள்.

கமண்டலம் - கமண்டலம் = குடுவை.

கமனம் - கமநம் = செல்லுதல். 550

கமுகம்
கமுகு - க்ரமுகம் = பாக்குமரம்.

கம் - கம் = காற்று, படைப்புத் தொழிற் கடவுள், புனல், தலை.
கம் = வான்.

கம்பளி - கம்பளம் = முரிகம்.

கம்பி - கம்பி = அகப்பை.

கம்பீரம் - கம்பீரம் = ஆழம்.

கயமுகானுசன் - கஜமுகானுஜன் = வேழமுகன் தம்பி = சேந்தன்.

கயம் - கஜம் = நால்வாய் (யானை).

கரகம் - கரகம் = தாழி = குழிசி.

கரடம் - கரடம் = கரும்புள், வேழக்கழுத்து.

கரணன் - கரணன் = மூன்றாம் மரபினனுக்கும், நான்காம் மரபினளுக்கும் பிறந்தவன், (கணக்கன்) என்ப.

| | | | |
|---|---|---|---|
| கரம் | - | கரம் = கை, இரண்டு, ஒளி.<br>கரம் = கழுதை. | 560 |
| கரவாளம் | - | கரவாளம் = பெருநவிரம் = பெரிய கத்தி. | |
| கரவீரம் | - | கரவீரம் = அலரி. | |
| கரளம் | - | கரளம் = பாம்பு நஞ்சு. | |
| கரி | - | கரி = நால்வாய். | |
| கரிணி | - | கரிணீ = பெண் வேழம். | |
| கருடன் | - | கருடன் = பறவை முதல். | |
| கருணை | - | கருணா = அருள். | |
| கருத்தா<br>கருத்தன்<br>கத்தா<br>கத்தன் | - | கர்த்தா<br>கர்த்ரு = வினைமுதல் = செய்பவன். | |
| கரு<br>கருப்பம் | - | கர்ப்பம் = பீள் - சினை. | |
| கருப்புரம்<br>கர்ப்புரம் | - | கர்ப்புரம், பொன். | 570 |
| கருப்பூரம் | | கர்ப்பூரம், சூடன். | |
| கரும சூரன் | - | கர்மசூரன் = வன்மையாளன். | |
| கருமம்<br>கன்மம் | - | கர்ம்மம் = வினை. | |
| கருவம் | - | கர்வம் = அன்பு.<br>கர்வம் = செருக்கு. | |
| கர்க்கடகம் | - | கர்க்கடகம் = ஞெண்டு - நண்டு. | |
| கர்ச்சூரம் | - | கர்ஜூரம் = பேரீந்து. | |
| கர்த்தபம் | - | கர்த்தபம் = கழுதை. | |
| கலகம்<br>கலாம் | - | கலஹம் - குழப்பம். | |
| கலசம் | - | கலசம் = குழிசி. | |
| கலன் | - | கலன் = பொல்லாதவன் (துஷ்டன்). | 580 |
| கலாபம்<br>கலவம் | - | கலாபம் = மஞ்ஞையின் தோகை, அணிகலம், அம்புக்கூடு. | |
| கலி | - | கலி = போர், முடவன், அம்பு. | |
| கலிகை | - | கலிகா = அரும்பு. | |
| கலியாணம் | - | கல்யாணம் = பொன், மணவினை. | |
| கலுடம் | - | கலுஷம் = மறம் (தீவினை). | |
| கலை | - | கலா = தண் சுடரின் பதினாறிலொரு கூறு, பஃறிறக் கல்வி. | |

கல்லாரம் - கல்ஹாரம் =- செங்கழுநீர்.
கல்லோலம் - கல்லோலம் = அலை.
கவசம் - கவசம் = மெய்ப்பை = மெய்க்காப்பு.
கவந்தம் - கபந்தம் = தலையிலாவுடல், புனல் (நீர்). 590
கவளம் - கபளம் = வாய்கொள் சோறு.
கவி - கவி : = புலவன்.
களங்கம் - களங்கம் - குற்றம், உடலடையாளம், பழிமொழி (அபவாதம்).
களபம் - களபம் = வேழக்கன்று.
களம் - களம் / கலம் = கழுத்து, ஒலிக்கருவி வகை.
களிதம் - களிதம் = நழுவுதல்.
களேபரம் - களேபரம் - உடம்பு.
கற்பம் - கல்பம் ஊழிப் போழ்து, வானணோக்கம். (கல்பகதரு).
கற்பனை - கல்பநா = இல்லதையுள்ளதா யுண்டு பண்ணல்.
கனகம் - கநகம் = பொன். 600
கனகாத்தியட்சன் - கநகாத்யக்ஷன் - பொன் பார்ப்போன் (கனகாதிகாரி).
கனசாரம் - கநஸாரம் - சூடன்.
கனம் - கநம் = நெருக்கம், வெண்கலப்பறை, கோரைக் கிழங்கு, பேரெழிலி. கநம் = மிக்க சூடு.
கனாகணம் - கநாகநம் - அடங்காக்களிறு, பொழியெழிலி (மேகம்).
கனிட்டம் - கனிஷ்டம் = இளமை, கடைவிரல்.
கனிட்டை - கனிஷ்டா = கடைவிரல், பின் பிறந்தாள்.
கன்மடம் - கல்மஷம் = மறம் (தீவினை).
கன்னம் - கர்ணம் = காது.
கன்னி - கந்யா.
கன்னிகை - கந்யகா = எட்டாண்டுட்படுபெண் (★குமாரீ).

# கா

காகம் / காக்கை - காகம் = கரும்புள். 610

* பதினாறாட்டைக் குமரனும் பன்னீராட்டைக் குமரியும் என்பது பிங்கலந்தை.

| | | |
|---|---|---|
| காகோலம் | - காகோலம் = பெருங்கரும்புள். | |
| காங்கேயம் | - காங்கேயம் = பொன். | |
| காங்கேயன் | - காங்கேயன் = சேந்தன், புத்தேணோன்பன் பீஷ்மன். | |
| காசினி | - காச்யபீ = வையம். | |
| காஞ்சனம் | - காஞ்சநம் = பொன். | |
| காஞ்சி | - காஞ்சீ = அரைஞாண், ஒரு ஞாண்டொடை, கச்சி (காஞ்சீபுரம்). | |
| காடாயம் | - காஷாயம் = கல்லாடை. | |
| காண்டம் | - காண்டம் = நூற்பிரிவு, புனல், மரக்கலம், கட்டுத்தறி, கணு, தடி, அம்பு, பொழுது, நாற்றம், குதிரை, எலி. | |
| காதரன் | - காதரன் - அச்சமுளோன். | |
| காதுகன் | - காதுகன் = கொல்பவன். | 620 |
| காத்திரம் | - காத்ரம் = உடம்பு. | |
| காந்தம் | - காந்தம் = அழகு. | |
| காந்தி | - காந்தி = ஒளி. | |
| காமம் | - காமம் = விருப்பம், மாமரம்.<br>காமம் = வானம். | |
| காமுகன் | - காமுகன் = பிழையிழைப்போன். | |
| காயம் | - காயம் = உடம்பு, வீடு, இயற்கை, வேர், நெய், அன்பு. | |
| காரணம் | - காரணம் = (காரிய) முதல். | |
| காரணை | - காரணா = மிகுதுன்பம். | |
| காரிகை<br>காரியம் | - காரிகா<br>- கார்யம் = தொழில். | |
| கார் | - கார்ஷணம் = கறுப்பு. | 630 |
| கார்த்திகேயன் | - கார்த்திகேயன் = எரிநாட்காதலன் = முருகன். | |
| கார்முகம் | - கார்முகம் = வில். | |
| காலம் | - காலம் = பொழுது. | |
| காவியம்<br>காப்பியம் | - காவ்யம் = செய்யுணூல். | |
| காளகூடம் | - காலகூடம் = மிகுநஞ்சு. | |
| கானகம்<br>கானம்<br>கான் | - காநநம் = காடு. | |
| கானம் | - காநம் = இசையொலி. ஒலி. | |
| கானீனன் | - காநீநன் = முதுக்குறைவில்லாள் பெற்ற பிள்ளை. | |

# கி

கிங்கரன் - கிங்கரன் = ஏவல் செய்வோன் = வேலையாள்.
கிங்கிணி - கிங்கிணீ = சதங்கை. 640
கிஞ்சம் - கிஞ்ஜம் = மலர்ப்பொடி.
கிஞ்சித்து - கிஞ்சித் = சிற்றளவை.
கிஞ்சுகம் - கிஞ்சுகம் = சிவப்பு.
கிடி - கிடி = பன்றி.
கிட்டம் - கிட்டம் = கழிவு, கசடு.
கியாதம் - க்யாதம் = விளக்கம், பரந்த புகழ்மை.
கியாதி - க்யாதி = புகழ், மேன்மை.
கிரகபதி - க்ரகபதி : = செஞ்ஞாயிறு.
கிரகம் - க்ரஹம் = கோள். அருள் (அநுக்ரஹம்), பற்றுதல், போர் முயற்சி.
கிரகணம் - க்ரஹணம் = பற்றுதல். 650
கிரணம் - கிரணம் = ஒளி (ரவிகிரணம்).
கிரந்தம் - க்ரந்தம் = முப்பத்திரண்டெழுத்துக்களின் கூட்டம், நூல், தொடுத்தல்.
கிரந்தி - க்ரந்தி = கணு, முடிச்சு.
கிரமம் - க்ரமம் = ஒழுங்கு, வரிசை.
க்ரயம் - க்ரய்யம் = விலை.
கிராகம் - க்ராஹ : = பற்றுதல்.
கிராதன் - கிராதன் - மஞ்ஞையிறகணிந்தோன்.
கிராமம் - க்ராமம் = சிற்றூர்.
கிராமியம் - கிராம்யம் = நாட்டுச் சொல்.
கிரி - கிரி : = பன்றி.
கிரி : = மலை. 660
கிரிமி - க்ரிமி = புழு, அரக்கு.
கிருமி - க்ருமி = புழு, அரக்கு.
கிரியை - க்ரியா = தொழில், சிற்றளவை.
கிரீடம் - கிரீடம் = முடி.
கிரீடா - க்ரீடா = விளையாட்டு.
கிருகம் - க்ருகம் = தலைநடு.
க்ருஹம் = மனை, மனைவி.
கிருடி - க்ருஷி = பயிர்த்தொழில்.
கிருட்டிணசாரம் - கிருஷ்ணஸாரம் = கரியமான்.
கிருட்டிணம் - க்ருஷ்ணம் = கறுப்பு, தேய்பிறைப் பொழுது, இரும்பு, மான்.

கிருதம் - க்ருதம் = நெய்.
க்ருதம் = செய்கை, உதவி, முதல் யுகம்.
கிருத்தி - க்ருத்தி = தோல், மரப்பட்டை. 670
கிருபை - க்ருபா = அருள், இரக்கம்.
கிரௌஞ்சசித்து - க்ரௌஞ்சஜித் = அன்றில் வரையை வென்றோன் - சேந்தன்.
கிலம் - கிலம் = பாழானது, பாழ், சுருக்கம்.
கிலி - கிலி = விழுங்கல்.
கிலிட்டம் - க்லிஷ்டம் = ஒவ்வா மொழி.
கிலேசம் - க்லேச : = கவலை.
கின்னரம்
கின்னரி - கிந்நரம் = யாழ்.
கின்னரர் - கிந்நர : = குதிரை முகத்தர்.

# கீ

கீசம் - கீசம் = குரங்கு.
கீடம் - கீடம் = புழு.
கீணம் - க்ஷீணம் = குறைவு. 680
கீதம் - கீதம் = பாட்டு, ஒலி, ஒலிசெய் வண்டு.
கீரம் - க்ஷீரம் = பால், புனல், இனிப்பு.
கீரம் = ஊன்.
கீரை
கீர் - கீர் = சொல், நாமகள் (ஸரஸ்வதி).
கீர்த்தி - கீர்த்தி - புகழ்.
கீர்வாணம் - கீர்வாணம் - வடமொழி.
கீலம் - கீல : = நிறுத்து கால், மொட்டை மரம், நெருப்புக் கொழுந்து.

# கு

கு - கு = அகலிடம் (பூமி), குறைவு.
குகன் - குஹன் = முழையிருப்போன், சேந்தன் (ஆன்ம இருதய குகைதோறுமிருப்போன்).
குஹன் - வடவிசும்பளிப்போன் (குபேரன்).
குகு - குஹூ
குஹூ: = ஒளிக்கூறின்மை (அமாவாஸ்யை). 690
குக்கன் - குக்குரன் = நாய்.
குக்கி - குக்ஷி = வயிறு.
குக்கில் - குக்குலு = குங்கிலியம்.
குக்குடம் - குக்குடம் = கோழி.

குக்குடதரன் - குக்குடதரன் = கோழியுயர்த்தோன் = சேந்தன்.

குங்குமம் - குங்குமம் = செம்பொடி, செம்மரம்.

குசம் - குசம் / கூசம் = கொங்கை.
குசம் = தூப்புல், புனல், மரக்கொம்பு, கறுழ் (குதிரைக் கடிவாளம்), கயிறு.

குசலம் - குசலம் = மாட்சிமை.

குசுமம் - குஸுமம் = மலர்.

குசேசயம் - குசேசயம் = முளரி. 700

குஞ்சம் - குஞ்சம். / குஞ்ஜம் = மலர்க்கொத்து.

குஞ்சரம் - குஞ்ஜரம் = வேழம்.

குஞ்சிதம் - குஞ்சிதம் = கூன்.

குடம் - குடம் = (மண்ணாற் செய்த) உண்டை முதலியன.
வெல்லம், நோய்.
குடம் = மரம், குழிசி, வீடு, நுனி, மலை.

குடாரம் - குடாரம் = கோடாலி.

குடி / குடிசை - குடி = சிற்றில்.

குடில் - குடிலம் = வணர் (வளைவு), வட்டம்.

குடும்பம் - குடும்பம் = மனைவி, உறவு, வீடு.

குட்டம் - குஷ்டம் = நோய்.

குட்டியம் - குட்யம் = சுவர், களிப்பு. 710

குணம் - குணம் = கரும்புள். வெஞ்சுடர், சீற்றம், ஒலி.
குணம் = பண்பு.
குணம் = மரந்தொள்ளும் புழு.

குணபம் - குணபம் = பிணம்.

குணி - குணி = முடம்.

குணிதம் - குணிதம் = பெருக்கிக் கண்டபேறு.

குண்டம் - குண்டம் = வேள்விக்குழி.

குண்டலம் - குண்டலம் = குழை.

குண்டலி - குண்டலிந் = பாம்பு.

குண்டன் - குண்டன் = புல்லறிவன்.
குண்டன் = மணமகனிருக்கும் போதே மற்றொருவனுக்குப் பிறந்தவன்.

குண்டி - குண்டி = துறவியின் கலம் (மரப்பாத்திரம்).

குதம் - குதம் = பவ்வீத் தொளை. 720

குதர்க்கம் - குதர்க்கம் = முறையில் சொற்போர்.

| | | |
|---|---|---|
| குதூகலம் | - | குதூஹலம் = புதிது விரும்பல். |
| குத்தம் | - | குப்தம் = மறைவு. |
| குந்தம் | - | குந்தம் = ஈட்டி. |
| குந்தளம்<br>கொந்தளம் | - | குந்தலம் = தலைக்கோலி (தலைமயிர்). |
| குமரி | - | குமாரீ = கற்றாழை. |
| குமாரன் | - | குமாரன் = முருகவேள். |
| குமுதம் | - | குமுதம் = ஆம்பல் = அல்லி (வெள்ளாம்பல், செவ்வாம்பல்). |
| குமுதபாந்தவன் | - | குமுதபாந்தவன் = ஆம்பனண்பன் = திங்கள். |
| கும்பகம் | - | அடக்கல், மூச்சுள்ளடக்கல். 730 |
| கும்பம் | - | கும்பம் = தாழி, குழிசி, களிற்றுச்சென்னி (மஸ்தகம்), குங்கிலியம். |
| கும்பை | - | கும்பா = விலைமகள். |
| குய்யம் | - | குஹ்யம் = மறைவு, மறைவிடம். |
| குரங்கம் | - | குரங்கம் = மான். |
| குரவன் | - | குரு = அடிகள். |
| குரு | - | குரு = வியாழன், இருளிரிப்போன் (ஆசிரியன்), மூத்தோன், பெரிது.<br>குரு = ஒரு நாடு. |
| குரூரம் | - | க்ரூரம் = கொடுமை (கடினம்). |
| குரோடம் | - | க்ரோடம் = பன்றி. |
| குரோதம் | - | க்ரோதம் = சீற்றம். |
| குரோதனன் | - | க்ரோதநன் = சீற்றமுடையோன். 740 |
| குலசம்பவன் | - | குலஸம்பவ: = எம்மரபிலேனும் பிறந்தவன். |
| குலம் | - | குலம் = கூட்டம், உடம்பு, வீடு, மரபு, மலை, நுனி, இலந்தைக் கனி. |
| குலாலன் | - | குலாலன் = குயவன். |
| குலிசம் | - | குலிசம் = நூறுமுனை = சதகோடி (வஜ்ராயுதம்). |
| குவலயம் | - | குவலயம் = வையகம். |
| குவளை | - | குவலயம் = நெய்தல். |
| குலம் | - | குலம் = கருப்பங்கட்டி (சர்க்கரை).<br>குலம் = மழைநிலை. |
| குளிரம்<br>குளிர் | - | குளீரம் = ஞெண்டு = நண்டு. |
| குள்ளம் | - | குள்ளம் = சிறுமை. |
| குற்சிதம் | - | குத்ஸிதம் = அருவருப்பு. 750 |
| குன்மம் | - | குல்ம : வயிற்று நோய்.<br>குல்மம் = கூட்டம், இலஞ்சி (நாபி). |

## கூ

கூகை - கூகம் = பெரும்புள்.
கூடத்தன் - கூடஸ்தன் = தலைவன், முன்னோன்.
கூடபாதம் - கூடபாதம் = பாம்பு.
கூடம் - கூடம் = கொடுமுடி, கவர், ஊர்வாயில், வீடு, பொய், சிறுமை.
கூடம் = மறைவு.
கூடம் = கருப்பங்கட்டி (வெல்லம்).
கூடுமாண்டம் - கூஷ்மாண்டம் = பெரும் பூச்சுணை.
கூரம் - கூரம் = சோறு.
கூர்ச்சம் - கூர்ச்சம் = நுதல் நடு, தலை, மீசை, பிடிதூப்புல், அமர்தவிசு.
கூர்ப்பம் - கூர்ப்பம் = நுதல் நடு.
கூர்மம் - கூர்மம் = ஆமை. 760
கூலம் - கூலம் = குழு, குவடு (சிகரம்) வரம்பு, யாறு, புனல்நிலை.
கூவம்
கூவல் - கூபம் = கிணறு.

## கெ

கெந்தகம் - கந்தகம் = பொன்மைப் பிழம்பு.

## கே

கேகம் - கேஹம் = வீடு.
கேகயம் - கேகிந் = மஞ்ஞை (மயில்).
கேசவன் - கேசவன் = தலைநிறை கோலியன், மால்.
கேசரம் - கேஸரம் = மகிழ், வழை (சுரபுன்னை).
கேசரி - கேஸரிந் = சீயம் (சிங்கம்).
கேதகை - கேதகீ = தாழை.
கேதம் - கேதம் = களைப்பு. 770
கேதனம் - கேதநம் = தோகை (த்வஜம்).
கேது - கேது = செம்பாம்பு (நவ கோள்களுளொன்று), அடையாளம், நெருப்பு, ஊர்.
கேத்திரம் - க்ஷேத்ரம் = இடம். இயவுளுறைவிடம், வீடு, உடம்பு, அறத்திணை.
கேயூரம் - கேயூரம் = மொய்ம்புப் பூண்.
கேலி - கேலி = விளையாட்டு.
கேவலம் - தனிமை.

## கை

கைங்கரியம் - கைங்கர்யம் = தொண்டு.
கைதவம் - கைதவம் = புள்ளுவம் (வஞ்சகம்).
கைரிகம் - கைரிகம் = பொன்.
கைலாசம்
கைலாயம் - கைலாஸம் = வெள்ளிமலை. 780
கயிலை
கைவர்த்தன் - கைவர்த்தன் = செம்படவன்.
கைவல்லியம் - கைவல்யம் = வீடுபேறு, வாய்ப்பு.

## கொ

கொக்கு - கஹ்வம் = வெண்புள்.
கொஞ்சம்
கிஞ்சில் - கிஞ்சித் = சிற்றளவை.
கொடி - கோட்யா = துகில் (த்வஜம்)

## கோ

கோ - கோ
கௌ -கௌ - அம்பு, ஆன், ஞாலம், புனல், பொன்னாடு, விசும்பு (திக்), விழி, நூறுமுனை (வஜ்ராயுதம்).
கோகனதம் - கோகநதம் = செம்முளரி “செங்கழுநீர்” என்றுங் கூறுப.
கோகிலம் - கோகிலம் = குயில்.
கோசரம் - கோசரம் = அறியப்படுவது.
கோசம் - கோசம் = அரும்பு, ஆண்குறி, பெண்குறி, சினை, முட்டை, நூல் (சாஸ்த்ரம்), நவிரவுறை (வாளுறை). வீடு, விதை. 790
கோடகம் - கோடகம் = குதிரை.
கோடனை
கோசனை - கோஷணா - ஒலி, ஒலிமிக்கபேச்சு.
கோடம் - கோஷ: = ஒலி.
கோடரம் - கோடரம் = மரப்பொந்து.
கோடி - கோடி :
கோடீ = நூறுநூறாயிரம், நுனி, முனை, மேன்மை, ஈறு.
கோட்டம் - கோஷ்டம் = ஆன்கட்டுமிடம்.
கோட்டி - கோஷ்டி = கூடிப்பேசுநர்குழு, கூடிப்பேசும் பேச்சு.

கோட்டை - கோட்டம் =சூழ்சுவர்.
கோணம் - கோணம் = மூலை, வணர் (வளைவு), கதிர்மகன்.
கோணல் - (சனி), (நரம்புக் கருவியில்) ஒலியெழுப்புங்கோல்.
கோணா
கோணம் - கோணா = மூக்கு. 800
கோணி - கோணி = பன்றி.
கோதுமை
கோதி - கோதூமம் = வல்லரிசி
கோத்திரம் - கோத்ரம் = மரபு, மலை, வழி, காடு, கூட்டம், பெருக்கம்.
கோபாலன் - கோபாலன் = இடையன்.
கோபி - கோபீ = இடைச்சி.
கோமயம் - கோமயம் = ஆப்பீ.
கோமளம் - கோமளம் = மென்மை, இளமை.
கோமாயு - கோமாயு = நரி.
கோரம் - கோரம் - முடம்.
கோரம் = சினம், அச்சுறுத்தல், பறந்தலை = பொருகளம்.
கோலம் - கோலம் = பன்றி, வனப்புறவரைதல். (கோலமிடல்). 810
கோலாகலம் - கோலாஹலம் = கூட்டத்திற்றோன்றொலி.
கோவம் - கோபம் - சினம்.
கோவிதன் - கோவிதன் = அறிஞன்.
கோளகன் - கோளகன் = மணமகனிறந்தபின் மற்றொருவனுக்குப் பிறந்தவன்.
கோளம் - கோளம்
கோலம் = திரள் வடிவு.

# கௌ

கௌணம் - கௌணம் = பண்பணைவு (குணஸம்பந்தம்), சிறப்பின்மை.
கௌபீனம் - கௌபீநம் = கச்சை.
கௌரி - கௌரீ = மலைமகள், நாமகள், மஞ்சணிறம், எட்டாண்டுப்பெண், வையம், பொன்வாழை, இந்துளி = பெருங்காயம்.

## ச

சகசம் - ஸகஜம் = உடன்பிறப்பு, உள்ளது. 820

சகச்சிரபத்திரம் - ஸஹஸ்ரபத்ரம் = முளரி.

சகச்சிரம் - ஸஹஸ்ரம் = ஆயிரம்.

சகடம் - சகடம் = ஒழுகை (பண்டி).

சகம் - ஜகத் = ஞாலம்.

சகலம் - ஸகலம் = எல்லாம், ஒளிக்கூறிற் கூடல் (கலையொடு கூடல்).

சகாயம் - ஸஹாயம் = உதவி.

சகி - ஸகீ = தோழி.

சகுந்தம் - சகுந்தம் = பறவை.

சகுலி - சகுலீ = புழல் (மீன்).

சகுனம் - சகுநம் = பறவை.

சகோரம் - சகோரம் = பேராந்தை. (நிலாமுகி நிலாமொக்கி யென்றும் கூறுப). 830

சக்கரம், சக்கிரம் - சக்ரம் = ஒளிவட்டம், புனற்சுழி.

சக்கிரி - சக்ரிந் = பாம்பு, நெடுமால், குயவன்.

சக்கு - சக்ஷு = விழி.

சங்கடம் - ஸங்கடம் = நெருக்கம்.

சங்கதி - ஸம்ஹதி = கூட்டம்.

சங்கமம் - ஜங்கமம் = அசையும் பொருள், நடக்கும் உயிர்.<br>ஸங்கமம் = புணர்ப்பு.

சங்கம் - சங்கம் = கவுள், நந்து<br>ஸங்கம் = மக்கள் கூட்டம்.<br>ஸங்கம் = புணர்க்கை.

சங்கரன் - சங்கரன் = இன்பங்கொடுப்போன் (சிவன்).

சங்கற்பம் - ஸங்கல்பம் = விருப்பம், தனதெண்ணம்.

சங்காதம் - ஸங்காதம் = கூட்டம். 840

சங்காரம், சம்மாரம் - ஸம்ஹாரம் = அழிப்பு.

சங்கிதை - ஸம்ஹிதா = வரலாறு. ஒழுக்கம்.

சங்கியை - ஸங்க்யா = எண்.

சங்கிரகம் - ஸங்க்ரஹம் = சுருக்கம்.

சங்கிராமம் - ஸங்க்ராமம் = போர்.

சங்கீதம் - ஸங்கீதம் = இன்னிசைப்பாட்டு.

சங்கீரணம் - ஸங்கீரணம் = கலப்பு.

சங்கு - சங்கம் = நந்து.

| | | |
|---|---|---|
| சசம் | - சசம் = முயல். | |
| சசி | - சசி = திங்கள்.<br>சசீ = மருதக்கிழவன் மனைவி (இந்த்ராணி). | 850 |
| சஞ்சயம் | - ஸஞ்சயம் = கூட்டம். | |
| சஞ்சலம் | - சஞ்சலம் = அசைவு, கவலை. | |
| சஞ்சிதம் | - ஸஞ்சிதம் = கட்டுப்பட்ட வினை. | |
| சடக்கரம் | - ஷடக்ஷரம் = ஆறெழுத்து. | |
| சடம் | - ஜடம் = அறிவின்மை. | |
| சடரம் | - ஜடரம் = வயிறு. | |
| சடானனன் | - ஷடாநநன் = ஆறுமுகன். | |
| சடிதி | - சடிதி = விரைவு. | |
| சடு | - ஷட்<br>ஷட்கம் = ஆறு. | |
| சடை | - சடா - கூட்டம்.<br>ஜடா = பின்னல், விழுது, வேர்.<br>ஸடா = பின்னல், சீயப்பிடர்க்கதுப்பு. | 860 |
| சட்பம் | - ஷட்பம் = இளம்புல், இளம்புற் போன்ற கதுப்பு (மயிர்). | |
| சட்டம் | - ஷஷ்ட : = ஆறாவது. | |
| சட்டி | - ஷஷ்டி = ஆறாம் விளக்கம். | |
| சண்டம்<br>சண்டை | - சண்ட: = சீற்றம், விரைவு. | |
| சண்டன் | - சண்டன் = மிகுசினத்தன்.<br>சண்டன்<br>ஸண்டன் = அலி<br>ஷண்டன் = கொடியவன். | |
| சண்டாளன் | - சண்டாளன் = "நான்காம் மரபினனுக்கும் முதன் மரபினளுக்கும் பிறந்தவன். கொலைஞன்' என்ப. | |
| சண்பகம்<br>செண்பகம் | - சம்பகம் = செம்பொன்னி. | |
| சண்முகன் | - ஷண்முகன் = ஆறுமுகன். | |
| சததம் | - சததம் = எஞ்ஞான்றும். | |
| சதபத்திரம் | - சதபத்ரம் = முளரி. | 870 |
| சதம் | - சதம் = நூறு, எல்லாம். | |
| சதா | - ஸதா = எஞ்ஞான்றும். | |
| சதாகதி | - ஸதாகதி = காற்று. | |
| சதாசிவன் | - ஸதாசிவன் = என்றும் நல்லான். | |
| சதி | - ஸதீ = கற்புடையாள், மலைமகள். | |

| | | |
|---|---|---|
| சது | - சத்வாரி = நான்கு. | |
| சதுட்பதம் | - சதுஷ்பதம் = நான்கு வழியுங் கூடுமிடம். | |
| சதுரன் | - சதுரன் = மிகுவன்மையோன் | |
| சத்தம் | - சப்தம் - ஒலி.<br>ஸப்தந் - ஏழு.<br>ஸப்த: = ஸப்த : எனும் பெயர்க் குதிரை = பகலோன் குதிரை. | |
| சத்தன் | - சக்தன் = வல்லான். | 880 |
| சத்தி | - சக்தி : = வன்மை, வேல், மலைமகள்,<br>ஸப்தி : = குதிரை. | |
| சத்திதரன் | - சக்திதரன் = வேலாயுதன். | |
| சத்தியம் | - ஸத்யம் = உண்மை, படைப்புக்கடவுணாடு. | |
| சத்திரம் | - சத்ரம் = கவிக்குங் கவிகை.<br>சஸ்த்ரம் = படைக்கலம், புகழ்.<br>ஸத்ரம் = அறவாய், காடு, வீடு, மறைவு, ஒருவகை வேள்வி. | |
| சத்திரியன் | - க்ஷத்ரியன் = ஊராள்வோன். இரண்டாம் மரபினன் என்ப. | |
| சத்து | - ஸத் = உண்மை, சிறந்தது. | |
| சத்துரு | - சத்ரு = பகைஞன். | |
| சத்துவம் | - ஸத்வம் = இயல்பு. உயிர், வன்மை, நல்லறிவுடைமை. (ஸத்வகுணம்). | |
| சந்ததம் | - ஸந்ததம் = எஞ்ஞான்றும். | |
| சந்ததி | - ஸந்ததி = உம்பற்பிறப்பு. (குடிப்பிறப்பு). | 890 |
| சந்தம் | - சந்தஸ் = இன்னோசைச் செய்யுள். | |
| சந்தனம்<br>சந்தம்<br>சந்து | - சந்தநம் = ஆரம்= தென்மலைப் பிறப்பு. | |
| சந்தானம் | - ஸந்தாநம் = உம்பற் பிறப்பு (குடிப்பிறப்பு). | |
| சந்தி | - ஸந்தி = இயைபு. | |
| சந்திரகாசம் | - சந்த்ரஹாஸம் = பெரிய கத்தி. | |
| சந்திரன் | - சந்த்ரன்<br>சந்த்ரமாஸ் = திங்கள். | |
| சந்திரிகை | - சந்த்ரிகா = நிலவு. | |
| சந்தேகம் | - ஸந்தேஹம் - ஐயம். | |
| சந்தோகம் | - ஸந்தோஹம் = கூட்டம். | |
| சந்தோடம் | - ஸந்தோஷம் = களிப்பு. | 900 |
| சபதம் | - சபதம் = ஆணை = சொல்வலி. | |

| | | |
|---|---|---|
| சபலன் | - | சபலன் - ஆராயமலொறுப்போன். |
| சமசம் | - | ஸமஜம் - பசுக்கூட்டம். |
| சமட்டி | - | சமஷ்டி (வ்யஷ்டி யாம்) மரம் பலவுள்ள தோப்புப் போல்வது. |
| சமணன் | - | க்ஷபணன் = அமணன். |
| சமத்தம் | - | ஸமஸ்தம் = எல்லாம். |
| சமம் | - | ஸமம் = எல்லாம், ஒப்புமை. |
| சமயம் | - | ஸமயம் = நெறிமை. எல்லை, பொழுது. |
| சமரசம் | - | ஸமரஸம் - ஒன்றிய நிலை. |
| சமரம்<br>சமர் | - | ஸமரம் = போர். 910 |
| சமர்த்தன் | - | ஸமர்த்தன் = வல்லான். |
| சமவாயம் | - | ஸமவாயம் = என்றும் ஒற்றுமை (நித்யஸம்பந்தம்). |
| சமாசம் | - | ஸமாஜம் = கூட்டம். |
| சமாதானம் | - | ஸமாதாநம் = இணக்கம். |
| சமாதி | - | ஸமாதி = ஒன்றியிருத்தல் = (ஜீவான்மபரமான்மாக்கள்) ஒன்றுபட்ட நிலைமை (நிஷ்டை). |
| சமாவிருத்தன் | - | ஸமாவ்ருத்தன் = (குருவினிடம்) விடைபெற்றுக் கொண்டோன். |
| சமானம் | - | ஸமாநம் = ஒப்பு. ஒன்றிப்பு. |
| சமீகம் | - | ஸமீகம் போர். |
| சமீபம் | - | ஸமீபம் = அண்மை. |
| சமீரணன்<br>சமீரன் | - | ஸமீரணன்<br>ஸமீரன் = காற்று. 920 |
| சமுகம்<br>சமூகம் | - | ஸமூஹம் = கூட்டம், அவை. |
| சமுசயம் | - | ஸம்சயம் = ஐயம். |
| சமுசாரி | - | ஸம்ஸாரி = இல்வாழ்வோன். |
| சமுச்சேபணம் | - | ஸம்க்ஷேபணம் = சுருக்கம். |
| சமுதாயம் | - | ஸமுதாயம் = கூட்டம். |
| சமுத்திரம் | - | ஸமுத்ரம் = கடல். |
| சமை | - | ஸமா = ஆண்டு. |
| சம் | - | சம் = இன்பம், நலம், துறக்கம், புகழ், பொறுமை.<br>ஸம் = நன்று, இயைபு. |
| சம்பத்து | - | ஸம்பத் = செல்வம். |

சம்பந்தம் - ஸம்பந்தம் = ஒற்றுமை. 930
சம்பரம் - சம்பரம் = புனல்.
சம்பராரி - சம்பராரி : = கருப்பு வில்லி (சம்பராசுரனைக் கொன்றவன்).
சம்பவம் - ஸம்பவம் = பிறப்பு, தோற்றம்.
சம்பன்னன் - ஸம்பந்நன் = நிறைவுள்ளோன்.
சம்பிரதாயம் - ஸம்ப்ரதாயம் = மறைத்துமொழி கிளவி.
சம்பிரமம் - ஸம்ப்ரமம் = பரபரப்பு (தீவ்ரம்).
சம்பு - சம்பு = நலனுண்டு செய்வோன் (சிவன்).
ஜம்பு = நாவல்மரம்.
சம்புகம் = நரி.
சம்மதம் - ஸம்மதம் = களிப்பு.
சம்வற்சரம் - ஸம்வத்ஸரம் = ஆண்டு.
சம்வாதம் - ஸம்வாதம் = நல்ல சொற்போர். 940
சயந்தனம், சந்தனம் - ஸ்யந்தனம் =தேர்.
சயம் - சயம் = கை, படுக்கை, நினைவு.
சயம் = சுவர், குழு.
க்ஷயம் = அழிவு, குறைவு, நெறிவழு, வீடு, நோய்.
சயனம் - சயநம் = உறக்கம்.
சயாளு - சயாளு : உறங்கியல்பினன்.
சரசன்மன் - சரஜன்மா = நாணலோடையிற்றோன்றினோன் (சரவணபவன்).
சரசுவதி, சரச்சுவதி - ஸரஸ்வதீ = யாறு, நாமகள்.
சரணம் - சரணம் = கால்.
சரணம் = வீடு.
சரணி - ஸரணி : = வழி.
சரபம் - சரபம் = (சிங்கத்தைக் கொல்லும்) எண்காற்புள்.
சரமம் - சரமம் = இறுதி. 950
சரம் - சரம் = நகர்வு, நடை.
சரம் = அருவி.
சரம் = அம்பு, தடி, நாணல், புனல், ஒளி.
சரம் = அணிக்கயிறு (முத்துவடம்). அம்பு.
சரவணபவன் - சரவணபவன் = நாணற்பொய்கையிற்றோன்றினோன்.

| | | |
|---|---|---|
| சரளன் | - ஸரளன் = நன்னெஞ்சன் | |
| சராசரம் | - சராசரம் = நடையுள்ளதும், நடையில்லதும். | |
| சராசனம் | - சராஸநம் = வில். | |
| சரிதம் | - சரிதம் = நடை. | |
| சரித்திரம் | - சரித்ரம் = வரலாறு. | |
| சரீரம் | - சரீரம் = உடம்பு. | |
| சருக்கம் | - ஸர்க்கம் = நூற்கூறுபாடு, பிறப்பு, விடுகை, இயல்பு, முயல்வு. | |
| சருக்கரை<br>சக்கரை | - சர்க்கரா = கன்னல். | 960 |
| சருச்சரம் | - சர்ச்சரம் = ஒலிக்கருவி. | |
| சருப்பம் | - ஸர்ப்பம் = பாம்பு. | |
| சருமம் | - சர்மந் = தோல்.<br>சர்மந் = நன்மை. | |
| சருவதோபத்திரம் | - ஸர்வதோ பத்ரா = பெருங்குமிழ்.<br>ஸர்வதோ பத்ர : = வேம்பு. | |
| சருவம் | - ஸர்வம் = எல்லாம். | |
| சரை | - ஜரா = நரை, மூப்பு. | |
| சலநிதி | - ஜலநிதி = கடல். | |
| சலபம் | - சலபம் = விட்டிற்பூச்சி. | |
| சலம் | - சலம் = அசைவு, நடுக்கம், நிலையின்மை.<br>ஜலம் = புனல்.<br>சலம் = முட்பன்றிமுள். | 970 |
| சலலம் | - சலலம் = முட்பன்றிமுள். | |
| சலனம் | - சலநம் = அசைவு. | |
| சலிலம் | - ஸலிலம் = புனல். | |
| சல்லாபம் | - ஸல்லாபம் = விருப்ப வினாவிடை. | |
| சவம் | - சவம் = பிணம், புனல்.<br>ஸவம் = வேள்வி, தேன். | |
| சவி | - சவி = ஒளி, விளக்கம். | |
| சவிதா | - சவித்ரு = செஞ்சுடரோன். | |
| சவை<br>சபை | - ஸபா = அவை, கூட்டம். | |
| சவ்வியம் | - ஸவ்யம் = இடது மருங்கு. | |
| சனகன் | - ஜநகன் = தந்தை. | |
| சனம் | - ஜநம் = மக்கட் பரப்பு. | 980 |
| சனனம் | - ஜநநம் = பிறவி. | |
| சனனி | - ஜனநீ = யாய். | |
| சனாதனம் | - ஸநாதநம் = அழிவற்றது. | |

சனி - சநி = கதிர்மகன்.
சன்னத்தம் - ஸந்நத்தம் = முயற்சி.
சன்னம் - சந்நம் = மறைபொருள்.
சன்னிதி - சந்நிதி = அண்மை (ஸமீபம்).
சன்னியம் - ஜன்யம் = போர்.
சன்னியாசம், சன்னாசம் - ஸந்நியாஸம் = முற்றுந்துறத்தல்.

## சா

சாகம் - சாகம் = கீரை, கிளிக்குழு,
சாகம் = வெள்ளாடு, யாட்டுக்கடா. 990
சாகரம் - ஸாகரம் = கடல்.
சாகி - சாகிந் = மரம், மறை (வேதம்).
சாகீ = யாடு, வெள்ளாட்டின் பெண்.
சாகை - சாகா = கிளை, கை, விரல், அண்மை.
சாக்கிரம் - ஜாக்ரம், ஜாகரிதம் - நனா = விழிப்பு.
சாட்டியம் - ஜாட்யம் = அறிவுக் குறைவு.
சாட்டை - ஸடா = அடிகயிறு.
சாண்மாதுரன் - ஷாண்மாதுரன் = எரிநாட் காதலன் = முருகவேள்.
சாணி - சாணம் = ஆப்பீ.
சாணை - சாணம் = கல்வட்டம்.
சாதம் - சாதம் = அறுக்கப்பட்டது.
ஜாதம் = பிறவி, குழு, பொது அறம்.
சாதம் = களிப்பு, நுட்பம்.
சாதம் = இளம்புல், கூரிய படைக்கலம், சோறு.
ப்ரஸாதம் = உண்டற்குரியது. 1000
சாதரூபம் - ஜாதரூபம் = பொன் (ஜாதம் - பிறவியாகலிற் சுயமான பொன் என்னலாம்).
சாதாரணம் - ஸாதாரணம் = பொது.
சாதி - ஜாதி: = மரபு, பிறவி, அடுப்பு.
சாதிர்சியம், சாதிருசியம் - ஸாத்ருச்யம் = ஒப்பு (ஸமம்).
சாது - ஸாது = நன்மரபிற் பிறந்தோன்.
அவையிலிருக்கத்தக்கவன், நன்று, மூப்பு.
சாத்தியம் - ஸாத்யம் = நிறைவேற்றத்தக்கது.

சாத்திரம் - சாஸ்த்ரம் = நூல்.
சாத்துவி - ஸாத்வீ = கற்புடையாள்.
சாந்தம் - சாந்தம் = அமைதி, மகிழ்வு.
சாபம் - சாபம் = வில்.
சாபம் = வைதல் (சபதம்). 1010
சாமம், யாமம் - ச்யாமம் = கறுப்பு, பசுமை, மழவு, ஆல்.
சாமரம் - சாமரம் = ஆகு (கவரி).
சாமார்த்தியம் - ஸாமர்த்யம் = வன்மை, ஆண்மை.
சாமளம் - ச்யாமலம் = கறுப்பு.
சாமானியம் - ஸாமாந்யம் = பொது.
சாமி - ஸாமி = இகழ்வு, சிற்றளவை, அண்மை, நடு நிலைமை.
சாமீகரம் = பொன். 1020
சாமியம் - ஸாம்யம் = ஒப்புமை.
சாம்பராயிகம் - ஸாம்பராயிகம் = போர்.
சாம்பிராச்சியம் - ஸாம்ராஜ்யம் = ஆளுகை, மாட்சிமை.
சாம்பூனதம் - ஜாம்பூநதம் = பொன்.
சாயுச்சியம் - ஸாயுஜ்யம் = ஒன்றிப்பு, ஒப்பு, வீடுபேறு.
சாயம் - ஸாயம் = சாய்பொழுது (ஸாயங்காலம்).
சாயை - ஸாயா = ஒளி, நிழல், பகலோன் மனைவி.
சாரங்கம் - ஸாரங்கம் = மான்
சாரசம் - ஸாரஸம் = முளரி.
சாரணன் - சாரணன் = ஊருக்கு வெளியிலுலாவுநன்.
சாரதி - ஸாரதி = தேர் நடத்துநன்.
சாரதை - சாரதா = நாமகள்.
சாரம் - ஸாரம் = முதற்று.
சாரு - சாரு = அழகு.
சாருவபௌமன் - ஸார்வபௌமன் = எல்லா ஞாலமுமாள்வோன். 1030
சார்த்தூலம் - சார்த்தூலம்=புலி.
சாலம் - ஸாலம் மரம். மராமரம்.
ஜாலம் = கண்ணி (வலை) கடம்பு. சன்னல், கூட்டம், வேறுபாடு (மாய வித்தை).
சாலம் = மரம், வீடு, புகழ்.
சாலூரம் - சாலூரம் = தவளை.
சாலை - சாலா = இல்லம் போல்வது, அம்பலம், அடிமரம்.
சாவகாசம் - ஸாவகாசம் = நெடும்பொழுது.

| | | | |
|---|---|---|---|
| சானி | - | ஜாநி : = மனைவி, சிறப்பிலாமகடூஉ, ஆள்வோன் வீடு. | |
| சானு | - | ஜாநு = முழங்கால். | |
| சான்மலி | - | சால்மலீ = இலவு. | |

## சி

| | | | |
|---|---|---|---|
| சிகண்டி | - | சிகண்டி = மஞ்ஞை (மயில்). | |
| சிகரி | - | சிகரிந் = மலை. | 1040 |
| சிகாவளம் | - | சிகாவளம் = மஞ்ஞை. | |
| சிகி | - | சிகிந் = மஞ்ஞை, கோழி, நெருப்பு, செம் பாம்பு (கேது). | |
| சிகிவாகனன் | - | சிகிவாஹநன் = மஞ்ஞையூர்தி = சேந்தன். | |
| சிகை | - | சிகா = குடுமி, ஒளி, தழற்கொழுந்து, கிளைநுனி, மஞ்ஞையின் கொண்டை. | |
| சிக்கம் | - | சிக்யம் = உறி. | |
| சிக்குவை | - | ஜிக்வா = நாக்கு. | |
| சிங்கம், சிம்மம் | - | சிம்ஹம் = சீயம். | |
| சிங்கி | - | சிம்ஹி = பெண்சீயம், ஞாலம் தாங்கு பாம்பின்நாடு. | |
| சிங்காரம் | - | ச்ருங்காரம் = அணி. | |
| சிசினம் | - | சிச்நம் = ஆண்குறி. | 1050 |
| சிசு | - | சிசு = குழந்தை, குஞ்சு. | |
| சிஞ்சுமாரம் | - | சிம்சுமாரம் = முதலை. | |
| சிட்சை | - | சிக்ஷா = ஒறுப்பு. | |
| சிட்டன் | - | சிஷ்டன் = நல்லொழுக்கமுடையோன். | |
| சிதம் | - | சிதம் = இன்பம். சிதம் = வெள்ளை. | |
| சிதம்பரம் | - | சிதம்பரம் = அறிவுவெளி. | |
| சிதாகாசம் | - | சிதாகாசம் = அறிவுவெளி. | |
| சிதாபாசன் | - | சிதாபாஸன் = உயிர். அறிவுபோலியானவன். | |
| சிதை | - | சிதா = பிணமிடு விறகு. | |
| சித்தசன் | - | சித்தஜ : = கருப்புவில்லி. | |
| சித்தம் | - | சித்தம் = நெஞ்சம். | 1060 |
| சித்தாந்தம் | - | ஸித்தாந்தம் = உண்மையான முடிவு. | |
| சித்தி | - | ஸித்தி = நிறைவேற்றம். | |
| சித்திரபானு | - | சித்ரபாநு = நெருப்பு. | |

சித்திரம் - சித்ரம் = வியப்பு, வனப்புற வரைதல், பலநிறம்.

சித்து - சித் = அறிவு, உயிர்.
சித் = களிப்பு.

சிந்தனம் - சிந்தநம் = நினைப்பு.

சிந்து - ஸிந்து = கடல்.

சிந்துரம்
சிந்தூரம் - சிந்தூரம் = சிவப்பு.

சிந்தை - சிந்தா = நினைப்பு.

சிமிருதி
மிருதி - ஸ்ம்ருதி = நினைப்பு ('மநு முதலினோர் செய்த) அறநூல்கள் என்ப. 1070

சிரசு - சிரஸ் = முதன்மை, தலை.

சிரஞ்சீவி - சிரஞ்ஜீவி = நெடுநாளிருப்போன், கரும்புள் (காக்கை).

சிரத்தை - ச்ரத்தா = பேரன்பு, விருப்பம், மறலிமனைவி.

சிரம் - சிரம் = நெடுநாள்.
சிரம் = தலை.

சிரவணம்
சவணம் - ச்ரவணம் = செவி, கேட்டல்.

சிராத்தம் - சிராத்தம் = இறந்தோர்க்குச் செய்செய்கை.

சிருகாலன் - ஸ்ருகாலன் = நரி.

சிருட்டி
சிட்டி - ஸ்ருஷ்டி = படைப்பு.

சிரேட்டம் - ச்ரேஷ்டம் = முதன்மை.

சிரேணி - ச்ரேணி = ஒழுங்கு. 1080

சிலேடம்
சிலேடை - ச்லேஷ : = தழுவல், சேர்வு (ச்லேஷாலங்காரம்).

சிலேட்டுமம்
சிலேற்பனம் - ச்லேஷ்மம் = ஐயம் (முப்பிணியினொன்று).
- ஐயநரம்பு.

சிலை - சிலா = கல், அரக்கு.

சில்லி - சில்லி = மரத்தின் பட்டை.

சிவமல்லி - சிவமல்லீ = மரப்பூருண்டி (கொக்கு மந்தாரை).

சிவம் - சிவம் = நன்மை, தூய்மை, வீடுபேறு.

சிவன் - சிவன் = நல்லான்.

சிவிகை - சிபிகா = பல்லக்கு.

சிவை - சிவா = மலைமகள், நரி, வன்னிமரம்.

சிற்பி - சிற்பிந் = கற்றொழிலர், கைத்தொழிலர். 1090

சினன் - ஜிநன் = மூப்புடையோன், போற்றப்படுவோன், ஜைந சாஸ்த்ர புத்தன்.

சினேகம்
நேசம்
நேயம் - ஸ்நேஹம் = நட்பு.

சின்னம் - சிந்ஹம் = அடையாளம்.

## சீ

சீ
சீர்
திரு - ஸ்ரீ = செல்வம், ஒளி, மலர்மகள், மலைமகள், நாமகள். நஞ்சு, நாணம், உணர்ச்சி.

சீகரம் - சீகரம் = புனற்றிவலை.

சீக்கிரம் - சீக்ரம் = விரைவு.

சீடன் - சிஷ்யன் = கற்போன்.

சீதம் - சீதம்
சீதளம் - சீதளம் = குளிர்ச்சி.

சீதை - ஸீதா = உழுபடைச்சால், உழுபடைச்சால் வந்தாள் (ஜாநகீ).

சீமந்தினி - சீமந்திநீ = பெண். 1100

சீமான் - ஸ்ரீமாந் = பெருக்கமுடையோன், செல்வன்.

சீமுதம்- - ஜீமூதம் = கொண்டல் (மேகம்). மலை.

சீரகம் - ஜீரகம் = நுனைப்பரல்.

சீரணி - ஜீர்ணி = நலனழிந்தது.

சீலம் - ஸ்ரீலம் = நல்லொழுக்கம், இயல்பு, அழகு.

சீலன் - ஸ்ரீலன் = பெருக்கமுடையோன்.

சீவனம்
சீவனீயம் - ஜீவநம் = புனல் (நீர்).

சீவன் - ஜீவன் = உயிர்.

## சு

சு - ஸு = "முதன்மை, மேன்மை" என்பன காட்டுமோரு பசருக்கம்.

சுகம் - சுகம் = கிளி, முளரிக்கொடி (கொடியைத்தண்டெனவுங் கூறுப). சுகம் = நன்மை, துறக்கம், புனல். 1110

சுகுமாரம் - ஸுகுமாரம் = இளமை, மென்மை.

சுகுர்தம், சுகிர்தம் - ஸுக்ருதம் = அறம்.

சுக்கிரன் - சுக்ரன் = வெள்ளி (கோள்களுளொன்று).

சுக்கிலம் - சுக்லம் = வெள்ளை, ஆண்பீள், வெள்ளி (கோள்களுளொன்று), வளர்பிறைப் பொழுது. சுக்லம் = புளியமரம்.

சுசனம் - ச்வஸநம் = காற்று.

சுசி - சுசி = அழகு, வெண்மை, தூய்மை, நெருப்பு, நல்லான் (சிவன்).

சுதன் - ஸுதன் = மகன்.

சுதி - ஸுதீ = அறிஞன்.

சுதை - ஸுதா = மகள். சுதா = இன்சுவைத்து (அமுதம்).

சுத்தம் - சுத்தம் = தூய்மை, வெண்மை, புனல். 1120

சுந்தரம் - ஸுந்தரம் - அழகு.

சுந்தரி - சுசுந்தரீ = மூஞ்சூறு.

சுபம் - சுபம் = நன்மை.

சுப்பிரமணியன் - ஸுப்ரஹ்மண்ய : = (பிரமசொரூப) சேந்தன்.

சுப்பிரம் - சுப்ரம் = பேரொளி, வெள்ளை.

சுமம் - ஸுமம், சுமனசம் - ஸுமநஸம் = மலர்.

சும்பனம் - சும்பநம் = சுவைப்பு.

சுயம் - ஸ்வயம் = இயல்பு (சொந்தம்).

சுயம்பு - ஸ்வயம்பூ = உண்டாக்கப்படாதது, கடவுள்.

சுரதம் - ஸுரதம் = புணர்க்கை. 1130

சுரதன் - ஸுரதன் - அருளுடையோன்.

சுரம் - ஜ்வ்ரம் = வெப்புநோய். ஸ்வரம் = மூச்சு, அகரமுதலியவெழுத்துக்கள், (மஞ்ஞை, எருது, யாடு, அன்றில், குயில், குதிரை, வேழம் என்பவற்றின் ஓசையாகிய) ஏழிசை.

சுரர் - ஸுரர் = கடவுளர்.

சுராட்டு - ஸ்வராட் = பொன்னாட்டிறைவன் (இந்திரன்).

சுரிகை, சூரி - சுரிகா = நாட்டம் (வாள்).

சுருதி - ச்ருதி = காது, சொல், அறிவுநூல் (வேதம்).

சுரும்பணம் - ஜ்ரும்பணம் = வாய்மூச்சு (கொட்டாவி).

சுரை - சுரா = களவு. ஸுரா = கள்.

சுரோணம் - ச்ரோணம் = சிவப்பு, பழுப்பு.
சுரோத்திரியன் - ச்ரோத்ரியன் = மறைபடித்தவன். 1140
சுல்லி - சுல்லி = அடுப்பு.
சுவணம் - ஸ்வர்ணம்
சொன்னம் - ஸுவர்ணம் = பொன்.
சுவபாவம்
சுபாவம் - ஸ்வபாவம்= இயற்கை.
சுவர்க்கம்
சொர்க்கம்
சொக்கம் - ஸ்வர்க்கம் = பொன்னாடு, பால், விருப்பமான பொருள், நன்மை.
சுவற்பம்
சொற்பம் - ஸ்வல்பம் = சிற்றளவை.
சுவாசம் - ச்வாஸம் = மூச்சு.
சுவாது - ஸ்வாது = இனிமை.
சுவாமி
சாமி - ஸ்வாமி = சேந்தன், ஆள்வோன், கணவன், பொருளன்.
சுவாலித்தல்
சொலித்தல் - ஜ்வாலம் = நெருப்பெரிதல். 1150
சுவாலை - ஜ்வாலா = தழற்கொழுந்து.
சுவானுபூதி - ஸ்வாநுபூதி = தனது நுகர்ச்சியின்பம், பேரறிவு.
சுவேதம் - ச்வேதம் = வெள்ளை.
ஸ்வேதம் = வேர்வை.
சுழுத்தி - ஸுஷுப்தி = ஆழ்தூக்கம்.
சுழுமுனை
சுழுனை
சுழிமுனை - ஸுஷும்நா = நடுநரம்பு = பெருநரம்பு.
சுனகன் - சுநகன் = நாய்.

## சூ

சூகரம் - ஸூகரம் = பன்றி.
சூக்கம்
சூக்குமம் - ஸூக்ஷ்மம் = நுட்பம்.
சூசுகம் - சூசுகம் = கொங்கை நுனி.
சூடா - சூடா = தொடி. 1160
சூடாமணி - சூடாமணி = தலைச்செம்மனவு (சிரோமாணிக்கம்).
சூதகம் - ஸூதகம் = தீட்டு.

சூதம் - ஸௌதம் = ஒசிவெள்ளை (பாதரஸம்).
சூதம் = மாமரம்.
த்யூதம் = வட்டாட்டம்.
சூதன் - ஸௌதன் = வலவன் = தேர்நடத்துவோன்.
மரவினைஞன்.
சூது - த்யூதம் = வட்டாட்டம்.
சூத்திரம் - ஸௌத்ரம் = நூல்.
சூத்திரன் - சூத்ரன் = 'நான்காம் மரபினன்' என்ப
(உழூதன் முதலிய) வேலை செய்வோன்.
சூரணம்
சுண்ணம் - சூர்ணம் = பொடி.
சூரன் - சூரன் = வன்மையோன், சேந்தன்,
சேந்தனையெதிர்த்தோன் (சூரபத்மா).
ஸௌரன் = செஞ்சுடர்.
சூரி - ஸௌரி : = அறிஞன். 1170
சூரியன் - ஸௌர்யன் = செஞ்சுடர்.
சூர் - சூரன் = சேந்தனையெதிர்த்தோன்.
(சூரபத்மா).
சூர்ப்பம் - சூர்ப்பம் = சுளகு.
சூலம் - சூலம் = மூவிலைவேல்.
சூனியம் - சூந்யம் = பாழ். தோற்றமின்மை.
சூனு - ஸௌநு = பிள்ளை.

## செ

செந்து
சந்து - ஜந்து : = உயிருளது.
செயம்
சயம் - ஜயம் = வெற்றி.
செபம் - ஜபம் = மறையுரு, மறைசொல்லல்.

## சே

சேடன் - சேஷன் = ஞாலந்தாங்கு பாம்பு, மால்,
(திருமால்). 1180
சேடி - சேடீ = வேலைக்காரி.
சேட்டம் - ச்ரேஷ்டம் = அறம், வீடுபேறு.
சேட்டை - ஜ்யேஷ்டா = முகடி.
சேஷ்டா = ஆடூஉ மகடூஉ விளையாட்டு.

சேதம் - சேதம் = வெட்டுதல்.
சேதனம் - சேதநம் = அறிவு.
சேது - ஸேது = அணை. சுவர், உம்பர், (உயரம்).
சேத்திரஞ்ஞன் - க்ஷேத்ரஜ்ஞன் = உயிர்.
சேமங்கரன் - க்ஷேமங்கரன் - நன்மை நல்குநன்.
சேமம் - க்ஷேமம் = நன்மை, காத்தல், வீடுபேறு.
சேலை, சீலை - சேலம் = ஆடை. 1190
சேவகன் - ஸேவகன் (செல்வர்) வேலைக்காரன்.
சேவனம் - ஸேவநம் = வழிபாடு.
சேவை - ஸேவா = ஊழிய வழிபாடு.
சேனம் - ச்யேநம் = பருந்து.
சேனானி - ஸேநாநீ = படைத்தலைவன் = சேந்தன்.
சேனை - ஸேநா = படை.

# சை

சைசவம் - சைசவம் = இளமை (பதினாறாண்டுக்குட்பட்ட தகுதி).
சைத்தியம், சயித்தியம் - சைத்யம் = குளிர்ச்சி.
சையோகம் - சையோகம் = (ஒன்று மற்றொன்றிற்) கூடுதல்.
சைலம் - சைலம் = மலை. 1200
சைவலம் - சைவலம் = பாசி.
சைவலினி - சைவலிநீ = யாறு.
சைவம் - சைவம் = நல்லான் றொடர்பு (சிவஸம்பந்தம்).
சைனியம், சயினியம் - ஸைந்யம் = நால்வகைப்படை.

# சொ

சொந்தம், சுவதந்திரம், சுதந்திரம் - ஸ்வதந்த்ரம் = உரிமை.
சொப்பனம் - ஸ்வப்நம் = கனா.
சொன்னகம் - ஸுவர்ணகம் = கொன்றை.
சொன்னகாரர் - ஸுவர்ணகாரர் - தட்டார்.

# சோ

சோகம் - சோகம் = கம்பலை, உருக்கம்.
சோணம் - சோணம் = சிவப்பு, தழல். 1210
சோணிதம் - சோணிதம் - செம்புனல் (ரக்தம்), பெண்பீள்.
சோதி - ஜ்யோதிஸ் = ஒளி.
சோதிடம் - ஜ்யோதிஷம் = எண்ணூல் (கணிதசாஸ்த்ரம்).
சோபம் - சோபம் = வீக்கம்.
சோபனம் - சோபநம் = அழகு.
சோபானம் - ஸோபாநம் = ஏறுபடி.
சோபை - சோபா = ஒளி.
சோத்திரம்
சுரோத்திரம் - ச்ரோத்ரம் = செவி.
சோமம் - ஸோமம் = ஆட்டாங்கொடி, வேள்வி, வான்.
சோமன் - ஸோமன் = திங்கள், நல்லான் (சிவன்),
வடவிசும்பிறை (குபேரன்). 1220
சோரன் - சோரன் : கள்வன்.

# சௌ

சௌசம் - சௌசம் = தூய்தாக்கல்.
சௌமியம் - ஸௌம்யம் = வனப்பு, பொறுமை.
சௌரம் - க்ஷௌரம் = கதுப்புக்கழித்தல்.
சௌரி - சௌரி = மால் (திருமால்), வேங்கைமரம்.
ஸௌரி = கரியன் (சனி).

# ஞ

ஞத்தி - ஜ்ஞப்தி = அறிவு.

# ஞா

ஞாதா - ஜ்ஞாதா = காண்போன்.
ஞாதி - ஜ்ஞாதி = சுற்றம்.
ஞாபிதம் - ஜ்ஞாபிதம் = அறிவித்தல்.
ஞானசத்திதரன் - ஜ்ஞாநசக்திதரன் = வேற்பெருமான். 1230
ஞானம் - ஜ்ஞாநம் = அறிவு.

# த

| | | |
|---|---|---|
| தகரம் | - | தஹரம் = நுட்பம், உண்முளரிக்கண்ணதாய நுண்மை. |
| தகனம் | - | தஹநம் = சுடுதல். |
| தகனன் | - | தஹநன் = நெருப்புக்கடவுள். |
| தக்கன் | - | தக்ஷன் = வல்லான், தழற்கடவுள், தக்ஷப்ரஜாபதி. |
| தக்கிணம் | - | தக்ஷிணம் = தெற்கு, வலமருங்கு. |
| தக்கிணன் | - | தக்ஷிணன் = நன்னெஞ்சன். |
| தக்கிணை<br>தெட்சணை | - | தக்ஷிணா = காணிக்கை. |
| தக்கை | - | டக்கா = பறை. |
| தசம் | - | தச : = பத்து. 1240 |
| தசனம் | - | தசநம் = பல். |
| தசை | - | தசா = இளமை முதலிய நிலைமை, விருப்பு. |
| தச்சன் | - | தக்ஷன் = மரவினைஞன். |
| தஞ்சம் | - | தஞ்சம் = காவற்கருவி (கவசம்). |
| தடம் | - | தடம் = புனற்கரை. |
| தடா | - | தடா = தராசுவட்டம். |
| தடாகம் | - | தடாகம் = மழைநிலை = குளம். |
| தடித்து | - | தடித் = மின்னல். |
| தடினி | - | தடிநீ = யாறு. |
| தட்டு | - | தட்டு = மரவட்டம். 1250 |
| தண்டம் | - | தண்டம் = கோல், தானை = படை, ஆள்வோன் ஒறுப்பு. |
| தண்டுலம் | - | தண்டுலம் = அரிசி. |
| தண்டை | - | தண்டகம் = காலிலிடுமோரணி. |
| ததம் | - | ததம் = எங்குமிருத்தல், அகலம், காற்று, யாழ் முதலியன. |
| ததி | - | ததி = கூட்டம், வாழை.<br>ததி = தயிர், வீடு. |
| தத்தம் | - | தக்தம் = எரித்தல்.<br>தத்தம் = ஈதல். |
| தத்தியம் | - | தத்யம். = உண்மை. |
| தத்துவம் | - | தத்வம் = உண்மை. |
| தந்தசூகம் | - | தந்தசூகம் = பாம்பு. |

தந்தம் - தந்தம் = பல், மலைச்சாரல்.
தந்தி - தந்தி = களிறு. 1260
தந்திரம் - தந்த்ரம் = தொழில், சிறப்பு, பொதுக்கட்டளை, ஸித்தாந்த முதலிய நூல்.
தந்து - தந்து = நூல்.
தமசு - தமஸ் = ஒழுக்க வழு (தமோ குணம்), இருள். விருப்பு, துன்பு.
தமம் - தமம் = இருள், அல் (இரவு), கரும்பாம்பு (ராஹு).
தமருகம், தமரகம் = டமரகம் = துடி, இடைசுருங்கு பறை.
தமனம் - தமநம் = மருக்கொழுந்து.
தமனியம், தபனியம் - தபநீயம் = பொன்.
தமிசிரம் - தமிஸ்ரம் = இருள்.
தமுனா - தமுநா = நெருப்பு.
தம்பம் - ஸ்தம்பம் = புல், மரம், மலை.
ஸ்தம்பம் = அறியாமை, நாட்டுதறி. 1270
தயாளம் - தயாளம் = இரக்கம்.
தயை, தயவு - தயா = அருள்.
தரக்கு - தரக்ஷு - புலி.
தரங்கம் - தரங்கம் = அலை.
தரங்கிணி - தரங்கிணி = யாறு.
தரணி - தரணி : = வையகம்.
தரம் - தரம் = மலை.
தரம் = சிறுமை (அல்பம்).
தரம் வன்மை, உயர்வுடைமை.
தரளம் - தரளம் = அசைவு. திரட்சி (முத்து). நடுத்திரட்சி (நாயகமணி).
தரிசனம் - தர்சநம் = காட்சி.
தரித்திரம் - தரித்ரம் = வறுமை. 1280
தரு - தரு = மரம்.
தருக்கம் - தர்க்கம் = சொற்போர்.
தருச்சனி - தர்ஜநீ = சுட்டுவிரல்.
தருணம் - தருணம் = அமையம்.
தருப்பணம் - தர்ப்பணம் = மகிழ்வித்தல் (த்ருப்தி செய்தல்).
தர்ப்பணம் = கண்ணாடி.

தருப்பம் - தர்ப்பம் = தன்னையுயர்த்திப் பேசுமியல்பு, கொழுப்பு.
தருப்பை - தர்ப்பம் = தூப்புல்.
தருமம் / தன்மம் - தர்மம் = அறம்.
தரை - தரா = திணை.
தலம் - ஸ்தலம் = மேட்டுத்திணை, நாற்புறனொத்த இடம்.
தலம் = அங்கை, கீழிடம். 1290
தவசு - தபஸ் = நோன்பு, நோன்புத்திணை (தபோ (லோகம்.)
தவம் - ஸ்தவம் = வழுத்தல்.
தப : நோன்பு, நீர்வேட்கை (தாஹம்).
தவளம் - தவளம் = வெள்ளை.
தவனன் - தபநன் = செஞ்சுடரோன்.
தவன் - தவன் - கணவன்.
தளம் - தளம் = இலை, மலரிதழ்.
தற்காலம் - தத்காலம் = நிகழ்பொழுது.
தற்பம் - தல்பம் = மனைவி, படுக்கை, மேல்வீட்டுமேடை.
தனஞ்சயன் - தநஞ்ஜயன் = தழற்கடவுள்.
தனம் - ஸ்தநம் = கொங்கை.
தநம் = பொருள், செல்வம். 1300
தனயன் - தநயன் = மகன்.
தனு - தநு = நுட்பம், விரிவு, உடம்பு, தோல், நார்.
தநுஸ் = வில்.
தனுசர் - தநுஜர் = வானோர் மாற்றலர்.
தனுசு - தநுஸ் = வில்.
தன்னியன் - தந்யன் = அறனுடையோன்.

## தா

தாகம் - தாஹம் = எரிவு.
தாசன் - தாஸன் = அடிமை, தொண்டன்.
தாசன் = செம்படவன்.
தாசி - தாஸீ = அடியவள்.
தாடங்கம் - தாடங்கம் = பெண் காதணி தோடு.
தாடனம் - தாடநம் = அடித்தல், தட்டுதல். 1310

தாடிமம் - தாடிமம் = கழுமுள் (மாதுளை).

தாட்சணியம், தாக்ஷண்ணியம் - தாக்ஷண்யம் = இரக்கம்.

தாட்டிகம் - தாஷ்டீகம் = வன்மை.

தாட்டியம் - தார்ட்யம் = உறுதி.

தாணு - ஸ்தாணு = நல்லான் (சிவன்), அடிமரம், அசைக்கப்படாதது.

தாண்டவம் - தாண்டவம் = கூத்து.

தாதகி - தாதகீ = தழற்கொழுந்து (கந்தத்திரவியங்களுளொன்றாம் இதன் மலர்).

தாதான்மியம் - தாதாத்ம்யம் = பண்பும் பண்பியுமாயிருக்கும் ஒற்றுமை (நித்யகுணகுணி ஸம்பந்தம்).

தாது - தாது = மண் முதலிய ஐம்பெரும் பொருள், இரும்பு முதலிய ஐந்து, கொழுப்பு முதலின, இசை (ஸங்கீதம்).
வடமொழி முதனிலையாகிய தாது.

தாதை - தாதன், தாதா = ஈன்றோன். 1320

தாத்திரி - தாத்ரீ = வையம்.

தாந்தி - தாந்தி = மணமின்மை முதலிய துன்பு பொறுத்தல்.

தாபம் - தாபம் = வெப்பம்.

தாபனம் - ஸ்தாபநம் நிறுவுதல், இருத்துதல்.

தாமரை, மரை - தாமரஸம் = முளரி.

தாமணி - தாமநீ = மாடு கட்டுங் கயிறு.

தாமிரம், தாம்பிரம் - தாம்ரகம் = செம்பு.

தாம்பூலம் - தாம்பூலம், தாம்பூலி - தாம்பூலீ = வெற்றிலை.

தாரகம் - தாரகம் = எஞ்ஞான்றும் புதுமைத்து (பிரணவம்).

தாரம் - தாரம் - எஞ்ஞான்றும் புதுமைத்து (பிரணவம்), தூய்மை, வானொளி (விண்மீன்) பேரொலி, வெள்ளி, வீடுபேறு, தாண்டுதல், திரட்சி (முத்து), தாரம்= மனைவி. 1330

தாரன் - தாரன் = பகலவன், அன்பன், தாரகாஸுரன்.

தாராபதம் - தாராபதம் - வான்.

தாரு - தாரு = இந்தனம் - விறகு.

தாரை - தாரா = புனலோட்டம், ஊர்சார்தோட்டம், கூர்மை, ஒரூர். தாரா = வியாழன் மனைவி, அசைவு, வானொளி (விண்மீன்).

தாலம் - தாலம் = கிட்டி (கைத்தாளம்), பனைமரம்.

தாலு - தாலு : = நா.

தாவம் - தாவம் = காட்டு நெருப்பு.

தாவரம் - ஸ்தாவரம்=மலை, மரம்.

தாளகம் - தாலகம் = செம்பொன்மைத்திரள்.

தானம் - ஸ்தாநம் = இடம், வீடு. தாநம் = கொடை, கூலி, காப்பு. 1340

தானவர் - தாநவர் = அவுணர்.

தானியம் - தாந்யம் = நெல் முதலிய விளைபொருள்.

## தி

திகம்பரம் - திகம்பரம் = கலையின்மை (நிர்வாணம்).

திகை, திசை - திசா = விசும்பு.

திக்கு - திக் = வம்பல்.

திடம் - த்ருடம் = உறுதி, வன்மை.

திட்டம் - திஷ்டம் = பொழுது.

திண்டி - டிண்டிமம் = பறை.

திதி - திதி = தண்சுடர் விளக்கங்கள், அல்லும் பகலும். ஸ்திதி = காப்பு, இருப்பு.

தித்திரி - தித்திரி : = பொன்வாய்ப்புள் (சிச்சிலி) - இதுவே ‘சிரல்’. 1350

திமிதம் - திமிதம் = நனைந்தது.

திமிரம் - திமிரம் = இருள்.

தியாகம் - த்யாகம் = கொடை, விடுகை.

தியுதி - த்யுதி = ஒளி.

திரம் - ஸ்திரம் = உறுதி.

திரயம் - த்ரயம் = மூன்றாயுளது.

திரவியம் - த்ரவியம் = பொருள்.

திராக்கை - த்ராக்ஷா = கொடி முந்திரி.

திராவிடம், திரவிடம் - த்ராவிடம் = தமிழ்.

திறற்காரம் - திரஸ்காரம் = எதிரிடை. 1360

திரவம் - த்ரவம் = புனல். புனல்போல்வது, பிசின், துப்பு (பவளம்), ஒசி வெள்ளை (ரஸம்), ஓடுதல்.
திரி - த்ரீணி = மூன்று.
திரிபதார்த்தம் - த்ரிபதார்த்தம் = முப்பொருள்.
திரிபுடி - த்ரிபுடி = காண்போனுங் காட்சியுங் காட்சிப் பொருளும்.
திருக்கு - த்ருக் / த்ருச் = கண்.
திருட்டாந்தம் - த்ருஷ்டாந்தம் = எடுத்துக்காட்டு.
திருட்டி / திட்டி - த்ருஷ்டி = கண், பார்வை, உணர்ச்சி.
திருணம் - த்ருணம் = புற்பொது.
திருத்தி - த்ருப்தி = தெவிட்டல்.
திரை - திரோதாநம் = மறைப்பு. 1370
திலகம் - திலகம் = நெற்றிப் பொட்டு, ஈரல்.
திலம் - திலம் = எள்.
தில்லை - தில்வம் = வெம்பாலத்தி மரம்.
திவசம் - திவஸம் = பகற்பொழுது.
திவம் - திவம் = வானம், வானோரிருப்பிடம்.
திவா - திவா-திவா = பகற்பொழுது.
திவாகரன் - திவாகரன் = செஞ்சுடர்.
திவ்வியம் - திவ்யம் = அழகு. உளத்திற்குவப்புடைத்து.
தினம் - தினம் = பகல்.

## தீ

தீ - தீ = அறிவு. 1380
தீக்கணம் / தீட்சணம் - தீக்ஷணம் = வெப்பம், நஞ்சம், போர், கூர்மை, இரும்பு.
தீக்கிதன் - தீக்ஷிதன் = வேள்வித் தலைவன்.
தீக்கை / தீட்சை - தீக்ஷா = கொடுத்தலுங் கெடுத்தலும், இதிலே 'தீ' தானம்; அது புத்தி முக்தி கொடுத்தலெனவும், 'க்ஷா' க்ஷயம் ; அது பாசக்ஷயமெனுங் கேடெனவுங் கூறுப.
தீதி - தீதிதி = நெருப்பு.
தீபம் - தீபம் = விளக்கு.
தீரன் - தீரன் = அறிஞன், நெஞ்சுறுதியுளன்.
தீரன் = நல்லான் (சிவன்), செஞ்சுடர்.

தீர்க்கதரிசி - தீர்க்கதர்சி = வருவதறிவோன்.
தீர்க்கம் - தீர்க்கம் = நீட்சி.
தீர்த்தம் - தீர்த்தம் = அறவோர் மூழ்கு புனல், நூல் (ஆகமம்).
தீர்த்தன் - தீர்த்தன் = அடிகள் (குரு). 1390
தீவம்
தீவு - த்வீபம் = கடலிடைக்குறை.
தீவிரம் - தீவ்ரம் = காரம், விரைவு, சுடுகை, வியப்பு.
தீனன் - தீநன் = ஏழை, துன்பமுடையோன்.

# து

துக்கம் - துக்கம் = துன்பம்.
துங்கம் - துங்கம் : = உம்பர் (உயரம்).
துச்சம் - துச்சம் = நலனற்றது.
துட்டம் - துஷ்டம் = ஒழுங்கின்மை.
துட்டன் - துஷ்டன் = கொடியவன்.
துட்டு - துஷ்டு = தீமை.
துண்டம் - துண்டம் = முகம், பறவை மூக்கு. 1400
துதி - ஸ்துதி = ஏத்துதல்.
துத்தம் - துக்தம் = பால், மெழுகு.
துத்தம் = மயினிறத்திரட்சி.
துந்தம் - துந்தம் = வயிறு.
துந்துபி - துந்துபி = ஒலிக்கருவி.
துரகம் - துரகம்.
துரங்கம் - துரங்கம் = குதிரை.
துரிதம் - துரிதம் = மறம் (தீவினை).
துரியம் - துரீயம் = நான்காவது.
துரியாதீதம் - துரியாதீதம் = நான்காவதின் மேற்பட்டது.
துருக்கம் - துர்க்கம் = மலைமேற்சுவர்.
துருமம் - த்ருமம் = மரம். 1410
துருவம் - த்ருவம் = அசைவற்றது, மலை, நிலைபேறு, சேணுடைமை.
துரோகம் - த்ரோஹம் = கெடுதி.
துர் - துர் = குற்றப்பொருள் பயக்கும் ஓரடைமொழி.
துலா
துலாம் - துலா = நிறைகோல், ஏற்றமரம், நூறுபலம், பானை.
துலை - ஒப்பளவை.
துல்லியம் - துல்யம் = ஒப்பு (ஸமம்).

துவசம்<br>துசம் - த்வஜம் = தோகை (கொடி).

துவட்டா - த்வஷ்ட்ரு = புத்தேள்வினைஞன் (விச்வகர்மா).

துவமிசம்<br>துமிசம்<br>தொமிசம் - த்வம்ஸம் = அழிப்பு.

துவயம் - த்வயம் = இரண்டு.

துவரிதன்<br>துரிதன் - த்வரிதன் = விரைந்து செல்வோன். 1420

துவரை - துவரிகா = பொன்னி (துவரைச்செடி).

துவர்<br>துவர்ப்பு - துவரம் = கார்ப்பு (சுவைகளுளொன்று).

துவாதசாந்தம் - த்வாதசாந்தம் = சென்னிமேற் பன்னிருவிரல்.

துவாந்தம் - த்வாந்தம் = எல்லி (இரவு), இருள்.

துவாரபாலன் - த்வாரபாலன் = வாயில் காப்போன்.

துவாரம் - த்வாரம் = தொளை, வாயில்.

துவானம் - த்வாநம் = புலம்பு = ஒலி.

துவி - த்வே<br>த்வௌ = இரண்டு.

துவிசட்புயன் - த்விஷட்புஜன் = பன்னிருதோளன் = சேந்தன்.

துவிதம் - த்வைதம் = இரண்டு. 1430

துவிபம் - த்விபம் = வேழம்.

துவீபம் - த்வீபம் = கடலிடைக்குறை (தீவு).

துவீபி - த்வீபி = புலி.

துவேடம்<br>துவேசம் - த்வேஷம் = வெறுப்பு.

துவைதம் - த்வைதம்<br>த்விதா = இருதிறம்.

துளசி<br>துளவம்<br>துளவு<br>துழாய் - துளஸீ<br>துலஸீ = குல்லை.

துன்னவாயன் - துந்நவாயன் = தையற்காரன்.

# தூ

| | | | |
|---|---|---|---|
| தூசி | - | த்வசி = புழுதி. | |
| தூடணம் | - | தூஷணம் = பழிமொழி. | |
| தூடிணிகன் | - | தூஷ்ணீகன் = பேசாதிருப்போன். | 1440 |
| தூணம்<br>தூண் | - | ஸ்தூணம் = மதலை. | |
| தூணி | - | தூணீ. } = அம்புக்கூடு. | |
| தூணிரம் | - | தூணீரம் } = அம்புக்கூடு. | |
| தூதன் | - | தூதன் = செய்தி கொடு செல்வோன். | |
| தூதி | - | தூதி : செய்தி கொடு செல்பவள். | |
| தூபம் | - | தூபம் = சாம்பிராணிப் புகை முதலியன. | |
| தூபி | - | ஸ்தூபிந் = கொம்மை, குவிவு. | |
| தூமம் | - | தூமம் = புகை. | |
| தூமிரம் | - | தூம்ரம் = கறுப்புறு சிவப்பு. | |
| தூரம் | - | தூரம் = சேய்மை. | |
| தூரியம் | - | தூர்யம் = நால்வகையொலிக் கருவிகளொலி. | |
| தூர்த்தன் | - | தூர்த்தன் = பிசகு புரிவோன். | (1450) |
| தூர்வை | - | தூர்வா = அறுகு. | |
| தூலம் | - | ஸ்தூலம் - பெருத்திருப்பது.<br>தூலம் = பஞ்சு. | |
| தூலி | - | தூலி : = பஞ்சணை. | |
| தூள்<br>துகள் | - | தூளி = பொடி. | |

# தெ

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | - | தைவம் = புத்தேள். | |

# தே

| | | | |
|---|---|---|---|
| தே | - | தேவன் = கடவுள். | |
| தேகம் | - | தேஹம் = உடம்பு. | |
| தேசசு<br>தேசு<br>தேயு | - | தேஜஸ் = ஒளி, நெருப்பு, சிறப்பு, வன்மை. | |
| தேசிகன் | - | தேசிகன் = அடிகள் (குரு). | 1460 |
| தேதி | - | திதி : = (சந்திரகலையாகு) நாள். | |

தேயம் - தேசம் = நாடு.
தேவரன் - தேவரன் = மணமகனுடன் பிறந்தோன்.
தேவலன் - தேவலன் = தொழல் புரிவோன்.
தேவி - தேவீ = மலைமகள், ஊராள்வோன் மனைவி.
தேனு - தேநு : = தலையீற்றுப் பெற்றம்.

## தை

தைசசன் - தைஜஸன் = கனாவுயிர்.
தைத்தியன் - தைத்யன் = அவுணன்.
தைரியம், தயிரியம் - தைர்யம் = நெஞ்சுறுதி.
தைலம் - தைலம் = எண்ணெய். 1470

## தொ

தொந்தி - துந்திந் = பெருவயிறன்.
தொனி - த்வநி = ஒலி.

## தோ

தோகம் - தோகம் = மகன், மகள்.
தோஹ : = நிறைவு.
ஸ்தேகம் = சிறுமை, மென்மை, புனற்றுளி.
தோடம் - தோஷம் = குற்றம்.
தோடி - த்ரோடி: = பறவை புழல் (மீன்) இவற்றின் மூக்கு, பெருங்குமிழ், பூச்சுணை - இது 'பூசுணி' எனவும் வழங்கப்படுகிறது.
தோணி - த்ரோணி = மரக்கலம்.
தோத்திரம் - ஸ்தோத்ரம் = வழுத்தல்.
தோமம் - ஸ்தோம : = கூட்டம்.
தோமரம் - தோமரம் = எறிபடை.
தோம் - தோஷம்= குற்றம். 1480
தோயம் - தோயம்= புனல் (நீர்).
தோரணம் - தோரணம் = ஊர்தி.
தோள் - தோஸ் = மொய்ம்பு (புஜம்).

## ந

நகம் - நகம் = மலை.
நகம் = உகிர் (விரனகம்).

நகரி - நகரீ | = ஊர்.
நகர் - நகரம் |
நக்கன் / நக்கினன் - நக்நன் = உரிந்துவிட்டவன் (நிர்வாணி).
நடனம் - நடநம் = கூத்து.
நடன் - நட : = கூத்தன்.
நட்டம் - நஷ்டம் = அழிவு.
நதம் - நதம் = மேற்கு நோக்கிச் செல்லும் யாறு. 1490
நதி - நதீ = யாறு.
நத்தம் - நக்தம் = கங்குல் (இரா).
நந்தம் - நந்தம் = களிப்பு.
நந்தனன் - நந்தநன் = மகன்.
நந்தி - நந்தி :=களிப்பு, நல்லான், வாயில் காப்போன்.
நபம் - நபஸ் = வான், முகில்.
நபுஞ்சகன் - நபும்ஸகன் = அலி.
நமற்காரம் - நமஸ்காரம் = வணக்கம்.
நயம் - நயம் = அறநெறி (நீதி).
நயனம் - நயநம் = விழி. 1500
நரகம் - நரகம் = ஊழல்.
நரன் - நரன் = மண்ணவன், நல்லான் (சிவன்), அர்ஜுநன்.
நவம் - நவ : = ஒன்பது, புதிது.
நவீனம் - நவீநம் | = புதிது.
நவ்வியம் - நவ்யம் |
நளினம் - நளிநம் = முளரி (தாமரை).

# நா

நாகம் - நாகம் = வேழம், பாம்பு. / நாகம் = வான், வானுலகு, நன்மை, புனல்.
நாகவல்லி - நாகவல்லீ = வெற்றிலை.
நாகு - நாகு = புற்று, மலை.
நரசம் - நாச: = மறைவு, கேடு, சாவு.
நாசி / நாசிகை - நாஸிகா = மூக்கு. 1510
நாடி - நாடி = நரம்பு.
நாட்டியம் - நாட்யம் = (பாட்டுக் கொட்டுக்களோடு கூடிய) கூத்து.

நாதம் - நாதம் = ஒலி.
நாதன் - நாதன் = தலைவன்.
நாத்தி - நாஸ்தி = இலதெனல்.
நாந்தி - நாந்தீ = முதல், புகழ்ச்சி.
நாபி - நாபி = உந்தி.
நாம - நாம = முனிவு, இகழ்வு, வியப்பு.
நாமதேயம் - நாமதேயம் | = பெயர்.
நாமம் - நாமம் |
நாயகன் - நாயகன் = தலைவன். 1520
நாயம் - நாயம் = நலனுளது (நயமானது) - இது 'நயோ நாயே' என்னும் **அமரநிகண்டு** (ஸங்கீர்ண வர்க்க) வாக்யமாகும். இதுவே தமிழ் வழக்கில் 'நாயன்' எனவுயர் திணை ஆண்பாலுக்காகி "இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி" எனுந் **தொல்காப்பியக்** கூற்றுப்படி "நாயனார்" என நூல்களில் வருகின்றதென்றல் நன்முடிபாம் தமிழில் நாய்+அன் எனப் பிரித்தல் கூடாது.
நாராசம் - நாராசம் = சலாகை.
நாரி - நாரீ = பெண், வின்னாண்.
நாவாய் - நாவம் = மரக்கலம்.
நாவிதன் - நாபிதன் = கதுப்பு வினைஞன்.
நாளம் - நாளம் = முளரிக் காம்பு, துளையுடைப் பொருள்.
நாளிகேரம் - நாளிகேரம் = தென்னை.
நானம் - ஸ்நாநம் = முழுக்கு.
நானா - நாநா = பல.

# நி

நிகண்டு - நிகண்டு = தொகுதி, சொற்கூட்டம். 1530
நிகமம் - நிகமம் = மறை (வேதம்), ஊர், கடைத்தெரு.
நிகாதம் - நிகாதம் | = தெளிவாகக் கூறல்.
நிகதம் - நிகதம் |
நிகாயம் - நிகாயம் = வீடு.
நிகிலம் - நிகிலம் = எல்லாம்.
நிகேதனம் - நிகேதநம் = வீடு.
நிக்கிரகம் - நிக்ரஹம் = குற்றப்படுத்தல், ஒறுப்பு (சிக்ஷை).

நிசம் - நிஜம் = உண்மை, தனது பொருள், உறுதிவலி (மூலபலம்).

நிசாபதி - நிசாபதி :=வெண்சுடர்.

நிசி<br>நிசை - நிசா = கங்குல் (ராத்ரி), மஞ்சள், ஒழிவு.

நிசிதம் - நிசிதம் = கூர்மை. 1540

நிச்சயம் - நிச்சயம் = உண்மை.

நிச்சுவாசம் - நிச்வாஸம் = மூச்சடக்கல்.

நிடூதனம் - நிஷூதநம் = கொலை.

நிடேதம் - நிஷேதம் = விலக்கு.

நிட்களம் - நிஷ்களம் = உருவின்மை, ஒளிக்கூறின்மை (கலையின்மை).

நிட்டுரம் - நிஷ்டுரம் = கொடுமை, கொடுஞ்சொற்கூறல்.

நிட்டை - நிஷ்டா = ஒடுக்கம், முடிவு. வினைநிறைவேறல்.

நிதம்பம் - நிதம்பம் = அல்குல்.

நிதனம் - நிதநம் = சாவு.

நிதாகம் - நிதாகம் = வேர். 1550

நிதி - நிதி : முளரி முதலிய ஒன்பது வகை ஆக்கம்.

நிதித்தியாசனம் - நிதித்யாஸநம் = தெளிதல்.

நித்தியம்<br>நித்தம் - நித்யம் = அழியாமை, வெள்ளிமலை, வான்.

நித்தியானம் - நித்யாநம் = பார்த்தல்.

நித்திரை - நித்ரா = உறக்கம்.

நிந்தை - நிந்தா = பழிச்சொல். குற்றம்.

நிபடம் - நிபடம் = படித்தல்.

நிபம் - நிபம் = குழிசி.<br>நிபம் = ஒப்பு.

நிபாதனம் - நிபாதநம் = குப்புற வீழ்த்தல்.

நிபிடம் - நிபிடம் = நெருக்கம். 1560

நிபுணன் - நிபுணன் = மிகுவல்லோன்.

நிமிடம் - நிமிஷம் = அறுபது நொடி.

நிமித்தம் - நிமித்தம் = பொருட்டு.

நிம்பம் - நிம்பம் = வேம்பு.

நியமம் - நியமம் = முறைமை, ஏற்பாடு.

நியாசம் - ந்யாஸம் = விடுதல், ஒப்புவித்தல், ஒளித்து வைத்தல், புதைத்தல்.

| | | |
|---|---|---|
| நியாயம் / ஞாயம் | - | ந்யாயம் = நெறி, நடுவு நிலைமை. |
| நிரசனம் | - | நிரஸநம் = எதிரிடை, அழிப்பு. |
| நிரத்தன் | - | நிரஸ்தன் = விலக்கப்பட்டவன். |
| நிரயம் | - | நிரயம் = ஊழல். 1570 |
| நிரியாதனம் | - | நிர்யாதநம் = கடன் தீர்த்தல். |
| நிரீட்சணம் | - | நீரீக்ஷணம் = பார்வை, பார்வையின்மை. |
| நிருணயம் / நிண்ணயம் | - | நிர்ணயம் = உண்மை, உறுதி. |
| நிருதன் | - | நைருதன் = அவுணன். |
| நிருத்தம் | - | ந்ருத்தம் / நர்த்தநம் = கூத்து. |
| நிருபன் | - | ந்ருபன் = ஊராள்வோன். |
| நிருமலம் / நின்மலம் | - | நிர்மலம் = தூய்மை. |
| நிருமாணம் | - | நிர்மாணம் = உண்டாக்கல். |
| நிருமாலியம் / நின்மாலியம் | - | நிர்மால்யம் = கடவுட்கிட்ட பொருள். |
| நிருவாணம் | - | நிர்வாணம் = உரிந்து விடல், வீடு பேறு, 1580 |
| நிருவாதம் | - | நிர்வாதம் = அடங்கிய காற்று. |
| நிரூபணம் | - | நிரூபணம் = ஆராய்வு, பார்வை, உண்மை. |
| நிரோதனம் | - | நிரோதநம் = தடை, வெறுப்பு. |
| நிர் | - | நிர் = உறுதிப் பொருள் நீக்கப் பொருள் பயக்குமோரடை மொழி. |
| நிலயம் | - | நிலயம் = வீடு. |
| நிவிருத்தி | - | நிவ்ருத்தி = துறவு. |
| நிவேசம் | - | நிவேசம் = வீடு. |

# நீ

| | | |
|---|---|---|
| நீசம் | - | நீசம் = குறுமை. |
| நீதம் | - | நீதம் = அழைப்பு, ஒறுப்பு (சிக்ஷை). |
| நீதி | - | நீதி = நடுவு நிலைமை. 1590 |
| நீபம் | - | நீபம் = இந்துளம் (கடம்பு). |
| நீர் | - | நீரம் = புனல். |
| நீலகண்டம் | - | நீலகண்டம் = மஞ்ஞை (மயில்). |
| நீலம் | - | நீலம் = கரிது. கருங்குவளை. |

நீலி - நீலீ
நீலினி - நீலிநீ
நீலை - நீலா
= அவுரி, கருமரு தோன்றி, நுதல் (புருவம்), கறுப்பு, வண்டு.

# நு

நுதி - நுதி : புகழ் (ஸ்துதி).

# நூ

நூதனம் - நூதனம் = புதுமை.
நூபுரம் - நூபுரம் = சிலம்பு.
நூனம் - ந்யூநம் = குறைவு.

# நே

நேத்திரம் - நேத்ரம் = கண். 1600
நேமம் - நேம := பொழுது, சுவர், அரை.
நேமி - நேமி = வட்டம்.

# நை

நைவேத்தியம் - நைவேத்யம் - கடவுளர்க்கிடும் உணவு.

# ப

பகம் - பகம் = பெண்குறி, வான்.
பகவான்
பகவன்
- பகவான் = அறுதன்மையன், அறிவு, ஆக்கம், சிறப்பு, வன்மை, நசையின்மை, புகழ் என்பனவே அறுதன்மை.
பகி - பஹி := வெளிப்புறன்.
பகினி - பகிநீ = உடன் பிறந்தவள்.
பகுளம் - பஹுளம் = மிகுதி.
பக்கணம் - பக்கணம் = வேடரூர்.
பக்கம் - பக்ஷம் = சிறகு, பதினைந்து நாட்பொழுது, மருங்கு. 1610
பக்கி - பக்ஷி = பறவை.
பக்குவம் - பக்வம் = அமைதி.
பங்கம் - பங்கம் = சேறு, மறம்.
பங்கம் = விருப்பம், ஒளி, அலை, தோல்வி.
பங்கயம் - பங்கஜம் = முளரி.
பங்கு - பங்கு = முடவன்.

| | |
|---|---|
| பங்கேருகம் | - பங்கேருஹம் = முளரி. |
| பசனம் | - பசநம் = அவித்தல். |
| பசு | - பசு = உயிர், ஆன். |
| பசுபதி | - பசுமதி : = கடவுள், உயிருள்ளிருப்போன். |
| பச்சிமம் | - பச்சிமம் = மேற்கு. 1620 |
| பச்சாத்தாபம் | - பச்சாத்தாபம் = இரக்கம். |
| பஞ்சகம் | - பஞ்சகம் = ஐந்தின் கூட்டம். |
| பஞ்சதை | - பஞ்சதா = சாவு. |
| பஞ்சபாத்ரம் | - பஞ்சபாத்ரம் = வாயகன்றகலம். |
| பஞ்சம் | - பஞ்சந் = ஐந்து. |
| பஞ்சானனம் | - பஞ்சாநநம் = அகன்ற முகம், வட்புலி (சிங்கம்). |
| படகம் | - படஹம் = ஒலிக் கருவி (ஆனகம்). |
| படம் | - படம் = நல்லதுணி, ஸ்படா = பாம்புப்பை. |
| படலம் | - படலம் = நூற்கூறுபாடு, விழிநோய். |
| படன் | - பட : = ஏவல் செய்வோன் = ஏவப்படுநன். 1630 |
| படிகம் | - ஸ்படிகம் = பளிங்கு. |
| பட்டணம் | - பட்டணம் = ஊர். |
| பட்டம் | - பட்டம் = நெற்றியணி, (சிறப்பு முழுக்கில்) நெற்றியிற் கட்டுதகடு, சிறப்புப் பெயர் காட்டொருசொல், தவிசு (ஆஸநம்). |
| பட்டாரகன் | - பட்டாரகன் = அடிகள் (குரு), ஊராள்வோன். |
| பணம் | - பணம் = காசு, கூலி. |
| பணவம் | - பணவம் = பறை (படகம்). |
| பணா | - பணா = பாம்புப்பை. |
| பணி | - பணி : = பாம்பு. |
| பண்டி | - பண்டி = தோற்பை. |
| பண்டிதன் | - பண்டிதன் = அறிஞன். 1640 |
| பதம் | - பதம் = கால், சொல், பாட்டு, இருப்பிடம், ஒளி, அம்பு, அடையாளம். பத : = வழி. |
| பதரி, வதரி | - பதரீ = இலந்தை. |
| பதவி | - பதவீ = வழி. |
| பதி | - பதி = தலைவன். |
| பதுமம் | - பத்மம் = முளரி. |
| பதுமராகம், பன்மராகம் | - பத்மராகம் = செம்மனவு (மாணிக்கம்). |
| பதுமனிவல்லபன் | - பத்மநீவல்லபன் = செஞ்சுடரோன். |

பத்ததி - பத்ததி = வழி.
பத்தா - பர்த்தா
பத்துரு - பர்த்ரூ = கொழுநன்.
பத்தி - பக்தி = பெருமை.
பக்தி = அன்பு, வழிபாடு. கூறுபாடு
பத்தி = காலாள், நடந்து போதல். 1650
பத்தியம் - பத்யம் = செய்யுள், வழி.
பத்திரம் - பத்ரம் = இலை.
பத்தினி
பன்னி - பத்நீ = மனைவி.
பந்தம் - பந்தம் = கட்டு.
பந்தனம் - பந்தநம் = கட்டுதல்.
பந்தா - பந்தா = வழி.
பந்தி - பங்தி = வரிசை.
பம்பரம் - பம்பரம் = வண்டு.
பயசு
பயம் - பயஸ் = பால், புனல்.
பயம் - பயம் = அச்சம். 1660
பயோதரம் - பயோதரம் = பறம்பு.
பரசு - பரசு = கோடாலி.
பரதந்திரம் - பரதந்த்ரம் = உரிமையின்மை.
பரபிருதம் - பரப்ருதம் = குயில்.
பரம் - பரம் = நீளிடை (தூரம்), அயல், மேலானது, உயிரற்றது, மிக்கது, உண்மை, கடவுள்.
பரற்பரவிரோதம் - பரஸ்பரவிரோதம் = ஒன்றற்கொன்று பகை.
பராகம் - பராக : = பொடி, மலர்ப்பொடி.
பராக்கிரமன் - பராக்ரமன் = வல்லான்.
பராதீனம் - பராதீநம் = உரிமையின்மை.
பராபரன் - பராபரன் = கடவுள், எங்குமிருப்போன். 1670
பராமுகம் - பராங்முகம் = திரும்பியமுகம்.
பரிகாசம் - பரீஹாசம் = விளையாட்டுரை (நகைமொழி).
பரிகாரம் - பரிஹாரம் = கழிப்பு.
பரிக்கிரகம் - பரிக்ரஹம் = மனைவி, படை (பரிவாரம்).
பரிக்கை
பரிட்சை
பரீக்கை - பரீக்ஷா = ஆராய்வு.
பரிசம் - ஸ்பர்சம் = ஊறு, தொடுதல்.
பரிசயம் - பரிசயம் = நீடிய பழக்கம்.

| | | |
|---|---|---|
| பரிசாரகன் | - | பரிசாரகன் = ஏவல் செய்வோன். |
| பரிச்சேதம் | - | பரிச்சேதம் = முடிவு, நீக்கம். |
| பரிணயம் | - | பரிணயம் = மணவினை. 1680 |
| பரிணாமம் | - | பரிணாமம் = ஒன்று திரிந்தொன்றாதல். (பொன்பணியாதல் போல்வது). |
| பரிணாமோபா தான காரணம் | - | பரிணாமோ பாதாந காரணம் = பால் தயிராதல் போல்வது. |
| பரிதாபம் | - | பரிதாபம் = துயரம், இரக்கம். |
| பரிதி | - | பரிதி = செஞ்சுடர். |
| பரித்தியாகம் | - | பரித்யாகம் = முற்றும் விடுகை. |
| பரிபவம் | - | பரிபவம் = இழிவு. |
| பரிபாகம் | - | பரிபாகம் = அமைதி, முதிர்ச்சி. |
| பரிமளம் | - | பரிமளம் = மிகுமணம், மகிழ்ச்சி. |
| பரிமாணம் | - | பரிமாணம் = அளவு, வேறுபாடு. |
| பரியந்தம் | - | பர்யந்தம் = எல்லை, முடிவு. 1690 |
| பரியாயம் | - | பர்யாயம் = ஒழுங்கு, வரிசை. |
| பரிவருத்தம்<br>பரிவருத்தனம்<br>பரீவத்தம் | - | பரீவர்த்தம் = ஒன்று கொடுத்தொன்று பெறல் = பண்டமாற்று. |
| பரிவாதம் | - | பரிவாதம் = இகழல். |
| பரிவாரம் | - | பரிவாரம் = சூழ்வோர், படை. |
| பரு | - | பருஸ் = மூங்கில்முளி = கணு. முளிபோன்ற கட்டி. |
| பருடம் | - | பருஷம்= வெஞ்சொல். |
| பருப்பதம்<br>பருவதம் | - | பர்வதம் = மலை. |
| பருவம் | - | பர்வம் = தகுதி. |
| பர்க்கம் | - | பர்க்கஸ் = ஒளி, வன்மை. |
| பர்க்கன் | - | பர்க்கன் = நல்லான் (சிவன்). 1700 |
| பலகை | - | பலம்<br>பலகம் = வட்டம் (கேடகம்). |
| பலம் | - | பலம் = ஒரு நிறையளவு.<br>பலம் = பேறு = பயன், எலும்பு.<br>பலம் = வன்மை, படை (ஸேனை). |
| பலலம் | - | பலலம் = ஊன். |
| பலாசி | - | பலாசிந் = மரம். |
| பலி | - | பலி = தென்றிசைத் தேவன் கைத்தடி, சிறுவேள்வி.<br>பொன்மைப் பிழம்பு (கெந்தகம்). |

பலிட்டன் - பலிஷ்ட்டன் = வன்மையோன்.
பல்லம் - பல்லம் = அம்பு.
பல்லவம் - பல்லவம்= இலை.
பல்லி - பல்லீ = இடையரூர்.
பல்லுகம் - பல்லுகம். | = கரடி.
பல்லூகம் - பாலூகம் | 1710
பவம் - பவம் - திறப்பு, முதற்று (ஸாரம்)
பவளம் - ப்ரவாளம் = துப்பு.
பவனம் - பவநம் = வீடு.
பவந : = காற்று.
பவன் - பவன் = நல்லான் (சிவன்), தோன்றினவன்.
பவானி - பவாநீ = மலைமகள்.
பவிடியம் - பவிஷ்யத் = வருபொழுது.
பவித்திரம் - பவித்ரம் = தூய்மை.
பவை - பவா = மலைகள், செல்வம்.
பழம் - பவா = மலைகள், செல்வம்.
பழம் - பலம் = கனி, பயன்.
பற்பம் - பஸ்மம் | = நீறு. 1720
பஸ்மா. |
பனசம் - பநஸம் = பலா.
பன்னகம் - பந்நகம் = பாம்பு.
பன்னசாலை - பர்ணசாலா = தண்ணடையாற் செய்வீடு.
உறுவருறைவிடம்.
பன்னம் - பர்ணம் = இலை.

## பா

பாகம் - பாகம் = கூறுபாடு.
பாகியம் - பாஹ்யம் = புறனானது, மறைநெறி நீக்கம்.
பாகு
வாகு - பாஹு = மொய்ம்பு (புஜம்).
பாக்கியம் - பாக்யம் = ஆக்கம்.
பாசம் - பாசம் = கயிறு, கட்டுதலைச் செய்வது
(ஜீவபந்தம்).
பாடண்டி - பாஷண்டி = மறைநெறியிகந்தோன்
(வேதபாஹ்யன்). 1730
பாடம் - பாடம் = படித்தல்.
பாடலி - பாடலீ = பருத்தி, பாதிரி.
பாடாணம் - பாஷாணம் = கல்.

பாடிதம் - பாஷிதம் = கூறல் (வசநம்).
பாடை - பாஷா = மொழி, மொழிநிகழ்ச்சி, நாமகள்.
பாட்பம் - பாஷ்பம் = கட்புனல் (கண்ணீர்).
பாணம் - பாணம் = அம்பு.
பாணி - பாணி = கை.
பாணிபீடம் - பாணிபீடம் = மணவினை. 1680
பாண்டம் - பாண்டம் = பல்பொருளிடுகலம், முதலாக வைக்கும் பொருள் (மூலதநம்).
பாண்டரம் - பாண்டரம் = வெள்ளை.
பாண்டு - பாண்டு = வெண்மை, பசுமையுறு வெண்மை.
பாதகம் - பாதகம் = தீமை.
பாதபம் - பாதபம் = மரம்.
பாதம் - பாதம் = கால், தொடக்கம்.
பாதம் = வீழ்ச்சி.
பாதாளம் - பாதாளம் = கீழ்ஞாலம், பாம்பு ஞாலம்.
பாதுகை - பாதுகா = காலிலிடு குறடு.
பாத்தியம் - பாத்யம் = கால்கழூவு புனலுதவல்.
பாத்திரம் - பாத்ரம் = கொள்கலம், தகுதி.
பாமரன் - பாமரன் = அறிவிலான், கீழ்மகன். 1750
பாயசம் - பாயசம் = பாற்சோறு.
பாயு - பாயு: = பவ்வீகழிதொளை.
பாரதம் - பாரதம் = பனிமலைக்குத் தெற்கேயுள்ள திணை, பாரதமெனும் பனுவல்.
பாரமார்த்திகம் - பாரமார்த்திகம் = மேலானது.
பாரம் - பாரம் = சுமை.
பாரம் = கரை, அந்தக் கரை, கொள்கலம்.
பாராயணம் - பாராயணம் / பராயணம் = முறையின் மொழிதல்.
பாராவாரம் - பாராவாரம் = கடல்.
பாரிசம் - பார்ச்வம் = மருங்கு.
பாரிடம் - பாரிஷதா = குறள் (பூதம்).
பாரியை
பாரி - பார்யா = மனைவி. 1760
பார்த்திவன் - பார்த்திவன் = ஏந்தல் (வேந்தன்).
பார்வதிநந்தனன் - பார்வதீநந்தனன் = மலைமகள் மகன் (குமாரன்).
பாலம் - பாலம் = அளிகம் = நெற்றி, நெற்றியோடுங் கூடிய முகம்.

பாலன் - பாலன் = சிறுவன் (சிறுமை குறிக்குங் 'க' பிரத்தியயஞ் சேர்க்கப்படின், பாலகன் எனவாம்).
பாலிசன் - பாலிசன் = அறியாதவன்.
பாவகன் - பாவகன் = நெருப்பு.
பாவம் - பாபம் = மறம்.
பாவம் = உள்ளது.
பாளி - பாளி : = அடையாளம்.
பாற்கரன் - பாஸ்கரன் = செஞ்சுடர்.
பானம் - பாநம் = குடித்தல், காத்தல். 1970
பானீயம் - பாநீயம் = புனல்.
பானு - பாநு = ஞாயிறு.

# பி

பிகம் - பிகம் = குயில்.
பிங்கலம் - பிங்கலம் = பொன்மை.
பிங்கலை - பிங்கலா= வலமூக்கு மூச்சு, வலப்புற நரம்பு.
பிசிதம் - பிசிதம் = ஊன்.
பிசுனன் - பிசுநன் = கோளுரைப்போன், கேடு சூழ்பவன்.
பிச்சை - பிக்ஷா = ஐயம், கூலி.
பிடாலம் - பிடாலம் = பூனை.
பிட்டு - பிஷ்டம் = மா. 1780
பிண்டம் - பிண்டம் = உடம்பு, உண்மை, சினைக்குழவி, தென்புலத்தாரை நோக்கிச் செய் திரட்சி.
பிண்டி பாலம் - பிந்திபாலம் = திருகு தடி.
பிண்ணாக்கு - பிண்யாகம் = அரைப்பு.
பிதா - பிதா. / பித்ரு = ஈன்றோன்.
பிதாமகன் - பிதாமஹன் = பாட்டன்.
பிதிரர் / பிதிர் - பித்ரு = தென்புலத்தார்.
பித்தம் - பித்தம் = மயக்கம், சூடு (முப்பிணியுளொன்று), பிணிகாட்டு நரம்பு.
பித்தம் = தறி (துண்டு).
பித்தி - பித்தி = சுவர்.
பிபீலிகை - பிபீலிகா = எறும்பு.
பிப்பலம் - பிப்பலம் = போதி (அரசமரம்). 1790
பிமரம் - ப்ரமரம் = வண்டு.

| | | |
|---|---|---|
| பிரகாசம் | - | ப்ரகாசம் = விளக்கம். |
| பிரகாரம் | - | ப்ரகாரம் = வழி, தெரு. |
| பிரகிருதி<br>பகுதி | - | ப்ரக்ருதி = இயல்பு, வினைமுதற் பொருள் (பிரதானம்). |
| பிரக்கிரமம் | - | ப்ரக்ரமம் = தொடக்கம். |
| பிரசவம் | - | ப்ரஸவம் = மலர்தல், மகப்பேறு. |
| பிரசன்னம் | - | ப்ரஸந்நம் = தெளிவு. |
| பிரஸித்தி | - | ப்ரஸித்தி = பரவிய புகழ். |
| பிரசுரம் | - | ப்ரசுரம் = மிகுதி. |
| பிரசூனம் | - | ப்ரஸூநம் = மலர். 1800 |
| பிரச்சினம் | - | ப்ரச்ந :=வினா. |
| பிரஞ்ஞானம் | - | ப்ரஜ்ஞாநம் = அறிவு, அடையாளம். |
| பிரட்டம் | - | ப்ரஷ்டம் = நழுவல், விழுதல். |
| பிரணவசுவாமி | - | ப்ரணவஸ்வாமி = மறைமுதற் பொருளுரைத்தோன் = சேந்தன். |
| பிரணவம் | - | ப்ரணவம் = எஞ்ஞான்றும் புதுமைத்து, ஓம். |
| பிரதக்கிணம் | - | பிரதக்ஷிணம் = வலம் வரல். |
| பிரதமம் | - | ப்ரதமம் = தொடக்கம். |
| பிரதாபம் | - | ப்ரதாபம் = மாண்பு, வீறுபாடு. |
| பிரதானம் | - | ப்ரதாநம் = மேன்மை, முதன்மை, கடவுள். |
| ப்ரதி | - | ப்ரதி=ஒப்பு (ஒன்றனைப் போல்வது), அளவை. 1810 |
| பிரதிட்டை | - | ப்ரதிஷ்டா = நிறுவுதல், நிறைவேற்றல். |
| பிரதிதினம் | - | ப்ரதிதிநம் = நாடோறும். |
| பிரதிபாதிதம் | - | ப்ரதிபாதிதம் = விளக்குதல், முடிவு மொழிதல். |
| பிரதிமை<br>பதுமை<br>பொம்மை | - | ப்ரதிமா = செய்செண்ணம். |
| பிரதோடம் | - | ப்ரதோஷம் = பெருங்குற்றம், கங்குல் நாற்பகுதியுள் முதற்பகுதி. |
| பிரத்தானம் | - | ப்ரஸ்தாநம் = வழிச் செல்கை. |
| பிரத்தியகான்மா | - | ப்ரத்யகாத்மா = (கூடஸ்தன்) தலைவனெனப்படுமுயிர், இதுவே காரணதேஹ ஜீவாத்மாவெனப்படுவது. |
| பிரத்தியக்கம் | - | ப்ரத்யக்ஷம் = கண்கூடு, நனா. |
| பிரத்தியயம் | - | ப்ரத்யயம் = அறிவு, நம்புதல், அடி (ஹேது). |
| பிரத்தியாகாரம் | - | ப்ரத்யாஹாரம் = கருவிகளையிழுத்தல். 1820 |
| பிரபஞ்சம்<br>பவஞ்சம் | - | ப்ரபஞ்சம் = விரிவானது (விஸ்தாரம்). |

பிரபந்தம் - ப்ரபந்தம் = பாத்தொடை, வரலாறு.
பிரபாகரன் - ப்ரபாகரன் = செஞ்ஞாயிறு.
பிரபாவம் - ப்ரபாவம் = புகழ், பெருமை, ஒளி.
பிரபு - ப்ரபு : = ஆள்வோன்.
பிரபை - ப்ரபா = ஒளி.
பிரமசாரி - ப்ரஹ்மசாரி = மணமிலான்.
பிரமதகணம் - ப்ரமதகணம் = குறட்குழு (சிவகணம்).
பிரமதாவனம் - ப்ரமதாவநம் = தலைவி மனைத் தோட்டம்.
பிரமம் - ப்ரஹ்மம் = பெரிது.
ப்ரமம் = மயக்கம். 1830
பிரமாணம் - ப்ரமாணம் = முதனூல், அறிவுக்குக்கருவி, அளவை.
பிரமாதம் - ப்ரமாதம் = அசட்டை.
பிரமாதா - ப்ரமாதா = அறிகிறவன்.
பிரமிதி - ப்ரமிதி = உண்மையுணர்தல், அறிவு.
பிரமேயம் - ப்ரமேயம் = அறியப்படுபொருள்.
பிரமோதம் - ப்ரமோதம் = களிப்பு.
பிரயாணம் - ப்ரயாணம் = வழிச்செல்கை.
பிரயோகம் - ப்ரயோகம்= செலுத்துதல்.
பிரயோசனம் - ப்ரயோஜனம் = வாய்ப்பு.
பிரலாபம் - ப்ரலாபம்= பொருளில் சொல். 1840
பிரவாகம் - ப்ரவாஹம்
பிரவிருத்தி - ப்ரவ்ருத்தி
= இடைவிடாதோடு புனல்.
பிரவிடை - ப்ரௌடா = பெரிய பெண்.
பிரவேசம் - ப்ரவேசம் = புகுதல்.
பிரளயம் - ப்ரளயம் = சாவு, முடிவு, ஒடுக்கம்.
பிராகாரம் - ப்ராகாரம் = சூழ்சுவர்.
பிராக்கு - ப்ராக் = கிழக்கு, முற்பொழுது.
பிராசம் - பிராஸம் = ஈட்டி, ஒருவகைச் செய்யுணடை.
பிராசாதம் - ப்ராஸாதம் = புத்தேள் இல் = கோயில்.
பிராஞ்ஞன் - ப்ராஜ்ஞன், அறிஞன் = ஆழ்தூக்கவுயிர்.
பிராணன் - ப்ராண : = உயிர், உயிர்க்காற்று, மறைவு. 1850
பிராதக்காலம் - ப்ராதக் காலம்= விடிபொழுது.
பிராதிரு
பிராத்திரு - ப்ராத்ரு = உடன் பிறந்தவன்.
பிராத்தம் - ப்ராப்தம் = அடையப்படுவது.
பிராந்தி - ப்ராந்தி: = மயக்கம்.
பிராமணன் - ப்ராஹ்மணன் = கடவுளறிவினன், ‘முதன்மரபினன்’ என்ப.

| | | |
|---|---|---|
| பிராயச்சித்தம் | - | ப்ராயச்சித்தம் = கழிப்பு, தணிவு. |
| பிராயம் | - | ப்ராயம் = ஆண்டு (வயஸ்). |
| பிராரத்தம் | - | ப்ராரப்தம் - நிகழூழ். |
| பிரார்த்தனை | - | ப்ரார்த்தநா = வேண்டுகோள். |
| பிரியகம் | - | ப்ரியகம் = இந்துளம் (கடம்பு), வேங்கைமரம். |
| பிரியம் | - | ப்ரியம் = அன்பு. (1860) |
| பிரீதி | - | ப்ரீதி = அன்பு, மகிழ்ச்சி. |
| பிருட்டம் | - | ப்ருஷ்டம் = முதுகு, பின்புறம். |
| பிருதிவி | - | ப்ருதிவீ / ப்ருத்வீ = வையகம். |
| பிருந்தம் | - | ப்ருந்தம் = கூட்டம். |
| பிரேதம் | - | ப்ரேதம் = பிணம், பேய், ஊழலுயிர்கள். (ஊழல் = நரகம்). |
| பிரோத்தம் / புரோத்தம் | - | ப்ரோக்தம் = மேன்மொழி. |
| பிரௌடம் | - | ப்ரௌடம் = வளர்ச்சி, தகுதி. |
| பிலம் | - | பிலம் = முழை (குகை). |
| பிலவங்கம் | - | ப்லவங்கம் = குரங்கு. 1870 |
| பினாகம் | - | பிநாகம் = நல்லான்வில், மூவிலைவேல் (சூலம்). |
| பின்னம் | - | பிந்நம் = வேறுபடுதல். |

## பீ

| | | |
|---|---|---|
| பீசம் / வீசம் | - | பீஜம் = விதை, பீள், அடி (காரணம்). |
| பீடம் | - | பீடம் = அமர் பொருள் (ஆஸநம்). |
| பீடை | - | பீடா = நோய். |
| பீதம் | - | பீதம் = பசுமை, பொன்மை, பொன், குடித்தல், பீதம் = பால், வெண்ணெய், புனல். பீதம் = அச்சம், நடுக்கம். |
| பீதி | - | பீதி : = அச்சம், நடுக்கம். |
| பீரு | - | பீரு = கவலை கொண்டோன். |
| பீலு | - | பீலு = மலர், வேழம் (யானை). |
| பீனசம் | - | பீநஸ : = மூக்குச்சளிநோய். 1880 |

# பு

புங்கவன் - புங்கவன் = மேன்மையோன்.

புச்சம் - புச்சம் = பிற்புறம், பிற்புறத்தோகை (வால்).

புடம் - ஸ்புடம் = தெளிவு (ஸ்பஷ்டம்).

புடல் - படோலிகா = பாம்புக்காய்.

புடை - புடம் = இடம்.

புட்கரம் - புஷ்கரம் = வான், முளரி (தாமரை), புனல், கத்தி.

புட்பம் - புஷ்பம் = மலர்.

புட்டி - புஷ்டி = செழுமை.

புண்டரம் - புண்ட்ரம் = நெற்றிக்குறி.

புண்டரிகம் - புண்டரீகம் = வெண்முளரி. 1890

புண்ணியம் - புண்யம் = அறம்.

புண்ணியாக வாசனம் - புண்யாஹவாஸநம் = தீட்டுநீக்கம்.

புதன் - புதன் = புலவன், வானவன், மால் (புதக்ரஹம்).

புத்தகம் - புஸ்தகம் = ஏடு, எழுத்துத்துணி.

புத்தன் - புத்தன் = அறிஞன், புத்தமத மாக்கியோன்.

புத்தி - புத்தி : = உள்ளம்.

புத்திமான் - புத்திமாந் = அறிவாளி.

புத்திரன் - புத்ரன் = மகன் (புத்தென்னு நரகை நீக்குநன்).

புத்திரி - புத்ரீ = மகள்.

புபுக்கிதன் - புபுக்ஷிதன் = உணவு விருப்பினன்
(போஜநப்ரியன்). 1900

புயங்கம் - புஜங்கம் = பாம்பு.

புயம் - புஜம் = மொய்ம்பு.

புரணம் - ஸ்புரணம் = அதிர்தல்.

புரம் - புரம் = ஊர்.

புராணம் - புராணம் = புராணமெனப் படுநூல், பழமை.

புராதனம் - புராதநம் = பழமை.

புரி - புரீ = ஊர்.

புரியட்டகம் - புரீ அஷ்டகம் = உள்ளுடம்பு. ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனும் புலனைந்தும், அகம் (மனம்), உள்ளம் (புத்தி), யான் (அஹங்காரம்) எனு மூன்றுமாகிய எட்டானும் படைப்பு ஞான்றாக்கப்பட்டதாம்.

| | | | |
|---|---|---|---|
| புருடன் | - | புருஷன் = உயிர், உயிர்க்குயிர், தலைவன். | |
| புருவம்<br>பூரு<br>பீரு | - | ப்ரு = நுதல். | 1910 |
| புரூணம் | - | ப்ரூண: = சினைப்பைக்குழவி, குழந்தை. | |
| புரோகிதன் | - | புரோஹிதன் = (வேத) வினை கற்பிப்போன். | |
| புரோக்கணம்<br>புரோட்சணம் | - | ப்ரோக்ஷணம் = தெளித்தல். | |
| புலம் | - | புலம் = அகலம், உண்ணாக்கு. | |
| புலாகம் | - | புலாகம் = சோற்றிலோரவிழ். | |
| புவனம் | - | புவநம் = அகலிடம் (லோகம்). | |
| புளிந்தன் | - | புளிந்தன் = பேசத் தெரியாதவன், வேடன். | |
| புளினம் | - | புளிநம் = மணற்குன்று, மணற்குவை. | |
| புன்னை | - | புந்நாகம் = இலைவளம். | |

## பூ

| | | | |
|---|---|---|---|
| பூ | - | பூ:<br>பூர் = திணை (பூமி). | 1920 |
| பூகம் | - | பூகம் = பாக்கு மரம். | |
| பூசனம் | - | பூஜநம் = வழிபாடு, வணக்கம். | |
| பூசை | - | பூஜா = வழிபாடு. | |
| பூச்சியன் | - | பூஜ்யன் = வழிபாடு செயப்படுவோன். | |
| பூடணம் | - | பூஷணம் = அழகு. | |
| பூடிதன்<br>பூசிதன் | - | பூஷிதன் = அழகு செய்துகொண்டவன். | |
| பூதம் | - | பூதம் = உண்மை, இறந்தபொழுது, குறள், பேய், உயிர், வன்மை, மண் முதலியபெரும் பொருள்களின் பெயர்.<br>பூதம் = தூய்மை, அகலம். | |
| பூதரம் | - | பூதரம் = மலை. | |
| பூதி | - | பூதி : = நறுநீறு, செல்வம். | |
| பூபதி | - | பூபதீ = பூருண்டி (மல்லிகை). | 1930 |
| பூபம் | - | பூப : = அடை முதலிய சிற்றுண்டி. | |
| பூபன் | - | பூபன் = ஊராள்வோன். | |
| பூமா | - | பூமா<br>பூமிந் = மிக்கது. | |
| பூமி | - | பூமி : = ஞாலம். | |
| பூரகம் | - | பூரகம் = உட்புகவிழுத்தல், மூச்சுள்ளே வாங்கல். | |

பூரணம் - பூர்ணம் = நிறைவு.
பூரி - பூரி = பெரிது, பொன்.
பூருவசன் - பூர்வஜ : = அண்ணன்.
பூருவம் - பூர்வம் = கிழக்கு, தொடக்கம்.
பூர்ச்சம் - பூர்ஜம் = ஒருவகை மரம் (மரவுரி மரமென்ப). 1940
பூர்த்தி - பூர்த்தி = நிறைவு.

## பெ

பெட்டகம், பெட்டி - பேடகம், பேடம், பேடீ = பேழை.
பெத்தம் - பத்தம் = கட்டு.

## பே

பேகம் - பேகம் = தவளை.
பேடி - போடா = ஆண் பெண்டன்மையினள்.
பேதகம் - பேதகம்
பேதம் - பேதம் = பிளப்பு.
பேம் - பயம் = அச்சம்.
பேரம் - பேரம் = உடம்பு, புனற்பெருக்கு.
பேரி - பேரீ = பறை.
பேனம் - பேநம் = நுரை. 1950

## பை

பைக்கம், பயிக்கம் - பைக்ஷம் = ஐயம் (பிக்ஷை).
பைரவம், பயிரவம் - பைரவம் = அச்சம்.

## போ

போகம் - போகம் = துய்த்தல், மகிழ்வு, உடம்பு.
போகி - போகி = பாம்பு, ஊராள்வோன்.
போசனம் - போஜநம்= உணவு, உண்டல்.
போசன் - போஜன் = நல்லூழன், ஓர் மன்னன்.
போதகம் - போதகம் = தன்னுளஞ் சாற்றல்.
போதம் - போதம் = களிற்றுக் கன்று, குஞ்சு, குழந்தை, மரக்கலம்.

போதம் - (புத்திர நிமித்தமாகத் தோன்றும்) எண்ணம்.
போதனை = போதநா = செவியறிவுறுத்தல். 1960
போதி - போதி : = பனை (அரசமரம்), கோழி, உணர்ச்சி.
போதை - போதா = அறிவிப்பு, அறிவு.
போத்திரி - போத்ரிந் = பன்றி.

## ம

மகம் - மகம் = வேள்வி. / மஹம் = விழா, ஒளி.
மகதி - மஹதீ = பொலிவு. (நாரதர்) யாழ்.
மகத்து - மஹத் = பெரிது, வணங்கப்படுவோன்.
மகரந்தம் - மகரந்தம் = மலர்த்தேன்.
மகரம் - மகரம் = சுறா.
மகாசேனன் - மஹாஸேநன் = பெரும்படையுடையோன் = சேந்தன்.
மகி - மஹீ = வையம். 1970
மகிடம் - மகிஷம் = எருமை.
மகிமை - மஹிமா = பெருமை, பெரிதும் பெருத்தல் (எண்சித்திகளுளொன்று).
மகிளை - மஹிளா = பெண்மகள்.
மகுடம் - மகுடம் = முடி.
மகோற்பலம் - மகோத்பலம் = முளரி (தாமரை).
மங்கம் - மங்கம் = நன்மை.
மங்களம் - மங்கலம். / மங்களம் = நலம், வாழ்த்து.
மசகம் - மசகம் = கொதுகு.
மச்சம் - மத்ஸ்யம்.
மற்சம் - மத்ஸம் = மயிலை (மீன்).
மச்சை - மஜ்ஜா = கொழுப்பு, மரக்கசிவு. 1980
மஞ்சம் - மஞ்சம் = பாண்டில் (கட்டில்).
மஞ்சரி - மஞ்ஜரீ = மலர்க்கொத்து.
மஞ்சீரம் - மஞ்ஜீரம் = சீர் (தண்டை), சிலம்பு.
மஞ்சு - மஞ்ஜு
மஞ்சுளம் - மஞ்ஜுளம் = அழகு.
மடம் - மடம் = துறவி முதலியோரிருப்பிடம்.
மட்டு - மட்டு = பறை.

*மணி* - *மணி = திரள் பொருள், திரட்சி, அரைஞாண் கோவை, மனவு (நவமணிப்பொது).*
*மணீ = மனவு (நவமணிப் பொது).*

*மணிப்பிரவாளம்* - *மணிப்பிரவாளம் = (திரட்சியுந் துப்புங்கோத்தாற்போல) வடமொழியுந் தென்மொழியும் பொருந்தப் புரிபாட்டு, - அத்திறநூல்.*

*மண்டபம்* - *மண்டபம் = மக்கள் கூடுமிடம், அரண்மனை வாயிலிடம், கொலுநிலை.*

*மண்டலம்* - *மண்டலம் = வட்டம், கால்வணர் கொள நிற்றல், (பொழில்) பூமி.* 1990

*மண்டனம்* - *மண்டநம் = அணிகலம்.*

*மண்டிதன்* - *மண்டிதன் = அழகு செய்து கொண்டவன்.*

*மண்டூகம்* - *மண்டூகம் = தவளை.*

*மதம்* - *மதம் = வழிபாட்டு நெறி, கோட்பாடு.*
*மதம் = வேழவீறு, செருக்கு (கர்வம்). மகிழ்ச்சி, கள், பீள் (ரேதஸ்).*

*மதி* - *மதி : = நினைவு.*

*மதிரை* - *மதிரா = கள்.*

*மது* - *மது = தேன், இருப்பைமரம், செயலை (அசோகமரம்).*

*மதுரம்* - *மதுரம் = இன்சுவை.*

*மதூகம்* - *மதூகம் = இருப்பை மரம்.*

*மத்தகம்* - *மஸ்தகம் = தலை.* 2000

*மத்தம்* - *மத்த : = வீறுடைக்களிறு, மகிழ்வு, மயக்கம் = உயிரில் பொருளை யுயிருள் பொருளென மருளல்.*

*மத்தளம்* - *மர்த்தளம் = கோல் கைகளாற் கொட்டு பறை.*

*மத்தன்* - *மத்தன் = களிப்பினன். மெய்ம்மறந்தவன்.*

*மத்தியமம்* - *மத்யமம் = நடு. (உத்தமத்திற்கும் அதமத்திற்கும்) இடைப்படுவது, இடை.*

*மத்தியமை* - *மத்யமா = நடுவிரல்.*

*மத்தியம்* - *மத்யம் = கள்.*
*மத்யம் = நடு, இடை, நெறி (நியாயம்).*

*மந்தம்* - *மந்தம் = அரிசிமா, கணு, கண்ணோய், கடைதல்.*
*மந்தம் = சிறுமை, குளிர்மை.*

மந்தன் - மந்தன் = அறிவிலி, கரியவன் (சனி).

மந்திரம் - மந்த்ரம் = மறை, மறைவிற்கருதல் (ரஹஸ்யாலோசனை).
மந்த்ரம் = செருக்கொலி, (ஒலி = சப்தம்).
மந்திரம் = வீடு.

மந்திரி - மந்த்ரிந் = அமைச்சன். 2010

மமதை - மமதா = செருக்கு.

மயம் - மயம் = அழகு.

மயன் - மயன் = அவுண மரவினைஞன்.

மயானம் - ச்மசாநம் = சுடுகாடு.

மயிர் - ச்மச்ரு = கதுப்பு.

மயில் - மயூரம் = ஞமலி

மரகதம் - மரகதம் = பச்சை.

மரணம் - மரணம், மரம் = சாவு.

மரியாதை - மர்யாதா = ஒழுக்கம், வரம்பு.

மரு - மரு = புனலற்றதிணை, மலை, நூறுமுனை (வஜ்ராயுதம்). 2020

மருத்து - மருத் = காற்று.

மர்க்கடம் - மர்க்கடம் = குரங்கு.

மர்த்தனம் - மர்த்தநம் = அடித்தல், துவைத்தல், பிடித்தல்.

மலயசம் - மலயஜம் = பொதியமலைப் பிறப்பு (சந்தநம்).

மலயம் - மலயம் = தென்மலை (பொதியமலை).

மலம் - மலம் = அழுக்கு, மறம் (பாபம்).

மலினம் - மலிநம் = அழுக்கு.

மல்லன், மள்ளன் - மல்ல = உடல்வன்மையன், மேம்பாட்டினன்.

மல்லி - மல்லீ.
மல்லிகை - மல்லிகா = பூருண்டி.

மற்கு - மத்கு = அறற்கொடி (நீர்க்காக்கை). 2030

மனசு, மனது, மனம் - மநஸ் = அகம்.

மனனம் - மநநம் = (கேட்டதை நினைத்தல்).

மனீடை - மநீஷா= நினைவு (மனம்).

மனு - மநு = மறை (மந்த்ரம்).

மனுடர், மனிதர், மாந்தர் - மநுஷ்யர் = மக்கள் (மநுவென்பார் மரபில் வந்தவர் மநுஷ்யர் என்ப).

| | | |
|---|---|---|
| மனோகரம் | - | மநோஹரம் = அழகு. |
| மனோக்கியம் | - | மநோஜ்ஞும் = அழகு. |
| மனோரதம் | - | மநோரதம் = வேட்கை. |
| மனோன்மனி | - | மநோந்மநீ = ஒரு பெண் புத்தேள். |
| மன்னியு | - | மந்யு : கம்பலை, வேள்வி. 2040 |

## மா

| | | |
|---|---|---|
| மா | - | மஹா = பெருமை. மா - மலர்மகள், யாய், சாவு, ஒடுக்கம், இடை, கருத்து. |
| மாகதர் | - | மாகதர் = புகழ்வோர். |
| மாகதி | - | மாகதீ = முல்லை. |
| மாகம் | - | மாகம் / மாகம் = மாசித்திங்கள் (மாசிமாதம்). |
| மாசம், மாதம் | - | மாஸம் = திங்கள். |
| மாடம் | - | மாஷம் = உழுந்து. |
| மாடி | - | மாடி : = ஊராள்வோன்மனை. |
| மாணவ்வியம், மாணவியம் | - | மாணவ்யம் = மணமிலார் குழு = கற்போர்தொழுதி. |
| மாணாக்கன் | - | மாணவகன் = கற்போன். பதினாறாண்டுக்குட்பட்டவன். |
| மாணி | - | மாணி : = (மணிஸம்பந்தமான பொருளாகலின்) காசணைவு. (காசு - நவமணிப்பொது). 2050 |
| மாணிக்கம் | - | மாணிக்கம் = செவ்வொளிக்கல். |
| மாதவி | - | மாதவி = குருக்கத்தி மரம். |
| மாதா | - | மாதா / மாத்ரு = யாய், மலைமகள், வானம், ஆன், எறும்பு. |
| மாதுளம், மாதுளை | - | மாதுலங்கம் = கழுமுள். |
| மாத்திரம் | - | மாத்ரம் = அவ்வளவே. |
| மாத்திரை | - | மாத்ரா = அளவு, சிறுமை, காதணி, பொருள். |
| மாமிசம் | - | மாம்ஸம் = இறைச்சி. |
| மாயன் | - | மாயன் = மால். |
| மாயை | - | மாயை = ஒடுக்கமுந் தோற்றமு மாயுளது, சேந்தனை யெதிர்த்த வனுடைய யாய். |

மாரணம் - மாரணம் - அழிப்பு. 2060
மாருதம் - மாருதம் - காற்று.
மார்க்கம் - மார்க்கம் = வழி.
மார்ச்சனம் - மார்ஜநம் = துடைத்தல்.
மார்ச்சாலம் - மார்ஜாலம் = பூனை.
மார்த்தாண்டன் - மார்த்தாண்டன் = கதிரவன்.
மாலதி - மாலதீ = சிறுசெம் பொன்னி (சிறுசண்பகம்).
மாலூரம் - மாலூரம் = கூவிளம் (பில்வம்).
மாலை - மாலா = தொடை. (பூமாலை), வரிசை.
மாற்சரியம்
மாச்சரியம் - மாத்ஸர்யம் = அழுக்காறு = பொறாமை.
மானசம் - மாநஸம் = உண்ணிகழ்மறை, எண்ணம். 2070
மானம் - மாந : = செருக்கு.
மாநம் = அளவை.
மானவன் - மாநவன் = மண்ணவன்
மானினி - மாநிநீ = மகடூஉ.
மானுடன் - மாநுஷ்யன் = மண்ணவன்.
மான்மியம் - மாஹாத்ம்யம் = சிறப்பு.

# மி

மிசிரம்
மிச்சிரம் - மிச்ரம் = கலப்பு.
மிண்டன் - மிண்டன் = பிழைபுரிவோன்.
மிதம் - மிதம் = நுண்மை.
மிதம் = தனிமை (ஏகாந்தம்).
மித்திரன் - மித்ரன் = நண்பன், ஞாயிறு.
மித்தை - மித்யா = பொய். 2080
மிருகமதம் - ம்ருகமதம் = மான்மணம் (கஸ்தூரி).
மிருகம்
விருகம் - ம்ருகம் = விலங்கு, மான்.
மிருகேந்திரன் - ம்ருகேந்த்ரன் = சீயம்.
மிருணாளம் - ம்ருணாளம் = முளரித்தாள் (தாமரைத் தண்டு).
மிருதங்கம் - ம்ருதங்கா: = (கோல் கைகளாற் கொட்டு) பறை.
மிருது - ம்ருது = மென்மை.
மிருத்திகை - ம்ருத்திகா = மண்.
மிருத்தியு - ம்ருத்யு = சாவு, மறலி.

## மீ

மீடம் - மீடம் = விடப்பட்டது, சிறு புனல் (மூத்ரம்).
மீன் - மீநம் = புழல். 2090

## மு

முகம் - முகம் = முன், முதன்மை, தொடக்கம்.
முகுளம்
முகிழ் - முகுளம் = மொக்கு.
முகூர்த்தம் - முஹூர்த்தம் = ஒரு பொழுதளவை.
முக்கியம் - முக்யம் = சிறப்பு.
முசலம் - முஸலம் உலக்கை.
முசலி - முஸலீ = பல்லி. திணைப்பனை.
முட்டி - முஷ்டி = கைப்பொத்து.
முண்டம் - முண்டம் = தலை, தலையற்றது, மொட்டைத்தலை.
முண்டனம் - முண்டநம் = தலைமழித்தல்.
முதம் - முத் = களிப்பு. 2100
முத்தம் - மௌக்திகம். | முத்யம் = நித்திலம்.
முத்தி - முக்தி = விடுதலை.
முத்திரை - முத்ரா = அடையாளம்.
முத்து - முக்தா = நித்திலம்.
முமுட்சு - முமுக்ஷு = வீடுபேறே விரும்புநன்.
முரசம்
முரசு - முரஜம் = தோற்கருவி = பறை.
முற்கம் - முத்கம் = பயறு.
முற்கரம் - முத்கரம் = இருப்புலக்கை.
முனி - முநி := பேசாதிருப்போன் (மௌனி), முருக்கமரம், தூப்புல், புத்த தேவன்.

## மூ

மூகம்
மூங்கை - மூகம் = ஊமை. 2110
மூடன் - மூடன் = அறிவிலி, மெய்ம்மறந்தவன், இயலா நிலையன்.

| | | |
|---|---|---|
| மூடிகம் | - | மூஷிகம் = எலி.<br>மூஷிகா = பெருச்சாளி. |
| மூத்திரம் | - | மூத்ரம் = சிறுபுனல். |
| மூர்க்கன் | - | மூர்க்கன் = மடவோன். |
| மூர்ச்சை | - | மூர்ச்சா = மயக்கம். |
| மூர்த்தம் | - | மூர்த்தம் = வலிது, உடல், தலை. |
| மூர்த்தி | - | மூர்த்தி = உடம்பு, உடம்பினன். |
| மூலம் | - | மூலம் = முதல், வேர், அண்மை. |

# மே

| | | |
|---|---|---|
| மேகபுட்பம் | - | மேகபுஷ்பம் = மழை. |
| மேகம் | - | மேகம் = முகில்.<br>மேகம் = வெண்ணோய் முதலிய நோய்கள். *2120* |
| மேகலை | - | மேகலா = அரையிலணியணி. |
| மேசகம் | - | மேசகம் = கரிது. |
| மேடம் | - | மேடம் = யாட்டுக்கடா.<br>மேஷம் = செம்மறியாடு,<br>வீடு பன்னிரண்டுண் முதல் வீடு. |
| மேடி | - | மேஷீ = பெண்யாடு. |
| மேட்டிரம் | - | மேட்ரம் = ஆண்குறி. |
| மேதம் | - | மேதம் = வேள்வி, தூய்மை, நுண்ணுணர்வு. |
| மேதை | - | மேதஸ் = நெஞ்சுக் கொழுப்பு. |
| மேதினி | - | மேதிநீ = வையகம். |
| மேத்தியம் | - | மேத்யம் = தூய்மை. |
| மேரு | - | மேரு = பொன்மலை, புனலில்லாததிணை. *2130* |
| மேளகம் | - | மேளகம் = கூடுதல். |

# மை

| | | |
|---|---|---|
| மைதுனம் | - | மைதுநம் = புணர்க்கை. |

# மோ

| | | |
|---|---|---|
| மோகம் | - | மோஹம் = வேட்கை = மிகவிருப்பு, மயர்வு.<br>மோகம் = பயனின்மை, வறுமை. |
| மோக்கம் | - | மோக்ஷம் = வீடுபேறு. |
| மோசம் | - | மோசம் = முருங்கை, இலவு, வாழை. |
| மோடகன் | - | மோஷகன் = கள்வன். |
| மோதம் | - | மோதம் = களிப்பு. |

# மௌ

| | | |
|---|---|---|
| மௌத்திகம் | - | மௌத்திகம் = திரட்சி (முத்து). |
| மௌட்டியம்<br>மவுட்டியம் | - | மௌட்யம் = அறியாமை (மூடஸம்பந்தம்). |
| மௌலி<br>மவுலி<br>மோலி | - | மௌலி = முடி. 2140 |
| மௌனம்<br>மவுனம்<br>மோனம் | - | மௌநம் = பேசாமை. |

# ய

| | | |
|---|---|---|
| யசசு | - | யசஸ் = புகழ். |
| யசமானன்<br>யசமான் | - | யஜமாநன் = தொழிற்றலைவன், உயிர். |
| யசனம் | - | யஜநம் = வேள்வி செய்தல். |
| யஞ்ஞம் | - | யஜ்ஞம் = வேள்வி. |
| யதி<br>எதி | - | யதி : = துறவி. |
| யமி | - | யமிந் = துறவி (முனிவன்). |
| யமுனை | - | யமுநா = கருநிற யாறு (காளிந்தி). |
| யயி | - | யயீ = வழி. |
| யயு | - | யயு : = இவுளி, இவுளிவேள்விக் குதிரை. 2150 |
| யவம் | - | யவ : = வல்லரிசி (கோதுமை). |

# யா

| | | |
|---|---|---|
| யா | - | யா = ஊர்தி, தோற்றம், ஒளி, மலர்க்கொத்து. |
| யாகம் | - | யாகம் = வேள்வி. |
| யாசகம் | - | யாசகம் = இரப்பு. |
| யாதனை | - | யாதநா = பெருந்துன்பம். |
| யாத்திரை | - | யாத்ரா = வழிச்செல்கை. |
| யாமி | - | யாமீ = கங்குல் (இரவு).<br>யாமி : = உடன் பிறந்தவள், தன் மரபு காப்பவள். |
| யானம் | - | யானம் = ஊர்தி. |

## யு

| | | |
|---|---|---|
| யுகம் | - | யுகம் = நான்கு, இரட்டை, யுகமெனுங் கால அளவை.<br>யுக்மம் / யுகளம் = இரட்டை. |
| யுதம் | - | யுத : = வேறு, கூட்டல். 2160 |
| யுத்தம் | - | யுத்தம் = போர்.<br>யுக்தம் = நெறி (ந்யாயம்), தகுதி. |
| யுத்தி | - | யுக்தி = சூழ்ச்சி. |
| யுவதி | - | யுவதி = பதினாறாண்டுப் பெண். |

## யூ

| | | |
|---|---|---|
| யூகை | - | யூகா = பேன், ஒரு சிற்றளவை. |
| யூடம் | - | யூஷ : = பருப்பு, குழம்பு முதலியன. |
| யூதம் | - | யூதம் = குழு, பன்றி. |
| யூதி | - | யூதி = முல்லை, காட்டுப்பூருண்டி. |
| யூபம் | - | யூபம் = வேள்வித் தறி. |

## யோ

| | | |
|---|---|---|
| யோகநாமம் | - | யோகநாமம் - சேர் பெயர் (காரணப்பெயர்). |
| யோகம் | - | யோகம் = உளமொருப்படுநிலை, புணர்ப்பு, செலுத்தல், போனது வருதல். 2170 |
| யோக்கியன் | - | யோக்யன் = தக்கோன். |
| யோசனவல்லி | - | யோஜநவல்லி = வல்லாரை. |
| யோதன் | - | யோதன் = போர் வல்லான். |
| யோத்திரம் | - | யோக்த்ரம் = கயிறு, கட்டுத்தறி. |
| யோனி | - | யோநி := பிறப்பிடம். |

## யௌ

| | | |
|---|---|---|
| யௌகம் | - | யௌகம் = பொருமல் நோய். |
| யௌவனம் | - | யௌவநம் = அழகு. பெண் விரும்பு தகுதி. |

## வ

| | | |
|---|---|---|
| வ | - | வ / வத் = ஒப்பு. |
| வத் | - | |
| வகுளம் | - | வகுளம் = இலஞ்சி = மகிழ். |

| | | | |
|---|---|---|---|
| வக்கம் | - | வக்ஷஸ் = மார்பு.<br>வக்ஷம் = வணர் (கோணல்). | 2180 |
| வக்கிரம் | - | வக்ரம் = வணர் (வளைவு). | |
| வங்கம் | - | வங்கம் = ஈயம், வங்க நாடு. | |
| வசதி | - | வஸதி = வீடு. | |
| வசந்தம் | - | வஸந்தம் = தென்றற் பொழுது. | |
| வசம் | - | வசம் = விருப்பம், அடிமை. | |
| வசனம் | - | வசநம் = பேச்சு. | |
| வசியம் | - | வச்யம் = தன்னகப்படுத்தல். | |
| வசு | - | வஸு = நெருப்பு, ஒளி, பொன், உயிர். | |
| வசுதை<br>வசுந்தரை | - | வஸுமதி = வையகம். | |
| வச்சிரம்<br>வயிரம்<br>வைரம் | - | வஜ்ரம் = வெண்மனவு, நூறு முனை. | 2190 |
| வஞ்சம் | - | வம்சம் = கூட்டம், மரபு, மூங்கில், பிரம்பு. | |
| வஞ்சகம் | - | வஞ்சகம் = பிசகு. | |
| வஞ்சனி | - | வஞ்சநீ = மகடூஉ. | |
| வஞ்சி | - | வஞ்ஜுலம் = பிசின் (வஞ்சிக்கொடி). | |
| வஞ்சிதன் | - | வஞ்சிதன் = மடிப்பிலகப்பட்டோன். | |
| வடம் | - | வடம் = பழுமரம், கயிறு. | |
| வடவை | - | படபாநலம்<br>பாடபம் =குதிரைமுகத்தழல்=ஊழிக்கனல். | |
| வடாரகம் | - | வடாரகம் = கயிறு. | |
| வடு | - | வடு = இளைஞன், மணமிலான் (ப்ரஹ்மசாரி). | |
| வண்ணம்<br>வன்னம் | - | வர்ணம் = நிறம், எழுத்து. | 2200 |
| வணிகன் | - | வணிகன் = செட்டி. | |
| வதந்தி | - | வதந்தீ = வையப்பேச்சு. | |
| வதம் | - | வதம் = கொலை. | |
| வதரி | - | பதரீ = இலந்தை. | |
| வதனம் | - | வதநம் = முகம். | |
| வதூ | - | வதூ = மணப்பெண். | |
| வத்தா<br>வத்துரு | -<br>- | வக்தா<br>வக்த்ரு (ச்ரோதாவுக்குச்) சொல்வோன். | |
| வத்திரம் | - | வக்த்ரம் = முகம்.<br>வஸ்த்ரம் = ஆடை. | |
| வத்து | - | வஸ்து = பொருள். | |

| | | | |
|---|---|---|---|
| வந்தனம் | - | வந்தநம் = வணக்கம். | 2210 |
| வந்தி | - | வந்த்யா = மலடி. | |
| வந்தியை | - | வந்த்யா = வணங்கத்தக்கவள்.<br>வந்த்யா = மலடி. | |
| வபனம் | - | வபநம் = தலைமழித்தல். | |
| வபு | - | வபுஸ் = உடம்பு, நல்லுடம்பு. | |
| வபை | - | வபா = நெஞ்சூன், வெண்டுகிலனைய கொழுப்பு. | |
| வமனம் | - | வமது = கக்குதல். | |
| வமி | - | வமி : = நெருப்பு. | |
| வமிசம் | - | வம்சம் = மரபு, வேறுபாடு. | |
| வயசு<br>வயது | - | வயஸ் = ஆண்டு. | |
| வரதன் | - | வரதன் = கொடையாளி. | 2220 |
| வரம் | - | வரம் = விருப்பு, இயவுளீகை. | |
| வரன் | - | வரன் = மணமகன், தலைவன். | |
| வராகம் | - | வராஹம் = பன்றி. | |
| வருக்கம் | - | வர்க்கம் = வகுப்பு, கூட்டம். | |
| வருடம் | - | வர்ஷம் = ஆண்டு, மழை, சிலதிணை. | |
| வருணம் | - | வர்ணம் = மரபு, வேறுபாடு, நிறம், எழுத்து. | |
| வருணனை | - | வர்ணநம் = சிறப்பு, ஒப்புமை. | 2230 |
| வருத்தமானம்<br>வத்தமானம் | - | வர்த்தமாநம் = நிகழ்பொழுது, நிகழ்ச்சி. | |
| வருமம் | - | வர்மம் = மெய்ப்பை (கவசம்). | |
| வர்ச்சிதம் | - | வர்ஜிதம் = நீக்கம், விடுகை. | 2230 |
| வர்த்தி<br>வத்தி | - | வர்த்தி = விளக்கெரிதல். | |
| வலிமுகம் | - | வலீமுகம் = குரங்கு. | |
| வலை | - | வலம் = கண்ணி = புள்புழல்படுக்குங் கருவி. | |
| வல்லபம் | - | வல்லபம் = எண்ணத்திற்கினியது. | |
| வல்லரி | - | வல்லரீ = மலர்க்கொத்து. | |
| வல்லவன் | - | வல்லவன் = இடையன். | |
| வல்லி | - | வல்லீ = கொடி. | |
| வல்லீசன் | - | வல்லீசன் = கொடிச்சிக்கோ (குமரன்). | |
| வளையம்<br>வளைவு<br>வளை | - | வலயம் = வணர். | |
| வள்ளூரம் | - | வள்ளூரம் = உலர்ந்தவூன். | 2240 |

வற்கலம் - வல்கலம் = மரத்தோல்.
வற்சநாபி, வசநாவி - வத்ஸநாபி = நச்சுப்பொருள்.
வற்சம் - வத்ஸம் = மார்பு.
வற்சரம் - வத்ஸரம் = ஆண்டு.
வற்சலன் - வத்ஸலன் = நட்புடையோன்.
வனம் - வநம் = காடு, தோட்டம், புனல்.
வனிதை - வநிதா = மகடூஉ.
வன்மீகம் - வல்மீகம் = புற்று.
வன்னி - வந்ஹி : / வஹ்நி : = நெருப்பு, குதிரை, வழி, சேங்கொட்டைமரம்.

## வா

வா - வா = ஒப்பு. 2250
வாகம் - வாஹம் = குதிரை.
வாகனம் - வாஹநம் = ஊர்தி.
வாகினி - வாஹிநீ = யாறு, படை (சேனை).
வாகீசன் - வாகீசன் = செவ்வனே புகல்வோன்.
வாகுலேயன் - பாஹுலேயன் = எரிநாட்காதலன் = முருகவேள்.
வாகுலை - பாஹுலா = எரிநாள் (கார்த்திகை).
வாக்கியம் - வாக்யம் = பேச்சு.
வாக்கு - வாக் = சொல்.
வாசகம் - வாசகம் = நூலுரை, மறைமொழிதல் (மந்திரமியம்பல்).
வாசம் - வாஸ : = வீடு, உடம்பு. 2260
வாசரம், வாரம் - வாஸரம் = பகற்பொழுது, நாள்.
வாசனாட்சயம் - வாஸநாக்ஷயம் = நாட்டு விருப்பக்கேடு.
வாசனை - வாஸநா = பற்று, விருப்பம்.
வாசம் - வாஸநம் = மணம்.
வாசாலன் - வாசாலன் = பெரிதும் பேசுவோன்.
வாசி - வாஜிந் = குதிரை.
வாசுகி - வாஸுகி = பாம்பு முதல் (எண்வகைப் பாம்புகளுளொன்று).
வாச்சியம் - வாத்தியம் = யாழ் முதலிய ஒலிக்கருவி.

| | | |
|---|---|---|
| வாஞ்சை | - | வாஞ்சா = விருப்பம். |
| வாணி | - | வாணி := சொல். வாணீ = நாமகள். |
| வாணினி | - | வாணிநீ - கூத்தி (நர்த்தநீ). 2270 |
| வாதம் | - | வாதம் = காற்று (முப்பிணியுளொன்று), பிணி காட்டுநரம்பு. வாதம் = வழக்கு. |
| வாதாயு | - | வாதாயு = மான். |
| வாது வாதம் | - | வாதம் = சொற்போர். |
| வாதை | - | பாதா = அழுங்கல். |
| வாத்து | - | வாஸ்து = வீடு. |
| வாந்தி | - | வாந்தி = கக்குதல். |
| வாமம் | - | வாமம் = அழகு, இடப்புறம், வணர், பொருள். |
| வாமனம் | - | வாமநம் = குறில். |
| வாமை | - | வாமா = அழகி, மலைமகள், மலர்மகள், நாமகள், பெண். |
| வாயசம் | - | வாயஸம் = கரும்புள் (காகம்). 2280 |
| வாயு | - | வாயு: = காற்று. |
| வாரணம் | - | வாரணம் = வேழம். |
| வாரம் | - | வாரம் = கூட்டம், ஞாயிறு முதலியகிழமை. |
| வாரி | - | வாரி = புனல். |
| வாருணி | - | வாருணீ = கள். |
| வார் | - | வார் = புனல். |
| வார்த்தகம் | - | வார்த்தகம் = முதுமை, கிழவர்குழு. |
| வார்த்தை | - | வார்த்தா = சொல். |
| வாலேயம் | - | பாலேயம் = கழுதை. |
| வாலை | - | பாலா = மலைமகள், பதினாறாண்டுக்குட்பட்ட பெண். 2290 |
| வால் | - | வாலதி = (உயிர்களின் பிற்புறத்) தோகை. |
| வாவி | - | வாபி = மழைநிலை (குளம்). |
| வாற்சல்லியம் | - | வாத்ஸல்யம் = உருக்கம் = அன்பு. |
| வானம் | - | வாநம் = வநமெனுங் காடு சார்ந்த பொருள், உலர்ந்த கனி, உலர்ந்த விறகு. |
| வானரம் | - | வாநரம் = குரங்கு (நரனுக்கொப்பானது). |

# வி

| | | |
|---|---|---|
| வி | - | வி = தடை, வேறு, பிரிவு, மிகுதி ஆகிய இவற்றைக் காட்டு மோரடைமொழி, பறவை. |
| விகங்கம் | - | விஹங்கம் = பறவை. |
| விகசிதம் | - | விஹஸிதம் = மலர்ச்சி, பெருமை சிறுமையல்லாத சிரிப்பு). |
| விகடம் | - | விகடம் = முறுவலித்ததற்குரிய செய்கை. |
| விகற்பம் | - | விகல்பம் = வேற்றுமை, நினைப்புவேறுபாடு (2300 |
| விகாதம் | - | விகாதம் = பகை. |
| விகாயம் | - | விஹாயம் = வெளி. |
| விகாரம் | - | விகாரம் = வேறுபாடு.<br>விஹாரம் = தோட்டவிளையாட்டு. |
| விகிரம் | - | விகிரம் = பறவை. |
| விகுதி | - | விக்ருதி = முதனிலைக்கு வேறு (விகாரம்). |
| விக்கிரகம் | - | விக்ரஹம் = உடம்பு. |
| விக்கிரமன் | - | விக்ரமன் = வல்லான். |
| விக்கினம் | - | விக்நம் = இடையூறு. |
| விசதம் | - | விசதம் = வெள்ளை, தெளிவு. |
| விசரம் | - | விஸரம் = கூட்டம். 2310 |
| விசர்ச்சனம் | - | விஸர்ஜநம் = விடுகை, கொடை. |
| விசாரதன் | - | விசாரதன் = கற்றோன். |
| விசாலம் | - | விசாலம் = விரிவு. |
| விசுவம் | - | விச்வம் = வையம், எல்லாம். |
| விசுவன் | - | விச்வன் = நனாவுயிர். |
| விசுவாசம் | - | விச்வாஸம் = நம்புதல். |
| விசேடம் | - | விசேஷம் = சிறப்பு. |
| விஞ்ஞானம் | - | விஜ்ஞாநம் = (வீடு பேற்றிற்கு வேறான) நூலறிவு. |
| விடபம் | - | வ்ருஷபம் = எருது.<br>விடபம் = மரக்கொம்பு, குளிர். |
| விடபி | - | விடபிந் = மரம். 2320 |
| விடம் | - | விஷம்= நஞ்சம், புனல். |
| விடயம் | - | விஷயம் = பற்றுக்கோடு, அடுத்திருத்தல். |
| விடன் | - | விடன் = பெண்நசையினன். |
| விடாணம் | - | விஷாணம் = கொம்பு. |
| விடை | - | வ்ருஷபம் = எருது. |

விட்சேபம் - விக்ஷேபம் = இறங்கல், வெளிப்படல்.

விட்டுணு, விண்டு - விஷ்ணு = நெடுமால், ஞாயிறுகளுளொருவன், காற்று, ஒளி.

விட்டை - விஷ்டா= பவ்வீ (மலம்).

விண் - விஷ்ணுபதம் = வெளி.

விண்ணப்பம் - விஜ்ஞாபநம் = அறிவிப்பு, வேண்டுதல். 2330

விதம் - விஹிதம் = வகை.

விதவை - விதவா = கைம்மை.

விதானம் - விதாநம் = அகலம், மேற்கட்டி, வேள்வி.

விதி - விதி : = படைப்புத் தொழிற்கடவுள், பொழுது, கட்டளை, புத்தேள், பண்டைவினை.

விது - விது : = கங்குற்கதிர், நெடுமால், நெருப்பு, ஞான்று.

விதுரன் - விதுரன் = அறிதற்குரியன்.

விதேயன் - விதேயன் = வணக்கமுடையோன் (வினயமுளோன்).

வித்தரம் - விஸ்தரம் = சொல்விரிவு.

வித்தன் - வித்தன் = பொன்னுடையோன்.

வித்தாரம் - விஸ்தாரம் = அகலம். 2340

வித்துருமம் - வித்ருமம் = துகிர் (பவளம்).

வித்துவான் - வித்வாந் = அறிஞன்.

வித்தை - வித்யா = அறிவு, கல்வி.

விநாசம் - விநாசம் = மறைவு, அழிவு.

விநாயகன் - விநாயகன் = தனக்கு மேலிலான், ஒற்றைக் கொம்பன், அறிவுறுத்துவோன் (குரு).

விந்தம் - விந்த்யம் = எட்டுமலைகளுளொன்று.

விந்து - பிந்து := துளி, வட்டம், நுதனடு, மழைநிலை (குளம்), பிந்துவெனும் மாயை. விந்து := அறிவோன்.

விபணி - விபணி := கடைத்தெரு.

விபரீதம் - விபரீதம் = மாறுபாடு.

விபவம் - விபவம் = சிறப்பு, ஆக்கம். 2350

விபினம் - விபிநம் = காடு.

விபு - விபு = நிறைவு, அசைக்கப்படாதது, நல்லான் (சிவன்).

விபுதர் - விபுதர் = வானவர்.
விபுலம்
விபுலை - விபுலா = வையம் (வையகம்).
விப்பிரலம்பம் - விப்ரலம்பம் = சொற்போர் (வாதம்).
விப்பிரன் - விப்ரன் = பார்ப்பான்.
விமர்த்தனம் - விமர்த்தநம் = தேய்த்தல், அரைத்தல்.
விமலம் - விமலம் = தூய்மை.
விமானம் - விமாநம் = ஊர்தி.
விம்பம் - பிம்பம் = நிழல், ஒன்று போன்ற அடையாளம். ஞாயிறு திங்களென்பவற்றின் வட்டம். கொவ்வைக்கனி. 2360
விம்மிதம் - விஸ்மயம் - வியப்பு.
வியசனம்
விசனம் - வ்யஸநம் = நொசிவு.
வியஞ்சனம்
வெஞ்சனம் - வ்யஞ்ஜநம் = அடையாளம், கறி முதலியன.
வியட்டி - வ்யஷ்டி = ஸமஷ்டியாந் தோப்பொக்குமதில் ஒரு மரம் போல்வது.
வியத்தம் - வ்யக்தம் = வெளிப்படை.
வியபிசாரி
விபசாரி - வ்யபிசாரி = கற்பிலாள்.
வியயம் - வ்யய := செலவு.
வியர்த்தம் - வ்யர்த்தம் = வீண்.
வியவகாரம்
விவகாரம் - வ்யவஹாரம் = சொற்போர் (விவாதம்).
வியாகரணம் - வ்யாகரணம் = எழுத்து முதலியன கற்பிக்கு நூல் (வேதாங்கம் ஆறனுளொன்று). 2370
வியாகுலம் - வ்யாகுலம் = துயரம்.
வியாக்கியானம் - வ்யாக்யாநம் = உரை.
வியாக்கிரம் - வ்யாக்ரம்= புலி.
வியாக்கிரி - வ்யாக்ரீ = பெண்புலி.
வியாசம் - வ்யாஜம் = புள்ளுவம் (கபடம்). வ்யாஸம் = அகலம், விரிவு.
வியாதன் - வியாதன் = துணிபுடையோன், வேடன்.
வியாதி - வ்யாதி = பிணி, உளக்கவலை.
வியாத்தி - வ்யாப்தி = வ்யாபக ஒப்புமை.
வியாபகம் - வ்யாபகம் = எங்குமிருத்தல்.
வியாபாரம் - வ்யாபாரம் = செட்டு, தொழில். 2380

| | | |
|---|---|---|
| வியாப்பியம் | - | வ்யாப்யம் = எங்குமிருத்தலினுள்ளொடுக்கம் (வியாபகத்துள்ளடக்கம்). |
| வியாளம் | - | வ்யாளம் = பாம்பு. |
| வியாமம் | - | வ்யாமம் = புகை. |
| வியானம் | - | வ்யாந : உடலிற் பரவு காற்று. |
| வியூகம் | - | வ்யூஹ : = கூட்டம், படை வகுப்பு, ஆய்வு, செருக்கு. |
| வியூடம் | - | வ்யூடம் = கூட்டம், மிகுதி, இருத்தல். |
| வியோமம் | - | வ்யோமந் = வெளி, புனல், நல்லான் (சிவன்). |
| விரசம் | - | வ்ரஜம் = கூட்டம், வழி. |
| விரணம் | - | வ்ரணம் = புண். |
| விரதம் | - | வ்ரதம் = நோன்பு. 2390 |
| விரத்தன் | - | விரக்தன் = வெறுப்புடையன். |
| விராட்டு | - | விராட்= நாடாள்வோன், பறவை முதல். |
| விராத்தியன் | - | வ்ராத்ய: = பூணூலணியாதவன். |
| விரீகி | - | வ்ரீஹி:= நெல். |
| விருக்கம் | - | வ்ருக்ஷம் = மரம். |
| விருச்சிகம் | - | வ்ருச்சிகம் = தேள், தோகைப்புழு (வாற்புழு). |
| விருட்டி | - | வ்ருஷ்டி = மழை, ஒளி, யாட்டுக்கடா. |
| விருதா | - | வ்ருதா = வீண். |
| விருது<br>பிருது | - | ப்ருது = அகலம். |
| விருத்தம் | - | வ்ருத்தம் = வட்டம், முன், உறுதி, வரலாறு. விருத்தமெனுஞ் செய்யுள். 2400 |
| விருத்தன் | - | வ்ருத்த := கிழவன், நாவலன். |
| விருத்தாந்தம் | - | வ்ருத்தாந்தம்= தோற்றமும் முடிவும். |
| விருத்தி | - | வ்ருத்தி = வளர்ச்சி. |
| விருந்தம் | - | வ்ருந்தம் = அரும்பு. |
| விரோசனன் | - | விரோசனன் = வெண்கதிர், செஞ்ஞாயிறு, நெருப்பு. |
| விரோதம் | - | விரோதம் = பகை. |
| விலக்கணம் | - | விலக்ஷணம் = பற்றுக்கோடற்ற ஆய்வு. |
| விலாசம் | - | விலாஸ: = ஆடவர் மகளிர் விளையாட்டு, மகிழ்ச்சி. |
| விலாபம் | - | விலாப : = புலம்பல். |
| வில்லம்<br>வில்லுவம் | - | பில்வம் = கூவிளம். 2410 |
| விவசு | - | விவஸ் = ஒளி. |

விவரம் - விவரம் = தொளை.
விவர்த்தோபா தானகாரணம் - விவர்த்தோபாதாநகாரணம் = கயிற்றரவுபோல்வது.
விவாகம் - விவாஹம் = மணம்.
விவாதம் - விவாதம் = சொற்போர்.
விவிதம் - விவிதம் = பலவகை.
விவேகம் - விவேகம்= உணர்ச்சி.
வினோதம் - விநோதம் = இறும்பூது.

## வீ

வீசி - வீசி = அசைவு, அலை, அருஞ்சிறை (நரகம்).
வீணை - வீணா = யாழ். 2420
வீதி - வீதீ = வழி, வரிசை.
வீதி = குதிரை.
வீமம் - பீமம் = அச்சந்தருவது.
வீரம் - வீரம் = வாழை, புளியாரை, ஆண்மை, கொடுமுடி.
வீரியம் - வீர்யம் = ஆண்மை, பீள், வன்மை, ஒளி.

## வெ

வெகுளி - வ்யளீகம் = வெறுப்பு.

## வே

வேகம் - வேகம் = விரைவு, புனலோட்டம், துறக்கம், மகிழ்ச்சி.
வேசி - வேசீ
வேசை - வேச்யா = விலைமகள்.
வேடதாரி - வேஷதாரி = தன்னைவேறுபடுத்திக் கொண்டோன்.
வேடம் - வேஷம் = வேறுபடுத்தல்.
வேடை - வேடா = பிழையிழைக்குநருறைவிடம். 2430
வேட்டி - வேஷ்டி = சுற்றிக்கொள்ளாடை.
வேணி - வேணீ = பின்னல்.
வேணு - வேணு : = வேய், வேய்ங்குழல்.
வேதம் - வேதம் = முதனூல், அறிவுநூல், பொன்.
வேதம் = கொள்ளுதல்.
வேதனை - வேதநா = பெருந்துன்பம்.

| | | |
|---|---|---|
| வேதா | - வேதா = படைப்புத் தொழிற்கடவுள். | |
| வேதிகை | - வேதிகா = திண்ணை. | |
| வேதியன் | - வேதியன் = அறிவுடையோன், முதனூலாளன். | |
| வேத்திரம் | - வேத்ரம் = பிரம்பு, நேரியமூங்கில். | |
| வேமை | - வேமா = நெசவுதறி. | 2440 |
| வேலி | - வேல்லிதம் = இளை. | |
| வேலை | - வேலா = கடற்கரை, அலை, புனல், நோய். | |
| வேளை | - வேலா = பொழுது. | |

# வை

| | | |
|---|---|---|
| வைகரி | - வைகரீ = சொற்கருவிகளுளொன்று. | |
| வைகல்லியம் | - வைகல்யம் = குறைவு. | |
| வைகுந்தம் | - வைகுண்டம் = காப்புக்கடவுளிருக்கை. | |
| வைசயந்தி | - வைஜயந்தீ = துகில் (த்வஜம்). | |
| வைசியன் | - வைச்யன் = பண்டமாற்றுவோன் = செட்டி. | |
| வைசுவாநரன் | - வைச்வாநரன் = நெருப்பு. | |
| வைட்டுணுவம், வைணவம், வயிணவம் | - வைஷ்ணவம் = மால்போற்றுநெறி. | 2450 |
| வைதேயன் | - வைதேயன் = மடவோன். | |
| வைத்தியன் | - வைத்யன் = நோயொழிப்போன், ஆண்டவன், விருப்பிலி, வெஞ்சுடர், தண்சுடர், நெருப்பு. | |
| வைபவம் | - வைபவம் = வரலாறு, பெருமை. | |
| வைரம் | - வைரம் = பகை. | |
| வைவச்சுதன் | - வைவஸ்வதன் = மறலி. | |
| வைனதேயன், வைனன் | - வைநதேயன் = பறவை முதல். | 2456 |



உ
சேந்தன் துணை
அமைதி யைம்ப தென்னுஞ்

# சேந்தன் செந்தமிழ்

## செய்யுளு முரையும்
## நேரிசை வெண்பா

### முருகவேளை வணங்குவோர் பெறும் பயன்

**திங்கள்சே ரேர்க்கிடையன் சேயாய்ப் பெரியோனா**
**யெங்கள்பா டோர்ந்தருளு மேந்தலா - யங்களிற்றுக்**
**கையற் கிளையோனாங் கட்டயில்வே ளாயுள்ள**
**மெய்யற் றொழினுறுமொள் வீடு.**

*திங்கள் சேர் - பிறைநிலா ஆர்ந்த, ஏர் - அழகிய, கிடையன் - பின்னிய கதுப்பை யுடைய பெருமானுக்கு, சேயாய் - குழந்தையாய், பெரியோனாய் - (யாவருக்கும்) பெரியவனாய் - எங்கள் பாடு - எங்கள் துன்பத்தை, ஓர்ந்து - தெரிந்து, அருளும் - அருள்செய்யும், ஏந்தலாய் - பெருமையுடையோனாய், அம் - அழகிய, களிற்று - வேழத்தின், கையற்கு - கையையுடையவருக்கு, இளையோனாய் - தம்பியாய், கட்டயில் வேளாயுள்ள - உரியவர் விருப்பத்திற்கு உரியவனாய் உறுதியான வேலைத்தாங்கியுள்ள, மெய்யன் - கடவுளை, தொழின் - வணங்கினால், ஒள் - தூய, வீடு - விடுதலை, உறும் - எய்தும்.*

*இந்நூலுக்கு முருகக்கடவுளே பாட்டுடைத் தலைவனாகலானும், நூலை ஆக்கிய அடிகள் அவனொருவனையே பாடுங்கோட்பாடுடைய ராகாலானும் இம்முதற் செய்யுளில் அடிகள் அவனையே போற்றியதோடு, மறைமுறை பற்றி* **முன்னோனையும்** *வருவித்துக் கூறினார். முருகன் தோற்றத்தை யறிவிப்பான் "திங்கள் சேரேர்க்கிடையன் சேய்" என்ற அடிகள், அவன் உண்மையிலத்தன்மைய னல்லனென்னு முண்மையை யுணர்த்தவே "பெரியோனாய்" என்றார். முருகப் பெருமானுடைய அருளிலழுந்திய அடிகள் அப்பெருமானை வணங்கும் மக்கள் எளிதிற் பயன் பெறுவ ரென்பதைத் தெரிவிக்கவே "எங்கள் பா டோர்ந் தருளுமேந்தல்" "மெய்யற் றொழின் ஒள்வீடு உறும்" என்று கூறியருளினார். சேய் - சிவந்த நிறமுடையோன். செம்மனவு வண்ணன். மெய்யன் - என்றும் மாறுபாடில்லாதவன், கடவுள். துன்ப நீக்கமும் இன்பஆக்கமுமே இங்குவீடு எனப்பட்டது.*

கிடையன், பாடு, மெய்யன் - வேற்றுமைத் தொகை, எங்கள் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை, உறும் - வினைமுற்று.

முதற்கண் 'திங்கள்' என்னும் நன்மொழி பொருந்த நூல் தொடங்கப்பட்டது.

சேய் - செம்மை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் முதனீண்டு முன்னின்ற மகரமெய் யகர மெய்யாகத் திரிந்தது.

1

## இறைவன் தன்மை

**தோற்ற மழிவுமருள் சூர்நோய் வரைப்பிலதா**
**யாற்ற லறிவுண்மை யாய்த்தூய்தாய்ப் - போற்று**
**மளவ ருளத்தளவா யான்றவறங் கோடா**
**துளது விடாப்பொருளா கும்.**

விடாப்பொருள் - மற்றைப் பொருள்களைவிட்டு நீங்காத கடவுளெனும் பொருள், தோற்றம் - பிறப்பு, அழிவு - இறப்பு, மருள் - மயக்கம், சூர் - துன்பம், நோய் - பிணி, வரைப்பு - எல்லை (ஆகிய இவைகள்), இலதாய் - இல்லாததாய், ஆற்றல் - எல்லா மொய்ம்பு முடைமை, அறிவு - எல்லாவற்றையும் - அறியும் முற்றறிவுடைமை, உண்மையாய் - எப்போதும் அழியாது நிலைபெற்றிருத்தல் ஆகிய இத்தன்மைகளை யுடையதாய், தூய்தாய் - முழுநலமுடையதாய், போற்றும் அளவர் - இயன்ற இயன்றவாறு வணங்குகின்றவர் களுடைய, உளத்து அளவாய் - நெஞ்சத்தில் அந்தந்த அளவாய் வெளிப்பட்டு நிற்பதாய், ஆன்ற - மிகச்சிறந்த, அறம் - அற நெறி (நடுவு நிலைமை), கோடாது - குன்றாது, உளது ஆகும் - இருப்பது ஆகும்.

ஈண்டு இறைவனுடைய தன்மைகளெல்லாம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஆறறிவுடைய மக்களல்லாத மற்ற உயிர்கள் நன்மை தீமைகளை ஆய்ந்தறியாமலும் அவ்வாரே ஆண்டவன் தன்மைகளை யறிந்து அவனை வழிபடாமலு மிருக்கின்றன; மக்களுள்ளும் அவ்வுயிர்களைப் போன்றார் பலர் உளராகலானும், அவர்களுடைய நினைப்பிற்குத் தக்கவாரே இறைவன் அவர்கட்குத் தோன்றுவானாகலானும் "போற்று மளவருளத் தளவாய்" எனப்பட்டது. இது ஆழ அமுக்கி முகக்கினும் நாழி நானாழிப் புனலை முகந்து கொள்ளாத தன்மை போலாம். ஆனால் இறைவன் அன்பர்கள் செய்யும் அன்புக்குத்தக அருள் புரியினும் பொதுவாக உயிர்களின் வினைவழியே அவற்றை நடுநிலை பிறழாது நடத்துகின்றானாகலின், அடிகள் "ஆன்ற அறங் கோடாது" என்றார்.

விடாப் பொருளென்பதுதானே வடநூல்களில் "அத்வைத வஸ்து" என வழங்கப்படுகிறது. இலது என்பதில் - அது பகுதிப் பொருள் விகுதி; முதலிரண்டடிகளில் எண்ணும்மைகள் தொக்கன.

2

## அடிகளாவா ரிவரெனல்

**விடாப்பொரு ளேகடவுண் மேவரிய வஃதைக்**
**கெடாப்புரி வானுணர்ந்து கீழ்மை - படாப்பனுவ**
**லாய்வலியு மெவ்வுயிர்க்கு மல்லல் கொடா வருடா**
**னேய்நலமு முள்ளோ னிறை.**

விடாப்பொருளே - எல்லாப் பொருள்களிலுங் கலந்து நின்று நீங்காத பொருளே, கடவுள் - இறைவனாவன், மேவரிய - அடைதற்கரிய, அஃதை - அக்கடவுளை, கெடா - கெடுதலில்லாத, புரிவான் - அன்பினால், உணர்ந்து - அறிந்து, கீழ்மைபடா - மேம்பட்ட, பனுவல் - நூலை, ஆய்வலியும் - ஆராயுந்திறனும், எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்கட்கும், அல்லல்கொடா - துயரத்தைக் கொடுக்காத, அருள்ஏய் நலமும் - இரக்கத்தைக் கொண்டுள்ள நன்மையும், உள்ளோன் - உள்ளவனே, இறை - உயிர்களின் இருளை நீக்கிக் கடவுளை யடைவிக்கும் அறிஞன்.

ஈண்டு, கடவுள், உயிர்களின் உள்ளத்தில் அவ்வுயிர்களுக்கு உயிராகவும், அவைகளைப் பிரியாமலிருந்து அவைகளைத் தொழிலிற் செலுத்துகின்றானாகலின், அவன் 'விடாப்பொருள்' எனப் பட்டனன். பின்னர், கடவுளை யடைவிக்கும் அறிஞனது தன்மையை உணர்த்திய அடிகள் அவ்வறிஞனாவான் கடவுளை உணர்ந்து நிற்றலும், மேம்பட்ட நூலாராய்ச்சியும், மிகுந்த இரக்கமு மாகிய மூன்று தன்மைகளை யுடையனாதல் வேண்டுமென்றார்.

விடாப்பொருளே - ஏ - பிரிநிலை. கடவுள் - கடவு + உள். கடவு - வினைத் தொகை. தான் - அசைநிலை. கடவுள், இறை - பெயர்ப் பயனிலைகள்.

3

## இறைவனே அடிகளெனல்

**இறையே தமையா ளடிகளென வெண்ணார்**
**கறையே யொழியார் களிகொன் - மிறையேசெய்**
**தின்ன றருமளறே யெய்துபுபன் னாளுழல்வ**
**ரென்னு மறைபொய் யிலை.**

இறையே - கடவுளே, தமையாள் - தம்மையாட் கொண்ட, அடிகளென - அறிஞனென்று, எண்ணார் - நினையாதவர், கறையே - குற்றத்தையே, ஒழியார் - ஒழித்துக் கொள்ளாதவராய், களிகொல் - இன்பத்தைக் கெடுக்கின்ற, மிறையே செய்து - குற்றத்தையே செய்து, இன்னல் -துன்பத்தை, தரும் - தருகின்ற - அளறே, ஊழைலையே (நரகத்தையே), எய்துபு - அடைந்து, பல்நாள் - பலநாள், உழல்வர் - வருந்துவர், என்னும் - என்று கூறும், மறை - முதல்நூல் (வேதம்), பொய்யிலை - இது பொய்யாமாறில்லை.

இறைவன் மக்களுக்கு அருளல், அவரவர்களுடைய நிலைமைக் கேற்ப அவர்களோடு கலந்து நின்றும், நேரே வந்தும், அடிகளென நின்றுமாம். ஆகலின், ஆண்டவன்பால் ஆற்றுப்படுத்தும் அடிகளையே ஆண்டவனெனக் கொளல் ஈண்டு ஏற்புடைத் தாயிற்று.

எண்ணார் என்னு மெழுவாய் ஒழியார், உழல்வர் என்னும் பயனிலைகளைக் கொண்டன. எய்துபு - பு = தெரிநிலை வினையெச்ச விகுதி. இலை - குறிப்பு வினைமுற்று, இறையே - ஏ - பிரிநிலை, கறையே, அளறே - ஏ - தெளிவுப்பொருளைத் தருதலால், தேற்றம்.

4

**அடிகள் முன்னர் அன்புள்ள மைந்தன் நடைதருமாறு**

**ஏந்தல் சிறப்பொருதா ளேற்றியிருத் தல்சிரித்தல்**
**போந்தெதிரே நிற்றல் பொறிமாழ்க - லாந்துயினற்**
**பாயிட் டிருத்தல் படுத்த லிறைமுன்ன**
**ராயற் புளோன்செயமாட் டான்.**

ஏந்தல் சிறப்பு - மன்னர்க்குரிய சிறப்புகளைச் செய்து கொள்ளல், ஒருதாள் - ஒருகாலை, ஏற்றியிருத்தல் - மற்றொரு காலின் மீது வைத்திருத்தல், சிரித்தல் - சிரித்தல், போந்து - சென்று, எதிரேநிற்றல் - எதிரிலே நின்று கொண்டிருத்தல், பொறி - புலன்களின், மாழ்கல் ஆம் - செயலொழியும்படியாக, துயில் - தூங்கிக் கொண்டிருத்தல், நற்பாய் இட்டு இருத்தல் - நல்ல பாயை விரித்து அதன் மீதிருத்தல், படுத்தல் - படுத்துக் கொண்டிருத்தல் (ஆகிய இவற்றை), இறைமுன்னர் - அடிகள் முன்னர், ஆய் அற்புளோன் - பெரியாரியல்பு தேர்ந்த அன்புடை மைந்தன், செயமாட்டான் - செய்யமாட்டான்.

அன்பு - அற்பு எனவாயது; என்பு - எற்பு எனவாயவாறு.

5

**எண்ணெயிடல் வல்லூர்தி யேறலடைக் காய்மெல்ல**
**றெண்ணொடியை யேமறுத்தல் சீற்றமுற - றண்ணளியிற்**
**பொற்பிறைமுன் றாளே புகழ்ந்து தொழா மேநிற்ற**
**லற்புறுமைந் தன்செயமாட் டான்.**

*எண்ணெயிடல் - எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், வல்லூர்தி யேறல் - வலிமையுள்ள (குதிரை, வேழமுதலிய) வையங்களின் மீது ஏறிச்செல்லல், அடைக்காய் மெல்லல் - வெற்றிலைப் பாக்குத் தின்றல், தெள் - தெள்ளிய, நொடியை - அடிகளின் சொல்லை, மறுத்தல் - மறுத்துப்பேசுதல், சீற்றமுறல் - சினத்தல், தண்ணளியின் - குளிர்ச்சி பொருந்திய அன்பினால், பொற்பு இறைமுன்- அழகு வாய்ந்த அடிகள் (குரு) முன்னர், தாளே புகழ்ந்து - அவருடைய அடிகளையே புகழ்ந்து, தொழாமே நிற்றல் - தொழாமலே நின்று கொண்டிருத்தல் (ஆகிய இவற்றை), அற்பு உறு - அன்பு நிறைந்த, மைந்தன் - மைந்தன் (சீடன்) செயமாட்டான் - செய்யமாட்டான்.*

*கற்போன் கற்பிப்போனைத் தந்தையாக எண்ணுதலே நேர்மையாகலின், ஈண்டு கற்போன் மைந்தனெனப்பட்டனன்.*

*தெண்ணொடியையே - ஏ - இசைநிறை.* **6**

**ஐய னெழினெழலு மன்னோ னிராயெனச்சொன்**
**மெய்யுரை தேர்ந்துசிறை மேவுதலுந் - தொய்யலொடு**
**போவென்னிற் போதலும்வா வென்னின் வரலுமிழி**
**வோவன் புளான்கண் ணுள.**

*ஐயன் - அறிவு முதிர்ச்சி யென்னும் அழகுடையடிகள், எழின் - இருக்கையைவிட்டெழுந்தால், எழலும் - (கற்போன்) எழுந்திருத்தலும், அன்னோன் - அவ்வடிகள், இராய் எனச் சொல் - இருப்பாயாக வென்று கூறும், மெய்யுரை - கட்டளையை, தேர்ந்து - ஏற்றுக் கொண்டு, சிறை மேவுதலும் - மருங்கிலிருத்தலும், போஎன்னின் - போவென்று சொன்னால், தொய்யலொடு - மகிழ்ச்சியோடு, போதலும் - அவ்வாறேபோதலும், வாவென்னின் - வாவென்றழைத்தால், வரலும் - அங்ஙனமே வருதலும், ஆகிய இவை, இழிவு ஓவு - இழிவொழிந்த, அன்புளான்கண் - அன்புள்ள மகனிடத்தே, உள - இருக்கின்றன.*

*மேற்சொன்ன மூன்று பாடல்களானும் அடிகள், கற்போனுக்கும் கற்பிப்போனுக்கு மிருக்க வேண்டிய முறைமைகளை நன்கெடுத்து விளக்கினார்கள்.*

*இராய் - ஆய் - முன்னிலை யேவலொருமை, உம்மைகள் எண்ணுப் பொருளன.*

**7**

## முருகனே கடவுளும் அடிகளுமாவன்

**சொற்ற விடாப்பொருளுந் தூய்துற்ற வையனும்வேல்**
**பற்று மலர்க்கையன் பைஞ்சுரும்பர் - சுற்றுந்**
**தொடைமுருக னென்றே தொழுவார் நினைப்புந்**
**தடையுறுமோ முற்றாமற் றான்.**

*சொற்ற - மேலே சொல்லப்பட்ட, விடாப்பொருளும் - உயிர்களைவிட்டுப் பிரியாத பொருளாகிய கடவுளும், தூய்து உற்ற - நலம் பொருந்திய, ஐயனும் - அடிகளும், வேல்பற்றும் - வேலைத்தாங்கியுள்ள, மலர்க்கையன் - முளரிமலர் போன்ற கையனும், பைஞ்சுரும்பர் - அழகிய வண்டுகள், சுற்றும் - மொய்க்கும், தொடைமுருகன் - அலங்கணிந்துள்ளவனுமாகிய முருகக்கடவுள், என்றே - என எண்ணியே, தொழுவார் - வணங்குகின்றவர்களுடைய, நினைப்பும் - எண்ணமும், முற்றாமல் - முடிவடையாமல், தடையுறுமோ- தடைப்படுமோ? (தடைப்படாது). தான் - அசை.*

*எங்கும் நிறைந்து எல்லப் பொருள்களிலுங்கலந்துள்ள இறைவனே ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெருந் தொழில்களையும் நினைப்பினாலேயே நிகழ்த்துமாறு வடிவத்தோடும் விளங்குகின்றனன். வடிவத்தோடு கூடிய அக்கடவுளே மக்களுடைய உள்ள நிலைமையை யுணர்ந்து அவர்தம்மை ஆண்டவனிடத்தே ஆற்றுப்படுத்த அடிகளாகவும் வருகின்றனனாகலின், அடிகளையும் கடவுளையும் ஒப்பவைத்து வழிபடவேண்டுமென்றும், அவ்வாறு வழிபடுவோர் எண்ணுவன யாவும் எளிதில் முற்றுப்பெறு மென்றும் அடிகள் அருளிச் செய்தார்கள்.*

*தடை - (தடு + ஐ) - தொழிற்பெயர். முருகன் - முருகு என்பது இளமை, மணம், தேன், அழகு, விழா எனும் பல பொருளொரு சொல்லாம். ஆகலின், என்றும் இளமையுடையான், நன் மணங் கமழும் மேனியான், இன்பப் பொருளாயிருப்போன், கட்டழகுடையான், விழாவுக்குரியான் முருகனெனவாம்.*

8

## செவ்வேள் பெயரைச் சொல்வோ ருறுபயன்

**தணவா வஞர்தணக்குந் தண்ணளிமிக் கோங்கு**
**மணவா நலனணவு மன்றோ - மணவேரி**
**மேய வலங்கலணி மேன்மொய்ம்புச் சேந்தனொரு**
**தூய பெயரைச் சொலின்.**

*மணவேரி மேய* - நறுமணம் பொருந்திய, *அலங்கல் தொடையை* - (பூமாலையை), *மொய்ம்புமேல்*- வன்மையுள்ள தோள்களின் மீது, *அணி* - அணியப் பெற்ற, *சேந்தன்* - செந்தழல் வடிவனுடைய, *ஒரு* - ஒப்பற்ற, *தூய பெயரை* - நலமுள்ள பெயரை, *சொலின்* - சொன்னால், *தணவா* - நீங்காத, *அளுர்* - துன்பம், *தணக்கும்* - நீங்கும், *தண் அளி* - குளிர்ந்த அன்பு, *மிக்கு ஓங்கும்* - மிகுதியாக உண்டாகும், *அணவா* - கிட்டாத, *நலன்* - நன்மைகளெல்லாம், *அணவும்* - கிட்டும், *அன்றோ* - அல்லவோ (ஆம் என்றபடி).

இறைவனுடைய ஒருபெயரைப் பலமுறையும் பயிலல் உள்ளத்தை ஒருவழிப்படுத்தற்கும், அவனுடைய அருளைப் பெறுதற்கும் சிறந்த துணையாம். எப்போதும் "முருகா! முருகா!" வென்று அன்போடு மொழிந்து கொண்டிருந்த ஒருபெண் முதல்வி வீடுபேற்றினை விரைவிற் பெற்ற வரலாறு ஈண்டு நினைந்து கொள்ளற் குரியதாம்.

சேந்தன் - "செக்கருஞ் செம்மையுஞ்சேந்து பாடலமும்" எனப் பிங்கலந்தை கூறுமாற்றானே சேந்து = சிவப்பு ஆகலிற் செந்நிறமுடையான், செந்தழல் வடிவாயிருப்பவனெனவாம்.

**9**

## அயிலோனைப் புகழ்வோரடைவன

**தெருளாக்கு மிக்காரின் றெட்பமதுண் டாக்கு**
**மருளாக்கு மார்வீடுண் டாக்கு - மிருளீர்க்கு**
**மொள்ளொளியே யோலமென வோலிடுவார் சொன்மடுக்கும்**
**வள்ளயிலோ னைப்புகழ்செம் மாப்பு.**

*ஒள் ஒளியே* - விளக்கத்தின் விளக்கமாக வுள்ளவனே, *ஓலம் என* - அடைக்கலம் என்று, *ஓலிடுவார்* - கூப்பிடுவார், *சொல்* - சொல்லை, *மடுக்கும்* - உட்கொள்ளுகின்ற, *வள்* - செவியுடைய, *அயிலோனை* - வேலைத் தாங்கியவனை, *புகழ்செம் மாப்பு* - புகழ்கின்ற இறுமாப்பு, *தெருள் ஆக்கும்* - மயக்கத்தைக் கெடுத்துத் தெளிவடையச் செய்யும், *மிக்காரின்* - பெரியோர்களுடைய, *தெட்பமதுண்டாக்கும்* - முதிர்ந்த அறிவையுண்டு பண்ணும். *அருளாக்கும்* - அருளைப் பெருக்கும், *ஆர் வீடு* - நிறைந்தவீடு பேற்றினை, *உண்டாக்கும்* - உண்டு பண்ணும், *இருள் ஈர்க்கும்* - அறிவின்மையைப் பிளக்கும்.

பசியினால் அழும் பிள்ளைக்கே தாய் பாலையருத்துவது போன்று, இறைவனும் தம்மிடத்தே அடைக்கலம் புகுந்து அழுவார்க்கே இறங்கியருள்கின்றா னாகலின் "ஒள்ளொளியே ...... அயிலோன்" எனப்பட்டது. "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்று ஒலியுறுவர் உரைத்தருளியவாறு, அவனைப்

*புகழ்வோர் நலனனைத்துமடைந்து, ஈற்றில் வீடு பேற்றையும் அடைவரென்றருளிச் செய்தார் அடிகளென்க.*

*செம்மாப்பு என்னுஞ் சொல் பல பயனிலைகளைக் கொண்டது.*

10

## அன்பே அருளுக்கு அடியெனல்

**அள்ளிலைவே லண்ணாவா வாண்மழவா வென்றரற்றி**
**யுள்ளுலைவின் றங்காற்போ துள்ளன்பே - மள்ளற்**
**றுனிமல் லறுக்குமிடற் றூய வருளாந்**
**தனிவள் ளிருக்குந் தடறு.**

*அள் இலை வேல் அண்ணவா - கூர்மை பொருந்திய இலை போன்ற வேலையுடைய இறைவனே, ஆள் மழவா - ஆண்டருளும் இளம் பூரணனே, என்று அரற்றி - என்று அழுது, உள் உலைவின்று - ஒருமைப்பட்ட உள்ளத்தோடு, அம்கால் போது - (ஆண்டவனுடைய) அழகிய அடிமலர்களை, உள் அன்பே - நினைக்கும் அன்பொன்றுமே, மள்ளல் - வன்மையுள்ள, துனிமல் அறுக்கும் - துன்பத்தின் பெருக்கத்தைத் துடைக்கும், மிடல் - வலிமை பொருந்திய, தூய அருளாம் - நலமுள்ள அருளாகிய, தனிவள் - ஒப்பற்ற வாள், இருக்கும் தடறு - இருக்கின்ற உறையாகும்.*

*ஈண்டு, அடிகள் இறைவனுடைய சேவடிகளில் அன்பு செய்தே அவனுடைய அருளைப் பெறுதல் வேண்டுமென்னும் உண்மையை மிக அழகு படப் புனைந்துரைத்த தோடு அன்பு செய்யும் முறையையும் சுருக்கமாக விளக்கியருளினார்.*

*அண்ணாவோ - என்னும் விளியுறுபேற்ற பெயர் 'அண்ணாவா' என நின்றது.*

11

## இறைவனன்பர்க்கு இன்னாவொன்றே யரிதெனல்

**பொன்னடியிற் பின்றாப் புரிவுடையார்க் கிந்நாட்டி**
**லென்னரிதா மின்னாவொன் றேயரிதாங் - கொன்னயிலோ**
**யென்னையது தானுறுமா றென்கடவு ணீசெய்ய**
**வின்னுநினை யாநீ ரெவன்.**

*கொன் அயிலோய் - பெருமை பொருந்திய வேலவனே! பொன்னடியில் - (உன்னுடைய) அழகிய கால்களில், பின்றாப் புரிவுடையர்க்கு - பிறகிடாத தலைமையான அன்புடையவருக்கு, இந்நாட்டில் - இந்த நாட்டில், என்னரிதாம் - கிடைத்தற்கரியது*

*யாதாம்? (ஆராயுமிடத்து), இன்னா ஒன்றே - துன்ப மொன்றே, அரிதாம் - அரிய தாம், அது தான் - அவ்வன்புதான், என்னை - அடியேனை, உறுமாறு - வந்து சாருமாறு, என் கடவுள் நீ செய்ய - என்னுடைய கடவுளாகிய நீ செய்ய, இன்னும் - இதுகாறும், நினையா நீர் - நினையாமலிருக்கின்ற தன்மை, எவன் - யாது?*

*இறைவனிடத்தே தலையாய அன்பைச் செலுத்தும் அடியவர் எல்லாச் செல்வங்களையும் உடையவராவரென்று சொல்லப்பட்டது. இது பற்றியே "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்னும் அப்பர் அருண்மொழியும் எழுந்துளதென்க.*

*அயிலான் - என்னும் பெயர் இறுதி யவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் விளியுரு பேற்றது. எவன் - வினாவடியாகப் பிறந்த அஃறிணைப் பொதுக் குறிப்பு முற்று.*

12

### முதல்வனை வீடளிக்க வாராயென விளித்தல்

**சேலுலாங் கட்கொடிச்சி தேடழக சேயவநின்**
**வாலுலாங் காற்கீழ் வதிந்துய்வான் - மாலுலாம்**
**பாடகற்றி யுன்புகழே பன்னடியேற் கப்பொருவில்**
**வீடளிக்க வாராய் விரைந்து.**

*சேல் உலாம் கண்-சேற் கெண்டையை யொத்த கண்களையுடைய, கொடிச்சி - கொடிச்சி யென்னும் பெயர் வாய்ந்த முதல்வி, தேடு அழக - தேடிய அழகனே, சேயவ - முருகனே, நின் - உன்னுடைய, வால் உலாம் - தூய்மை பொருந்திய, கால் கீழ் - கால்களின் கீழே, வதிந்து - இருந்து, உய்வான் - பிழைத்தற்காக, மால்உலாம் - மயக்கம் பொருந்திய, பாடு அகற்றி - வேலைகளை விட்டு, உன்புகழே பன்னு - உன்னுடைய புகழையே உரைக்கின்ற, அடியேற்கு - அடியேனுக்கு, அ பொருவில் - அந்த ஒப்பற்ற, வீடு அளிக்க - வீடு பேற்றினைத் தர, விரைந்து வாராய் - விரைந்து வருவாயாக.*

*மான் மகளாய முதல்வி இருமுறை நோன்பு நோற்று முருகக்கடவுளை அடைந்தமையால், அடிகள் 'கொடிச்சி தேடழக' என்றார். இப்பாட்டின்கண், இறைவனுடைய தூய்மையான கால்களின் நீழலை யடைதலே ஒப்பற்ற வீடு பேறென்னும் உண்மை குறிப்பாக உணர்த்தப்பட்டது. அடிகள் துறவற நிலையை மேற்கொண்டு முருகக்கடவுளுடைய புகழொன்றனையே உரைக்கும்*

பெருநோன்புடையராகலின், 'மாலூலாம் பாடகற்றி யுன்புகழே பன்னடியேற்கு' என்று தம்மைக் கூறிக்கொண்டார்.

அழக, சேயவ - அண்மை விளி. உய்வான் - வான் - எதிர்காலவினை யெச்ச விகுதி.

13

## இறைவனருளைப் பெற்றாரே பெரியரெனல்

**கையலர்கண் மொட்டித்துன் காலலர்க ணோக்குமருண்**
**மெய்யரைமிக் காரெனுமான் மெய்ப்பனுவல் -பொய்யி**
**லுழிதருநா னம்மிக்கா ரொண்சொற்காண் பேன்கொல்**
**கொழிதமிழெஃ கண்ணால் குயில்.**

கொழி தமிழ் எஃகு அண்ணால் - வளப்பம் பொருந்திய தமிழுக்குடையவனான வேற்பெருமானே! கை அலர்கள் மொட்டித்து - மலர் போன்ற கைகளைக் கூம்பிக் கொண்டு, உன் கால் அலர்கள் - உன்னுடைய கால்களாகிய மலர்களை, நோக்கும் - நோக்கி நிற்கின்ற, அருள் மெய்யரை - அருளாளரை, மெய்ப்பனுவல் - உண்மையான நூல், மிக்கார்எனும் - பெரியோர்கள் என்று சொல்லும், பொய்யில் உழி தருநான் - பொய்யிலே கிடந்து உழலுகின்ற அடியேன், அம்மிக்கார் - அப்பெரியோர்களுடைய, ஒண் சொல் - தூய சொற்களின் முடிவை, காண்பேன் கொல் - பார்ப்பேனோ? குயில் - (அடியேனுக்குச்) சொல்லியருள்வாயாக.

அடியவர்களுடைய மொழிக்குத் துணை 'முருகன்' எனும் பெயரும், விழிக்குத் துணை முருகனுடைய மென்மலர்க் கால்களுமே யென்று ஒலியுறுவர் உரைத்தருளியவாறு, ஈண்டு அடிகளும், அருளாளர் தொழில் இறைவனுடைய மலர் போன்ற கால்களை எப்போதும் நோக்கி நிற்றலே யென்று தெரித்தருளினார்.

ஆல் - அசை. உழிதரும் - தா - துணைவினை. 'அண்ணல்' எனும் பெயர் அண்ணால் என அயல் நீண்டு விளியுரு பேற்றது. 'காண்பேன் கொல்' என்றது காண்பேனோ என்னும் பொருள்பட வருதலிற் 'கொல்' ஐயமாம்.

14

## மறைபொருளறியக் குறையிரந்து வேண்டல்

**மூவெயிலு மட்டவற்கு முன்னொருநா ணீசொற்ற**
**தேவெளிறர் நாடொண்ணா வின்புறுவீ - டோவலிலஃ**
**திவ்வெளிற னுக்குறுமோ வென்றழுங்கு மென்கழும**
**லெவ்வழியஃ குஞ்சே யியம்பு.**

சேய் - செவ்வேளே, மூ எயிலும் - பொன், வெள்ளி இரும்பாலாகிய மூன்று ஊர்களையும், அட்டவற்கு - (சிரித்து) எரித்தவருக்கு, முன் ஒரு நாள் - முன்னே ஒரு நாள், நீ சொற்றதே - நீ செவியறிவுறுத்தியதே, வெளிறர்நாட ஒண்ணா - அறிவில்லாதார் நாடுதற்கரிய, இன்புறு வீடு - இன்பம் நிறைந்த வீடுபேறு, ஓவல் இல் அஃது - குறைவில்லாத அச்செல்வம், இவெளிறனுக்கு - அறிவில்லாத அடியேனுக்கு, உறுமோ -கிட்டுமோ, என்று அழுங்கும் - என வருந்தும், என் கழுமல் - எனது மயக்கம், எவ்வழி அஃகும் - எங்ஙனங் குறையும், இயம்பு - சொல்லி யருள்வாயாக.

முருகவேளே மறைமுதற் பொருளைச் செவியறிவுறுத்தல் வேண்டுமென்று முன்னர் அடிகள் விருப்புற்றிருந்து பின்னர் அது கிடைக்கப் பெற்றாராகலின், அங்ஙனம் விரும்பிய காலத்தே இயற்றிய இச்செய்யுளில் ‘அஃதிவ் வெளிறனுக்குறுமோ வென்றழுங்கு மென்கழுமல்’ என்றார்.

சேய் - இயல்பாக நின்று விளியேற்றது. 15

### சேந்தனை வருக வென்றழைத்தல்

**நோக்கி விழிகளிப்ப நுண்செவிகேட் டுக்களிப்ப**
**நாக்கிழமை சொற்று நனிகளிப்ப - நீக்க**
**நினைந்தெனெஞ் சங்களிப்ப நீமஞ்ஞை வந்துட்**
**கனிந்தழைதெள் ளின்பக் கடால்.**

தெள்ளின்பக் கடால் - தெவிட்டாத இன்பக்கடலே, நோக்கி விழி களிப்ப - உன்னைப் பார்த்துக் கண்ணானது மகிழ்ச்சியடைய, நுண்செவி கேட்டுக் களிப்ப - நுட்பமான காது (உன் மெய்ம் மொழியைக்) கேட்டு மகிழ, நா கிழமை சொற்று - நாக்கு (உன் பெருமையைக்) கூறி, நனிகளிப்ப - மிகவும் மகிழ, நீக்கம் - தளையொழிவை, நினைந்து - எண்ணி, என் நெஞ்சம் களிப்ப - அடியேனுடைய நெஞ்சம் மகிழ, நீ மஞ்ஞை வந்து - நீ தோகை மீது வந்து, உள் கனிந்து - உள்ளமிரங்கி, அழை - கூப்பிடுவாயாக.

கண்ணிற்குப் பயன் கடவுளைக் காணலும், காதிற்குப் பயன் அவனுடைய மெய்ம்மொழியைக் கேட்டலும், நாவிற்குப் பயன் அவனுடைய புகழைக் கூறலும், நெஞ்சிற்குப் பயன் - அவனை நினைத்தலு மா மென்க.

களிப்ப - அ - எதிர்கால வினையெச்ச விகுதி. 16

**இறைவனருளைப்பெற நெஞ்சந்துணைநிற்க வேண்டுமெனல்**

**எண்ணா லளக்கப் படானயிலோ னென்றுகரி**
**சண்ணா மறைகூறிற் றாயினுமிம் - மண்ணார்**
**பொருளே விழையாத புத்தெண்ண மேநின்**
**னருளா லழுங்க லடும்.**

*எண்ணால் - அளவை நூல்களால், அயிலோன் - வேற்கடவுள், அளக்கப்படான் - அளவிடப்படாதவன், என்று - என்று, கரிசு அண்ணா மறை - குற்றமில்லாத முதனூல், கூறிற்றாயினும் - சொன்ன போதிலும், இம் மண்ணார் பொருளே விழையாத - இஞ்ஞாலத்தார் பொருளை விரும்பாத, புத்தெண்ணமே - புதிய எண்ணமானதே, நின் அருளால் - கடவுளாகிய நினதருள் வலியால், அழுங்கல் - உயிர்த்துயரத்தை, அடும் - கொல்லும்.*

*இச்செய்யுளில் அடிகள், ஈண்டுள்ளார் விரும்பு பொருள்களை விரும்பாத நெஞ்சமானது அளவிற் கடங்கா இறைவனாகிய நினதருளைத் தானே தன்னுடம்பாட்டி லாக்கிக் கொண்டு உயிர்த்துன்பத்தை யொழிக்கு மென்று கூறுநராயினார். ஆகவே, நெஞ்சு உய்வுக்குங் கேட்டுக்கும் இடமாயிருக்கின்ற தென்னு மோருண்மையை யுணர்த்தி அந்நெஞ்சு நன்னெஞ்சாக வேண்டுமெனலு மறிவிக்கப்படுவதாயிற்று.*

*பொருளே - ஏ - அசை.* 17

**இறைவன் அடிகளை யாட்கொண்ட முறைமை கூறல்**

**நன்றல் பிறிதேசூழ் நெஞ்சுளனாய் நாணாளு**
**நின்ற வெனைத்தடுத்துன் னெய்தையரு - ளொன்றக்**
**கருதுநெறி யுய்த்த கருந்தண் ணளிச்சேய்**
**வருதியென்றுங் கூறாய் மகிழ்ந்து.**

*நன்றல் பிறிதே சூழ் - நன்மையல்லாத மற்றதையே கொள்கின்ற, நெஞ்சுளனாய் - நெஞ்சை உடையவனாய், நாள் நாளும் நின்ற - எப்போதும் இருந்த, எனைத்தடுத்து - அடியேனைத்தடுத்து, உன்நெய்தை அருள் ஒன்ற - உன்னுடைய பெருமை மிக்க அருளையடையுமாறு, கருதுநெறி - எண்ணுகின்ற வழியில், உய்த்த - செலுத்திய, கரும் தண்ணளிச் சேய் - பேரன்பையுடைய செவ்வேளே.*

வருதி என்றும் - அடியேனை வருகவென்றும், மகிழ்ந்து கூறாய் - மகிழ்ச்சியோடு கூறுவாயாக.

மக்கள் ஒரோ வழி வழூஉ நடை கொள்ளினும் இறைவன் அவரவர்களுடைய முன்வினைக் கேற்பத் தண்ணளியினால் வந்து தடுத்து ஆட்கொள்வன் என்பது இப்பாடலாற் பெறப்படுகின்றது.

18

## உடம்புள்ளபோதே உறுபயன் பெறவேண்டு மெனல்

**உடம்பறிவின் றாயினுமஃ துள்ளபொழு தேமெய்**
**யிடம்பெறுதன் மேல்வீ டெனத்தூ - வுடம்பருரை**
**யுள்ளதுமெய் யன்றோவே லோச்சிறைவ வென்னுடம்பைத்**
**தள்ளளவுங் காத்தா டக.**

வேல் ஓச்சு இறைவ - (பகைமீது) வேலைச் செலுத்துங் கடவுளே, தக - தகுதியை யுடையவனே, உடம்பு அறிவின் றாயினும் - உடல் அறிவில்லாத பொருளாயினும், அஃது உள்ள பொழுதே - அஃது இருக்கும்போதே, மெய் - மெய்ப்பொருளாகிய உயிர், இடம் பெறுதல் - இன்ப நிலையை யெய்துதல், மேல் வீடு என - மேலான விடுதலை யென்று, தூஉடம்பர் - தூய்மையான மெய்யர், உரை உள்ளது - உரையிருப்பது, மெய்யன்றோ - உண்மையல்லவோ, என் உடம்பை - அடியேனுடைய உடலை, தள்ளளவும் - கழிக்குமளவும், தக - தக்கபடி, காத்து ஆள் - காத்து ஆளுவாயாக.

உடலில்லாமல் இம்மண்ணுயிருக்குச் செயலில்லையாகலானும், உயிரின் குற்றத்தைப் போக்கி அதனைத் தூய்மைப்படுத்தவே இறைவன் உயிருக்கு உடம்பையும், பிற பொருள்களையும் கொடுத்திருக்கின்றா னாகலானும், ஓவியம் எழுதச் சுவர் அணைப்பாதல் போல, உயிர் விடுதலையடைய உடல் அணைப்பாக இருத்தல் வேண்டுமென்று கூறப்பட்டது. இன்னும், உடம்புள்ள போதே உயிர் பேரின்பத்தைப் பெறுதலே சிறப்பென்று பெரியோர் சொற்றமையின், அடிகள், தாம் உடலாலாய பயனைப் பெற்று அவ்வுடம்பைக் கழிக்கு மளவும் அதனைக் காத்தருள வேண்டுமென்று, கடவுளை வேண்டினாரென்க.

தூ - தூய்மை யென்னும் பண்புப் பெயர் ஈறு போய் இடையகர வொற்றுக் கெட்டுத் தூ - என நின்றது. உடம்பர் - அர் - பலர்பாற் படர்க்கை விகுதி.

19

## உடலுக்கு மெய்யென்னும் பெயர் வந்த வரலாறு

**மறைந்தவுயி ரைத்தனது வண்மையினாற் காட்டிப்**
**பிறங்குதலின் மெய்யென் பெயர்தான் - பிறந்தவுடல்**
**பெற்றதிது நன்குள்ள ஞான்றே பெறற்குனடி**
**யற்றமில்வே லோயெற் கருள்.**

*அற்றம் இல் - சோர்வில்லாத, வேலோய் - வேலவனே, மறைந்த உயிரை - புலன்களுக்குத் தெரியாமல் மறைந்துள்ள உயிரை, தனது வண்மையினால் - (உடலானது) தன்னுடைய ஆற்றலினால், காட்டி - அறிவித்து, பிறங்குதலின் - மிளிர்தலின், மெய் என் பெயர்தான் - 'மெய்' என்னும் பெயரைத்தான், பிறந்த உடல் - (இடையிலே) தோன்றிய உடல், பெற்றது - ஏற்றது, இது - இவ்வுடல், நன்கு உள்ள ஞான்றே - நன்றாக வுள்ளபோதே, உன் அடி பெறற்கு - உன்னுடைய சேவடிகளைப் பெற, எற்கு அருள் - அடியேனுக்கு அருள் செய்வாயாக.*

*பார்வைக்குப்புலப்படா வுயிரைப் புலப்படுமாறு காட்டி நிற்பது உடம்பே யாகலின் அதற்கு 'மெய்' என்னும் பெயர் போந்தது. அடிகள், பொய்யுடம்பினை மெய்யென்பது நல்வழக்கென்பார் கூற்றுத் தள்ளற் பாலதாமன்றிக் கொள்ளற் பாலதாகா தென்னுந் தங் கொள்கையை அடுத்த பாடலிலே வைத்துள்ளார்.*

*'வேலன்' என்பது 'வேலோய்' என இறுதியவ்வாய் ஈற்றயல் திரிந்து விளியேற்றது. எற்கு - என் +கு = எற்கு. (நன்னூல் - மெய்யீற்றுப் புணரியல் - 15).*

**20**

**புல்லெதிர்ப்பு றாமுதுவோர் பொய்யுடம்பை மெய்யென்ற**
**னல்வழக்கென் றேசிலவர் நாட்டுநடு - வல்வழக்காய்**
**நிற்குங்கொ லோயா னிகழ்த்துண்மை போலெனையாள்**
**பொற் குன்றுய் சேந்தா புகல்.**

*எனை ஆள் - என்னை யாள்பவனும், பொற்குன்றுஉய் - அழகிய குன்றின் மீது வீற்றிருப்பவனுமாகிய, சேந்தா - செவ்வேளே, புல் எதிர்ப்பு உறா - கீழ்மையும் மாறுபாடுமில்லாத, முதுவோர் - பெரியோர், பொய் உடம்பை, அழிதலினால் பொய்ப்பட்டுப் போகின்ற உடம்பை, மெய் என்றல் - 'மெய்' என்னும் பெயரிட் டழைத்தல், நல்வழக்கு என்றே - நல்ல வழக்கு (மங்கல வழக்கு) என்றே, சிலவர் நாட்டு நடு - சிலர் ஆய்ந்து கூறும் முடிவு, நிகழ்த்து உண்மை போல் - மேலே கூறிய உண்மையைப் போல, வல் வழக்காய்*

*- வலியவழக்காய், நிற்கும் கொலோ - நிற்குமோ? புகல் - சொல்லி யருள்வாயாக!*

*ஆள் - வினைத்தொகை.* **21**

### அடிகளை ஆண்டருள் இறைவன் சேந்தனெனல்

**உயவில்வெண் குன்றிறைவற் கோர்குழவி யாய்மான்**
**மயலிரிய நோக்கயின்மன் னாய்நின் - பெயரிய**
**வெற்கருள்செய் வோனாகி யெங்குநிறை வானாகி**
**நிற்பதெது சேந்தனெனு நீ.**

*உயவு இல் - பெருமை மிக்க, வெண்குன்று இறைவற்கு - வெள்ளி மலையுறை கடவுளுக்கு, ஓர் குழவி ஆய் - ஒப்பற்ற பிள்ளையாய், மால் மயல் இரிய - (உறவிகளின்) பெரிய இருள் ஒழிய, நோக்கு - கடைக்கணோக்கத்தைச் செய்கின்ற, அயில் மன்னாய் - வேலைத்தாங்கிய இறைவனாய், நின் பெயரிய எற்கு - உன்னுடைய பெயரைக் கொண்ட அடியேனுக்கு, அருள் செய்வோன் ஆகி - அருள் செய்கின்றவனாய், எங்கும் நிறைவானாகி - எங்கும் நிறைந்துள்ளவனாய், நிற்பது எது - நிற்பது எப்பொருள்? சேந்தன் எனும் நீ - சேந்தன் என்னும் பெயரையுடைய நீயே யாம்.*

*இச்செய்யுளில் அடிகள், தம்மை யாண்டருளிறைவனாகிய முருகக்கடவுளை முன்னிலையாக்கிக் கொண்டே சில வினாக்களை யெழுப்பி அவற்றிற்குத் தாமே விடையுங் கூறினாரென்க.*

*இல் - எதிர்மறைப் பெயரெச்சம்.* **22**

### சேந்தன் பெயர்கள் பிணிக்கு மருந்தெனல்

**மாணன்மிக் கோங்குகட வுட்பிடிகேள் வன்மாதர்**
**வாணரைத் திங்களூறு வன்கிடையா - னேணயில்வே**
**லேற்றன் றிறும்பெறிவே ளேர்மஞ்ஞை யேறியெனு**
**மாற்றம் பிணிக்கு மருந்து.**

*மாணல் மிக்கு ஓங்கு - மாட்சிமை மிகுந்து வளரப் பெற்ற, கடவுட் பிடி - கடவுளர் தலைவன் (இந்திரன்) மகளுக்கு, கேள்வன் - கணவன், மாதர்வாள் நரைத் திங்கள் உறு - அழகும் ஒளியுங் கூடிய வெண்ணிலா வார்ந்த, வன்கிடையான் - வலிய கதுப்புக் கற்றையை யுடையவ னிடத்தில், ஏண் அயில் வேல் ஏற்று - வலிமையும் கூர்மையுமுள்ள வேலைப் பெற்று, அன்று - அந்நாளில், இறும்பு எறிவேள் - மலைவடிவாக நின்ற அவுணனைப் பிளந்த செவ்வேள், ஏர் மஞ்ஞை*

ஏறி - அழகிய மஞ்ஞையின் மீது ஏறிச் செல்வோன், எனும் - என்று சொல்லும், மாற்றம் - சொற்கள், பிணிக்கு - பிறவி நோய்க்கு, மருந்து - மருந்தாகும்.

முன்னர் 9, 10வது பாடல்களில் இறைவனுடைய ஒரு பெயரைச் சொல்லுவோரும் அவனைப் புகழ்வோரும் பெறும் பயன்களிவை யென யினிதெடுத் துரைக்கப்பட்டன. ஈண்டப் பெயர்க்கு வேறான சில பெயர்களும், அவற்றைச் சொல்லுதலாலெய்து பயனு மெடுத் துரைக்கப் பட்டன. இவ்வாறு இறைவன் பெயர்களை யெப்போதுஞ் சொல்லிக் கொண்டிருத்தலால், எல்லா நன்மைகளும் பெற்று இறுதியில் வீடு பேற்றையும் பெறலாமென்னும் உண்மை ஏறக்குறைய எல்லாக் கொள்கையினராலும் ஏன்று கொள்ளப்பெற்றதாகும். மறுமைப் பிணிக்கு மாத்திரமல்லாமல் இம்மைப் பிணிக்கும்இறைவன் பெயரே இனிய மருந்தாகும் என்க.

23

## இறைவனைத் தொழாதார் நிலைமை யாதெனல்

**தேனிருக்கு நின்னந்தாட் செம்மலரைச் சென்னிமுடித்**
**தேநிரப்பி லாவழகுற் றேயுய்யா - தூனிருப்போ**
**ரென்பேறிங் கெய்துவர்மற் றென்பேறங் கெய்துவரென்**
**னன்பேறன் பாரயிலண் ணால்.**

அன்பு ஆர் - அன்பு நிறைந்த, அயில் அண்ணால் - வேற்கடவுளே, தேன் இருக்கும் - தேன் பொருந்தியுள்ள, நின் அம்தாள் செம்மலரை - உன்னுடைய அழகிய அடிகளாகிய சிவந்த மலர்களை, சென்னி முடித்து - தலையிலணிந்து, நிரப்பு இலா - குறைபாடில்லாத, அழகு உற்று - நலம் பொருந்தி, உய்யாது - வாழாது, ஊனிருப்போர் - உடலோடிருப்பவர்கள், என் பேறு இங்கு எய்துவர் - என்ன செல்வத்தை இங்கே அடைவார்கள், என் பேறு அங்கு எய்துவர் - மறுமை யிற்றான் என்ன செல்வத்தை யடைவார்கள், நன் பேறு என் - (அவர்களுக்கு) வேறு நல்ல செல்வந்தான் யாது.

கடவுள் வழிபாடில்லாதார், உண்பதும் உறங்குவதும் மூப்புப் பல்வகை நோய் இவற்றால் இறப்பதுந்தவிர வேறொன்றுங் காண்பதில்லை யாகலானும், இறந்தபின்னரும் ஒரு நலனு மின்றி உழல்வரென்பது முடிவாகலானும், அடிகள் "என் பேறிங் கெய்துவர் ..... என் நன் பேறு" என்றார். இதனானன்றோ 'கடவுள் வழிபாடில்லாதார் பிறப்பிலே நெருப்பை வை' (திக்கநீசார்ச்சநம்ஜந்ம) என்று மறை கூறுவதாயிற்று.

24

## முற்பிறவியில் இறைவனை வழிபடாதுழன்றவரே இப்போதும் உழல்கின்றா ரெனல்

**சோர்வுந் துயருந் துறுமிய வுள்ளத்தோ**
**டார்முந் துழன்றவரோ வன்னார்தா - மார்வின்றி**
**யிஞ்ஞான் றுழல்வா ரிறையுனையு முன்னிலா**
**ரெஞ்ஞான்று மேய்செவ்வே ளே.**

*எஞ்ஞான்றும் - எப்போதும், ஏய் செவ்வேளே - (எப்பொருளிலும்) விராய செவ்வேளே! சோர்வும் - வாட்டமும், துயரும் - துன்பமும், துறுமிய - நிறைந்த, உள்ளத்தோடு - நெஞ்சத்தோடு, முந்து ஆர் - முற்பிறவியிலேயார், உழன்றவரோ - உள்ளுலைவு கொண்டவரோ, அன்னார்தாம் - அவர்களே, ஆர்வு இன்றி - ஆராய்தலில்லாமல், இஞ்ஞான்று - இப்போது, உழல்வார் - அவ்வுலைவு கொள்வார், இறை உனையும் - கடவுளாகிய உன்னையும், முன்னிலார் - நினையாமலிருப்பார்.*

*கடவுளை வணங்காதாரே எப்போதுந் துன்பத்திற்குட்பட்டுழல் வாரென்பதும், அவர்கள் கடவுளை வணங்கத் தலைப்படும் வரையில் நன்னிலைமையை யடைய மாட்டார் களென்பதும் இப்பாடலாற் பெறப்படுகின்றன.*

*ஆர் - 'யார்' என்பதன் மரூஉ.* 25

## அறிஞர், தெள்ளிய நூலுணர்ச்சியையுங் கடவுளருளாலேயே பெறுவரெனல்

**ஒண்ணூ லுணர்ந்துழியு மோகையர்சொற் கேட்டுழியுந்**
**தெண்ணூ லுணர்வுண்டா மேசிலர்க்கத் - தெண்ணூ**
**லுணர்வுண்டா மாசேந்த னொண்டாளே நாட**
**லுணர்வுடையர் செய்கையெனு மோத்து.**

*ஒள்நூல் - சிறந்த நூல்களை, உணர்ந்துழியும் - கற்றறிந்த விடத்தும், ஓகையர் சொல் - பேரின்பத்தைப் பெற்ற பெரியோர் சொற்களை, கேட்டுழியும் - கேட்டவிடத்தும், சிலர்க்கு - சிலருக்கு, தெள்நூல் - தெளிவான நூல்களின், உணர்வு உண்டாம் - புலமை உண்டாகும், அத்தெள்நூல் - அப்படிப்பட்ட தெள்ளிய நூல்களின், உணர்வு - புலமை, உண்டாமா - உண்டாகுமாறு, சேந்தன் - செவ்வேளினது, ஒண்டாளே - அழகிய அடிகளையே, நாடல் - நாடி நிற்றல், உணர்வுடையர் - அறிஞர்களுடைய, செய்கை எனும் - செய்கையென்று கூறும், ஓத்து - மறை.*

*நூலுணர்ச்சியை விரும்புவோர் அதனை கல்வி கேள்வி வாயிலாகப் பெறுவர்; அறிஞர்கள் அதனையும் எளிதாகவே கடவுளுடைய அருள் வாயிலாகப் பெறுவர் எனப்பட்டது. அவ்வாறும் வருமோவெனின், அப்படி வரப்பெற்றார் பலராகலானும், இறைவனருளால் வாராத தொன்றுமில்லை யாகலானும் வருமென்க.*

*உணர்ந்துழி, கேட்டுழி - 'உழி' ஏழாம் வேற்றுமை யுருபு, உண்டாமா - 'ஆ' ஆறு என்பதன் வேறுபாடு.*

**26**

## துன்பத்தைப் போக்கியருள வேண்டல்

**கோடலு நீத்தலுமுற் கோள்வினைமட் டேயென்ப**
**நீடலு மஃகலுமின் னீரவரென் - னேடலுணர்**
**காளாய் கவின்குழைசேர் காதா களைகணயி**
**லாளா வெனதளுர் செற்றாள்.**

*என் ஏடல் - அடியேனுடைய கருத்தை, உணர் காளாய் - உணர்கின்ற காளைத் திறமுடையோனே, கவின் குழை சேர் காதா - அழகிய காதணி யார்ந்த காதுகளையுடையவனே, களைகண் அயில் ஆளா - (எனக்கு) ஆதரவான வேலிறைவனே, எனது அளுர் - அடியேனது துன்பத்தை, செற்று ஆள் - போக்கி யாள்வாய், கோடலும் - கொள்ளலும், நீத்தலும் - தள்ளலும், முன் கோள் வினை மட்டே - பண்டைவல் வினை (ஊழ்) அளவே, என்ப - என்றோதுவார்கள், நீடலும் - நீளுதலும், அஃகலும் - குறைதலும், இல் - இல்லாத, நீரவர் - ஒரு நிறையுடையார்.*

*இறைவன் உயிர்களின் உள்ளத்தில் நிகழுகின்ற விருப்பத்தை யறிந்து அதன்படி அருள் செய்பவனாகலின் 'என்னேடலுணர்காளாய்' என்றுரைத்தார்.*

*உணர் - வினைத்தொகை.*

**27**

## உண்மை பிறங்கும்படி இறைவனை வருக வென்றழைத்தல்

**காற்பூண் கலகலெனக் கைப்பூண் பளபளென**
**நூற்பூண் மிகமிளிர நோன்சென்னி - மேற்பூண்**
**முடிதிகழ வென்முன் முருகநீ வாராய்**
**படிறு படிறாம் படி.**

*படிறு - பொய், படிறு ஆம்படி - பொய்யாகுமாறு, முருக - மாறாத இளமை, அழகு, மணம் முதலிய சிறப்புடையவனே! நீ - நீ,*

காற்பூண் - காற்சிலம்பு முதலிய அணி, கலகலென - கல கல வென்று ஒலி செய்ய, கைப்பூண் - கையிலணிந்துள்ள கடகம் முதலிய அணி, பளபளென - பளபளவென்று ஒளி செய்ய, நூற்பூண் - முப்புரி நூலாகிய அணி, மிக மிளிர - மிகுதியான விளக்கத்தைச் செய்ய, நோன் சென்னி மேல் - வன்மை வாய்ந்த தலையின்மீது, பூண்முடி திகழ - அணிந்துள்ள முடியானது விளங்க, என்முன் - அடியேன் முன்னர், வாராய் - வருவாயாக.

கலகலென - ஒலிக்குறிப்புப் பொருளைத் தருமிடைச் சொல். பளபளென - பண்புக் குறிப்புப் பொருளைத்தருஞ்சொல்.

28

## அடிகள் முருகனை முற்றிலும் நம்பியிருப்பதல்லால் வேறொன்றும் அறியேனெனல்

**ஓய்ந்துகிடக் கும்பண் புளதாலோ நின்கணென்றன்**
**பேய்ந்தவரைக் கொண்ணீ யெனைவினவிற் - றேய்ந்துளநாய்**
**போற்கிடந்துன் றாணம்பு நானென் புகல்கேனன்**
**பாற்புலம்பி வீழ்வ தலால்.**

அன்பு ஏய்ந்தவரை - அன்பார்ந்தவரை, கொள்நீ - ஆட்கொள்ளும் நீ, நின்கண் - (என்னடியவனாம்) உன்னிடத்தே, ஓய்ந்து கிடக்கும் - சும்மா விருக்கின்ற, பண்பு உளதாலோ - தன்மை யிருக்கின்றதோ, என்று எனை வினவின் - என்று என்னைக் கேட்டால், தேய்ந்துள - மெலிந்து போய, நாய் போற் கிடந்து - நாயைப் போலக் கிடந்து, உன் தாள் நம்பு நான் - உன்னுடைய அடி மலரை நம்பியுள்ள நான், அன்பால் - அன்பினால், புலம்பி - அழுது, வீழ்வது அலால் (நின் அடியலர் முன்) வீழ்வதல்லாமல், என்புகல் கேன் - வேறு என்ன சொல்லுவேன்.

சும்மாவிருக்கின்ற தன்மையே 'ஓய்ந்து கிடக்கும் பண்பு' எனப்பட்டது. ஒலியுறுவருக்கு முருகக் கடவுள் 'சும்மாவிரு சொல்லற' என்றுணர்த்தியதும் இந்நிலையேயாம். சும்மா விருத்தல் பெரிதும் அரிதாகலினாற்றான், 'சும்மா விருக்கின்ற திறமரிது' என்றார் தாயுமானாரும். தயங்கலை இயற்கையாகவுடைய உள்ளத்தைச் சும்மா வைத்திருத்தல் அருமையாகலானும், அஃது இறைவனருளின்றி இயலாதாகலானும், அதனை வேறு வழியிற் செலுத்தாமல் ஒரு வழிப்படுத்தி உன் தாளிலேயே வைத்திருக்கின்றேன்; 'சும்மா விருக்குந் தன்மையை அருள வேண்டியவன் நீயே' என்று வினாவிற்குக் குறிப்பாக விடையிறுத்தாரென்க.

என்று - இடைச்சொல்.

29

### முருகனை வீடுபேறருளுமாறு வேண்டல்.

**கண்ணாளர் போற்றுமெண் கண்ணாற்கு மாலுக்கு**
**மண்ணா மலைப்பெயரா ளற்கந்நா - டெண்ணார்**
**பெருக்கி யருள்புரிந்த பெய்கழற்சே யிந்நாள்**
**வெருக்கொ ளெனக்குமருள் வீடு.**

*கண்ணாளர் - கண்ணாட்சியுடையார், போற்றும் - போற்றித் தொழுகின்ற, எண்கண்ணாற்கும் - எட்டுக் கண்களையுடைய மண் பொதுத் தந்தைக்கும், மாலுக்கும் - மருதக் கிழவனுக்கும், அண்ணா மலைப் பெயராளற்கும் - அண்ணாமலையின் பெயரையுடைய ஒலியுறுவருக்கும், அந்நாள் - அந்த நாளில், தெள்நார் பெருக்கி அருள்புரிந்த - மிகவும் அன்பு கூர்ந்து அருள் செய்த, பெய்கழல் சேய் - பெய்கழலணிந்த சேந்தனே, இந்நாள் - இப்போது, வெருக்கொள் - (ஞாலவெறி கண்டு) அச்சங் கொள்கின்ற, எனக்கும் - அடியேனுக்கும், வீடு அருள் - வீடு பேற்றினைக் கொடுத்தருள்வாயாக.*

*கழற் சேய் - வேற்றுமைத் தொகை. எனக்கும் 'உம்' இழிவு சிறப்பு. பெயராளற்கு - என்பதில் 'உம்' தொக்கது.*

30

### பேரின்பத்தைப் பெற வேண்டல்

**தேனோடும் வன்பாற் சிறுமிதுணை வாசேந்தா**
**வானோரு மேனோரும் வாழமுர - ணானோரை**
**யட்டா யறுவர்க்கின் பீந்தாய் நனிபெரிதொன்**
**றிட்டா யிலையே யெனக்கு.**

*தேன் ஓடும் - தேன் ஓடும் வளப்பம் பொருந்திய, வன்பால் சிறுமி துணைவா - குறிஞ்சிநில நங்கையின் துணைவனே, சேந்தா - செவ்வேளே, வானோரும் - விசும்பிலுள்ளவர்களும், ஏனோரும் - மற்றவர்களும், வாழ = உய்தி பெற்றிருக்க, முரண் ஆனோரை = (அவர்கட்குப்) பகைவரானாரை, அட்டாய் - அழித்தாய், அறுவர்க்கு = (பராசரருடைய மக்கள்) ஆறு பெயருக்கும், இன்பு ஈந்தாய் - இன்பத்தைக் கொடுத்தருளினாய், எனக்கு - அடியேனுக்கு, நனி பெரிது ஒன்று - மிகப் பெரிய தொன்றாகிய இன்பத்தை, இட்டாய் இலையே - கொடுத்தாயில்லையே.*

*இன்பத்தைக் கொடுப்பதே இயல்பாகவுள்ள முருகக் கடவுள் அவ்வின்பத்தைத் தமக்குக் கொடுத்தருளவில்லையே யென்று அவரை வேண்டினாரென்க.*

31

## அடிகள் தம்மைத் தடுத்தாட் கொள்ளுமாறு இறைவனைக் கேட்டல்

**அகலுள் விரலாயி னார்க்கிறைவ யாண்டுஞ்**
**சிகலில் சிறப்புறுநச் சேந்தா - விகலிலொரு**
**முற்றடையா மேபுரையின் மூக்கின்றேன் மூக்கின்றே**
**னற்றடையொன் றின்றோவிந் நாள்.**

*அகல் உள் விரல் ஆயினார்க்கு - அகன்ற உள்ளமும் பெரு விரலளவுருவும் ஆனவர்க்கு (குறு முனிவர்க்கு), இறைவ - கடவுளே, யாண்டும் - எவ்விடத்தும், சிகல்இல் - குறைதலில்லாத, சிறப்பு உறு = சிறப்பைப் பெறும், நல்சேந்தா - நல்லசெவ்வேளே, இகல் இல் - பகையில்லாத, ஒரு முற்று அடையாமே - ஒரு நிறைவை யெய்தாமல், புரையில் - குற்றத்தில், மூக்கின்றேன் - தலைப்பட்டுள்ளேன், இந்நாள் - இப்போது, நல் தடை ஒன்று - (அதற்கு) ஒரு நல்ல தடை, இன்றோ - இல்லையோ?*

*"வியன் விறல் முடலை யகலுள்" என்று திவாகரங் கூறுதலால், "அகலுள்" என்பதற்குப் பெருமையெனும் பொருள் கொளப்படும். அங்ஙனமாயின் அகலுள் விரல் என்பதற்குப் பெருவிரலெனப் பொருள் கோடலுமாம்.*

*மூக்கின்றேன், மூக்கின்றேன் - துன்பப் பொருளைத் தரும் அடுக்குத் தொடர்.*

32

## கடவுள் வழிபாடில்லாதார் செய்கையிதுவெனல்

**வழாத்துறையி னின்றென்றும் வாலுற்ற நின்றா**
**டழாச்செய்கை யெற்றென்று சாற்றி - னழாக்கண்**
**ணழவீழ் கலாவழற்றி னாழ்தலே யென்றாம்**
**மழவான் றகரூர் மனா.**

*மழவான் தகர் ஊர் மனா - இளமையோடு கூடிய பெரிய யாட்டுக்கடாவின் மீது ஏறி அதனைச் செலுத்திய தலைவனே, வழாத் துறையில் நின்று - குற்ற மற்ற நெறியில் நின்று, என்றும் - எப்போதும், வால் உள்ள நின் தாள் - தூய்மையான உன்னுடைய அடிகளை, தழாச் செய்கை - தழுவிக் கொள்ளத செய்கை. எற்று என்று சாற்றின் - எப்படிப்பட்டதென்று சொல்லத் துணிந்தால், அழாக் கண் அழ - அழாத கண்ணானது அழும்படியாக, வீழ்கலா - வீழக்கூடாத, அளற்றின் - ஊழலில் (நரகத்தில்), ஆழ்தலே என்றாம் - ஆழ்ந்து விடுதலே எனவாம்.*

*இப்போது கடவுளை வழிபடாதவர்கள், இறுதியில் ஊழலிற் சென்று வீழ்தற்கு வழிதேடிக் கொள்பவராவரெனப்பட்டது.* 33

### இன்ப துன்பங்கட்குரிய நெறிகளிவையெனல்

**துன்பக் குரியவழி நின்னைத் தொழாமையரு**
**ளின்பக் குரியவழி யேசினின்றா - ளன்பர்க்கே**
**யின்சோறிட் டேத்த லெனுமுன் முறையிதுதா**
**னுன்சேர்வுற் றார்க்குறும்வே லோய்.** 33

*வேலோய் - வேலைத் தாங்கிய கடவுளே, துன்பக்குரியவழி - துன்பங்களை யடைதற்குரிய நெறி, நின்னை - உன்னை, தொழாமை - வணங்காமையாம், அருள் இன்பக்குரிய வழி - உன்னுடைய அருளாகிய இன்பத்தைப் பெறுதற்குரிய நெறி, ஏசில் - குற்றமற்ற, நின்தாள் அன்பர்க்கு - உன்னுடைய சேவடிகளில் அன்பு வைத்துள்ளவர் கட்கு, இன்சோறு இட்டு - பசி நோயை நீக்கி இன்பத்தைத் தரவல்ல சோற்றை இட்டு, ஏத்தல் - வழிபடல், எனும் - என்று சொல்லும், முன் முறை - முதனூல், இது தான் - இந் நூனெறிதான், உன் சேர்வு உற்றார்க்கு - உன்னை அடைந்தவர்கட்கு, உறும் - பொருந்தும்.*

*இறைவனுடைய அருளைப் பெறுதற்குரிய வழி அவனை முற்றிலும் நம்பியுள்ள பெரியோர்கட்கு இனிய உணவையிட்டு அவர்களை வழிபடலென ஈண்டு அருளிச் செய்யப்பட்டது. இறைவனருளைப் பெற அவனடியவரை வழிபடல் ஏனெனின், அவன் வேண்டுதல் வேண்டாமை யிலானாகலின். அடியவர் வழிபாட்டையே அவன் வழிபாடாக உவந்து கொள்கின்றான். இந் நுட்பமுணர்ந்தோர், அடியவர் வழிபாடு ஆவின் வாயிற்புல்லைக் கொடுத்து மடியிற் பாலைக்கறப்பதையும், அடியவரை வழிபடாது நேரே இறைவனை வழிபடல் மடியிலேயே புல்லைக் கொடுத்து அம்மடியிலேயே பாலைக் கறக்க நினைப்பதையும் ஒக்கு மென்று ஏற்புடைமை கூறுப.*

*இன்பக்குரிய வழி, துன்பக்குரிய வழி யென்பவற்றில் அத்துச் சாரியைகள் குறைந்தன.*

**34**

### இறைவன் வழிபாடியற்றினோரே எல்லா நலன்களுஞ் சிறக்கவுளா ரெனல்

**கூர்த்த வறிவொழுக்கங் கொன்னாட்டுக் கல்வியும் பொய்**
**தீர்த்தகட வுட்கல்வி யுஞ்சிறக்க - வோர்த்திணையிற்**
**றோன்றி நிறையின்புந் துய்க்குநர்முன் சேந்தனையுள்**
**ளூன்றி விழைந்தவரன் றோ.**

கூர்த்த அறிவு - நுனித்த அறிவும், ஒழுக்கம் - நல்லொழுக்கமும், கொன் நாட்டுக் கல்வியும் - பெருமையுள்ள நாட்டுக்கல்வியும், பொய் தீர்த்த - பொய்ம்மை நீங்கிய, கடவுள் கல்வியும் - வானவன் கல்வியும், சிறக்க - சிறந்துநிற்க, ஏர்த்திணையில் - நன்னிலத்தில், தோன்றி - பிறந்து, நிறை இன்பும் - முழு இன்பத்தையும், துய்க்குநர் - புசிப்பவர்கள், முன் - முன்னாளிலே, சேந்தனை - செவ்வேளை, உள் ஊன்றி - உள்ளழுந்தி, விழைந்தவர் - விரும்பியவர், அன்றோ - அல்லவோ? (ஆம் என்றபடி).

இம்மைப் பயனை யளிக்க வல்ல கல்வியே 'கொன்னாட்டுக் கல்வி' எனப்பட்டது.

கூர்த்த அறிவு, ஒழுக்கம் - என்பவைகளில் உம்மைகள் தொக்கன. தீர்ந்த - எனப்படுவது தீர்த்த என வலித்தல் விகாரம் பெற்றது.

35

## இறையின்பத்தைப் பெற இம்மையின்பத்தை வெறுத்தல் வேண்டுமெனல்

**மண்ணில்யா தோரின்பை மாற்றுபுநச் சேந்தவனை**
**யெண்ணுநர்க் கேயதன்மே லின்புறுமென் - றெண்ணுபுமெய்**
**வாட வழிபடுநர் வானவரு மெச்சுநலங்**
**கூட லுறுதியருள் கொண்டு.**

மண்ணில் = இஞ்ஞாலத்தில் பெறக்கூடிய, யாதோரின்பை - யாதானும் ஓரின்பத்தை, மாற்றுபு-வேண்டா வென்று வெறுத்து, நச்சேந்தவனை - நன்மையைத்தருஞ் செவ்வேளை, எண்ணுநர்க்கு - நினைக்கின்றவர்களுக்கு, அதன் மேல் இன்பு உறும் - அதற்கு மேலான இன்பம் உண்டாகும், என்று எண்ணுபு - என்று நினைத்து, மெய்வாட வழிபடுநர் - உடல் மெலிய வழிபாடு செய்கின்றவர்கள், அருள் கொண்டு - அச்செவ்வேளினுடைய அருளைப் பெற்று, வானவரும் மெச்சு நலம் - விசும்பினரும் மெச்சத் தக்க நன்மையை, கூடல் உறுதி - அடைதல் உறுதியாம்.

இம்மை யின்பத்தை வெறுத்த பெரியோர்களாகிய துறவிகளே ஈண்டு 'மெய்வாட வழிபடுநர்' எனப்பட்டனர்.

வழிபடுநர் - தொழிலால் வரு உயர்திணைப் பலர்பாற் பெயர். எண்ணுபு - எதிர் கால வினையெச்சம்.

36

### துறவறத்தினின்றும் வழுவுவோர் கடைப்பட்டவ ரெனல்

**பழையோர் புகழ்துறவு பற்றியதன் பிற்பெண்**
**புழைவீழ் விழைச்சவாம் புன்மை - கழையீங்**
**கிலையென் றிழிநீ ரிரண்டனையும் போற்கீ**
**ழிலையென்ப சேயின் பினர்.**

*பழையோர்* - தொல்லறவோர், *புகழ் துறவு பற்றி* - புகழுகின்ற துறவறத்தை யடைந்து, *அதன் பின்* - அதற்குப் பிறகு, *பெண் புழை வீழ் விழைச்சு அவாம் புன்மை* - பெண்களைச் சேர விரும்புகின்ற ஈனத்தன்மையும், *ஈங்கு கழை இலை என்று* - இத்திணையில் இனிமைத் தில்லையென்று, *இழிநீர்* - சென்று விடுந் தன்மையும் (ஆகிய), *இரண்டனையும் போல்* - இரண்டு தன்மைகளையும் போல, *கீழ் இலை என்ப* - கடைப்பட்ட தன்மையில்லை யென்று சொல்லுவர், *சேய் இன்பினர்* - செவ்வே ளின்பு நுகர்வோர்.

*கழை* - கரும்பு; இனிமை மேனின்றது. **37**

### அடியவர் வழிபாடே மிகச் சிறந்ததெனல்

**ஒழுகொளிசேர் மேனியயி லோற்கிடுவார் கட்குங்**
**கெழுதகையன் னோனடியே கேளார் - முழுநலனென்**
**றெண்ணித் துறந்தார்கட் கீகுநர்கண் மிக்கவரென்**
**றொண்ணுட்ப நூல்களுரைக் கும்.**

*ஒழுகு ஒளிசேர் மேனி அயிலோற்கு* - மிக்க ஒளிபொருந்திய மெய்யையும் கூரிய வேலையுந் தாங்கிய கடவுளுக்கு, *இடுவார்கட்கும்* - உண்டி முதலிய படைக்கின்றவர்களினும், *கெழுதகை* - உரிமையுள்ள, *அன்னோன் அடியே* - அவ்விறைவனுடைய சேவடிகளே, *கேள் ஆர்* - அன்பார்ந்த, *முழு நலன் என்று* - எல்லா நன்மைகளுமாமென்று, *எண்ணி* - நினைத்து, *துறந்தார்கட்கு* - பற்று அற்றவர்கட்கு, *ஈகுநர்கள்* - கொடுப்பவர்கள், *மிக்கவர் என்று* - சிறந்தவரென்று, *ஒள்நுட்ப நூல்கள்* - நுணுகி யாராயத் தக்க சிறந்த நூல்கள், *உரைக்கும்* - சொல்லும்.

*கெழு* - உரிச்சொல், *உரைக்கும்* - முற்றும்மை. **38**

### பிறர் மெச்சச் செய்வன பயன் படாதெனல்

**பிறர்கண்டு மெச்சப் பெரிதிழைப் போர்பல்**
**லறனொன்று மின்றி யழிமா - றறல்வந்த**
**சேந்தனெஞ் சங்களிக்கத் தெம்மனைவிட் டேநன்கு**
**போந்துள்கு வாரமுக்கும் போம்.**

*பிறர்கண்டு - அயலார் பார்த்து,* *மெச்ச - தம்மைக் கொண்டாட,* *பெரிது இழைப்போர் - அரிய செயல்களைச் செய்வோருடைய,* *பல் அறன் - பல வகைப்பட்ட அறங்களும்,* *ஒன்றுமின்றி - ஒரு பயனு நல்காது,* *அழிமாறு - அழிவது போல,* *அறல் வந்த - நாணற் பொய்கையிற் றோன்றிய,* *சேந்தன் - செவ்வேளினுடைய,* *நெஞ்சம் களிக்க - நெஞ்சமானது மகிழ்ச்சியை யெய்த,* *தெம்மனை விட்டு - வீட்டுப் பகையாம் வீட்டை விட்டு,* *நன்கு போந்து - முற்றத் துறந்து,* *உள்குவார் - நினைக்கின்றவர்களுடைய,* *அழுக்கும் போம் - குற்றமும் நீங்கும்.*

*பிறர் மெச்சுமாறு செய்யப்படும் அறம், அறவுரிமையினின்று செய்யப்பட வில்லையாகலின், அவ்வறம் அழிவது போல முற்றத் துறந்தோர் தம்முடைய அன்பையெல்லாம் புறஞ்செல்ல வொட்டாது தடுத்து இறைவனிடத்தே செலுத்துகின்றாராகலின், அவர் உயிர்ப் புலத்துள்ள குற்றமும் ஒழியுமெனுமுண்மை இங்ஙனறிவுறுக்கப் பட்டது.*

39

**சிறந்த அடியவர்கள் கடவுளை விட்டு நீங்காரெனல்**

**சிற்றெறும்பு நெய்யிருக்குஞ் சேர்வறிந்து சேறல்போ**
**னற்றொழும்ப ருள்ளிடத்தா னாநறிய - பொற்சிலம்புச்**
**சேந்தனையே சேர்ந்துபழந் திட்கலற நற்சுவையை**
**மாந்துவரா லென்று மகிழ்ந்து.**

*சிற்றெறும்பு - சிறிய எறும்புகள், நெய் இருக்கும் - நெய் இருக்கின்ற, சேர்வு அறிந்து - இடத்தைத் தெரிந்து கொண்டு, சேறல் போல் - அவ்விடஞ்செல்வதுபோல, நல்தொழும்பர் - சிறந்த தொண்டர்கள், உள் இடத்தானாம் - உயிர்களின் உள்ளத்திலே இருப்பவனாய், நறிய - நல்ல, பொற்சிலம்பு - அழகிய சிலம்பை யணிந்துள்ள, சேந்தனையே - செவ்வேளையே, சேர்ந்து - அடைந்து, பழந்திட்கல் - பழமையாகச் சேர்ந்துள்ள அச்சப்பாடு, அற - ஒழிய, நற்சுவையை - நல்ல இன்பத்தை, என்றும் - எப்போதும், மகிழ்ந்து - மகிழ்ச்சியுற்று, மாந்துவர் - அடைவர்.*

*மாந்துவரால் - ஆல் - அசை.*

40

## கடவுள் வழிபாடில்லாத பெண்களின் செருக்கு அவர்தம் இளமை கழியுமட்டுமேயெனல்

**காந்தளங் கைகூப்பிக் கட்காவி சாயாது**
**சேந்தனை நோக்கிநிற்குஞ் செந்தன்மை - யேய்ந்தவிள**
**நங்கைமீர் நுங்கடிற நண்ணாமின் னார்செருக்குக்**
**கொங்கைநலங் குன்றளவு மே.**

*காந்தள் அம் கைகூப்பி - காந்தள் மலர் போன்ற அழகிய கைகளைக் கூப்பிக் கொண்டு, காவி கண் சாயாது - கருங்குவளை மலர்களை யொத்த கண்களின் பார்வையைப் புறம்போகவிடாமல், சேந்தனை நோக்கி நிற்கும் - செவ்வேளைப் பார்த்துக் கொண்டிருக்கும், செந்தன்மை ஏய்ந்த - செவ்விய குணம் வாய்ந்த, இள நங்கைமீர் - இள நலம் வாய்ந்த பெண்காள், நுங்கள் திறம் - உங்களுடைய நலத்தை, நண்ணா - அடையப் பெறாத, மின்னார் - மகளிருடைய, செருக்கு - களிப்பு, கொங்கை நலம் - அவர்களுடைய கொங்கைகளின் அழகு, குன்றளவுமே - குறையு மட்டுமே யாம்.*

*பெண்கட்கு இளமை விரைவிற்கழிந்து போவதனாலும், அவர் தம் இளமை கழிந்த பின்னர் அவர்கள் விரும்பப் படாராகலானும், அவர் செருக்கு இளமை உள்ள மட்டுமே யென்றும், இறைவனை வழிபடும் பெண் மக்கள் என்றுங் களிப்புற்றே யிருப்பரென்றும் இச்செய்யுள் கூறுவதாயிற்றென்க.*

41

## உயிர்களின் சிற்றறிவினால் உள்ளத்திருளைக் கெடுக்க முடியாதெனல்

**கண்மூடிக் கட்கடையிற் கைவிரலி னாலழுத்தி**
**லுண்மே வொளியெழுமஃ தல்லொழித்தல் - பண்ணாதவ்**
**வாறேசெவ் வேளொளியி னால்விளங்குன் சிற்றறிவு**
**நூறாதுள் ளன்னுண்ணி யோய்.**

*நுண்ணியோய் - நுட்பமான அறிவையுடைய மகனே! கண் மூடி - கண்களை மூடிக்கொண்டு, கண் கடையில் - கடைக்கண்ணில், கைவிரலினால் அழுத்தில் - கைவிரலை வைத்து அழுத்தினால், உள்மேவு - உள்ளே பொருந்தியுள்ள, ஒளிஎழும் - சுடரானது தோன்றும் (ஆனால்), அஃது - அச்சுடர், அல்ஒழித்தல் பண்ணாது - இருளை ஒழிக்காது, அவ்வாறே - அதுபோலவே, செவ்வேள் - செவ்வேளினது, ஒளியினால் - பொது நிறைவு விளக்கத்தினால்,*

விளங்கு - விளங்குகின்ற, உன் சிற்றறிவு - உன்னுடைய சிற்றறிவு, உள் அல் - உனக்கு இயற்கையாகவுள்ள அறியாமை யென்னும் இருளை, நூறாது - ஒழிக்காது.

ஓரிருட் டறையிலிருந்து கொண்டு கண்களை மூடிக் கடைக்கண்ணை விரலால் அழுத்தினால் ஒரு சிறிய ஒளி தோன்றும். அஃதவ் வறையிருளை ஒழிக்கும் வலியுளதன்று. கண்ணிலெழும் அவ்வொளியை நமது சிற்றறிவிற்கும், யாண்டுஞ் செறிந்துள்ள இருளை நமது அறியாமைக்கும் அடிகள் ஒப்பிட்டுள்ளார்.

நூறுதல் - பொடியாக்கல், அழித்தலென்னும் பொருளில் வந்தது.

42

## ஞாயிற்றொளியாலிருளும், இறைவனருளாலறி யாமையும் போமெனல்

**கண்ணொளியின் ஞாயிற் றொளிகூடிற் கட்பார்வை**
**நண்ணுதல்போ னின்னறிவி னச்சேந்தன் - றண்ணொளிநன்**
**காரி னறியாமை யல்லொழியும் பேரறிவாஞ்**
**சூரி னெறிநின்று சூழ்.**

கண் ஒளியின் - கண்ணிற்கு இயற்கையாயுள்ள ஒளியோடு, ஞாயிற்றொளி - கதிரவனது ஒளியும், கூடின் - கூடினால், கண் பார்வை நண்ணுதல் போல் - கண்ணிற்குப்பிற பொருள்களைப் பார்க்குந் தன்மை உண்டாதல் போல, நின் அறிவின் - உன் சிற்றறிவினோடு, அச்சேந்தன் - அச்செவ்வேளினுடைய, தண் ஒளி - குளிர்ச்சி பொருந்திய அருள் விளக்கம், நன்கு ஆரின் - செவ்வனே சேருமாயின், அறியாமை அல் ஒழியும் - அறியாமை யென்னும் இருள்கெடும், பேரறிவாம் - பேரறிவு பிறங்கும், (ஆகலின்) சூர் இல் - துன்பமில்லாத, நெறி நின்று சூழ் - கடவுள் வழியிலே நின்று முயல்.

மேலே கூறியவாறு கண்ணிற்கு இயற்கையாக வேறொளியிருந்தும் அது ஞாயிற்றினது ஒளியோடு கூடியே யாதானுமொரு பொருளைக் காணும். அது போன்றே நம்முடைய அறியாமை யென்னும் இருளை யொழித்து இயவுளைக் காண நமது சிற்றறிவினோடு இறைவனுடைய பேரறிவுஞ் சிறப்பிற் கலத்தல் வேண்டும். அக்கலப்பு கடவுளருளில்லாமற் கூடாதாகலின், அக்கடவுளை முன்னிட்டே முயல வேண்டுமென அடிகள் வற்புறுத்தினார். இந்நுட்ப உண்மையறியாத வீணர் செயல்கள் பலதிறத்தன வென்க.

43

## உயிர்களின் இயற்கைக் குற்றத்தை யொழிப்போரே தலையன்புளாரெனல்

**இருளே வினையே யெழிலுடலே யென்றோ**
**தொருமூ வழுக்கு மொழிப்போர் - மருடீர்**
**தலையன் புளாரவர்நீர் சார்வேனோ சாற்றென்**
**னலையன் பறிவேலண் ணா.**

*என் அலை அன்பு அறி - அடியேனுடைய நிலைபெறாத அன்பை உணர்ந்துள்ள, வேல் அண்ணா - வேலைத் தாங்கிய தலைவனே! இருள் - அறியாமை, வினை - முற்பிறவிகளிற் செய்த இருவினை, எழில் உடல் - (வினையினால் வந்த) அழகிய உடல், என்று ஓது - என்று சொல்லப்படுகின்ற, ஒரு மூ அழுக்கும் - ஒன்று சேர்ந்துள்ள மூன்று குற்றங்களையும், ஒழிப்போர் - நீக்கிக் கொள்ளுவோர், மருள்தீர் - மயக்கமில்லாத, தலை அன்புளார் - சிறந்த அன்பையுடையவர்கள், அவர் நீர் - அவர் தன்மையை, சார்வேனோ - அடியேனும் உடையவனாவேனோ, சாற்று - சொல்லுவாயாக.*

*இருளே வினையே யெழிலுடலே - இதன் கண் இருள், வினை, எழிலுடல் என எண்ணுதலால் ஏகாரங்கள் எண்ணில் வந்தன. இருளெனவும், வினையெனவும், உடலெனவும் கூறப்பட்ட அழுக்கொரு மூன்றும் ஆணவம், கர்மம், மாயா என வட நூல்களில் கூறப்படு திரிமலமாம்.*

44

## குற்றத்தைப் போக்கச் சேந்தனை வருகவெனல்

**அடிகே ளழுக்கீட்ட மார்தேய்த் தருள்வோர்**
**வடிவேல் பரித்தமழ மன்னே - கடியேறே**
**ரோங்கியவெல் கோழி நிமிர்த்தி யுவப்பொடொலி**
**யேங்குகழற் காட்டற் கெழாய்.**

*வடிவேல்பரித்த - நெடிய வேலைத்தாங்கிய மழமன்னே - முருகக்கடவுளே! அடிகேள் - அடிகளே! அழுக்கு ஈட்டம் - குற்றக் கூட்டத்தை, ஆர் தேய்த்தருள்வோர் - யாவர் ஒழித்தருள்வார்கள்? கடி ஏறுஏர் ஓங்கிய - விளக்கமல்கிய அழகு மீக்கொண்ட, வெல் கோழி - வெற்றி பொருந்திய சேவற்றுகிலை, நிமிர்த்தி - உயர்த்தி, உவப்பொடு - மகிழ்ச்சியோடு, ஒலி ஏங்கு கழல் - ஒலித்தலைச் செய்கின்ற சேவடிகளை, காட்டற்கு - காட்டும் பொருட்டு, எழாய் - எழுந்தருள்வாயாக.*

*அடிகள் - அடிகேள் என ஈற்றயல் ஏகாரமாய் விளியுருபேற்றது. வடிவேல் எனற்குப் பொருள் - தேர்ந்தெடுக்கப்பட்ட வேல் என்று கூறலுமாம்.*

**45**

## முடிவான நிலையை யருளுமாறு முருகனைக் கேட்டல்

**முரண்டவொன் னாரை முருக்கியநின் பாழி**
**யிரண்டொன் றிலாவுண்மை யென்னாத் - திரண்ட தொன்னூல்**
**கூறுவதை யெற்குக் கொடாதுகொலோ சேந்த வென்னோய்**
**பாறுபொழு துண்டாம் படி.**

*சேந்த - செவ்வேளே! முரண்ட - மாறுபட்ட, ஒன்னாரை - பகைவரை, முருக்கிய - அழித்த, நின் பாழி - உன்னுடைய மதுகை, என் நோய் - அடியேனுடைய பிறவி நோய், பாறுபொழுதுண்டாம் படி - நீங்கத்தக்கவொரு நற்பொழுது பிறக்குமாறு, இரண்டொன்றிலா - இரண்டென்றும் ஒன்றென்றுங் கூறலில்லாத, உண்மை யென்னா - உண்மையென்று, திரண்ட தொல்நூல் - பழைய நூற் கூட்டமெல்லாம், கூறுவதை - கூறுமவ்வுண்மையை, எற்கு கொடாது கொலோ - அடியேனுக்குக் கொடுக்காமற் போமோ?*

*உயிரினின்றும் பிரியாத பொருளாகிய கடவுளையும் அவ்வுயிரையும் பிரித்து இரண்டெனவும், ஒருங்கு சேர்த்து ஒன்றெனவுங் கூறற்கியையாத வாய்வாழா நிலையே முடிவான பேரின்ப நிலையென்பது இங்ஙனங் கூறப்பட்ட தென்க.*

*கொடாது கொலோ - கொடை - வினா. இலா - என்றதில், இல் என்னும் பண்படியே எதிர் மறை குறித்தமையின் ஆ - சாரியை.*

**46**

## இறைவன் தாயினும்மிக நல்லனெனல்

**ஈற்று மழியாவெள் ளேற்றிறைவன் கூறுறைவாள்**
**பாற்றிர ளம்மத்தண் பாலுண்டோய் - சாற்றுவல்கே**
**ளீன்றா ளினுநீ மிகநல்லை யென்றடைந்தேன்**
**வான்றா ளளித்தி மகிழ்ந்து.**

*ஈற்றும் அழியா - கடைநாளிலும் அழியாத, வெள் ஏற்று இறைவன் - வெண்மையான எருதை ஊர்தியாகக் கொண்ட நல்லானை, கூறு உறைவாள் பால் - பிரியாதிருக்கின்ற மலை மகளிடத்தில், திரள் அம்மத் தண்பால் - திரண்ட முகைகளின் குளிர்ந்த பாலை, உண்டோய் - உண்டவனே! சாற்றுவல் கேள் - சொல்லுவேன்*

*கேட்பாயாக*, நீ - *நீ*, ஈன்றாளினும் - *அடியேனைப் பெற்ற தாயினும்*, *மிக நல்லை என்று* - *மிக நல்லவன் என்று*, அடைந்தேன் - *உன்னையடைந்தேன்*, (ஆகலின்) வான்தாள் - *பெருமை பொருந்திய உன்னுடைய சேவடிகளை*, மகிழ்ந்து அளித்தி - *மகிழ்ச்சியுற்றுத் தருவாயாக*.

*முருகையன் ஆறுகுழந்தைகளாக நாணற் பொய்கையில் விளையாடிக் கொண்டிருந்தபோது, மலைமகள் அக்குழந்தைகளைச் சேர்த்தணைத்தெடுத்துப் பாலூட்டிய வரலாறு ஈண்டுக்கூறப்பட்டது. இறைவனுக்கு ஊர்தியாகிய எருதும் அழியாத்தன் மையதாகலின் அதனை "ஈற்று மழியா வெள்ளேறு" என்றார் அடிகளென்க.*

*அம்மம்* = *கொங்கை*. 47

## கடவுளைக் காண்பார் கவலை காணாமற் போமெனல்

**மாண்பார் மலையாளீ வண்கழுநீர் மார்பெந்தாய்**
**காண்பார் கவலகைத்தாள் காளாய்நா - னேண்பாறா**
**நோயி னலமந்து நுன்னை விளித்தக்கா**
**லாயிடையென் செய்வா யறை.**

மாண்பு ஆர் - *மாட்சிமை நிறைந்த*, மலையாளீ - *உயரிய நிலைகளாம் மலைகளிலிருந்து அவற்றை ஆண்டு கொண்டிருப்போனே*, வண் கழுநீர்மார்பு எந்தாய் - *செழிய கழு நீர்மலர் மாலையை மார்பிலணிந்துள்ள அடியேனுடைய தந்தையே!* காண்பார் - *உன்னைப் பார்ப்பவர்களுடைய*, கவல் அகைத்து ஆள் - *கவலையை யொழித்து ஆளும்*, காளாய் - *காளைத்திறனுடையோனே*, நான் ஏண் பாறா நோயின் - *அடியேன் வன்மை நீங்காத பிணியில்*, அலமந்து - *சிக்கிக் கொண்டு*, நுன்னை விளித்தக்கால் - *உன்னை யழைத்தால்*, ஆயிடை - *அங்ஙனம்*, என் செய்வாய் அறை - *யாது செய்வாய்? சொல்*.

48

## முருகனை யடைந்தோர் வீறுபாடு செப்பற் கரிதெனல்

**மூவாப் பகட்டு முலையாரின் பம்படிறென்**
**றோவாப் புகழுன்றா ளுள்கெனைநீ - வாவா**
**வெனவிளித்துச் சேந்தவடி யீகுவையே லென்வீற்**
**றினைவிளக்க வல்லா ரெவர்.**

சேந்த - *செவ்வேளே!* மூவாப்பகட்டு - *இளநல நீங்காத பகட்டுதலைச் செய்கின்ற*, முலையார் இன்பம் - *பெண்களுடைய*

இன்பம், படிறு என்று - பொய்ப்படுமென்று, ஓவாப் புகழ் உன் தாள் - குறையாத புகழையுடைய உன்னுடைய சேவடிகளையே, உள்குஎனை - நினைக்கும் என்னை, நீ - நீ, வா வா என - வா வா என்று, விளித்து - அழைத்து, அடி ஈகுவை யேல் - சேவடி நீழலைத் தருவாயாகில், (அதன் பின்) என் - என்னுடைய, வீற்றினை - வீறுபாட்டினை, விளக்க வல்லார் - விளக்கிக் கூறவல்லவர், எவர் - யார் (யாருமில்லை என்றபடி).

பெரும்பாலும் பெண்கள் மீளாத மயலைச் செய்கின்றவர்களாக லானும், பலரும் அவர் தருமின்பத்தையே பெரிதென வெண்ணியிருந்து இறக்கின்றமையானும், பொய்ப்படும் அவ்வின்பம் மெய்போலத் தோற்றுகின்றமையானும், அப்பெண்கள் 'மூவாப் பகட்டு முலையார்' எனப்பட்டனர். கடவுளின் அருளில்லாமல் நாம் அவருடைய அடியையடைதற்கியலா தென்பது கொண்டே "வாவா வென விளித்து" என்றும், இறைவனருளாற் பெறும் பேரின்பம் எல்லா இன்பங்களையும் கீழ்ப்படுத்திய தொன்றாகலின், அதனைப் பெற்றபின் 'என் வீற்றினை விளக்க வல்லாரெவர்' என்றும் அடிகள் கூறினாரென்க. அப்பர் "இறுமாந்திருப்பன் கொலோ" என்றதும் இந்நிலையேயாம்.

49

## இறக்குமுன் ஆட்கொள்ளுமாறு இறைவனை வேண்டல்

**நாயார் நரியனார் நாட்டினொரு செம்மலிலாப்**
**பேயார் பறவைபுழுப் பெட்டல் கொண் - ணோயா**
**ருறுப்பிறுமுன் வந்தா ளொலிமுடுகு பாவோன்**
**கறுப்பறமுற் காணுமுரு கா.** 50

ஒலி முடுகு பாவோன் - முடுகியலாய பாடல்களைப் பாடிய ஒலியுறுவன், கறுப்பு அற - தன் குற்றமானது நீங்க, முன்காணும் முருகா - முன்னே காணப்பெற்ற முருகனே, நாயார் - நாய், நரியனார் - நரி, நாட்டில் - ஊரில், ஒரு செம்மல் இலா - ஒரு பெருமையுமில்லாத, பேயார் - பேய், பறவை - புள், புழு - பொட்டு (ஆகிய இவைகள்), பெட்டல் கொள் - விரும்புகின்ற, நோய்ஆர் உறுப்பு - நோய் பொருந்திய உடல், இறும் முன் - வீழ்வதற்கு முன்னே, வந்து ஆள் - என் முன்னே தோன்றி என்னை ஆண்டருள்வாயாக.

மேலே 19, 20-வது செய்யுள்களிற் கூறியவாறு அடிகள், இவ்வுடலுள்ள போதே இறைவனுடைய இன்பத்தைத் துய்த்தல்

வேண்டுமென்பது கருதி "உறுப்பிறுமுன் வந்தாள்" எனப் பின்னும் ஒருமுறை இறைவனை வேண்டினர்.

சேயவனடியவரிற் சிறந்தவராய ஒலியுறுவர் பாடிய பாக்களுட் பலவும் முடுகியற் பாக்களாகலின் "ஒலி முடுகு பாவோன்" என்றும், அவர் முருகக் கடவுளைக் கண்டு உவகை பூத்த வுண்மை அவர் பாடல்களுட் பலவிடத்துங் காணக் கிடக்கின்ற தாகலின் "கறுப்பற முற்காணு முருகா" என்றும் அருளிச் செய்தார் அடிகளென்க.

பெட்டல் - வேட்கைப் பெருக்கம்.

50

**சேந்தன் செந்தமிழ்ச் செய்யுளுமுரையும் முற்றுற்றன.**

❊❊❊❊❊❊

**சேந்தன் சேவடி வாழ்க !**